# கருணைக் கொலை



சிவசங்கரி

# 1

ஜனனி படுத்திருந்தாள்.

சட்டென்று பார்க்கையில் தூங்குகிற மாதிரி தோன்றியது.

சிலர் உறங்கும்போது வாய் திறந்து கொண்டும், உதடுகள் எகர்மேல் ஏறிக் கொண்டும்ஒருவித அவலட்சண தோற்றத்தைக் கொடுப்பது மாதிரி அல்லாமல் எப்போதும் போல இப்போதும் முகம் பார்க்க ரம்ய மாகவே இருந்தது.

இனிமையான கனவை காணுகிற தினுசில் ஒரு பக்கமாய் சின்ன சிரிப்பு ஒன்று விரிய காத்திருக்கிற மாதிரி கூட தோன்றியது.

ஆனால் இது உறக்கம் இல்லை.

கிட்டத்தட்ட இருபத்தி இரண்டு மணி நேரங்களாய் ஆடாமல் அசையாமல் படுத்திருக்கும் இந்த நிலை தூக்கத்தினால் உண்டானது இல்லை.

வேறு ஏதோ ஒன்று...

''மிஸ்டர் சத்யகுமார்?''—

சத்யா திரும்பினான்.

''நர்ஸ் சொன்னாங்க நீங்க வந்திட்டீங்கனு...நான் இங்க ட்யூடி டாக்டர். எப்ப வந்திங்க?''—

''இப்பத்தான் இரண்டு நிமிஷம்கூட ஆகலை... ஹவ் ஈஸ் ஷீ, டாக்டர்? மயக்கத்துல இருக்கறதா போன்ல சொன்னாங்க, இன்னும் நினைவு வரலியா?''

''பயப்படறாப்பல ஒண்ணும் இல்லே மிஸ்டர் சத்யகுமார் காலைல எக்ஸ்ரே எடுத்தோம். நல்ல வேளையா எலும்பு முறிவு எதுவும் இல்லே...''

''அப்புறம்; மயக்கம் இன்னும் ஏன் தெளியலை டாக்டர்?''—

''மண்டைல அடிபட்டவங்க இப்படி மயக்கமாருக்கறது சகஜம்...சீக்கிரம் சரியாயிடும். கவலைப் படாதிங்க.''

''மண்டைல அடின்னா. எந்த இடத்துலே? ரத்தம் நிறைய வந்துதா?''

''லேசா ரத்தக் கசிவு இருந்தது. அவ்வளவுதான்—மத்தபடி எந்த விவரம் தெரியணும்னாலும் ஸீனியர்கிட்ட பேசுங்க. நீங்க வந்திட்டா, உடனே தெரிவிக்கச் சொன்னார். போன் பண்ணிட்டு தான் இங்க வந்தேன். இப்ப வந்திடுவார். வீடு பக்கத்துலதான்''

தணிந்த குரலில் பேசின ட்யூடி டாக்டர் ஜனனியின் அருகில் சென்று மார்பில் ஸ்டெத் வைத்து பரிசோதித்தார் நாடி பிடித்து பார்த்து பிளட் பிளஷரை அளந்தார். க்ளுகோஸ் டிரிபின் வேகத்தை மட்டுப்படுத்தி விட்டு நர்ஸிடம் ''இங்கேயே இருங்க ஸிஸ்டர்'' என்றவர், 'ஸீனியர் வந்தா கூட்டிகிட்டு வரேன்'' என்று சத்யாவிடம் சொல்லி விட்டு வெளியில் போனார்.

சத்யா இரண்டடி வைத்து ஜனனியை நெருங்கி நின்றான்.

ஊன்றி பார்த்த போது முதல் நாள் கச்சேரிக்காக முகத்தில் தடவப்பட்டிருந்த ஒப்பனை இன்னும் சில இடங்களில் அழிந்து போகாமல் இருப்பது தெரிந்தது.

கை விரல்களிலும் போர்வைக்கு வெளியில் தெரிந்த பாதத்திலும் சிகப்பு அல்தாவின் பூச்சு.

தாமரை இதழ்களைப் போன்ற அழகான விரல்கள்...

கையை நீட்டி பாதத்தை லேசாக வருடிக் கொடுத்தவன், நர்ஸ் அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொள்வதை உணர்ந்து, மெதுவாக நகர்ந்து ஜன்னலருகில் சென்று நின்றான்.



மனசு ஒருநிமிஷம் எதுவும் புரிபடாமல் அல்லாடியது.

ஸீனியர் டாக்டர் உடனே வந்து ஜனனிக்கு என்ன என்பதை விளக்கிவிட்டால் தேவலைபோல இருந்தது.

மறுநிமிஷம்—ட்யூடி டாக்டரும், நர்ஸும் இத்தனை அமைதியாக செயல்பட வேண்டுமென்றால் சாதாரண அடிதான், நிச்சயம் கவலைவேண்டாம், என்று சமாதானமும் சொல்லிக் கொண்டது.

மாலை ஐந்து மணி ஆகியும். வெயிலின் கடுமை குறையாமல் இருந்தது.

''இந்த நர்ஸிங் ஹோம்ல ஏ.ஸி. ரூம் கிடையாதா ஸிஸ்டர்?''—

''இரண்டு இருக்கு, ஆனா, இப்ப காலியா இல்லே''

''நாளைக்கு காலி ஆகுமா?''

''தெரியாது...ஸீனியர் டாக்டரைத்தான் கேக்கணும். இரண்டுலேயும் ஹார்பேஷண்ட் இருக்காங்க...''

மேற்கொண்டு எதுவும் பேச பிடிக்காதமாதிரி சத்யா பார்வையை வெளிப்பக்கம் வீசினான்.

தூரத்தில் மலைக்கோட்டை...

—திருச்சி ப்ரோக்ராமுக்கு நீங்களும் வரமுடியுமா சத்யா? அப்படியே தஞ்சாவூருக்குப்போய் பெரிய கோவில் கர்ப்பக் கிரகத்து பெயிண்டிங்கையும், கோபுரத்தில் செதுக்கி இருக்கிற கர்ண சிற்பங்களையும் பார்த்துவிட்டு வரலாம். அதெல்லாம் பார்த்ததே இல்லேன்னு சொன்னீங்களே?

—எப்ப ஜனனி? வர்ற சனி, ஞாயிறா? கஷ்டம்மா... சித்திரை மலரை முடிச்சாகணும். வேலை எக்கச்சக்கமா இருக்கு. நீ உன் ட்ருப்போட போயிட்டு வா—நாம தனியா இன்னொரு தரம் போகலாம்.

அப்படி சித்திரை மலர் விஷயமாய் உதவி ஆசிரியர்களுடன் ஒரு விவாதத்தில் இருந்தபோது தான் காலை, பதினோரு மணி சுமாருக்கு அந்த போன் கால் வந்தது.

திருச்சியிலிருந்து அர்ஜண்ட் ட்ரங்கால்.

என்ன விஷயம்?

தஞ்சாவூருக்குப் போய்விட்டு செவ்வாய் அல்லது புதன் வருகிறேன். நாளைக் காலை ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பவேண்டாம் என்று சொல்லப் போகிறாளா?

பேசுவது 'நிச்சயம் ஜனனிதான்' என்று நம்பிக்கையுடன் அவன் ரிஸீவரை எடுத்து 'ஹலோ'—என, அழுகை கலந்த குரலில் நாமகிரி, ஜனனிக்குப் பின்பாட்டு பாடும் பெண்மணி பேசினார்.

''நீங்க உடனே புறப்பட்டு வாங்க ஸார். இங்கு ஒரு விபத்து நடந்துபோச்சு...ராத்திரிலேர்ந்து முயற்சிபண்ணறேன், லைன் கிடைக்கலை. உடனே வாங்க ஸார்.''

விளக்கமாகப் பேசத் தெரியாமல் நாமகிரி தவிக்க, யாரைப் பற்றி பேசுகிறார் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் சத்யா புருவங்களை உயர்த்தினான்.

''பதறாம சொல்லுங்க நாமகிரி...என்ன நடந்தது? ஜனனி எங்கே? யாருக்கு விபத்து? நிதானப்படுத்திகிட்டு விவரத்தைச் சொல்லுங்க.''

சொன்னார்.

வர்ணம் முடிந்து சபைக்கு வணக்கம் தெரிவித்த பின், ஒப்பனை அறைக்கு உடைமாற்றிக்கொள்ள ஜனனி நாலடி வைக்கவும், எதிர்பாராத விதமாய் நீலத்திரையை கட்டியிருந்த கயிறு அறுந்து விடவும் சரியாக இருக்க, படுதாவுடன் கூடிய தடித்த மூங்கில் கம்பு கண் இமைக்கும் பொழுதில் அத்தனை உயரத்திலிருந்து கீழ்நோக்கி வர, வசமாய், அதனடியில் ஜனனி மாட்டிக் கொண்டு விட்டாளாம்.

''சபா செகரட்டரி உதவியோட உடனே அம்மாவை ஆஸ்பத்திரிலே சேர்த்திட்டோம், ராத்திரியே உங்ககிட்ட விஷயத்தைச் சொல்ல போன் போட்டேன் லைன் கிடைக்கலை... நீங்க உடனே வந்தா தேவலை...''



சின்னதாக சிறுகுடலில் அவஸ்தை ஒன்று தலை தூக்க, ''ஜனனி இப்ப எப்படி இருக்காங்க? அடி பலமா?'' என்றான் அவசரமாய்...

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே. ஆனா, மயக்கமா இருக்காங்க...உடனே வறிங்களா? நீங்க வந்திட்டா எங்களுக்கு தைரியமா இருக்கும் ஸார்...''

பதட்டத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கால் மணியில் கிளம்பி, டிரைவரை பின் ஸீட்டில் உட்காரச் சொல்லி, எங்கும் நிறுத்தாமல் தானே ஓட்டிக் கொண்டு திருச்சியை தொட்டபோது மணி நாலு நாற்பது.

''குட் ஈவ்னிங், ஐம் டாக்டர் ராம்பிரசாத். ராத்திரி உங்ககிட்ட நானே விஷயத்தைச் சொல்லலாம்னு எஸ்.டி.டி. போட்டேன், லைனே கிடைக்கலை எப்ப வந்தீங்க? கார்லதானே?...''

ட்யூட்டி டாக்டர், இன்னும் இரண்டு நர்ஸ்கள் சகிதம் உள்ளே நுழைந்த ஸீனியர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட கையோடு, ஜனனியின் அருகில் சென்று சில நிமிஷங்களுக்கு அவளை பரிசோதித்து, தொடர்ந்து கொடுக்கவேண்டிய சிகிச்சைகளை ட்யூடி டாக்டரிடம் கூறிவிட்டு வாங்க ''வாங்க, என் ரூம்லே உட்கார்ந்து பேசுவோம்'' என அங்கு எதுவும் பேசாமல் சத்யா அவரோடு சென்றான்.

''என்ன சாப்பிடறீங்க? காபி.''

''எஸ். ப்ளீஸ்''

பையனை அழைத்து இரண்டு காபிக்கு டாக்டர் ஆர்டர் கொடுக்கும்வரை சும்மா இருந்த சத்யா ''ஹவ் ஈஸ் ஷி டாக்டர்?' என்றான் மெதுவாக.

''கவலைப்படும்படி எதுவும் இருக்கறதா தோணலை மிஸ்டர் சத்யகுமார். எக்ஸ்ரே எடுக்கற வரைக்கும் கொஞ்சம் யோசனையா இருந்தது உண்மைதான். ஆனா நியூரோ பிஸிஷியன் வந்து பரிசோதனை பண்ணி எக்ஸ்ரே எடுக்கச்சொல்லி, நிச்சயமா ப்ராக்சர் இல்லேனு சொன்னது பெரிய ரிலீஃப்...''

''எப்ப மயக்கம் தெளியும்?''

''எனி மினிட்...இப்ப இங்க நாம பேசிட்டு இருக்கற நிமிஷத்துலகூட அங்க அவங்களுக்கு நினைவு வந்திருக்கலாம்...''

''அடி எங்க? மண்டைல மட்டும் தானா, இல்லே வேற எங்கயாவதுமா?''

''மண்டைக்கு நேரா கட்டை விழுந்ததால அடி தலைலதான். ஆனா, கடவுள் புண்ணியத்தில் சொல்லும்படியா ரத்தப்போக்கு இல்லே...மூணு எடத்துல தையல் போட்டிருக்கோம். ஜுரம், அது இதுனு வேற எந்த காம்ப்ளிகேஷனும் இல்லாததால நாளைக்கு நிச்சயம் சரியாயிடுவாங்கனு நம்பறேன்...''

இல்லை—

டாக்டர் ராம்பிரசாத் வைத்த புள்ளி சரியாக இருக்கவில்லை என்பதோடு மறுநாள் விடியும் போதே நூற்றியொரு டிகிரி ஜுரமும் சேர்ந்துக் கொள்ள மீண்டும் நியூரோ பிஸிஷியன் அழைக்கப்பட்டார்.

'மயக்கம் இன்னும் தெளியவில்லை. பி பியும் குறைச்சலா இருக்கு. புதுசா வேற சிகிச்சை ஆரம்பிக்கறதுக்கு முன்னால நிலைமையை தெளிவா புரிஞ்சிகிடறது நல்லது. மண்டை ஓட்டுக்குள்ள ரத்தம் கசிஞ்சி கட்டி தட்டிப் போயிருந்தா இந்த மாதிரி இருக்கும். 'ஸ்கான்' செய்து சரியானபடி டயக்னெஸ் பண்ணறது அவசியம் அதுக்கு இங்க வசதி இல்லே. மெட்ராஸுக்கு அழைச்கிட்டு போறது பெட்டர்...''

அதிர்ச்சி இல்லாமல் பயணம் இருக்க வேண்டும் என்பதால் விமானத்தில் படுக்க வைத்து அன்றே சென்னைக்கு கொண்டுவருவது என்பது தீர்மானமாயிற்று.

கொண்டு வந்தார்கள்.

தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்து, நகரத்தின் தலைசிறந்த நியுரோ சர்ஜனை வரவழைத்து, அவர் ஜனனியை



பரிசோதித்து, ஸ்கான் செய்த நாழிகையில் அசையாத நம்பிக்கையுடன் சத்யா காத்திருந்தான்.

மூன்று நாட்களாய் நினைவில்லாமல் இருப்பதைப் பற்றி தேவையில்லாமல் குழப்பிக்கொள்ள வேண்டாம் அதிக ரத்தப்போக்கு இல்லை; மண்டை ஓட்டில் முறிவும் இல்லை; ஆக, அடி அத்தனை பலமாக விழவில்லை என்று நம்பலாம். அப்படியே சின்னதாய் ரத்தக்கட்டி உள்ளுக்குள் உண்டாகி இருந்தாலும், ஸ்கானிங் அதை துல்யமாய் காட்டிக் கொடுத்துவிடும். ஆபரேஷன் செய்து கட்டியை எடுத்துவிட்டால் ஜனனி பழையபடி ஆகிவிடுவாள். வைத்தியத்துறை பிரமாதமாக முன்னேறியுள்ளது. அனாவசிய பயம் வேண்டவே வேண்டாம்.

திருப்பித் திருப்பி இதையே மனசுக்குள் சொல்லிக்கொண்டு, அதிகமாய் கலைந்து போகாமல் நின்றிருந்தவனை நரம்பு அறுவை சிகிச்சை நிபுணர் அணுகி சோர்வுடன் தலை அசைத்து தோளை குலுக்கினார்.

''என்ன டாக்டர்?''—

''ஸாரி சத்யகுமார்...ஸ்கானிங் படம் அத்தனை உற்சாகம் தர்றதா இல்லே. அங்கங்கே மெல்லிய ரத்தக் குழாய்கள் சேதம் அடைஞ்சு, நிறைய இடத்துல சின்னச் சின்னதா ரத்தம் உறைஞ்சிருக்கு. மேலாக இல்லாம, பரவலா ஆழத்துல இருக்கற கட்டிகளை தொட முயற்சிக்கறது ஆபத்தானது, ப்ரெயன் செல்களை கலைச்சு அறுவை செய்ய முனைஞ்சா, அது பாதகமான பக்க விளைவுகளை உண்டாக்கும்...ஸாரி, வி ஆர் வெரி ஸாரி..''

முதல்முறையாக வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்க முற்பட, சத்யா முகவாயைத் தடவிக்கொண்டு தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொள்ள பார்த்தான்.

''அப்டின்னா?''

''ஆபரேஷன் செய்ய முடியாத நிலை, சத்யகுமார் ப்ளீஸ் புரிஞ்சுக்கங்க...''

''ஆபரேஷன் செய்ய முடியாதுன்னா, வேணாம். ஆனா ஜனனிக்கு நினைவு எப்பத் திரும்பும், அதையாவது சொல்லுங்க?''—

டாக்டர் வருத்தத்துடன் 'ப்ச்' என்றார்.

''உண்மையைச் சொல்லணும்னா இந்த கேள்விக்கு எந்த டாக்டராலும் பதில் சொல்லமுடியாது சரத்குமார். எப்பவாவது கை, கால்ல இடிச்சிகிட்டு, ஊமைகாயம்பட நேர்ந்து, கருரத்தம் கட்டி, அந்த இடமே நீலம் பாரிச்சுப் போயிட்ட அனுபவம் உங்களுக்கு இருந்திருக்கு இல்லியா? சிலசமயம் கருரத்தம் கட்டிகிட்ட இடம் இரண்டு நாள்ல சரியாயிடும், பல சமயம் மாசக்கணக்குலகூட அந்த நீலம் பாரிச்ச இடம் அப்படியேஇருக்கும் அடிபட்ட வேகத்துல ரத்தம் உறைஞ்சு போயிட்டு. பின் தன்னால மெதுவா கரைஞ்சு பழைய நிலைமைக்கு வர்ற மாதிரிதான் இப்ப உங்க மனைவி நிலைமையும்...''

டாக்டர் சொன்னதை ஜீரணிக்க முயற்சிக்கும் பாவனையில் ஒரு நிமிஷம் மௌனித்து, மீண்டும் சத்யா பேசியபோது குரல் தழுதழுத்திருந்தது.

''தட் மீன்ஸ்? ஜனனி எப்ப கண் விழிப்பாங்க, பேசுவாங்க, பழையபடி நடமாடுவாங்கன்னு எதுவும் திட்டவட்டமா சொல்லமுடியாது...அதானே?''

''சத்யகுமார், நீங்க படிச்சவர், பத்திரிகை ஆசிரியர். கசப்பான உண்மையை தாங்கிக்குவீங்கன்ற நம்பிக்கையில வெளிப்படையாவே சொல்றேன். எஸ் யூ.ஆர். ரைட்... உங்க மனைவிய பொறுத்தவரை எதுவும், யாராலயும் இப்ப சொல்லமுடியாது. அதிருஷ்டமும் தெய்வத்தோட கருணையும் இருந்தா நாளைக்கே அவங்களுக்கு நினைவு திரும்பிடலாம்...இல்லேன்னா பத்து வருஷங்கள் கூட இப்படியே சுய நினைவு இல்லாம இருக்கலாம்...ஐம் ஸாரி, ரியலி...ஸாரி, நம்பிக்கையோட இருங்க...இருங்க... ப்ளீஸ்''



''அவசரம்னு இல்லே... இங்கே இருக்கறதைவிட வீட்டுச் சூழ்நிலை எங்க இரண்டு பேருக்குமே இதமா இருக்குமோன்ற நம்பிக்கைதான்''

''இந்த மாதிரி பேஷண்டுகளை வீட்டுல பார்த்துக்கறது கஷ்டம், அதை நினைச்சுப் பார்த்திங்களா?''

'எஸ்... ஆனா, அதற்கு நான் தயாராதான் இருக்கேன்.''

''இப்போதைக்கு எந்த சிக்கலும் இல்லாம அவங்க ஜடமா படுத்திருந்தாலும் ஏதாவது காம்ப்ளிகேஷன் வந்தா அதை உடனே சமாளிக்குற அளவுக்கு நீங்க தயாரா இருக்கணும்.''

''இருக்கேன் டாக்டர்... ஒரு நாளைக்கு நாலு தரம் வந்திட்டுப் போறதைவிட வீட்டுல நிறைய நேரம் கூடவே இருந்து இன்னும் நல்லா கவனிச்சுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு... என்னென்ன செய்யணும், எப்படி பராமரிக்கணும்னு விவரமா சொல்லுங்க... இங்க இருக்கற மாதிரியே வீட்டுலேயும் பார்த்துக்கிறது என் பொறுப்பு...''

டாக்டர் அவன் அருகில் வந்து தோளைத் தட்டிக் கொடுத்தார்.

'ஃபைன். நீங்க இத்தனை தன்னம்பிக்கையோட இருக்கறதை நான் கலைக்க விரும்பலை! உட்காருங்க. உங்க மனைவியை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறதுக்கு முன்னால, அங்க தயார்பண்ண வேண்டிய விஷயங்களைச் சொல்றேன் குறிச்சுக்கங்க... முதல்ல, வசதியான அறை இது நிச்சயம் உங்க வீட்டுல இருக்கும், காற்றோட்டமா இருக்கிறது முக்கியம். படுக்கை புண்கள் வராமல் இருக்க இங்க நாங்க அரைமணிக்கொருதரம் புரட்டி கொடுக்கிறோம். வீட்டுல இது சாத்தியமில்லே அதனால் ஆல்ஃபாபெட்னு ஒரு ரப்பர் படுக்கை இருக்கு. அதை வாங்கிடுங்க, இது மின்சாரத்திலே இயங்கி சின்ன அலைகளை உண்டாக்கறதன் மூலம் காற்றோட்டத்தை ஏற்படுத்தி, உடம்பு ரணமாகறதைத் தடுக்கும்...''

சத்யா படுக்கையின் பெயரையும் அது கிடைக்கும் இடத்தையும் குறித்துக் கொண்டான்.

"அடுத்து சாப்பாடு... மூக்குல ரைல்ஸ் ட்யூப்ன்ற குழாயைச் சொருகி திரவ உணவா கொடுக்கறதைத் தான் நீங்களும் பின்பற்றணும். முக்கால் டம்ளர் பால், ஜூஸ், மோர்... இப்படி ஏதாவது இரண்டு மணி நேரங்களுக்கொரு முறை ட்யூப்ல மெதுவா ஊத்தி ஃபீட்பண்ணணும். காம்ப்ளான், ப்ரோடினெக்ஸ் கொடுக்கலாம் மருந்துகளை எப்பப்ப தர்றதுனு குறிச்சு தரேன். அதையும் அப்படியே கவனமா கொடுங்க... மூளைக்கு சுறுசுறுப்பு தர ரினர்வாலும், ரத்த ஓட்டத்தை அபிவிருத்தி பண்ண சைக்ளோஸ்பாஸ்மாலும் விடாம தரணும்... அப்புறம், தினமும் உடம்பை துடைச்சு, யூரின் போனா சுத்தம் பண்ண, ஆள் இருக்காங்களா, இல்லைனா எப்படி மேனேஜ் பண்ணப் போறீங்க?"—

"ஆள் நிறைய பேர் இருக்காங்க— அது பத்தி கவலை இல்லை. ஆனா, பயிற்சி பெற்ற நர்ஸ் மாதிரி எங்களால நிச்சயம் நல்லவிதமா கவனிக்க முடியாது. அதனால இருபத்தி நாலு மணி நேரமும் நர்ஸ் போட்டறது நல்லது தானே டாக்டர்?"—

"ரொம்ப நல்லது— நானே சொல்ல நினைச்சேன், செலவு அதிகம் ஆகுமேனு பேசாம இருந்திட்டேன."

"செலவு பத்தி ப்ளீஸ் கவலையே படாதீங்க...ஜனனி சீக்கிரம் குணமாகணும்; அது வரைக்கும் அவங்களை வசதியா கவனிக்கணும்— இதான் என் விருப்பம்."

"வெரி குட்— அப்ப இரண்டு நாள்ல அவங்களை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக ஏற்பாடு பண்ணிடுங்க. எமர்ஜென்ஸிக்கு ஒரு ஆக்ஸிஜன் ஸிலிண்டர் கையோட இருக்கறது பெட்டர். பணம்கட்டி அதையும் வாங்கிடுங்க. மத்த விவரங்களை நர்ஸ் கிட்ட சொல்றேன்..."



திட்டமிட்டபடி அந்த வெள்ளிக்கிழமை காலை பதினோரு மணி அளவில் ஜனனியை ஆம்புலன்ஸில் படுக்க வைத்து வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

கீழே இருந்த விருந்தாளிகள் படுக்கை அறை ஏ. ஸி. ஆல்ஃபா பெட் இவைகளுடன் தயாராக இருந்தது.

காலை எட்டிலிருந்து மாலை எட்டு வரை ஸிஸ்டர் மேரியும், இரவு எட்டிலிருந்து காலை எட்டு வரை ஸிஸ்டர் பாருகுட்டியும் ஸ்பெஷலாய் டாக்டரால் தேர்ந்தெடுக்கப்பட்டு கூடவே இருந்து கவனித்துக் கொள்ள, இந்த ஏற்பாடுகள் எது பற்றியும் உணர முடியாத ஆழ்ந்த கோமாவில் ஜனனி தொடர்ந்து அமிழ்ந்து கிடந்தாள்.

ஜனனியை வீட்டுக்கு அழைத்து வந்த இரவு சத்யா வழக்கத்தை விட மிகுந்து படபடப்புக்குள்ளாகி இருந்தான்.

ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு மனைவியை அழைத்து வந்தது சரியான காரியமா என்ற கேள்வி அவ்வப்போது எழுந்து கஷ்டப்படுத்தியதில் நிதானமின்மை அவனை ஆக்ரமித்திருந்தது.

என்ன செய்தும் ஜனனியின் நிலைமையில் ஒரு முன்னேற்றமும் இல்லாவிட்டால்?

ஆயுசு பரியந்தம் இப்படியே மூச்சை மட்டும் விட்டுக் கொண்டிருக்கும் மரக்கட்டையாய்க் கிடந்தால்?

கற்பனை உடம்பை உதறிப்போட வைத்தது அடிவயிற்றில் வலிக்க வலிக்க முடிச்சுகளை போட்டு வேதனைக்குள்ளாக்கியது

அன்றிரவு பதினோரு மணிவரை நீல விளக்கின் வெளிச்சத்தில் ஜனனிக்கு அருகில் அவள் கையைப் பற்றியபடி அமர்ந்து கொண்டிருந்த பின்னர் நர்ஸிடம் சொல்லிவிட்டு மாடிக்கு வந்தபோது, விரும்பிய விதத்தில் மனைவியை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டோம் என்ற நிம்மதியான உணர்வுக்குப் பதிலாக, ஏனோ இத்தனை நாட்களையும் விடக் கூடுதலாக நெஞ்சம் கனத்தது.

வெகு நேரத்துக்கு பிரசுரத்திற்காக வந்திருந்த கதைகளைப் படித்து, ஒரு காம்போஸ் மாத்திரையை விழுங்கி விட்டு படுத்தும் உறக்கம் கிட்ட வர மாட்டேன் என்று சண்டி பண்ணியது.

இருப்புக் கொள்ளாமை அதிகமாக, எழுந்து பால்கனிக்குச் சென்று திரும்பினான்.

எங்கோ யார் வீட்டிலோ நாய் ஒன்று பயங்கரமாய் ஊளையிட்டது.

இரண்டு நிமிஷம் அப்படியே நின்று அந்த அவலமான ஓசையைக் கேட்டவன், தொடர்ந்து அங்கு நிற்கப் பிடிக்காமல் அறைக்கு வந்து படுத்து கண்களை மூடிக் கொண்டான்.

என்னென்னவோ நிகழ்ச்சிகள்; உரையாடல்கள்...

திடுமென அரைகுறை தூக்கத்தில் சுந்தர்லாலின் நினைவு எழுந்தது கூடவே டிஸ்டெம்பர் நோய் கண்டு பாரிசவாயுவால் தாக்கப்பட்ட அவன் நாய் ப்ருடஸின் ஞாபகமும் வந்தது.

— சுந்தர்லாலோட நாய்க்கு பாரலிஸஸ் வியாதியாம் ஜனனி.

— அடப்பாவமே... உசத்தியான நாய்க்குட்டினு ஆசையா வளர்த்தாரே!

— இனிமே நாய் தேறாது, மெர்ஸி கில்லிங் பண்ணிடறதுதான் நல்லதுனு டாக்டர் சொல்றாராம். சுந்தர் இடிஞ்சி போயிருக்கான்.

— இதுல இடிஞ்சி போக என்ன இருக்கு சத்யா? நாய் கஷ்டப்படாம இருக்கத்தானே டாக்டர் இப்படி சொல்றார்?

— அதுக்காக? ச்சே, பாவம் வளர்த்ததைக் சொல்லனும்னா எப்படிம்மா?



இதுல பாவ, பரிதாபம் கூடாது சத்யா... வருஷக் கணக்கா உயிர் வாழ்ந்து அதுவும் கஷ்டப்பட்டு நம்மையும் வேதனைக்குள்ளாக்கறதைவிட, மனசை கல்லாக்கிகிட்டு ஒரு நிமிஷத்துல செய்யற மெர்ஸி கில்லிங்கை நான் வரவேற்கிறேன்.

அப்படி என்றால்?

கருணைக்கொலையை... நான் வரவேற்கிறேன் என்று அன்று ஜனனி சொன்னதை வைத்து யோசித்தால்?

கருணைக் கொலை மெர்ஸி கில்லிங்... கருணைக் கொலை... சுற்றிலும் ஆயிரம் பேர்கள் நின்று உரக்க ஜனனியை வேதனைக்கு உள்ளாக்காதே இதற்கு விடிவு கருணைக் கொலைதான் என்று கத்துகிற மாதிரி தோன்ற சத்யா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தபோது அவன் உடம்பு வியர்வையில் தெப்பமாக நனைந்திருந்தது.

## 3

நியூஸ் ப்ரிண்ட்கோட்டா சம்பந்தமாய் டெல்லிக்குச் சென்று செவ்வாய் மாலை விமானத்தில் சென்னைக்குத் திரும்பி, நேரே அலுவலகத்துக்குப் போகலாமா, இல்லை வீட்டுக்குச் சென்று குளித்து உடைமாற்றிச் செல்லலாமா என்று அரை நிமிஷம் யோசித்தவனை, நாள் முழுவதும் டெல்லி வெயிலில் அலைந்த அசைச்சல் இரண்டாவது எண்ணத்துக்கு ஓட்டுப் போடச் செய்ய, அடுத்த பதினைந்தாவது நிமிஷம் அடையாறில் இருந்த வீட்டில் சத்யா படி ஏறினான்.

அம்மா கூடத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

"வாப்பா... போன வேலை நல்லவிதமா முடிஞ்சிதா?"

"முடிஞ்சாப்பலதான்..."

"முகமெல்லாம் கறுத்து கிடக்கு. ரொம்ப அலைச்சலா!"

பிள்ளை வெள்ளைக்கார சிகப்பு என்கிற தீர்மானத்துடன் அம்மா பேசுவது சிரிப்பைத் தர, பதில் சொல்லாமல் சத்யா நின்றான்.

"காபி, பலகாரம் கொடுத்தனுப்பவா, சத்யா? இல்லே, கொஞ்சம் படுத்திட்டுச் சாப்பிடறியா?"

படுக்கையா? இப்பவா? ஆபீஸ் போகணும்மா! காபி மட்டும் கொடுங்க போதும்."

"அப்படி என்ன தலை போற வேலை? படுத்து எழுந்து காலைல போகக் கூடாதா...?"

"போயிட்டு உடனே வந்திடறேம்மா..."

அம்மா சூள் கொட்டினார்.

"யாரு? நீதானே. ஆபீஸ் போயிட்டாதான் உனக்கு வீட்டு நினைப்பே மறந்துடுமே... இதுக்குதான் காலா காலத்துல ஒருத்திய கட்டிக்கப்பா. வீட்டுல அவ இருந்தா இப்படி அரை நாழி நிக்காம ஓடுவியானு நானும் புலம்பறேன்..."

அம்மா நீளமாகப் பேசத் துவங்க, அத்தனைப் பேச்சுக்கும் சிரிப்பையே பதிலாகத் தந்தவன், படிகளை இரண்டிரண்டாகத் தாவி ஏறி மாடிக்குப் போனான்.

ஷவர் அடியில் நின்று குளிர்ந்த நீரில் குளித்ததும் களைப்பு மறைய விசில் பண்ணிக்கொண்டே வெளியில் வந்தான்.



ஈரத்தலையை அவசரமாக துடைத்து, வாரி வெள்ளை பேண்ட், க்ரீம் குர்தா அணிந்து, காபி குடித்து, லேசான ஆஃப்டர் ஷேவ் லோஷன் மணத்துடன் அம்மாவிடம் சொல்லிக்கொண்டு, வண்டியை வழக்கம்போல விரட்டியபடி அலுவலகத்துக்கு வந்தபோது மணி எட்டு பத்து என்றது.

"நமஸ்தே சாப்..."

வணக்கம் தெரிவித்து சூர்காவுக்குத் தோளில் ஒரு தட்டு.

"வணக்கம் சார்..."

எடிட்டோரியலைச்சார்ந்த கல்யாணம் எழுந்துநின்று மரியாதையுடன் 'விஷ்' செய்ததை ஏற்று, சிரிப்பு அகலாத முகத்துடன் அறைக்கு வந்தான்.

இரண்டு நாட்களாக சேர்ந்துவிட்ட வேலைகளின் கனம் மேஜைமேல் தெரிந்தது. சத்யா வரப்போவதை எதிர்பார்த்து அட்டெண்டர் முத்து ஏஸியை ஓடவிட்டு, அவனுக்குப் பிடித்த தினுசில் மின்விசிறியையும் சுழலவிட்டிருந்ததில், அறை பரம சுகமான குளிர்ச்சியுடன் ஆளை வரவேற்றது.

சில நிமிஷங்களுக்கு அவசரம் என்று குறிப்பிட்டிருந்த கோப்புகளையும், முக்கிய தபால்களையும் புரட்டினான். உடனடியாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் எதுவும் இல்லை என்ற திருப்தியுடன் தயாராக ரப்பர் ஸ்டாம்ப் முத்திரையுடன் காணப்பட்ட ஒன்றாவது, இரண்டாவது பாரங்களை நிதானமாக ஒரு பார்வை பார்த்து முடித்தவன், மணியை அடித்து முத்துவை அழைத்தான்.

"மூணாவதோட கெட்டிங் பிரிண்டட் ஃபார்ம் சிவா சார் கிட்ட இருக்கா, முத்து?"

"அது இன்னும் பிரஸ்லேந்து வரலீங்க... உங்க காரைக் கண்டதும் உடனே சிவா சார் கிட்ட கேட்டேன்; இப்ப வந்திடும்னு சொன்னாரு..."

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே மூக்கில் வேர்த்துவிட்ட மாதிரி உதவி ஆசிரியர் சிவகுமார் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான்.

''குட் ஈவினிங் சார்...''

''குட் ஈவினிங். கெட்டிங் பிரிண்டட் ஃபாரத்தை காணுமேனு கேட்டுட்டு இருந்தேன்...''

''இப்ப வந்திடும் சார். ப்ரஸ் சூப்பரின்டென்டென்டுக்கு ஃபோன் பண்ணிட்டுத்தான் வரேன்... அனுப்பி கால் மணி ஆச்சாம்...''

''பரவாயில்லை... உட்காருங்க வேற என்ன விஷயம்?''

''கலைமாமணி சூர்யபாலா மாரடைப்புல இறந்துட்டதை மூணாவது ஃபாரத்துல கட்டம் கட்டி செய்தியா சேர்த்திட்டோம்.''

''ம்''

ஆர்டிஸ்ட் மோகனுக்கு இன்னும் ஜுரம் விடலை... படம் வரைய முடியாதபடி கை நடுங்குதுனு சொன்னார். அதனாலே நீங்க சொல்லிட்டுப் போனபடி பழைய படங்களை வெச்சுக்கிட்டு ஒரு தினுசா சமாளிச்சிட்டோம்...''

''குட்...சம்பந்தம் எழுதின கட்டுரை எப்படி வந்திருக்கு?''

''பிரமாதம் சார்... நிஜமாகவே நாளைக்கு பத்திரிகை வெளியானதும் அந்த ஆளும் கட்சி பிரமுகரை எதிர் கட்சிக்காரங்க பந்தாடப்போறாங்க...''

சத்யா பதில் கூறாமல் புன்னகைத்துத் தலை அசைத்தான். யாருக்கும் பயப்படாமல் உள்ளதை உள்ளபடி விண்டு வைக்கும் முதுகெலும்பு உள்ள பத்திரிகை என்று 'மித்ரா' பெற்றுவிட்ட பாராட்டை இந்தக் கட்டுரை இன்னும் அதிகமாக்கும்... நிச்சயம்.



ஆளும் கட்சியைச் சார்ந்த பிரமுகர் ஒருவரின் அத்துமீறின நடவடிக்கைகளைக் கண்ணில் விளக்கெண்ணெயை விட்டு கண்காணித்து மிகுந்த பொறுப்புடன் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டும் கட்டுரை...''

இது சம்பந்தமாய் நிருபர் சேகரித்திருந்த குறிப்புகளை மட்டும்தான் சத்யா பார்த்திருந்தான். டெல்லி வேலை வந்துவிட, 'திட்டமிட்டபடி எழுதி முடிச்சு மூணாவது பாரத்துல சேர்த்திடுங்க' என்று சொல்லிவிட்டுப் போயிருந்ததால் முழுமையாகக் கட்டுரையைப் பார்க்க ஆவல்...

பிரஸ்ஸிலிருந்து பையன் வந்து விட்டான்.

கெட்டிங் பிரிண்டட் ஃபாரத்தை வாங்கி, மேஜை மேல் விரித்து, 'நெஞ்சு பொறுக்குதில்லையே...' என்று தலைப்பிட்ட அந்த கட்டுரையைப் படிக்கத் துவங்கினான்.

சம்பந்தத்தின் நடை அலாதியானதுதான். குட்ட வேண்டிய இடத்தில் நறுக்கென்று குட்டு, பளீரென்று அறையத் தேவை என்றால், எரிச்சல் எடுக்கிற மாதிரி ஓர் அறை. எதை நினைத்தும் தயக்கம் இல்லை. கோழைத்தனமான வழவழா இல்லை.

வெரிகுட்.

சொந்த விழாக்களை, அரசியல் போர்வையில் கைக்காசு செலவில்லாமல் ஆர்ப்பாட்டமாக நடத்தி, பேர், புகழ் சம்பாதிக்கும் கேவலம் அரசாங்க அலுவலகத்தில் கட்சிப் பிரமுகர் என்ற தோரணையுடன் நுழைந்து...

அலுவலர்களை லட்சியம் பண்ணாமல் ஒட்டப்பட்ட டெண்டர்களை வெகு உரிமையுடன் பிரித்துப் பார்த்து; தன் இஷ்டத்துக்கு வேண்டியவர்களுக்கு வேலைகளை ஒப்படைக்கும் அடாவடித்தனம்—

ஏராளமாகக் 'கையில்' வாங்கிக் கொண்டு, தன் முக்கியத்துவத்தைப் பயன்படுத்தி ஒரே சமயத்தில், தெரிந்தவருக்கு இருபது டாக்ஸிகளுக்குப் பகிரங்கமாய் பர்மிட் வழங்கச் செய்ததோடு,

'என்னைத் தட்டிக் கேட்க எவனுக்குத் துணிவு இருக்கிறது?' என்று வினவும் முரட்டுத்தனம்—

இன்னும்...

பாரா பாராவாகச் சாட்சி பூர்வமான விவரங்கள் பிரமுகரை உரித்துக் காட்ட.

திருப்தியுடன் படித்துக்கொண்டே போன சத்யா, திடுக்கிட்டான்.

கடைசி வரிகள் இன்னொரு தரம் படித்தபோது, கப்பென்று கோபம் பொங்கியது,

என்ன இது?

புருவங்களைச் சுருக்கி மறுபடியும் குமட்டியது.

'மித்ரா' வில் இப்படி ஒரு விவரமா? மணியை அடித்து முத்துவை அழைத்தான். ''உடனே சிவா சாரை வரச் சொல்லி...''

அவன நகர்ந்ததும் டெலிபோனை எடுத்து அச்சகத்தோடு தொடர்பு கொண்டான்.

''யார் பேசறது மூர்த்தி சார் எங்கே?''

''மிஷின் கிட்ட இருக்கார் சார்...''

''உடனே கூப்பிடு''

சூப்பரின்டென்டென்ட் மூர்த்தி சில நொடிகளில் ஹலோ' என்றார்.

''ஃபாரம் நம்பர் மூணு எவ்வளவு ஓடியிருக்கு மூர்த்தி?

''ஆறு மணிக்கு ஏத்தினோம் சார்...''



''மெஷினை நிறுத்துங்க மூர்த்தி...ஸ்டாப் பிரஸ்''

''சார்?''

நான் மறுபடியும் பேசறவரைக்கும் மிஷினை ஓட்ட வேணாம்...

அச்சாயிட்ட மூணாவது ஃபாரங்களை உடனே தனியா எடுத்து வெச்சிடச் சொல்லுங்க, புரியுதா?''

எதுவும் புரியாமலேயே 'எஸ், சார்' மூர்த்தி பதில்கூற சத்யா ரிஸீவரை வைத்துவிட்டு எதிரில் நின்றவனை கோபத்துடன் ஏறிட்டான்.

''என்ன சிவா இது?''

அச்சாகி வந்திருந்த மூணாவது ஃபாரத்தை மேஜை மேல் போட்டுவிட்டு வினவ, சிவா விழித்தான்.

''என்ன சார்?''

''நெஞ்சு பொறுக்குதில்லையே கட்டுரையைப் படிச்சிங்க இல்லே?''

''...''

சரியாப் படிச்சிட்டுத்தானே பிரெஸ்ஸுக்கு அனுப்பினீங்க?''

''...''

''கடைசி பாராவை இன்னொரு தரம் படிங்க... உரக்க—இன்னென்ன காரியங்களுக்கு இன்னென்ன ரேட் என்பதை பல வகையில் எழுதி வைக்காத குறையாகச் செயல்படும் இந்த பிரமுகரைச் சந்திப்பது குதிரைக் கொம்புக்கு அடுத்தபடி என்று நினைப்பவர்கள் அவருடைய 'சின்ன' வீட்டுக்குப் போனால் காரியம் நடப்பது, மிகச்சுலபம். திங்கள், புதன், வெள்ளி— நாட்களில், மாலை, இரவு நேரங்களில் கண்டிப்பாய் அவர் தன் மனைவி(!) யுடன்தான் இருக்கி...

சிவா முடிக்கு முன்...'ஸ்டாப் இட்' என்றான் சத்யா கோபமாக...

'கட்டுரை வெளியாகிறது 'மித்ரா' லேன்றது மறந்து போச்சா சிவா?''

''அது வந்து சார்...''

''வேணாம்...எனக்கு ஒரு விளக்கமும் வேணாம், இது தப்பான செயல். அரசியல்வாதியப்பத்தி எழுதறப்போ அவருடைய அந்தரங்க வாழ்க்கை பத்தின விபரம்எதுக்கு? அரசியல் சம்பந்தப்பட்ட கீழ்த்தரமான செயல்களை உடைக்கெறிக்கிங்க சரி; ஆனா, அந்தக் கடைசி நாலு வரி எதுக்கு? யாரையுமே அனாவசியமா வம்புக்கு இழுத்து கீழ்த்தரமா தனிப்பட்ட முறையில் தாக்குறது எனக்குப் பிடிக்காதுனு மட்டுமில்லே. 'மித்ரா'வோட கொள்கையும் இல்லேனு உங்களுக்குத் தெரியாது? ம்?''

''அது இல்லே சார்... இவரோட காரக்டரும் மோசம்னு காட்டத்தான்...''

''நோ...நிச்சயம் அது நாம சம்பந்தப்பட்ட விஷயம் இல்லே... ஒரு மனுஷனோட அந்தரங்க வாழ்க்கைலே தலையிடற உரிமை மூணாவது நபர் யாருக்கும் கிடையாது. இதை ஒட்டு மொத்தமாக நாமெல்லாம் மறந்திட்டதாலத்தான் இன்னிக்குப் பத்திரிகை தர்மம்ன்றது அதல பாதாளத்துக்கு போயிட்டது...''

''ஜனங்க விரும்பி வரவேறபாங்கனுதான்...''

''நான்ஸென்ஸ்—அப்படிச் சொல்லிச்சொல்லி தங்களோட செய்கைக்கு சப்பைக்கட்டு கட்டறதும்பல்ல நாமும் சேர வேணாம்சிவா, ப்ளீஸ்... பொதுவாழ்க்கைல ஈடுபட்டவங்கன்றதுக்காக ஒருத்தரோட சொந்த விருப்பு வெறுப்புகளை விமர்சிக்க உரிமை வந்திட்டதா நினைக்கிறது ரொம்ப தப்பு. தவிர, பத்திரிகை நம்ப கையில். இருக்கின்ற தைரியத்துல தப்பா ரிப்போர்ட் பண்ணற, வேண்டாதவங்



களைத் தாக்கி எழுதற அநாகரிகச் செயல் சில பத்திரிகை காரங்க நடுவுல வளர்ந்திட்டு வருது. ஐயம் ரியலி ஸாரி அப்பௌட் திஸ்...பத்திரிகையை நடத்தறது விளையாட்டான சமாசாராம் இல்லை... வியாபாரம் மட்டுமே குறிக்கோள்னா நான் பத்திரிகை நடத்த வேண்டியதில்லை... எனக்கு நேர்மை கண்ணியம் முக்கியம். மக்கள் நடுவுல விழிப்புணர்ச்சி உண்டாக்க எனக்கு தெரிஞ்ச விதத்துல சத்தியமா உழைக்கணும்னு ஆறு வருஷமா 'மித்ரா'வை கஷ்டப்பட்டு உருவாக்கியிருக்கிறதைப் புரிஞ்சிக்கங்க...''

குரலை எழுப்பி, மேஜையைத் தட்டி சத்யா பேசவும், சிவா சின்னக் குரலில் ''ஸாரி சார் இனிமே இப்படி நடக்காம பார்த்துக்கிறேன்'' என்று முனகினான்.

''இரண்டு நிமிஷங்களுக்கு மௌனம்...

சத்யா முகவாயைத் தடவி, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

''ஸ்டாப் பிரஸ் உத்தரவு கொடுத்திருக்கேன். கட்டுரையை நல்ல விதமா முடிச்சி, உடனே ஆக வேண்டியதைப் பாருங்க...''

சிவா கண்களை அகல விரித்தான்.

''ஸ்டாப் பிரஸ்ஸா? ஏற்கனவே மூணு மணி நேரம் ஓடியிருக்குமே சார்?

''பரவாயில்லை, கட்டுரையை முடிச்சி உடனே பிரஸ்ஸுக்கு அனுப்பிடுங்க...''

அப்படியே நின்று, மூணு மணி நேரங்கள் அச்சகம் ஓடியிருந்தால் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் பாரங்கள் அச்சாகியிருக்குமே. அப்படி என்றால் டன் பேப்பர் நாலாயிரம் ரூபாயோடு, கூலி, மை, புது ப்ரேம் செலவு என்று ஏழெட்டாயிரம் ரூபாய் தண்டமாகுமே என்று சொல்ல நினைத்து, எண்ணத்தை வெளியில் கூறத் தைரியம் இல்லாமல் மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிக்க சிவா வெளியில் போனான்.

அவன் நகர்ந்ததும் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து சத்யா கண்களை மூடிக் கொண்டான்.

நல்ல வேளை...

கடைசி நிமிஷத்தில் தவறு கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

இல்லையென்றால்...?

மக்களுக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லும் நேர்மையான சாதனமாக 'மித்ரா' ஆயுசுக்கும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் பெரிசாய் கருப்புப் புள்ளி ஒன்று விழுந்திருக்கும்.

சில ஆயிரங்கள் நஷ்டத்தோடு பத்திரிகை அரை நாள் தாமதமாக வெளியாகும்.

பரவாயில்லை... நிம்மதிக்கு முன் இவை சாதாரணம்...

ஒரு டம்ளர் ஐஸ் தண்ணீரைக் குடித்துவிட்டு, மேலாக இருந்த ஃபைலைப் பிரித்தான்.

நாலைந்து வண்ணப் படங்களோடு ஒரு பேட்டிக் கட்டுரை...

நாட்டியமாடும் பெண்மணி...

பெரிய கண்கள் சற்றே விரிந்து, உதடுகள் கூம்பி, சிருங்காரமாய் பார்க்கும் படம் ஒன்று...

கெஞ்சலுடன் யாரையோ அழைக்கும்பாவனையுடன் இன்னொன்று...

அதீதமான பக்தி பரவசத்துடனும், 'நானா? என்கிற ஆச்சர்யத்துடனும் பாக்கி இரண்டு...

அசாதாரணமானதொரு நளினம். அழகு. அந்தப் பெண்ணிடம் தென்பட 'இவன் யார்' என்ற ஆர்வத்துடன் பேட்டி கட்டுரையை எடுத்து பேரைப் பார்த்தான்.

ஜனனி...

# 4

சத்யா பேட்டியைப் படிக்க ஆரம்பித்தான்.

ஜனனி!

இந்தப் பெயரை சமீபகாலமாக அடிக்கடி உங்களில் பலர் கேள்விப்பட்டிருக்கலாம்.

படாதவர்களுக்காக ஒரு சின்ன அறிமுகம்.

ஜனனி இன்றைய பரதநாட்டிய கலைஞர்களில் முக்கியமாய் குறிப்பிட வேண்டியவர். தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு அதிலிருந்து சிறிதளவும் வழுவாமல் சிறப்பாக ஆடுபவர். இவருடைய 'கிருஷ்ணா நீ பேகனே' நடனத்தைப் பார்க்கும்போது, பரவசத்தில் கண்களில் நீர் ததும்பாதவர் அனேகமாக யாரும் இல்லை என்றே கூறலாம்.

இவரின் தனித்தன்மையை நன்றாக அறியும் பொருட்டு ஒரு சந்திப்பு.

திருவான்மியூரில் கடலை ஒட்டி அழகான சிறியவீடு...

செம்பருத்திகளும் பச்சை க்ரோட்டன்ஸ் செடிகளும் ஒருவித ஒழுங்குடன் நம்மை தலை அசைத்து வரவேற்கின்றன...

முன்வராந்தாவில் நுழைந்ததுமே தசாங்கப் புகையின் இதமான மனம் மனசை ரமிக்க வைக்கிறது.

வரவேற்பறையின் அலங்காரம் கச்சிதமாய், கவர்ச்சியாய் அடக்கமாய்...

மூன்றடிக்கு ஒரு சிவகாமி சிலை...

நாட்டியம் சம்பந்தப்பட்ட ஓவியம் ஒன்று...

கை கூப்பி, புன்னகைத்து ஜனனி நம்மை வரவேற்கிறார்.

தளரப் பின்னிய ஒற்றைப் பின்னல்—லேசாக மலரப் பார்க்கும் மல்லிகை...

முதல் நாள் மேக்கப், இதர அலங்காரங்களுடன் மேடையில் தோன்றிய ஜனனியைவிட இப்போது எதிரில் ப்ளெய்ன் பச்சைப் புடைவையில் எளிமையாகத் தோன்றும் ஜனனி இன்னும் இளமையுடன், கம்பீரத்துடன் இருப்பதாக மனசுக்குப் படுகிறது.

முன்னுரை போதும்...

இனி பேட்டி—

''சமீபத்தில் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி கொடுத்தபோது பரதநாட்டியமும் ஒருவிதத்தில் யோகா பயிற்சிதான்; இரண்டுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு என்று நீங்கள் கூறியிருப்பதை விளக்க இயலுமா?''

''யோகி ஒருவர் தன் உடலையும். மூச்சையும் கட்டுப்படுத்தி ஆத்மதரிசனம் செய்வதைப்போலவே லயத்திலும் சங்கீதத்திலும் 'தான்' என்கிற தன் உணர்வைக் கரைத்துக்கொண்டு ஒன்றிப்போகிற நடனமணியாலும் நிச்சயம் ஆத்மாவை உணர முடியும். தாளக்கோப்புடன் ஆடிப் பழக்கப்பட்ட உடம்பு, தன் மனித பலவீனங்களைத் துறந்து ஒருவித பரிசுத்த நிலையை அடைவதையும் யோகா பயிற்சியுடன் தாராளமாய் ஒப்பிடலாம். யோகாவுக்கும் சரி, பரதநாட்டியத்துக்கும் சரி, கட்டுப்பாடு என்பது மிக அவசியமான ஒன்று.யோகியானவர் முழுமையான சிரத்தை, சுயகட்டுப்பாடுடன் மனதை ஒருநிலைப்படுத்தி பரவசம் அடைவதும், ஒரு நடனமணி ஒரே சமயத்தில் கால், கை, கண், காது, மனம் என்று அத்தனையும் கட்டுப்படுத்தி, முழுமையான, அற்புதமான அனுபவத்தைப் பெறுவதும்கூட என்னைப் பொறுத்தவரை ஓர் ஒற்றுமைதான்''

''பரதநாட்டியத்தில் உங்களுக்கு லயிப்பு உண்டானது எப்போது?''

'தாயாரின் கர்ப்பப்பையில் வாசம் செய்த நாட்களிலேயே உண்டாகி இருக்க வேண்டும்! ஏன் என்றால், எனக்கு குரு என் தாயார்தான்...''

''எத்தனை வருஷங்களாக ஆடிக்கொண்டிருக்கிறீர்கள்?''



நினைவு தெரிந்த நாளிலிருந்து...மேடை ஏற்றத்தைக் குறிப்பிட வேண்டுமானால் சுமார் எட்டு வருஷங்களாக

''நினைவு தெரிந்த நாட்களாய் பயின்றும், மேடை ஏற ஏன் இத்தனை தாமதம்?''

''கற்றது போதாது என்று எண்ணியதுதான் காரணம்...''

''ஒரு வருஷ காலத்திற்குள் நடனத்தைக் கற்று மேடை ஏறுவது நாகரிகமாகி விட்ட இன்றைய நிலையில் நீங்கள் இப்படிச் சொல்கிறீர்களே?''

''அதுதான் நீங்களே கூறி விட்டீர்களே அது நாகரிகம் என்று! பரதநாட்டியத்தை இப்படி விளையாட்டாக அணுகுவது தவறு''

''உங்கள் தாயார் பிரசித்தி பெற்ற நடனமணியாக திகழ்ந்தவரா?''

''அல்ல...ஆனால் திறமை மிக்கவர் மயிலாப்பூர் கௌரி அம்மாள் வழியில் பாரம்பரிய பரத நாட்டியத்தைக் கற்றவர். சந்தர்ப்ப வசத்தால் மேடை ஏறி ஆட வாய்ப்பு இல்லாமல் இருந்தபோதும் அதற்காக வருந்தாமல் ஆத்ம திருப்திக்காக நாட்டியத்தை விடாமல் பயிற்சி செய்து நான் பிறந்த பிறகு தனக்குத் தெரிந்தது அத்தனையும் எனக்குப் புகட்டினவர்...''

',நீங்கள் கற்ற விதம் இன்றைக்கு பரத நாட்டியம் பயிலும் பலரிடமிருந்தும் மாறுபட்டது என்று நம்புகிறீர்களா?''

''நிச்சயமாக...,எனக்கு மூன்று அல்லது நான்கு வயசிலிருந்தே அம்மா எளிமையான விதத்தில் அஸ்திவாரத்தைப் போடத் துவங்கினார் என்று சொல்ல வேண்டும். சங்கீதத்தில் தேர்ச்சி பெறாத வரையில் நாட்டியம் பயின்று பிரயோஜனம் இல்லை என்பது அம்மாவின் கருத்து ஆரம்ப வருஷங்களில் பாட்டுக்குத்தான் முக்கியத்துவம். ஸ்வர, ராக, ஞானம் வந்த பிறகு என் எட்டாவது வயதில் அடவுகளைச் சொல்லித் தரத் துவங்கினார்''

''சலங்கை அரங்கேற்றம் எப்போது நடந்தது?''

"அந்த மாதிரி சமாசாரம் எல்லாம் எனக்கு நடக்க வில்லை. ஒரு நாளைக்கு காலையிலும், மாலையிலுமாகச் சேர்த்து மூன்று மணி நேர பயிற்சி இருக்கும்...இதோடு வழக்கமான படிப்பு .வேறு...இப்படி சில வருஷங்கள்... பதங்களைச் சொல்லிக் கொடுக்கும் முன்னர் சாகித்தி யத்தை அர்த்தம் புரிந்து மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் அம்மா குறியாக இருந்தார்...கௌரி அம்மாளிடம் பயின்றவர்கள் பதங்களுக்கு அலாதிகவனம் கொடுப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் அந்த வழி வில் வந்தவள் என்கிற ரீதியில் 'யாரென்று ராகவனை' என்கிற பாடலின் முதல் வரிக்கு மட்டும் என்னால் பதி னேழு வித அபிநயங்களைச் செய்து காட்ட முடியும் ஆனால் தெரிந்தவை அத்தனையும் ஒரே சமயத்தில் செய்து காட்டி விடுவது சலிப்பை உண்டாக்கும். கை தேர்ந்த சங்கீத வித்வானின் சங்கராபரணம், கச்சேரிக்கு கச்சேரி மாறுபடுவதைப் போல பரத நாட்டியமும் கற்ப னையை தாங்கி அவ்வப்போது வித்தியாசப்படவேண்டும் இல்லாவிட்டால் ஸ்டீரியோ டைப்ட்' ஆக இருந்து காண் பவர்களைச் சலிப்படையச் செய்யும்

"தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பது போல இன்று வீட்டுக்கு வீடு பரத நாட்டியக் கலைஞர் கள் தோன்றி இருப்பது பற்றி...?"

"வருந்துகிறேன் தொன்மை வாய்ந்த நமது பரத நாட்டியத்தின் அருமை உணர்ந்து அதைப் பக்தி சிரத் தையுடன் கற்பதற்குப் பதிலாக இப்படி பொழுது போக் காக பலர் நினைத்துவிட்டது வேதனையைத்தருகிறது. நமது கலாசாரத்தின் பிரதிபலிப்பு பரதநாட்டியம் சின்ன வயசு முதற்கொண்டு புராண இதிகாச கதைகளில் லயித்து, நம் மண்ணின் பெருமையை உணர்ந்து தக்க பருவம் வந்ததும் பய பக்தியோடு பரதம் பயின்றால் அதற்கு இணை வேறு எதுவுமே இல்லை மேற்கத்திய நாகரிகத்தால் கவரப்பட்டு கான்வெண்டில் படித்து மேல் நாட்டினரைப் போலவே- சிந்தித்து, உடுத்தி, பேசி, பழகும் இன்றைய இளைய தலைமுறையினரில் பலர், மேடை ஏறும் ஆசையில் மட்டும் பரதநாட்டியம் பயிலுவ



தால் சாதிக்கப் போவது ஏதும் இல்லை. ஆத்மா இல்லாத சரீரத்தால் யாருக்கு என்ன பயன்?"

"அர்த்தம் புரிந்து பதங்களை ஆடுவது சிறப்பு என் கிறீர்களே அப்படி என்றால் தமிழ் அல்லாத வேறு மொழிப்பதங்களுக்கு நீங்கள் அபிநயிப்பதில்லையா?"

"சங்கீதம் பயின்ற அந்த ஆரம்ப நாட்களிலேயே, சமஸ்கிருதம், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளிலும் நான் தேர்ச்சி பெற்றுவிட்டேன். இவை தவிர மலை யாளம் கன்னட சாகித்தியங்களைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு மொழி அறிவு உண்டு."

"ஜனரஞ்சகத்துக்காக உங்கள் நடனக் கச்சேரியில் ஏதேனும் மாற்றம் செய்ததுண்டா?"

"இவ்வளவு நேரம் பேசின பிறகு நீங்கள் இதைக் கேட்பது எனக்கு வருத்தத்தைத் தருகிறது நான் பாரம் பரிய பரத நாட்டியத்தை மட்டும் கற்றவள் அதை மட்டுமே என் மூச்சு உள்ளளவும் ஆட விரும்புபவள்..."

"பாரம்பரிய பரதநாட்டியம் என்று எதைக் குறிப் பிடுகிறீர்கள்?,'

"அலாரிப்பில் தொடங்கி. ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதங்கள், தில்லானா விருத்தம்...என்று நிகழ்த் தப்படும் நடனக் கச்சேரி என்னைப்பொறுத்தவரை பாரம் பரியம் வாய்ந்தது..."

"நேற்று பிரும்ம கான சபையில் கச்சேரியைத் துவங்கும் முன் பரதநாட்டியம் என்பது ஒருகோவிலுக்குச் சமம் என்று குறிப்பிட்டீர்கள் அதை விளக்க முடியுமா?"

பரதநாட்டியத்தை நிச்சயம் ஒரு முழுமையான. கம்பீரமான கோவிலுக்குச் சமமாகச் சொல்லலாம். தாள அடிப்படையில் அமைந்த அலாரிப்பின் அடவுகளின் சேர்க்கை. ஒருவிதப் புத்துணர்ச்சி தருவதாக இருக்கிறது விளையாட்டு வீரர்கள் 'வார்மிங் அப்' பயிற்சிகள் செய்வது போலத்தான் அலாரிப்பு ஆடுவதும் என்று கூட குறிப்பிடலாம். இப்படி, ஒவ்வொரு ஆட்டத்துக்கும்

விளக்கம் கொடுக்க முடியும் என்கிற அடிப்படையில். நாட்டிய மேதை திருமதி பால சரஸ்வதி அவர்கள் ஒரு சமயம், பரத நாட்டியத்துக்கும் கோவிலுக்கும் உள்ள ஒற்றுமையை சுட்டிக் காட்டி அலாரிப்பைத் தலைவாயி லான கோபுரத்துடன் ஒப்பிட்டார்கள். அடுத்து ஜதியும், இனிமையான ஸ்வரமும் இணைந்த ஜதிஸ்வரம்—இது வெளிப்பிரகாரத்துக்குச் சமம். மூன்றாவதாக சப்தம்—ஜதியுடன் துவங்கி, இடையிடையில் அபிநயத்துக்கு ஏற்ற பாடல்களுடன் ஆடப்பட்டு, நாட்டியமாடுபவரையும், காண்போரையும் தொடர்ந்து வரப் போகும் வர்ணத் துக்குத் தயார் பண்ணும் ஆட்டம் இதை அர்த்த மண்ட பத்தோடு ஒப்பிடலாம். இனி கச்சேரியின் நடுநாயகமாக விளங்கும் வர்ணம். தாளத்துக்கும் பாவத்துக்கும். அபிநயத்துக்கும் பூரணமாக இடமளித்து 'தான்' என்கிற உணர்வை கரைய வைக்கும் தன்மை உடையது இது கர்ப்பக கிரகத்துக்குச் சமம் தொடர்ந்து நிறைந்த மென்மையான இதமான பதங்கள். இவைகளை ஆடும் போது கண்டிப்பாய் இறைவனை அணுகி நிற்கிற உணர்வு தான் ஒவ்வொருவருக்கும் தோன்றும் வெளிப் பிராகாரங்களில் ஆர்ப்பாட்டம் மேளசத்தம் வண்ண ஜாலங்கள் இல்லாமல் சன்னதியில் அனுபவிக்கு மந்திர ஓசையின் அருகாமையை இந்த பதங்களுக்கு ஒப்பிடலாம் கடைசியாக தீபமங்கள ஜோதியாக கற்பூர ஆரத்தி இதுதான் தில்லானா தன்னை மறந்து தன் நிலை மறந்து, ஐயனோடு ஐக்கியமாக வைக்கும் சக்தி முத் தாய்ப்பு மந்திரமாய் ஒற்றைஸ்லோகம் இப்படிக்கற்பனை பண்ணிப் பார்த்தால் கண்டிப்பாய் பரத நாட்டியமும் ஒரு கோவில்தானே?''

உணர்ச்சி வசப்பட்டு ஜனனி நீளமாகப் பேசி நிறுத்து கிறார்...இரண்டு நிமிஷங்களுக்கு மௌனம்...

''அருமையான விளக்கம். நாட்டிய சம்பந்தமான கேள்விகள் போதும்...இனி உங்களைப் பற்றி...



''இது நாழிகை நான் கூறினவெல்லாம் என்னைப் பற்றியவைதானே?''

''அது சரி ஆனால் உங்கள் சொந்த வாழ்க்கைபற்றி எதுவுமே சொல்லவில்லையே! நீங்கள் மணமாகாதவர் என்று தெரியும்... எப்போது திருமணம் செய்து கொள்ள உத்தேசம் மற்றபடி...

''மன்னிக்க வேண்டும். நாட்டியக் கலைஞர் ஜனனி யைத்தான் நீங்கள் சந்திக்க வந்திருக்கிறீர்கள்.''

''அதற்காக... உங்களைப் பற்றின இதர விவரங் களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிற வர்களுக்காகவாவது...''

''குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். தனிப்பட்ட விதத்தில் உயர்வாகப்பேச என்னிடம் ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. தவிர என் சொந்த வாழ்க்கை. விருப்பு, வெறுப்பு இவைகளைப் பற்றிய விவரங்கள் உங் களுக்கோ, மற்றவர்களுக்கோ அவசியமானவை இல்லை என்றும் நான் நம்புகிறேன். இந்த இடத்தில் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீர்களே? கானடா நாட்டு நண்பர் ஒருவர் என்னிடம் ஒருசமயம் — திருமணத்துக்கு முன்னர் எங்கள் பிரதமர் ட்ருடோ தினமும் ஒரு பெண் ஸ்நேகிதியுடன் சினிமாவுக்குச் செல்வார்; க்யூவில் நின்று டிக்கெட் வாங்குவார். கண்டபடி சுற்றுவார். ஆனால், இதுபற்றி நாங்களெல்லாம் கவலைப்பட்டதே இல்லை. பிரதமர் நாற்காலியில் அமர்ந்துசெய்யப்படும் காரியங்கள் தான் எங்களுக்கு முக்கியம்; மற்றபடி மாலை நேரங்களில் அவர் சொந்த வாழ்க்கையை எப்படி வாழ்ந்தாலும் அதில் தலையிட எங்களுக்கு உரிமையில்லை என்று ஒதுங்கி விடுவோம். ஆனால், உங்கள் நாட்டில் இதற்கு நேர் மாறு. கண்டிக்க வேண்டிய விஷயங்களை விட்டு விட்டு தேவையற்ற விவரங்களில் அளவுக்கு மீறி நுழைகிறீர் கள்...'' என்று கூறியவை இப்போது ஞாபகத்துக்கு வர. கேட்கிறேன் நம் நாட்டில் மட்டும் பத்திரிகைகாரர்கள்

எல்லை தெரியாமல், நாகரிகம் புரியாமல் நடந்து கொள்வதன் அவசியம் என்ன?''

படித்துக்கொண்டே வந்த சத்யா சடக்கென்று முன்னால் சாய்ந்து உட்கார்ந்தான்.

சரியாக இருபது நிமிஷங்களுக்கு முன்னால் தான் வெளிப்படுத்தின கருத்தையே முன்பின் தெரியாத ஜனனியும் கூறியிருப்பது அதீத ஆச்சர்யத்தைத் தர, இன்னொரு தரம் அந்தக் கடைசிப் பாராவைப் படித்தான்.

சட்டென்று குமிழாய் இருதயத்தில் சந்தோஷ மலர் ஒன்று பூத்தது...

பேச்சில் இருக்கும் கம்பீரம், தெளிவு, நாட்டியத்திலும் இருக்குமென்றால், நிச்சயம் இவள் ஒரு அபூர்வமான மனுஷிதான்...

இருக்குமா?

ஆர்வத்தின் காரணமாய் அந்த பேட்டியை எழுதிய கல்யாணத்தை உடனே வரவழைத்து கட்டுரையைப் பாராட்டினவன், அடுத்து ஜனனியின் நாட்டியக் கச்சேரி எங்கிருக்கிறது என்பதை அறிந்து கொண்டதோடல்லாமல், மறக்காமல் இரண்டு வாரங்கள் கழித்து ம்யூஸிக் அகாடமியில் நடந்த அந்த நிகழ்ச்சிக்கும் போய்விட்டு திரும்பியபோது இந்த ஜனனி, தெளிவாகச் சிந்திக்கத் தெரிந்தவள் மட்டுமல்ல, அழகானவள் மட்டுமல்ல, வெகு சிறப்பாகச் சொன்னதைச் செய்து காட்டும் அலாதியானதொரு நர்த்தகியும்கூட என்கிற விஷயம் அவனுக்கு நிஜமான சந்தோஷத்தைத் தந்தது.

## 5

தலையங்கம் அழுத்தமாக அமைந்துவிட்ட திருப்தியுடன் மீண்டும் ஒருமுறை எழுதியதைப் படிக்கத் துவங்கிய



சத்யா, கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு நிமிராமலேயே 'எஸ்' என்றான்.

அக்கௌண்டண்ட் ஆதிகேசவன்.

உட்காரச் சொல்லி சைகை காட்டிவிட்டு, செய்து கொண்டிருந்த காரியத்தைத் தொடர்ந்தவன், படித்து முடித்து 'கம்போசிங் செய்ய' என்று அதில் எழுதி, கையோடு ப்ரஸ்ஸுக்கு அனுப்பின பிறகு, ஆதிகேசவனைப் பார்த்து புன்னகைத்தான்.

''என்ன விஷயம் கேசவன்? முக்கியமானதா இல்லாட்டி காலைவேளைல என்ரூமுக்கு வரமாட்டீங்களே?''

ஆதிகேசவன் நட்புடன் சிரித்தார்.

சுற்றி வளைத்துப் பேசினால் சத்யாவுக்குப் பிடிக்காது என்று உடனே விஷயத்துக்கு வந்தார்.

''இண்டியா சைக்கிள்ஸ் செட்டியார் நாலு நாளா தினமும் போன் பண்ணறார் காலெண்டர் சமாசாரமா ஒரு முடிவுக்கு வந்திடணும்னு விரும்பறார்...''

ஒழுங்கில்லாமல் கிடந்த தாள்களை அடுக்கி ஒரு பக்கமாய் வைத்த சத்யா சின்ன குரலில் பதில் கூறினான்.

''அந்த மாதிரி வேலை எல்லாம் நாம பண்ணற வழக்கம் இல்லேனு சொல்லிவிட வேண்டியதுதானே கேசவன்?''

''சொன்னேன் சார்..காதுல வாங்கமாட்டேன்கறார் நம்ம ப்ரஸ் மாதிரி வேற எங்கயும் வேலை சுத்தமா இருக்குறதில்லேனு பிடிவாதம் பிடிக்கிறார்...''

''......''

ஆதிகேசவன் முன்னால் சாய்ந்து குரலைத்தழைத்துக் கொண்டார்.

''சில விஷயங்களை நான் சொல்ல நீங்க அனுமதிக்கணும் ப்ளீஸ்...எனக்கென்னமோ நாம இந்த வேலையை ஒப்புக்கறதுல தப்பு எதுவும் இருக்கறதா தோணலை.

மூனுலக்ஷம் காலண்டர் கேக்கிறார். பல்க்ஆர்டர்...அச்சடிக்க அவசரமும் இல்லேன்றார். இரண்டு மாசத்துல கொடுத்தா போதுமாம். இதுக்காக ஓவர்டைம் வேலை பண்ணத்தேவை இல்லை...பத்திரிகை அடிச்சு முடிச்சதும், வாராவாரம் கிடைக்கற ஓய்வு நேரத்துல கஷ்டம் இல்லாம அடிச்சுடலாம்...கணக்குப் போட்டுப் பார்த்தேன்...சுலபமா முப்பதாயிரத்துக்குமேல வருமானம் இருக்கு..."

"அதெல்லாம் சரி கேசவன்...ஆனா. இந்த மாதிரி வெளி வேலைகள் பண்ணறதுல எனக்கு சம்மதம் இல்லையே...இன்னிக்கு ஒருதரம் ஒப்புக்கிட்டா, நாளைக்கு சுலபமா கிடைக்குற இந்த பணத்துல ஆசை வைச்சி. பத்திரிகை வேலையை ஒதுக்கிட்டாவது இதை செய்யற அளவுக்கு துணிஞ்சிடுவோம்ன்றதை நினைப்புல வைச்சிக்கிட்டு முளையிலேயே இந்த பழக்கத்தை வெட்டிடறது தான் நல்லது..."

"நம்மையும் மீறி அப்படி கன்னாபின்னான்னு ஒத்துக்குவோமா சார்? நேரத்துக்கு பத்திரிகை வெளியாகணும்ன்ற விஷயத்தை நீங்க எத்தனை உறுதியா இருக்கீங்கன்னு எங்களுக்கு எல்லாம் தெரியாதா? திட்டமிட்டு அப்பப்ப இப்படி ஒரு சில தரமான வேலைகளை எக்ஸ்க்ளூஸிவ் ஜாப்ஸ்—ஆ செஞ்சி கொடுக்கறதால, ப்ரஸ்ஸும் சும்மா இல்லாம இருக்கும்; நல்ல வருமானமும் கிடைக்கும்...நீங்க இன்னொருதரம் யோசிச்சீங்கன்னா தேவலை சார்..."

உடனே பதில் கூறாமல் முகவரியைத்தடவிக்கொண்டு சத்யா யோசனையில் ஆழ்ந்தான்,

ஆதிகேசவன் சொல்வதும் ஒருவிதத்தில் சரிதான். நம்மை மீறி எந்த செயலும் நடந்துவிட முடியாது. துவக்கத்திலிருந்தே விழிப்போடு இருந்துவிட்டால், எதைக் குறித்தும் கவலை ஏன்?



"ஆல்ரைட்...நீங்க ஜெயிச்சுட்டீங்க... காலண்டர் அச்சடிக்க ஒப்புக்கறேன் எவ்வளவு வேணும் எத்தனை மாசத்துல வேணும், என்ன ரேட்—எல்லாம் பேசி முடிவு பண்ணிடுங்க..."

சத்யாவின் இந்தப் பேச்சை கண்டிப்பாய் எதிர் பார்த்த தினுசில் ஆதிகேசவன் பூரிப்போடு 'தாங்ஸ் சார்' என்றார். பின், ப்ரீஃகேசிலிருந்து டைப் செய்யப்பட்ட ஒரு தாளை எடுத்து நீட்டினார்.

"என்ன ஆதிகேசவன்?"

நீங்க கேட்ட எல்லாவிவரம், "ப்ளஸ் காண்ட்ராக்ட்தாள்...கையெழுத்து போட்டுட்டீங்கன்னா வேலை முடிஞ்சுது—"

சத்யா புருவங்களை உயர்த்தி தன் ஆச்சர்யத்தை வெளிப்படையாக்கினான்.

"ஸோ...எல்லாத்துக்கும் தயாரா, ஒரு முடிவோட தான் வந்திருக்கிங்க!" இது ஒரு பாராட்டு என்பது புரிய ஆதிகேசவன் புன்னகைத்தார்.

"நீங்க என்னிக்குமே அன்ரீஸனபிளா இருந்ததில்லே சார்...அந்த தைரியத்துலதான் தயாரா வந்திட்டேன்..."

ஆதிகேசவன் மேல் சத்யாவுக்கு விசேஷமாக மரியாதை இருப்பதற்கு இந்தக் குணம்தான் காரணம்.

வெட்டிக்கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வரும் ரகம்...

முன் யோசனையுடன் திட்டமிட்டு நடப்பதில் ஒரு நிமிஷம் வீணாக செலவழிவதில்லை...

ஆதிகேசவன் நீட்டிய ஒப்பந்தத் தாளை படிக்கையில் அவர் கூறினபடி அச்சகம் ஓய்வாக இருக்கும் நாழிகையில் துளிகூட சிரமப்படாமல் வாபம் சம்பாதிக்கக் கூடிய

வேலைதான் இது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிய, மீண்டும் ஒருமுறை தன் தலைமைக் கணக்கரின் திறமையை 'நினைத்து மகிழ்ந்தவாறு தொடர்ந்து படித்தான்.

—டிசம்பர் ஒன்றாம் தேதிக்குள், ஒப்புக் கொண்டபடி காலண்டர்களைக் கொடுக்க இயலவில்லை என்றால் பேசிய தொகையிலிருந்து இருபது சதவிகிதம் நஷ்டஈடாக குறைக்கப்பட்டு, பாக்கி பணம் மட்டுமே பட்டுவாடா செய்யப்படும்...

சின்னதாக எரிச்சல் தலைதூக்க, சத்யா மீண்டும் அந்த விதியைப் படித்தான்.

''என்ன ஆதிகேசவன் இது?''

''என்ன சார்?''

''இந்த ஷரத்து பைத்தியக்காரத்தனமா இருக்கே மூணு லட்சம் காலண்டரைப் பூராவும் ஒரே நாளில் கொடுக்க முடியாது தயாராக, தயாராக, பத்து பத்தாயிரமா நாம அனுப்பிகிட்டே இருப்போம். அப்படி இருக்க, 'டிசம்பர் ஒண்ணாம் தேதிக்குள்ளே சப்ளை பண்ணலைன்னா இருபது பர்செண்ட் பணத்தை குறைப்போம்' ன்றது சரியாப் படலையே? டெலிவரி ஆகாம மிச்சம் இருக்கிற காலண்டர்களுக்கு இப்படி குறைச்சுக் கொடுப்போம்னா நியாயம்...அதை விட்டுவிட்டு சப்ளை ஆயிட்ட சரக்குக்கும் இதே ரீதிலேதான் பணம் தருவோம்னா எப்படி? இரண்டு லக்ஷத்து தொண்ணூத்து ஒம்பதாயிரம் காலண்டர்களை சப்ளை பண்ணிட்டு, ஆயிரம் கொடுக்காம இருந்தோம்னு வைச்சிக்கிங்க, அப்பறு 'ம்...இந்த விதி எனக்கு சரியாப் படலை...'

ஒப்பந்தத் தாளின் நகலை எடுத்து, கண்ணாடியை மாட்டிக்கொண்டு ஆதிகேசவன் அவசரமாய்ப் படித்த நிமிஷத்தில் சத்யா சிந்தித்தான்.



''அதை இப்படி மாத்திடுங்க கேசவன்...'எக்காரணத்தைக் கொண்டாவது டிஸம்பர் ஒண்ணாம் தேதிக்குள் மூன்று லக்ஷம் காலண்டர்களும் சப்ளை செய்யப்படாவிடில் டெலிவிரி ஆகாமல் மிஞ்சி இருக்கும் காலண்டர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, அதற்குப் பேசிய தொகையிலிருந்து நஷ்டஈடாக ஐம்பது சதவிகிதம் கழிக்கப்பட்டு, பாக்கி பணம் மட்டுமே பட்டுவாடா செய்யப்படும்...''

' ஐம்பது பர்செண்டா?''

சத்யா சிந்தித்தான்.

''பயப்படாம டைப் பண்ணிட்டு வாங்க கேசவன். நம்ம வேலை திறன்ல எனக்கு நம்பிக்கை இருக்கு...''

சந்தேகம் அல்லாத முகபாவனையுடன் அவர் உட்கார்ந்திருக்க, முத்து உள்ளே வந்தான்,

''எழுத்தாளர் சங்கரன் வந்திருக்கார் சார்...''

''வரச்சொல்... நாம் அப்புறமா பார்க்கலாமா கேசவன்?''

அவர் எழுந்து போன சில நொடிகளில் சங்கரன் உள்ளே வந்தார்.

''வணக்கம் சார்...''

''வணக்கம்- வாங்க...உட்காருங்க...''

''என்னைப் பார்க்கணும்னு சொன்னிங்களாமே!''

''ஆமாம் உங்ககிட்ட கொஞ்சம் பேச வேண்டி இருக்கு...''

தற்சமயம் 'மித்ரா' வில் வெளிவந்துகொண்டிருக்கும் இரண்டு தொடர்கதைகளில் ஒன்றின் ஆசிரியர் இந்த சங்கரன்.

''நானே உங்களை சந்திக்க வரணும்னு நினைச்சுட்டு இருந்தேன்...தொடருக்கு ஆர்ட்டிஸ்ட் தேவன் போடற படம் நல்லாவே இல்லே சார்...கதையைப் படிக்காம போடறாரோனு கூட சந்தேகமா இருக்கு...கதாநாயகனுக்கு நான் எழுதாத மீசை, கண்ணாடி எல்லாம் போட்டுடறாரு...எடிட்டோரியல்ல இதெல்லாம் கவனிச்சா நல்லது'...''

அவசியம் கவனிக்கணும் சங்கரன். ஆசிரியர் எழுதாத விவரங்களை ஓவியர் வரைஞ்சிருந்தா, தப்பை சுட்டிக் காட்டி திருத்தறது எங்க பொறுப்புதான். ஆனா நீங்களும் கொஞ்சம் கவனத்தோட நடந்துக்கறது நல்லதுனு நான் நினைக்கிறேன்...

''...''

''இரண்டு வாரம் முன்னால் ஸ்கிரிப்டைத் தந்திங்கன்னா எங்களால நிதானமா, கச்சிதமா வேலையை கவனிக்க முடியும்...ஆனா. நீங்க என்னடான்னா...

சங்கரன் அவசரமாய் குறுக்கிட்டார்.

''வேணும்னு தாமதம் பண்ணுவேனா சார்...என் நிலை அப்படி...''

அதைத்தான் நானும் சொல்ல வரேன். ஒரே சமயத்துல மூணு, நாலு பத்திரிகைல எழுத ஒத்துக்கிட்டு நேரம் இல்லாம அவஸ்தைப் படறதுல நீங்களும் கஷ்டப்பட்டு எங்களையும் ஏன், வாசகர்களையும் கூட குழப்பிடறீங்க.

''நாங்க என்ன சார் பண்றது? பத்திரிகை ஆசியர்ங்க தொடர்வேணும்னுகேக்கறப்போ மாட்டேன்னு எப்படிச் சொல்றது! ஆயிரம் இருந்தாலும் எங்களை வளர்த்தவங்க நீங்க...''

''மன்னிக்கணும் சங்கரன். பத்திரிகை ஆசிரியர் ;மேல நீங்க பழி போடறதை நான் ஒப்புக்க மாட்டேன். உங்களை மீறி நாங்க செயல்பட முடியாது நாங்க கேட்கலாம். ஆனா, ''இப்ப இல்லே சார் ஆறுமாசம் கழிச்சு எழுதறேன்'னு சொல்றது உங்க கையிலதானே இருக்கு? உங்களை மாதிரி வளர்ந்த எழுத்தாளர்கூட, இப்படி நிதானமில்லாம நடக்குறதைப் பாக்குறப்ப எனக்கு வருத்தமா இருக்கு உங்களுக்கு இருக்குற வாசகர் வட்டத்துக்கு ஆக்கபூர்வமா எத்தனை சாதிக்கலாம்! அதைவிட்டுட்டு 'கிளுகிளு'னு ஒரே சமயத்துல நாலு பத்திரிகைல தொடர்! பணம் பேர், பிரபல்யம் ஆத்ம திருப்தி இதுல எதுக்காக ஒப்புக்கறீங்களோ, எனக்குத் தெரியாது. ஆனா அவகாசம் இல்லாம நீங்க திண்டாடறது மட்டும் எனக்குத் தெளிவா புரியுது. கமலாவை விமலானு எழுதறீங்க; ஒருவாரப் பேசற தமிழ்லே எழுதினா அடுத்தவாரம் செந்தமிழ் ஏன்? நாலு வாரம் முன்னால் கதாநாயகியோட பாட்டி செத்ததா எழுதிட்டு இந்த வாரம் பாட்டிய தாத்தாவாக்கிட்டீங்க...என்ன சங்கரன் இதெல்லாம்? உங்க தப்பை திருத்தாம அப்படியே நாங்க வெளியிட்டா உங்க இமேஜ் என்னவாகும்னு யோசிச்சிங்களா? கஷ்டப்பட்டு முன்னேறி. பிரபல எழுத்தாளர்ன்ற சிம்மாசனத்துல உட்கார்ந்திட்டீங்க...அதை காப்பாதிக்க வேணாமா?ம்?''

குதர்க்கமாக அல்லாமல், நிஜமான அக்கறையுடன் சத்யா பேசுவதை உணர முடிய சங்கரன் மௌனித்தான்.

''உங்க எழுத்துல எனக்கு அலாதி பிரமை உண்டு. சங்கரன் அதனாலதான் யோசுச்சு ஆக்கபூர்வமா செயல்படவேண்டிய நீங்க இப்படி கேட்பார் பேச்சைக் கேட்டு உங்க மதிப்பை குறைச்சிக்கறீங்களேனு வருத்தமா...''

முடிப்பதற்குள் போன் அழைக்க, சத்யா ரிஸீவரை எடுத்து, 'எஸ்' என்றான்.

''ஜனனினு ஒரு அம்மா பேசறாங்க சார்...''

ஜனனியா?

எந்த ஜனனி?

நெற்றியைச் சுருக்கிக்கொண்டு யோசித்தவன் பார்வையில் மேஜைமேல் இருந்த அந்த வார 'மித்ரா' விழ...

ஓ...?

மனசு காரணமில்லாமல் புன்னகைத்தது.

''ஒன்மினிட்...'' ரிஸிவரை மூடிக்கொண்டு சங்கரன் பக்கம் திரும்பினான்.

''வருத்தப்படறாப்பல நான் ஏதாவது சொல்லி இருந்தேன்னா ஐ ஆம் ஸாரி சங்கரன். எனக்குப் பொய்யா முகஸ்துதி பண்ண வராது. சுயநலமாகவும் இருக்கத் தெரியாது. ஒரு நண்பர்ன்ற முறைல உங்களுக்குச் சொல்லணும்னு நினைச்சதைச் சொன்னேன்...''

புரிந்து கொண்டேன் என்கிற பாவனையுடன் சங்கரன் பதிலுக்குத்தலை அசைத்து எழுந்து நின்றான்.

''தாங்க்ஸ் சார்''

''யூ ஆர் வெல்கம்''

''நிச்சயம் நீங்க சொன்னதை யோசிக்கிறேன். நான் வரட்டுமா?''

விடை கொடுத்து அவர் கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினதும், ரிஸிவரை எடுத்து கனெக்ஷன் கொடுக்கச் சொன்னான்.

''சத்யா ஹியர்...''

''வணக்கம்...என் பேர் ஜனனி...''

குரல் மிருதுவாய் ஒலித்தது. நிருபா கல்யாணத்திடம் அத்தனை முதிர்ச்சியுடன் பேசிய குரல் இதுதானா என்று சந்தேகம் எழுந்தது.



''வணக்கம்...''

''வேலை நேரத்துல போன் பண்ணி தொந்தரவு செய்யறத்துக்கு மன்னிக்கணும்...''

''அப்படி ஒண்ணுமில்லே... சொல்லுங்க...'',

''உங்க பத்திரிகைல என் பேட்டி ரொம்ப கச்சிதமா வெளியிட்டிருக்கீங்க... அதுக்கு நன்றி சொல்லத்தான் கூப்பிட்டேன்... தாங்க்ஸ் எலாட்...''

''நீங்க தெளிவா, அழகா சொன்ன கருத்தை வெளியிட்டிருக்கோம்... பாராட்டு ஏதாவது இருந்தா அது உங்களுக்குதான்...''

ஜனனி மென்மையாய் சிரித்தாள்—

''இப்ப நீங்கதான் அழகா பேசறீங்க— வழக்கமா எந்தப் பத்திரிகைக்கும் நான் பேட்டி கொடுக்கறதில்லே... நாம சொன்னதை திரிச்சு, சொல்லாததைப் போடறாங்க ஆனா, உங்க பத்திரிகைல சொன்னது சொன்னபடி வந்திருக்கு...''

''அப்பாடி! பிழைச்சேன்... சாதாரணமா, ஒருபேட்டி வெளியானதும், சம்பந்தப்பட்டவங்க போன் பண்ணி ஏன் இதைப் போட்டீங்க. அதை வெளியிட்டீங்கனு, கத்தறதுதான் வழக்கம்...''

''என் விஷயத்துல. நீங்க ரொம்ப நேர்மையா நடந்துகிட்டிருக்கீங்க... கடைசில தனிப்பட்ட விதமா நிருபர் கிட்ட பத்திரிகைக்காரங்க அனாவசியமா பிரபலமானவங்க சொந்த வாழ்க்கைல தலையிடறதைக் குறிப்பிட்டதைக் கூட வெளியிட்டிருக்கீங்க... இதை நான் எதிர்பார்க்கவே இல்லை...''

''சந்தர்ப்பம் கிடைச்சா உங்களை நாங்க குட்டறோம் இல்லியா? அதே மாதிரி நாங்க தப்பு பண்ணினாலும் எங்களையும் குட்டிக்க வேண்டியதுதானே நியாயம்.''

தனிப்பட்ட கொள்கையுடைய 'ரியலி க்ரேட்!' மித்ரா' உதாரணமாத்தான் பத்திரிகைன்றதுக்கு இது ஒரு எனக்குப் படுது.''

''தாங்க்ஸ்...''

சொல்லலை. ''என் படம், பேட்டி வந்துட்டதுக்காக பத்திரிகைதான் நிச்சயமா உசந்த காரக்டர் உள்ள 'மித்ரா'...''

நினைக்காம ''பதிலுக்கு முகஸ்துதி பண்ணறதா பேடி இருந்திங்கன்னா சொல்றேன்... தெளிவா அழகாகப் சொத்த மாதிரி, அற்புதமா ஆடின மாதிரி, பேசறீங்க...''

வார்த்தைகள் யோசிக்கும் முன் லொடக்கென்று பேசி விட்டோம் வெளிவந்து விழுந்துவிட. என்ன இப்படி என்று சத்யா பிரமிக்க—

என் நாட்டிய ''அற்புதமா ஆடின மாதிரினா, கச்சேரிக்கு வந்திருந்தீங்களா? எப்ப?''

''ம்யூசிக் அகாடமில ஆடினப்போ...''

பேசி இருந்திங் ''ஓ! என்னை சந்திச்சு, ஒரு வார்த்தை கன்னா, நான் எத்தனை சந்தோஷப் பட்டிருப்பேன்?''

எனக்கு இயல்பா ''ஸாரி— பெண்களைச் சந்திக்கிறது வராத சமாசாரம்...''

எனக்கு மட்டும் ''ஆண்களுக்கு போன் பண்ணறது சகஜமான விஷயம்னு நம்பறீங்களா?''

சத்யா சிரிக்க, அவளும் சிரித்தாள்.

பேசுவது தொடர்ந்து அரை நிமிஷத்துக்கு என்ன என்று புரியாமல் விழித்து, உடனே தொடர்பைத் துண்டிக் கவும் மனமில்லாமல் தவித்து முடிவில் இரண்டு பேரும் பரஸ்பரம் நன்றி சொன்ன பிறகு ரிஸீவரைச் சத்யா வைத்தான்.



மீண்டும் மீண்டும் காரணமே புரியாமல் மனசு சின்னதாகப் புன்னகைத்தது.

அன்று பூராவும் திடுக்கிடுக்கென்று ஜனனி ஞாபகம்...

மதியம் ஆதிகேசவன் மறுபடி வந்தார்.

''செட்டியார்கூட பேசினேன் சார்— அப்படிச் சிறு பிள்ளைத் தனமா ஒரு விதி போட்டதுக்காக ரொம்ப வருத்தப்பட்டதோட, அந்த 'க்ளாஸை'யே எடுத்திட்டார் ... தவிர, எத்தனை தன்னம்பிக்கை இருந்தா' ஐம்பது பர்ஸெண்டா பணத்தைக் குறைப்பார்—னு உங்க திறமையை உயர்வா பேசினார்...''

நல்ல நிர்வாகத் திறமை உடைய செட்டியார் நிச்சயம் நியாயமான தன் திருத்தத்தைப் புரிந்துகொள்வார் என்று எதிர்பார்த்து நடந்துவிட, திருப்தியுடன் சத்யா அவரை அனுப்பி வைத்தான்.

மறுநாள் தபாலில், அந்த ஞாயிறு நேபாள அரசருக்காக அரசாங்கம் கொடுக்கப்போகும் விருந்தில் ஜனனி நாட்டியமாடப் போவதற்கான அழைப்பு...

கூடவே, சின்ன வெள்ளைக் காகிதத்தில், 'கச்சேரிக்கு வருவதுடன், என்னை சந்தித்து நாட்டியத்தினைப் பற்றின கருத்தைத் தெரிவித்தால் சந்தோஷிப்பேன்- ஜனனி'-என்கிற வரிகள்...

517788
894.8113
SIV
CPL517788

# 6

கறுத்த முடியின் இருபுறமும் சந்திர சூரியர்கள், திரும்பும்போது தட்டப்படும் ராக்கொடி. பொட்டுக்கு சற்று மேலே தகதகக்கும் நெற்றிச்சுட்டி மை தீட்டப் பட்ட அகன்ற விழிகள். புல்லாக்கு, சிவந்த உதடுகள். உன்னங்கழுத்தில் அட்டிகை, உயர்ந்த மார்பகங்கள் மேல் படரும் காசு மாலை, வங்கிகள் வளையல்கள், சிவந்த

விரல் நுனிகள், சின்ன இடையைக் கவ்விப் பிடிக்கும் ஒட்டியாணம், சாண் அகல சரிகையுடன் இதமாய் உடலை அணைக்கும் நீலப்பட்டு, வெள்ளைக் கால்கள், சலங்கை, அல்தா பூசப்பட்ட புறாப் பாதங்கள்...

'நாதனை அழைத்து வா... சகியே... ஸ்வாமி

நாதனை அழைத்து வா... சகியே...'

குன்றுதோறும் ஆடும் குமரனை அழைத்துவரச் சொல்லி தோழியைக் கொஞ்சம் தலைவியாக மாறின ஜனனி, முதலில் அந்த முருகன் யார் என்பதில் தொடங்கி, அவன் ஜனித்த விவரத்தையும், தகப்பனுக்கு உபதேசம் பண்ணியதையும், ஒரு பழத்துக்காக உலகை வலம் வந்து அண்ணனிடம் ஏமாந்து பழனியில் சென்று அமர்ந்ததை யும், வள்ளியை மணந்ததையும்— ஸ்வாமிநாதனை அழைத்துவா— என்கிற ஒரே வரியைத் திரும்பத் திரும்ப பாடச் சொல்லி, யாரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் தினுசில் அபிநயிக்க, நிமிஷ நாழிகையில் சபையினர் அவளோடு ஒன்றித்தான் போனார்கள்.

'என் தன் காதலை அறிந்தவர், கணம் பிரிவாரோ?'—

'வேதனை துயர் இனி நானசகியனே?—

ஜனனி உருகினாள், கெஞ்சினாள், துடித்தாள், விரக தாபத்தின் வேதனை அங்கிருந்த அத்தனை பேர்களையும் பற்றிக்கொள்ளும் விதத்தில் நாயகியின் அவல நிலையைக் கண்முன் கொணர்ந்தாள்.

''பெரும் கல்லோ அவர் மனம், சுளிந்தருகாதோ?''

தலைவன் வராத ஏமாற்றத்தில் கண்களில் நீர் திரள, உதடுகள் துடிக்க, உடல் சோர்ந்துபோக 'உன் மனசு அத்தனை கடினமானதா?' என்று அவள் புலம்பியதும், அது நாட்டியம் என்பதுகூட மறந்துபோய், அந்த நாயகன்



மேல் கோபப்பட்ட சத்யாவால், நிகழ்ச்சி முடிந்து, மேடைக்குச் சென்றபோது ஒருவித தயக்கமும் பரபரப்பும் தனக்குள் பரவுவதை உணர முடிந்தது.

ஜனனியைச் சுற்றி மேடையில் யார் யாரோ—

கூட்டம் போகட்டும் என்று ஒரு பக்கமாய் நின்றான்.

ஜனனியைச் சந்திப்பதற்காக இப்படி வந்து நிற்பது அவனுக்கே ரொம்ப வேடிக்கையாக இருந்தது.

இது என்ன புதுப் பழக்கம்!

போய் விடலாமா!

உங்கள் நடனம் நன்றாக இருந்தது—என்ற ஒரு வரி எழுதி நாளைக்கு தபாலில் அனுப்பி விடலாமா?

ம் ஹூம்...

அடிமனசு மாட்டேன் என்று சிணுங்கியது.

'கச்சேரிக்கு வருவதுடன், என்னைச் சந்தித்து உங்கள் கருத்தைத் தெரிவித்தால் சந்தோஷிப்பேன்! என்று எழுதினவளிடம் இரண்டு வார்த்தை பேசாமல் போவது மரியாதை ஆகுமா?

ஜனனியைச் சுற்றி நின்ற கடைசி நாலைந்து பேர்கள் நகர்ந்துவிட, அவள் கண்களைச் சுழற்றி யாரையோ தேடுவது புரிந்தது.

திரைக்குப் பின்னால் நின்றிருந்த சத்யா மெதுவாக அவளை நோக்கி நடந்தான்.

''ஹலோ...''

ஜனனி திரும்பினாள். புருவங்களை உயர்த்திக் கொண்டு அவனை அழுந்தப் பார்த்தாள். பின், இவன் யார் என்பது புரிந்துவிட, சிரித்தாள். அந்த சிரிப்பு அவள் கண்களில் வெளிச்சம் போட்டது.

ஒரு நிமிஷம் யார் முதலில் பேசுவது என்று புரியாமல் இரண்டு பேரும் அப்படியே நின்றனர்.

தாளமாட்டாத வியப்புடன் சத்யா, ஒளிந்துகொண்டு விட்ட வார்த்தைகளை அவசரமாய்த் தேடினான்.

எனக்கு என்ன ஆயிற்று!

எதைச் சொல்ல இப்படி சங்கோஜப்படுகிறேன்!

'அருமையாய் ஆடினீர்கள்! பாராட்டுகள்!' குட்டியாய் ஒரு வரி சொல்லிவிட்டு திரும்பி நடந்து விட்டால் ஆயிற்று—அவ்வளவு தானே!

அதைச் சொல்ல ஏனிந்தத் தயக்கம்?

அவன் யோசித்த நாழிகையில் ஜனனி பேசினாள்.

''எப்ப வந்தீங்க? நிகழ்ச்சி ஆரம்பிக்கற வரைக்கும் உங்களைக் காணலியே?''

''ரொம்ப லேட் இல்லே...அலாரிப்பு ஆடறப்போ வந்திட்டேன்...''

''......''

நடனத்தைப் பற்றின விமர்சனத்துக்காக அவள் காத்திருப்பது புரிய, சத்யா 'கங்க்ராட்ஸ்...'' என்றான் மெதுவாக.

''அவ்வளவுதானா?''



கண்களை அகலவிரித்து, நிஜமான ஏமாற்றத்துடன் ஜனனி வினவ, 'மித்ரா'வுக்கு அத்தனை முதிர்ச்சியுடன் பேட்டி அளித்த ஜனனிக்குள் இப்படி ஒரு குழந்தைத் தனமா என்கிற வியப்பில் சத்யாவின் உதடுகளில் புன்னகை ஒன்று நெளிந்தது.

''வர்ணம் ரொம்ப பிரமாதம். எனக்குப் பிடிச்சது...''

''அப்போ! பாக்கியெல்லாம் மோசம், உங்களுக்குப் பிடிக்கலை, அப்படித்தானே?''

கொஞ்சம் விழித்து, உடனே சமாளிக்கப் பார்த்து சத்யா சிரிக்க, ஜனனியும் சிரித்தாள்.

இரண்டு பேரின் சிரிப்பும் அடங்குமுன், தடிமனான மீசை வைத்துக் கொண்டு போட்டோகிராபர் எழிலன் அருகில் வந்தார்.

மரியாதையுடன் சத்யாவுக்கு வணக்கம் தெரிவித்தவர் ஜனனி பக்கம் திரும்பினார்.

''நிகழ்ச்சி முடிஞ்சதும் போட்டோ எடுக்கலாம்னீங்களேம்மா...''

''இப்பவா?''

''எடுத்திட்டா தேவலை...அரசாங்கக் கச்சேரி... டிபார்ட்மெண்ட்ல கேப்பாங்க...''

தான் அங்கு நிற்பதால் ஜனனி தயங்குகிறாள் என்பதை உணரமுடிய, சத்யா கைகளைக் கூப்பினான்.

''நான் கிளம்பறேன்...முடிஞ்சா அப்புறமா சந்திக்கலாம்...

அது நாழிகை இருந்த மலர்ச்சி சட்டென்று குறைந்து போய், ஏதோ சொல்ல நினைத்து வேண்டாம் என்று தீர்மானித்த தினுசில் ஜனனி விடை கொடுத்த மாதிரி தோன்ற சத்யா வெளியில் வந்தான்.

காரில் வீட்டுக்குத்திரும்பும்போதும், உணவு உண்ணும்போதும், ஜனனியின் ஆட்டமும், பேச்சும். சிரிப்பும் மனசை வருடிக்கொண்டே இருந்ததோடு, நாலுவார்த்தை அழகாகப் பாராட்ட முடியாதபடி கூச்சம் தடுத்து விட்டதும் அந்த கூம்பிப்போன முகமும். ஆளை ஏக்கத்துக்கு விரட்ட, மறுநாள் கண்டிப்பாய் தன் செயலுக்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு உறங்கப்போனவன், காலையில் கண் விழித்ததும் மீண்டும் ஜனனி மனசில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

என்ன செய்யலாம்?

உயர்ந்ததொரு விமர்சனத்தைக் கடிதமாக எழுதி அனுப்பலாமா?

அல்லது வாழ்த்துகளோடு மலர்க்கொத்து ஒன்று அனுப்பி வைக்கலாமா?

எதுவும் சரிப்பட்டு வராத குழப்பத்துடன் ஜனனியை தற்காலிகமாக மறந்து, பிரஸ்ஸுக்குச் சென்று, புதிதாக நிறுவப்பட்ட 'ஹாரிஸ் மெஷின்' அருகில் நின்று வேலை சுத்தத்தைக் கவனித்துவிட்டுப் புறப்பட்டவன் கண்களில், மேஜையில் சாதுவாய் அமர்ந்திருந்த டெலிபோன் விழ, ஜனனியுடன் பேசுவேன். என்று மனம் திடுமெனப் பரபரத்தது.

நம்பர் என்ன?

டெலிபோன் டைரக்டரியில் இருக்குமா?

இருந்தது.

சுழற்றினான்.

அரை நிமிஷத்தில்'ஜனனியின் 'ஹலோ'

ஓடி வந்தாளோ?

அதுதான் அந்த லேசான இரைப்போ?



''சத்யா பேசறேன். குட்மார்னிங்.''

''குட்மார்னிங், சார். நூறு ஆயுசு உங்களுக்கு...''

''நூறா? அம்மாடியோவ். அத்தனை வருஷம் இருக்கணுமா! வேணாங்க அது சரி... இப்ப இந்த ஆசீர்வாதம் எனக்கு எதுக்குனு தெரிஞ்சுக்கலாமா?''

''உங்களைப் பத்தி நினைச்சுகிட்டிருந்தேன்-நீங்களே கூப்பிட்டுட்டீங்க... அதான்...''

''எதுக்காக நினைச்சீங்க மிஸ் ஜனனி?''

''சும்மாதான்...''

''சும்மா கூடவா நினைப்பாங்க?''

''நீங்க ஏன் போன் பண்ணீங்க? முதல் அதைச் சொல்லுங்க...''

''சும்மாதான்...''

''சும்மா கூடவா கூப்பிடுங்க?''

''ரொம்ப நல்லாவே மடக்கறீங்க...இல்லே, நேத்து உங்க நாட்டியத்தைச் சரியாப் பாராட்டி, பேசாமவந்துட்டோமோனு தோணிச்சு...அதான்...''

இப்பவாவது தோணிச்சே...

''என்னது?''

''ஒண்ணுமில்லே சார், நீங்க சொல்லுங்க...''

''நேத்து ஒவ்வொரு ஐட்டமும் அருமை...''

''......''

''சின்னஞ்சிறு கிளியே ஆடினப்போ, வாஸ்தவமா தொண்டைலே ஒரு அடைப்பு உண்டாச்சு...''

''அவன் 'ம்' கொட்டாமல் இருக்க, சத்யா லைன் துண்டித்து விட்ட சந்தேகத்துடன் அவசரமாக 'ஹலோ' என்றான்.

''நேர்ல பார்த்தப்போ அதைச் சொல்லி இருக்கலாமே சார்...''

''......''

''உங்க பேச்சு சரியா கேட்காதபடி, பின்னால அது என்ன 'கசகசா' சத்தம் சார்?''

''மிஷின் ஓடிட்டிருக்கு...''

''அன்னிக்கு பேசினப்போ இந்த சத்தம் கேட்கலையே?''...

''அது ஆபீஸ்; இது ப்ரஸ்''

''இரண்டும் ஒரே இடத்துல இல்லியா?''

''ம்ஹூம்...''

'தினமும் காலைல இங்க வந்துடுவீங்களா?''

''இல்லே, புது மெஷின் ஒண்ணு வந்திருக்கு...'' அதோட வேலையைப் பார்க்க வந்தேன்...''

''என்ன மெஷின் சார்? தெரிஞ்சிக்கலாமா?''

''தாராளமா... ஃபாரங்களை அச்சடிக்க ஹாரிஸ்; போன மாசம் புதுசா வந்திருக்கு... அதை...''

அவன் முடிக்குமுன் ஜனனி குறுக்கிட்டாள்.

''ஃபாரங்கள்—னா? கான் யூ எக்ஸ்ப்ளெய்ன், ப்ளீஸ்; நான் இது வரைக்கும் எந்த ப்ரஸ்ஸையும் பார்த்ததில்லே? அதான் கேக்கறேன்...''

''ஓ''

''ஆனா, பார்க்கணும்னு ரொம்ப ஆசை...''



சத்யா குட்டியாக மௌனித்துப் பேசினான்.

''மித்ரா'' எப்படி அச்சாறதுனு பார்க்க விருப்புறீங்களா மிஸ் ஜனனி?''

''அது சாத்தியமா சார்?''

''வொய் நாட்? என்னிக்காவது ஓய்வு கிடைச்சா சொல்லுங்க நானே சுத்திக் காட்டறேன்...''

''இன்னிக்குக்கூட நான் ஃப்ரீதான்...''

அன்று மாலை சரியாக நாலு மணிக்கு ஜனனி அச்சகத்தில் வந்து இறங்கியபோது, அவளுக்காக சத்யா காத்திருந்தான்,

முதல்லே கம்போஸிங் செக்ஷனுக்குப் போகலாம், பிரசுரிக்கப்பட வேண்டிய மேட்டர்கள் கம்போஸ் பண்ணப்பட்டு, 'காலி'களாக ஆபீஸுக்கு புரூப் திருத்தறதுக்கு வரும். முத்துசாமி... இலங்களுக்கு நாலைந்து வரி கம்போஸ் பண்ணி காட்டுங்க...''

முத்துசாமி அலாதி பரபரப்புடன், தங்கு தடையின்றி தலைகீழ் அச்சுக்களை வார்த்தைகளாக்கிக் காட்ட.

அடுத்த மோனோ டைப் கம்போஸிங் மிஷினிடமும், அதற்காக ஈயத்தை உருக்கி கண் முன்னாலேயே கணப்பொழுதில் அச்சுக்களைத் தயாரிக்கும் எந்திரத்திடமும் கொஞ்ச நேரம்...

''இதுதான் ப்ராஸஸிங் செக்ஷன், கதைகளுக்கு வரையப்பட்ட படங்களை பத்திரிகை சைஸுல சுருக்கி ஃபிலிமா எடுத்த பிறகு ஆபீஸுக்கு அனுப்புவாங்க அங்க உதவி ஆசிரியர் அந்த அளவை 'லே அவுட் தாள்'ல குறிச்சு மேட்டரோட இணைச்சு 'லே அவுட் ஷீட்டை' திரும்ப ப்ரஸ்ஸுக்கு அனுப்பினார்னா, புரூஃப் ரீடர் திருத்திய காலியோட சேர்த்து பேஜ்' தயாரிப்பாங்க...''

மிகுந்த தீவிரத்துடன் சத்யா விளக்கிக் கொண்டு போக, அதை உன்னிப்பாக ஜனனி கேட்டுக்கொண்டாள்—

"இப்படி ஒவ்வொரு பக்கமா தீர்மானம் பண்ணி பதினாறு பக்கங்கள் கொண்ட ஃபாரத்தை உருவாக்கின பிறகு, ப்ராஸஸிங் செக்ஷன்ல கொடுத்து பிளேட் செய்ய வைப்பாங்க... ப்ளீஸ் கம் ஹியர்..."

இப்போது சத்யா அவளை, பிரும்மாண்ட சைஸில் நிறைய இடத்தை அடைத்தவாறு உட்கார்ந்திருந்த எந்திரத்திடம் அழைத்து வந்தான்

"இதுதான் கடைசியா ஷீட்டை அச்சடிக்க வைக்க ஹாரிஸ்மெஷின். மணிக்கு நாற்பதாயிரம் பிரதிகள், அதாவது, ஒரு ஷிப்டுக்கு சுமார் லக்ஷம் அச்சடிக்கக் கூடியது. ஆனா, நாங்க அந்த வேகத்துல ஓட்டறதில்லே இங்க பார்த்திங்களா—பேப்பர் உருளை, இதை இப்படி கொடுத்து வரிசையா கலர் மை தாங்கின உருளைகள் வழியா செல்ல வைக்கிறோம். பாருங்க...முதல் உருளைலே கீழ்ப்பக்கம் மஞ்சள் அச்சாகிறது. இதுவே S' மாதிரி வளைஞ்சு திரும்பறதுல மேல் பக்கத்துல சிகப்பும், மறுபடி அடுத்த உருளைகளைத் தாண்டறப்போ நீலமும், ஸ்கார்லட்டும் வாங்கிட்டு கடைசி உருளைகிட்ட கறுப்பை ஏத்திக்கறது. ஒரே தாள்ல நாலு நிறங்கள்ல படம், எழுத்துகள் அச்சாகாறது இப்படித்தான் புரியுதா?"

சிரத்தையுள்ள வாத்தியாரைப் போல சத்யா விளக்க புரிகிறது' என்று ஜனனி தலை அசைத்தாள்.

"அச்சாயிட்டதாள் மடக்கப்பட்டு, பதினாறு பக்கம் கொண்ட ஃபாரமா இங்கே வந்து சேருது பாருங்க..."

சுடச்சுட அடுப்பின் மேலிருந்து எடுத்துத் தரப்படும் பலகாரத்தை ருசிக்கும் ஆர்வத்துடன், மெஷினின் வெளிப் பக்கத்தில் தள்ளப்பட்ட ஃபாரங்களில் ஒன்றை எடுத்துப் பார்த்தவளை சத்யா அடுத்த கட்டத்துக்கு இட்டுச் சென்றான்.



"இது புனோ லைன்—floW...line"

ரொம்ப சமர்த்தாய் கம்பி மேல் மூன்றாம், இரண்டாம், முதல் ஃபாரங்கள் விழ அவற்றை ஒற்றை அட்டை அணைக்க, சபக்கென்று முதுகில் இரண்டும் பின்கள், இன்னும் இரண்டு சபக்கில் ஓரங்களின் கசமுசா நீங்கின; அழகான மித்ரா...

ரொம்ப நாழிகைக்கு, சின்னப் பெண்ணின் பிரமிப்புடன் அங்கே நின்று அத்தனையும் பார்த்த பிறகு அவளுடன் சத்யா வாசலுக்கு வந்தான்.

"ஸோ...?"

"தாங்க்ஸ் எ லாட். தெரியாத பல விஷயங்களை சுவாரஸ்யமா தெளிவா புரிய வெச்சீங்க... சார்."

"அப்படின்னா நானும்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்— உங்க பேட்டி மூலமா. பரத நாட்டியத்தைப்பத்தி நிறைய விஷயங்கள சொல்லிக் கொடுத்ததுக்காக... மிஸ் ஜனனி"

"மிஸ் வேணாமே..."

"அப்ப, சாரும் வேணாமே..."

ஹ்ருதயம் பூராவும் ஹா ஹா என்று சந்தோஷம் பரவுவது தெளிவாக மறுநாள் இரண்டு பேரும் ஜனனி வீட்டில் சந்தித்தார்கள். அதற்கும் இரண்டாம் நாள் ஜனனியின் நாட்டியக் கச்சேரியில், அதற்கும் அடுத்த வாரம் சத்யாவின் வீட்டில்...

"அப்புறம்?"

அந்த மாச இறுதிக்குள் ஒருவர் இல்லாவிடில் இன்னொருவரா இருக்க முடியாது என்ற நிலை எழ, திருமணம் செய்து கொள்ளும் முடிவுக்கு வந்தார்கள்.

7

''ஹலோ? ஜனனி இருக்காங்களா?''

''நீங்க யாரு?''

''சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்''

''யாரு?''

''சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்...''

''ஓ ஜனனிதான் பேசறேன்''

''வணக்கங்க... நான் சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்...''

''அதான் ஏற்கனவே ரெண்டு தரம் சொல்லிட்டீங்களே — என்ன சார் விஷயம்?''

''ஒண்ணுமில்லே... நீங்க டான்ஸ் ஆடணும். நான் பார்க்கணும். அதான்...''

''என்னது?''

''மன்னிச்சுக்குங்க... நாக்கு குழறுது... நீங்க ஆடணும்' நாங்க பார்க்கனும்— ன்றதை மாத்தி சொல்லிட்டேன்...''

''நாங்கன்ன...?''

''நாங்கதாங்க...''

''அட என்ன சார் எதையுமே தெளிவா சொல்ல மாட்டேங்கறீங்க? கச்சேரி பத்தி என்ன பேசணும்னாலும் தயவு பண்ணி நேர வாங்க...''

''நேரா உடனே வர்றது கஷ்டங்க நீங்க டெல்லியிலே இருக்கீங்க. நான் மெட்ராஸ்ல இருக்கேன்.''

''மெட்ராஸ்லே எஸ். டி. டி. யா பேசறீங்க மிஸ்டர்... மிஸ்டர்?''



''சேதுராம நாராயண மாத்ருபூதம்ங்க...''

''சேதுராம நாராயண மாத்ருபூதமா? முதல்ல சொன்னப்போ, நரசிம்மனு சொன்னாப்பல இருந்துதே?''

''இரண்டும்தாங்க... அம்மா. 'டேய், சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்'னு கூப்பிடுவாங்க, பாட்டி 'எலேய் சேதுராம நாராயண...''

''ப்ளீஸ்... இந்த விவரமெல்லாம் எனக்கு வேணாங்க ... தயவு பண்ணி, எதுக்காக போன் பண்ணிங்கனு சொல்றீங்களா?''

''அதான் சொன்னேனே... நீங்க ஆடி, நான் இல்லே, நாங்க பார்க்க''

''அதையும்தான் சொல்லிட்டீங்களே... எங்கே, எந்த தேதில...?''

''வர்ற நாலாம் தேதி கூடுவாஞ்சேரிலேங்க...''

''எங்கே? எங்கே?''

''கூடுவாஞ்சேரிலங்க... எங்க க்ளப் ஆண்டு விழாவுல நீங்க ஆடணும் நாங்க...''

அடக்கி வைத்திருந்த கோபம் சுருக்கென்று கிளம்ப ஜனனி அதட்டலாய்ப் பேசினாள்.

''விளையாட நீங்களா, மிஸ்டர்...''

''சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்ங்க...''

''கடவுளே!''

''இல்லிங்க... எம் பேரு சேதுராம...''

திகைத்து நிற்கும் ஜனனியைக் கற்பனை பண்ணி முடிய, தொடர்ந்து குரலை மாற்றி வேஷம் போட முடியாமல் சத்யா அந்தப் பக்கம் பகபகவென்று சிரித்தான்.

''சத்யா!''

அந்த குரலை உடனே இனம் கண்டுகொண்டு ஜனனி கூவ, சத்யா சிரிப்பு மறையாத குரலில் பேசினான்.

''இன்னிக்குத் தேதி ஏப்ரல் ஒண்ணு!''

''மைகாட! நான் யாரோ, என்னமோனு நிஜம்மா பயந்துட்டேன்... என்ன விளையாட்டு இது சத்யா?''

''செமையா ஏமாந்திங்க இல்லே?''

''எங்கேருந்து புடிச்சிங்க அந்தப் பேரை? என்னத்? சேதுராம... நா...'

முடிக்க முடியாமல் ஜனனி குழந்தைத் தனத்துடன் சிரிக்க, அது சத்யாவையும் தொற்றிக்கொண்டது.

''காலைல மூணு சிறுகதை படிச்சேன்... எழுதினவங்க பேரு, சேதுராமன், நரசிம்மன், மாத்ருபூதம்— அதை ஒண்ணா சேர்த்திட்டேன்... எப்படி?''

''ரொம்ப கெட்டிக்காரர்தான் போங்க...''

''நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கெட்டிக்காரன்தான்... எப்படி ஏமாந்து போனீங்க... அடேயப்பா, குரல்லதான் எத்தனை கோபம்!''

''பின்னே! ஹோட்டல் ரூம்ல தனியா உட்கார்ந்து கிட்டிருக்கேன்... திடும்னு இப்படி விளையாடினா!''

''உங்க நம்பர் அந்த மாத்ருபூதத்துக்கு எப்படி கிடைச்சதுனு கூட நீங்க கேக்கலே!''

''தோணலை சத்யா... நிஜமா நல்லாத்தான் ஏமாந்துட்டேன்......''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க? வெளில எங்கேயும் போகலியா?''

''ம்ஹூம்...சாயங்காலம் கச்சேரி இருக்கு இல்லே ஐ வாண்ட் டு டேக் இட் ஈஸி—சரி. எதுக்கு போன் பண்ணீங்க?''

''சும்மாதான்...கச்சேரிக்கு முன்னால எங்கயும்போக மாட்டிங்க. ரூம்லதான் இருப்பீங்கனு தெரியும்...ஏப்ரல் ஃபூல் பண்ணலாம்னு...''

''திருப்திதானே?''

''ரொம்ப...''

அரை நிமிஷம்இருவரும் பேசாமல் மௌனித்தார்கள்.

''சத்யா...''

''ம்?''

''இன்னி கச்சேரிக்கு நீங்க வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்! புதுசா இரண்டு பதம், நீங்க பார்க்காதது ஆடப் போறேன்...''

''அடுத்த முறை மெட்ராஸ்ல ஆடறப்போ பார்த்திட்டா போச்சு?''

''ப்ராமிஸ்?''

''ப்ராமிஸ்!''

''வேற என்ன விஷயம்? சொல்லுங்க...''

''நேத்து கிளம்பி டெல்லிக்குப் போயிருக்கீங்க...'' அதுக்குள்ள என்ன விஷயம் முளைச்சிடும், சொல்லு?''

''ஒண்ணு கவனிச்சீங்களா சத்யா?''

''ம்''

''நான்தான் உங்களை பேர் சொல்லி கூப்பிடறேன்-நீங்க அப்படிக் கூப்பிடறதேயில்லை!''

''எனக்கு சட்டுனு யாரையும் பேர் சொல்லிக் கூப்பிடற பழக்கம் இல்லே...அதான்...''

''எனக்கு மட்டும் ரோடுல போறவங்க, வர்றவங்க எல்லாரையும் பேர் சொல்லி அழைக்கறதுதான் பழக்கம் ...அப்படித்தானே?''

''ப்பா...இப்படி மடக்கினா, என்னனு பேசறது?''

''இல்லே...இவ்வளவு பழகியும் நீங்க என்னை ரொம்ப அன்னியமா நினைக்கறதா தான் தோணுது...''

''போச்சுடா...''

''அப்படின்னா?''

''இன்னும் நீங்கதான் என்னைப் புரிஞ்சுக்கலைனு அர்த்தம்...அதை விடுங்க...என் அக்கௌண்டன்ட் ஆதி கேசவன் இன்னிக்கு என்கிட்ட ரொம்ப வருத்தப்பட்டுக் கிட்டார், தெரியுமா?''

திடுமென அவன் எதற்கோ தாவ ஜனனி விழித்தாள்.

''எதுக்கு?''

'வர வர டெலிபோன் பில் எக்கச்சக்கமா ஆகுதுனு'

''......''

''புரியலையா? அடிக்கடி வெளியூருக்கு போன் பண்ணி அரை மணி பேசறேனாம்...இப்ப பேசற மாதிரி...''

அவன் பேசிக் கொண்டு வருகையிலேயே, அந்தக் குற்றச்சாட்டிலுள்ள இனிமையைப் புரிந்து கொள்ள முடிய ஜனனி வாய் விட்டுச் சிரித்தாள்.

''அதுவும் சரிதான் சத்யா...எதுக்கு அனாவசியமா போன் பண்ணி, பணத்தை செலவழிக்கறீங்க?''

''நல்ல அட்வைஸ். அப்ப வைச்சிடட்டுமா?''



''வைச்சிடுங்க—''

''நிச்சயமா வைச்சிடட்டுமா?''

பதில் கூறுமுன், கதவைத் திறந்துகொண்டு நாமகிரி உள்ளே வர, ஜனனி, குரலைத் தழைத்துக் கொண்டாள்.

''நாழியாச்சு... நாமகிரியம்மா வந்திட்டாங்க... நாளைக்கு மெட்ராஸ்ல பார்க்கலாம்...பை...''

ரிஸீவரை வைத்துவிட்டு கேள்விக் குறியுடன் நின்றிருந்த நாமகிரி பக்கம் திரும்பி அசட்டு சிரிப்பொன்றைச் சிரித்தாள்.

அன்றைக்கு ஜனனியின் நடனம் அற்புதமாக இருந்ததாக பார்த்தவர்கள் அத்தனை பேர்களும் கூறினார்கள்.

நாட்டைக் குறிஞ்சியில் 'பால் வடியும் முகம் நினைந்து நினைந்தென் உள்ளம் பரவசமிகவாகுதே... கண்ணா...' பதமும், ஆண்டாள் பாசுரமும் கண்டவர் அத்தனை பேரின் நெஞ்சிலும் போதையை நிறைத்தது—என்று நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மத்திய மந்திரி ஏகத்துக்குப் பாராட்ட இரவு அறைக்குத் திரும்பிய ஜனனியின் கண்களில் ஒருவித மயக்கம் பனிச்பனிச் சென்று கண் சிமிட்டியது.

க்ரீம் தடவி, மேக் அப்பைச் சுத்தமாய் எடுத்துவிட்டு, சூடான நீரைப் பொழிந்த ஷவரடியில் நின்ற நிமிஷத்தில் உதடுகள். 'நாதனை அழைத்து வா சகியே...' என்று சங்கராபரண வர்ணத்தை சந்தோஷத்தோடு முணு முணுத்தன.

மனசு நிறைந்திருந்ததில் சாப்பிடக் கூட பிடிக்கவில்லை.

படுக்கையில் படுத்துக் கால்மணி ஆகியும் ஏனோ உறக்கம் வர மறுத்தது.

விளக்கிச் சொல்லத் தெரியாத வகையில் ஒரு பரபரப்பு...குதூகலம்...

இமைகளை அழுந்த மூடிக்கொண்டு தூங்கப் பார்த்த போது போன் அடித்தது.

மணி பதினொன்று!

இந்த நேரத்தில் யார் கூப்பிடுகிறார்கள்?

''தூங்கிட்டீர்களா?''

சடக்கென்று ஒரு துள்ளு துள்ளி ஹ்ருதயம் வாய்க்கு வந்தது.

''வாட் எ சர்ப்ரைஸ்?''

''கண்ட நேரத்துல போன் பண்ணி டிஸ்டர்ப் பண்றேனா. ஜனனி?''

சத்யாவின் குரல் ரொம்ப குழைந்திருந்தது.

அந்த மென்மையும், 'ஜனனி' என்று அழைத்ததும் புது பரவசத்தைத் தர அவள் பதில் பேசாதிருந்தாள்.

''கோபமா?''

''எதுக்கு?''

''இப்படி அர்த்த ராத்திரிலே போன் பண்ணறத்துக்கு.''

''ச்சே...என்ன சத்யா இது? என்னை நீங்க புரிஞ்சிக்கிட்டது இவ்வளவுதானா?''

''கச்சேரி எப்படி நடந்தது?''

''ரொம்ப பிரமாதம்னு மந்திரி பாராட்டினார்.''

''அப்புறம்?''

''வேற ஒண்ணுமில்லே... நீங்கதான் சொல்லணும்.''

''நத்திங் பர்டிகுலர்...சும்மா, கச்சேரி எப்படி இருந்தது கேட்கத்தான் கூப்பிட்டேன்...''



''ஆதிகேசவன் திட்டப் போறார் சத்யா...''

குறும்புடன் அவள் கூற, சத்யா சிரித்தான்.

''அப்புறம்?''

''ஒண்ணுமில்லே...நீங்கதான் சொல்லணும்...''

சின்னக் குழந்தைகள் இரண்டு பேசிக் கொள்கிற தினுசில், பேசினதையே திரும்பத் திரும்ப பேசுவதைப் புரிந்து கொள்ளமுடிய, இருவரும் சிரித்தார்கள்

''ஓ. கே, குட் நைட், ஜனனி...''

''குட் நைட், சத்யா...''

மறுநாள் ஜனனி சென்னைக்குத் திரும்பிய பிறகு இரவு சாப்பாட்டுக்கு சத்யா அவள் இல்லத்துக்குச் சென்றான்.

சாப்பாடு ஆனதும் வீட்டுக்குப் பக்கவாட்டில் இருந்த புல்வெளியில் நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு இருவரும் உட்கார்ந்திருந்தனர்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் சமுத்திரம். அதான் இரைச்சல்.

தலைக்கு மேலே பெண்ணின் நெற்றி மாதிரி நிலா ~~நிறைய நட்சத்திரங்கள்.~~

''இன்னிக்கு ஒரு வாசகர் கிட்டேருந்து இன்டரஸ்டிங் லெட்டர் வந்திருக்கு...''

அவன் தொடர்ந்து பேசுவான் என்கிற எதிர்பார்ப்பில் ஜனனி முன்னால் சாய்ந்து உட்கார்ந்தாள்.

''உங்க பேட்டிய விமர்சனம் பண்ணி வந்த கடிதம்''

''ஓ''

''கானடா நாட்டு பிரதமரைப் பத்திச் சொல்லி மேல்
நாடுகள்ல அதீதமா பிறருடைய சொந்த வாழ்க்கைல
பத்திரிகைக்காரங்க தலையிடறதில்லே, ஆனா. இங்க
மட்டும் ஏன் அதுல துடிப்பா இருக்காங்கனு கேட்டிருந்
திங்க இல்லே... அது தப்புனு அந்த வாசகர் எழுதி இருக்
கார் பொது வாழ்வுலே புகுந்திட்டா அப்புறம் சொந்த
வாழ்க்கைனு ஒண்ணு இருக்க முடியாது. அவங்க ஒரு
திறந்த புத்தகமாதான் வாழ்க்கையை நடத்தணும்.
பத்திரிகைக்காரங்க துணிஞ்சு சொந்த வாழ்க்கை பத்தி
யும் அலசின சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்க
நடந்திருக்கு. உதாரணமா க்ரிஸ்டின் கிரில் ஃபெர்
ஃப்யூமோ காதல், பத்திரிகைக்காரங்க இவங்க வண்ட
வாளங்களை வெளியிட்டதாலதானே, பிரிட்டிஷ் அரசி
யல்ல ஒரு திருப்பு முனை உண்டாச்சு—னு காரமா
கேட்டுருக்கார்...'

ஜனனி உடனே பதில் கூறாமல், யோசனை பண்ணி
பேசினாள்.

''அவர் வாதத்துல நியாயம் இருக்கும் நான் மறுக்
கலை. ஆனா, ஒருவருடைய அந்தரங்க வாழ்க்கைலே
தலையிட அடுத்தவருக்கு உரிமை இல்லேனுநான் நம்ப
றேன், இது என் தனிப்பட்ட கருத்து அவங்க சினிமாக்
காரங்களா, அரசியல்வாதியா, தொழிலதிபரா எழுத்
தாளரா, யாரா வேணா இருக்கலாம். ஆனாலும் பொது
வாழ்க்கைக்கு வந்திட்டாங்கன்ற ஒரே காரணத்தால
சொந்த வாழ்க்கைல மூக்கை நுழைக்கலாமா?''

''உங்க கருத்தை நான் அப்படியே ஏத்துக்கறேன்.
இன்ஃபாக்ட் இரண்டுமாசம் முன்னால நிருபர் சம்பந்தம்
'நெஞ்சு பொறுக்குதில்லையே'னு ஒரு கட்டுரை எழுதி
னப்போ. ஒரு அரசியல்வாதி சம்பந்தப்பட்ட தரக்குறை
வான வரிகளை உடனே எடுக்க வச்சேன்...'மனிதர்
எப்படிப்பட்டவர்னு காட்டத்தானே இந்த உதாரணம்னு
சிவா, அப்புறமா ரொம்ப வாதாடினார், சமுதாயத்



தோட நன்மைக்காக இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடறது சரியான காரியமா இருக்கலாம். ஆனா தனிப்பட்ட முறைல என்னால ஜீரணிக்க முடியாத விஷயம் இதுனு எடுத்துச் சொன்னேன். அன்னிக்கு நான் வெளியிட்ட அதே வார்த்தைகளை நீங்களும் சொல்றதைக் கேட்கறப்போ...''

''கேட்கறப்போ...?''

சத்யா பதில்சொல்லாமல் சிரித்தான்.

''இதுதானே வேணாங்கறது? என்ன சொல்ல வந்திங்க? சத்யா...'.

''ஒண்ணுமில்லே ஜனனி...''

''சொல்லித்தான் ஆகணும்...ப்ளீஸ்...''

சத்யா மீண்டும் சிரித்தான். பின்னர் எழுந்து நின்றான்.

''வர்றீங்களா...கடல் ஓரமா கொஞ்சம் நடந்துவிட்டு வருவோம்?''

நாமகிரியிடம் சொல்லிவிட்டு ஜனனி இரண்டுநிமிஷங்களில் வந்தாள்.

''என்ன சொன்னாங்க?''

''யாரு?''

''நாமகிரிம்மாதான்.''

''எதுக்கு?''

இப்படி என்னோட தனியா ராத்திரி பத்து மணிக்கு கடற்கரைக்குப் போறதுக்கு?''

ஜனனி நடப்பதை நிறுத்தினாள்.

''நான் ஒண்ணும் குழந்தை இல்லே சத்யா...டி நோஸ் மி... அம்மா இறந்த இத்தனை வருஷமா

யாரோடவும் நெருக்கமா நான்பழகினதில்லேன்னு அவங்களுக்குத் தெரியும்...அதனால நானே இப்படி...''

அவள் நிறுத்த சத்யா 'இப்படி' என்று எடுத்துக் கொடுத்தான்.

''ஒண்ணுமில்லே...''

''சொல்லுங்க...ப்ளீஸ்...!''

''இந்த 'ங்க'வை விடப் போறீங்களா, இல்லையா? உங்களைவிட நான் சின்னவதானே! எத்தனை தரம் சொல்லிட்டேன், சத்யா!''

''ஓ.கே...ஓ.கே...சொல்லு...''

''ம்ஹூம்...''

''ஏன்?''

''நீங்க எதையோ சொல்ல வந்து நிறுத்திட்டீங்களே' மூதல்ல அதைச் சொன்னாதான்...''

சத்யா மௌனமாய் புன்னகைத்தான்.

கீழே கிடந்த கல் ஒன்றைக் காலால் உதைத்தான்.

முகவாயைத் தடவிக் கொண்டான்.

ரொம்பத் தழைந்த குரலில் பேசினான்.

''நம்ம இரண்டுபேர் கருத்தும் ஒண்ணா இருக்குனு சொல்ல வந்தேன்...''

''அவ்வளவுதானா?''

முகத்தை சற்றே உயர்த்தி, கண்களை விரித்துக் கேட்டவளை சத்யா அழுத்தமாய் ஏறிட்டான்.

அந்தக் கண்களும், அதில் தாண்டவமாடிய குறும்பும்...



அந்த உதடுகளும்...அதில் நெளிந்த புன்னகையும்...

அந்த முகமும்...அதில் விரவியிருந்த அழகும்...

சத்யா ஓரடி வைத்து அருகில் வந்தான்.

இந்தக் கருத்துல மட்டும் இல்லே ஜனனி—நம்ப ரசனை நிறைய விஷயங்கள்ல ஒண்ணா இருக்கற மாதிரி உனக்குத் தோணலை?''

''......''

''ஜனனி...''

''ம்?''

''மிஸஸ் சத்யா—னு உன்னை எல்லாரும் கூப்பிட சம்மதிப்பியா, ஜனனி?''

சட்டென்று ஜனனிக்குள் ஒரு வானவில் ரொம்ப அழகாய் ஜனித்தது.

நெஞ்சில் தோன்றிய புன்னகை உதடுகளை நனைத்தது.

''கல்யாணம் பண்ணிக்க சம்மதம் கேக்கறதுக்கு முன்னால முக்கியமா சொல்லவேண்டிய வார்த்தைய இது வரைக்கும் நீங்க சொல்லவேயில்லையே, சத்யா?''

மெதுவாகக் கையை நீட்டி, அவள் கையைப் பற்றி, உள்ளங்கையில் மென்மையாய் முத்தமிட்டு 'ஐ லவ் யூ ஜனனி' என்று சத்யா கூறினபோது, அவர்களுக்காகக் குயில்கள் கூவின. மலர்கள் மலர்ந்து புது மணத்தில் வீசின. வண்ண வண்ண நீரூற்றுகள் உயரே உயரே கிளம்பி, ஆகாசம் வரை வியாபித்தன.

# 8

அன்றைய பயிற்சி முடிந்துவிட்டதற்கு அடையாளமாய் ஜனனி தட்டிக் கும்பிட்டாள்.

''நாளைக்குப் பதினோரு மணிக்கு வந்திடுங்க கணேசன்—புதுத் தில்லானாவ மட்டும் தனியா பார்த்திடலாம்.''

''சரி'' என்று சொல்லி, மிருதங்கத்தை உறையிலிட்டு ஓரமாய் வைத்துவிட்டுக் கணேசன் புறப்பட, இடுப்பில் செருகியிருந்த தலைப்பை உதறி, கழுத்து வியர்வையைத் துடைத்தபடி ஜனனி விசிறியின் அடியில் வந்து நின்றாள்.

''குளிக்கறியா?''

''ம்!''

''அதுக்கு முன்னால, குடிக்க ஏதாவது வேணுமா?''

பெற்ற தாயின் பரிவுடன் நாமகிரி வினவ, ஜனனி புன்னகைத்தாள்.

''வெறும் ஐஸ் வாட்டர் போதும் நாமகிரிம்மா... கல்யாணத்துக்கு இப்ப ரெண்டு கிலோ ஏறிட்டேன். தெரியுமா?''

''எனக்கொண்ணும் தெரியலை...முன்னே ஒடிசலா இருந்தே.இப்ப லேசா பூசின மாதிரி இன்னும் லட்சணமா இருக்கே...!''

''ஒத்துக்க மாட்டீங்களே!''

—வாய்விட்டுச் சிரித்த ஜனனி, ''நான் குளிச்சிட்டு கிளம்பறேன்...நாழியாச்சு'' என்றவாறு பாத்ரூமுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

கிட்டதட்ட மூன்று மணி நேரங்களாய் ஆடிக் களைத்திருந்த உடம்பு குளிர்ந்த நீரின் ஸ்பரிசம் பட்டதும் களைப்பை உதறி, புது ரத்தம் ஓடுகிற தினுசில் சிலிர்ப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தவளாய் வெந்நீர் குளிர்ந்த நீர் குழாய்களை மாற்றித்திறந்து அந்தப்புத்துணர்ச்சியை இதமாக்கி, நிதானமாகக் குளித்து முடித்தாள்.



இயற்கையாய்ப் பளபளத்த முகத்தில் பவுடர் ஏதும் பூசாமல், துளி க்ரீமை மட்டும் தடவி, குங்குமத்தை இட்டு நிமிர்கையில். நாமகிரிகையில் டம்ளருடன் உள்ளே வந்தார்.

''என்ன நாமகிரிம்மா அது?''

''வெறும் தண்ணிய குடிச்சா உடம்புக்குந் தெம்பு எப்படி வரும்? சர்க்கரை போடாத சாத்துக்குடி ஜூஸ் உனக்குப் பிடிக்குமே...!''

வாதாடிப் பயன் இல்லை என்கிற மாதிரி, ஜனனி டம்ளரை வாங்கி மெதுவாக உறிஞ்சினாள்.

''மணி என்ன?''

''அஞ்சாகப் போகுது...''

''நான் கிளம்பறேன்...அஞ்சரைக்கு அத்தை வெளிய போகணும்னு சொல்லிட்டிருந்தாங்க...''

''சத்யா வர ராத்திரி ஆகுமா?''

''ம் வர வழில ஏஜெண்ட்ஸ் சில பேரைப் பார்த்திட்டு வரப்போறதா சொன்னார். எப்படியும் சாப்பாட்டுக்கு வந்திடுவார்...'

காலி டம்ளரை நாமகிரியிடம் கொடுத்துவிட்டு வாசலுக்கு வந்தவள். ஒரு நிமிஷம் நின்று தோட்டத்தையும் தூரத்தில் தெரிந்த சமுத்திரத்தையும் பார்வையைச் சுழற்றி ரசித்தாள்.

திடுமென முதன் முறையாய் சத்யாவுடன் நிலவொளி'யில் நடந்து போனதும், கையைப் பற்றியதும், 'ஐ லவ் யூ, என்றதும் உள்ளங்கையில் அவன் மென்மையாய் முத்தமிட்டதும் ஞாபகத்துக்கு வர, அந்த நாளும், அதைத் தொடர்ந்து இப்போது வாழும் வாழ்க்கையும் எத்தனை

அர்த்தமுள்ளதாக உள்ளன என்கிற பரவசத்தில் மனசு நெகிழ்ந்து போனது.

காரில் ஏறி, ரிவர்ஸில் செலுத்தி, சாலைக்கு வந்தான்.

வாசலில் நின்ற நாமகிரி, சமையலில் உதவி பண்ணும் தங்கத்தை நோக்கி கையை வீசிவிட்டு கியரை மாற்றினாள்.

திருமணமான பிறகும், தன்னைப்போல பழைய சுதந்திரத்துடன் இருக்கும் வாழ்க்கை எத்தனை பெண்களுக்கு அமையும் என்கிற கேள்வியிலிருந்து மீண்டு வராமல் வேகத்தை அதிகரித்தாள்.

இது வெறும் சுதந்திரம் மட்டும் இல்லை. மரியாதை அன்பு, கரிசனம்—எல்லாம்தான்.

—கல்யாணம் ஆனப்புறம் திருவான்மியூர் வீட்டை என்ன பண்ணறதுனு யோசனையா இருக்கு சத்யா.

—நாமகிரிம்மாவை மனசுல வைச்சுகிட்டு பேசறியா ஜனனி?

—ம். எனக்கு நினைவு தெரிஞ்ச நாளா என் கூடத்தான் இருக்காங்க.

—இப்ப மட்டும் அத மாத்துவானேன்? நம்ம கூட அடையாறு வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திட்டா போவுது.

—எனக்கும் அதான் ப்ளான். ஆனா, பேசிப் பார்த்த வரைக்கும் அவங்க தனியா இருக்க விரும்பற மாதிரிதான் தோணுது.

முகவாயை நீவிவிட்டுக் கொண்டு, பத்து நிமிஷங்கள் போல சத்யா உட்கார்ந்துவிட்டு, பிறகு பேசினான்.

—இப்படி செஞ்சா என்ன?



—எப்படி?

—இந்த வீட்டிலேயே தொடர்ந்து நாமகிரிம்மா இருக்கறத நாம ஏன் மாத்தணும்?

—புரியல சத்யா...

—இந்த வீடு உன் சொந்த வீடு. இதை வாடகைக்கு விட்டு அந்தப் பணத்துலதான் நாம வாழணும்ன்ற நிர்ப்பந்தம் எதுவும் இல்ல. அதனால, அடையாறு வீட்டுல நாம் இருப்போம்: இங்க எப்பவும்போல நாமகிரியம்மா இருக்கட்டும். நீயும் உன் டான்ஸ் கிளாஸ் அது, இதுனு வந்து போக செளகரியமா இருக்கும். ரெண்டு வீடும் அப்படி ஒண்ணும் தள்ளி இல்ல. கிட்டக்கத்தான், என்ன சொல்றே?

—கல்யாணமாகியும் இப்படி தனியா வீடு, டான்ஸ் கிளாஸ்னு வச்சிருக்கறது பத்தி தப்பா யாராவது பேசினா?

''அம்மாவும் நானும் அப்படி நினைக்கறவங்க இல்ல; மத்தவங்கள பத்தி நாம ஏன் கவலைப்படணும்?

ஜனனி குனிந்து அவன் கையை பற்றினாள். சின்ன குரலில், 'தாங்க்ஸ் சத்யா' என்று முனகினாள்.

—தாங்க்ஸ் எதுக்கு ஜனனி? ஒருத்தரை ஒருத்தர் பரிபூரணமா புரிஞ்சுக்கிட்டா இதெல்லாம் இயல்பான சமாசாரங்கள்தானே. வீ மஸ்ட் ம்யூச்சியுவல்லி ரெஸ்பெக்ட், அட்மையர் அண்ட் லவ். அப்பத்தான் முழுமையான தாம்பத்தியம் சாத்தியமாகும். கரெக்ட்?

ரொம்ப சரி.

அன்று சத்யா கூறிய விதத்தில் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அளவுகடந்த மதிப்பு, மரியாதை, காதல், பாசம் கொண்டிருப்பதால்தானே இன்று பார்ப்பவர்கள் மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு அவர்கள் இல்லறம் இருக்கிறது!

போர்டிகோவில் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தவள், சாப்பாட்டு அறையில் இருந்த ஃப்ரிஜ்ஜி லிருந்து தண்ணீர்பாட்டிலை எடுத்து, தாகம் திரக்குடித்த படியே சமையல்கட்டில் எட்டிப்பார்த்தாள்.

''என்ன அத்தே செஞ்சிட்டிருக்கீங்க?''

''வந்திட்டியா ஜனனி? ராத்திரி டிபனுக்கு ரவா உப்புமா பண்ணலாமா?''

''பாக்கியம் எங்க அத்தே?''

''தெரிஞ்சவங்க தவறிட்டதா தகவல் வந்தது... போயிருக்கா...காலைல வந்திடுவா...''

''அந்த வீட்டுக்கு போன் பண்ணியிருந்தா நான் உடனே வந்திருப்பேனே அத்தே!,'

லக்ஷ்மி மென்மையாய்ச் சிரித்தார்—இந்த சின்ன விஷயத்துக்காக உன்னைத் தொந்தரவு பண்ணுவார்களா என்கிற மாதிரி

''நீங்க அஞ்சரை மணிக்கு எங்கியோ போகணும்னு சொல்லிட்டிருந்தீங்களே?''

''முக்கியமான வேலை எதுவும் இல்லை ஜனனி. நாராயணன் குழந்தைய நான் இன்னும் பார்க்கல இல்லியா, அதான் போய் வரலாம்னு இருந்தேன். அதுக் கென்ன அவசரம் இப்ப?''

ஜனனி அருகில் வந்து, லக்ஷ்மியின் கையிலிருந்த கத்தியை வாங்கிக் கீழே வைத்தாள்.

''பாக்கியம் இல்லேன்னா ராத்திரி சமையல் நான் பார்க்கமாட்டேனா அத்தே?''

''வந்தும்மா...''

''வந்தும் இல்லே, போயும் இல்லே. இப்ப நீங்க கிளம்புறீங்க. முருகேசனை வண்டி எடுக்கச்சொல்லவா?''



கைகளை வலுக்கட்டாயமாகப் பற்றி, அன்புடன் கூடத்தில் அவரை ஜனனி அழைத்துக் கொண்டுவிட, சிரித்தபடியே ஐந்து நிமிஷங்களில் லக்ஷ்மி புறப்பட்டார்.

''பெரிசா எதையாவது இழுத்து விட்டுக்காதே. நான் போனமா வந்தமானு வந்திடறேன். 'ரவா உப்புமா போதும். என்னம்மா?''

மாமியார் சொன்னதற்கு சமர்த்தாய் தலை அசைத்து அவருக்கு விடை கொடுத்த பின்பு, ஜனனி மீண்டும் சமையல் கட்டுக்குள் வந்தாள்.

புதுசாய் ஏதாவது சமைத்து, புருஷனையும் மாமி யாரையும் திகைக்கச் செய்தால் என்ன என்கிற எண்ணம் எழ, சின்னப் பெண்ணின் துறுதுறுப்பு சளுக்கென்று அவ ளுள் பிரவேசித்தது.

என்ன செய்யலாம்?

சன்னாபட்டூரா?

ம்ஹூம்...அத்தைக்கு எண்ணெய் ஒத்துக் கொள் ளாது. பேக்ட் வெஜிடேபிள்ஸ்?

அதற்கு காலிஃப்ளவர் இல்லையே?

''பன்னீர் பரோட்டாவும், தக்காளி ஸூப்பும்?''

ம்ம்...

ஜனனி ஃப்ரிஜ்ஜில் உபரியாய் பால் இருக்கிறதா என்று பார்த்தாள். இருந்தது.

இரண்டு பாக்கெட்டுகளைப் பிரித்து, பாத்திரத்தில் கொட்டி கொதிவந்ததும் எலுமிச்சம்பழம் ஒன்றைப் பிழிந்தாள்.

நன்றாகத் திரிந்த பாலை மெல்லிய துணியில் ஒட்ட வடிகட்டி சக்கையைத் தட்டில் போட்டு உதிர்த்து, 'பன்னீரை'த் தயார் செய்தாள்.

நாலு பச்சைமிளகாய். கொஞ்சம் கொத்தமல்லியைப் பொடிசாய் நறுக்கி, உப்பு ஒன்றிரண்டாகப் பொடி செய்த சீரகம் இவற்றோடு பன்னீரில் கலந்து ஈரத்துணி போட்டு விட்டு, சாதாரணமாய் சப்பாத்திக்குப் பிசையும் தினுசில் மாவையும் பிசைந்து வைத்தவள், சட்னிக்குக் கொத்துமல்லி பற்றாது தோன்ற, முத்துவை அழைத்து வாங்கிவரச் சொன்னாள்.

முத்து வருவதற்குள் தக்காளி ஸூப்பைத் தயார் பண்ண முனைந்த நிமிஷத்தில் வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

அத்தை அதற்குள்ளாகவா திரும்பி விட்டார்?

"என்ன அவசரம்? இன்னும் கொஞ்சம் நாழி இருந்திட்டு நிதானமா வரக்கூடா..."

அவள் முடிக்கு முன்னர், இடுப்பைத்தழுவிக்கொண்டு "என்ன அவசரமா? உன்னைப் பிரிஞ்சு சரியா முப்பத்திநாலு மணி நேரம் ஆச்சு, தெரியுமா? என்று சத்யா பதில் கூற, "ஹேய்" என்றபடி ஜனனி திரும்பினாள்.

"நான் அம்மாதான் வந்திட்டாங்கன்னு நினைச்சேன் சத்யா..."

"அம்மா வீட்ல இல்லியா?"

"ம்ஹூம் நாராயணன் குழந்தையை பார்க்கப் போயிருக்காங்க!"

"பாக்கியம்?"

"லீவு?"

"முத்து?"

'கடை?"

"அப்ப...இப்போதைக்கு நீயும் நானும் தானா? வால்?"



பிடியைச் சத்யா இறுக்க ஜனனி, "ப்ளீஸ் சத்யா, என் உடம்பெல்லாம் ஒரே வேர்வை" என்று கெஞ்ச, "பரவாயில்ல, கொத்தமல்லி வாசனையும் நல்லாத்தான் இருக்கு" என்றவாறு கழுத்தில் முத்தமிட்டான்.

"சத்யா, முத்து வந்திடுவான்..."

"வரட்டும்!"

"ப்பா...முரடு...மகா முரடு...பார்த்தா உள்ளுக்குள்ள இத்தனை முரட்டுத்தனம் இருக்குனு யாரும் சொல்ல மாட்டாங்க!"

"இந்த முரட்டுத்தனம் தானே உனக்கு வேண்டியிருக்கு?"

"ப்ளீஸ் சத்யா, விடுங்க?"

"முப்பத்திநாலு மணிநேரம் பிரிஞ்சிருந்திருக்கேன். உனக்கு இரக்கமே இல்லையா?"

"இரக்கம்தானே? ஆஹா, நிறைய இருக்கு! ஆனா அத சமையலறைலதான் காட்டணுமா?"

"அதுவும் சரிதான் .மாடிக்குப் போகலாம் வா."

"ஆ? மாடிக்கு? இப்ப? நல்லா கிடந்து அலையறீங்க வேளை கெட்ட வேளைல"

"வேளை கெட்ட வேளை இல்ல. இப்ப மணி ஏழு. நைஸ் டைம்"

கண்களில் மகாபோதையோடு அவன் கெஞ்ச, அந்த போதை ஜனனியையும் கொஞ்சம் கொஞ்சமாய் தொற்றிக்கொள்ள, குழைந்துபோய் அவன் மார்பில் அவள் சாய...

வண்டி சத்தம்...

"அத்தே வந்திட்டாங்க..."

பரபரப்புடன் புருஷனின் பிடியிலிருந்து ஜனனி விலகுவதற்குள், "சத்யா வந்திட்டானா என்ன?" என்ற கேள்வியுடன் லக்ஷ்மி உள்ளே வர இரண்டுபேரும் எக்கச்சக்கத்துக்கு அசடு வழிந்தார்கள்.

பிள்ளையைச் சமையல்கட்டில் பார்த்த லக்ஷ்மியின் கண்கள் ஆச்சரியத்தில் அகன்றன.

"இங்க என்ன பண்ணறே சத்யா?"

"வந்து...கார்ல வந்தது தாகமா இருந்தது...அதான் தண்ணி குடிக்க..."

லக்ஷ்மி புன்னகைத்தாள்.

"ப்ரிஜ் சாப்பாட்டு அறைல இருக்கு சத்யா."

"அ? ஆமா...இங்க... சும்மா...நீங்க இருக்கிங்களானு..."

சத்யாவின் சமாளிப்பு அதிகமாக ஜனனி திரும்பிக் கொண்டு சிரித்தாள்.

"நல்ல பிள்ளையப்பா. வேண்டாத நொண்டிச் சாக்குகளைச் சொல்லிக்கிட்டு...'என் பெண்டாட்டி இங்க இருக்கா. அதான் நானும் இருக்கேன்'னு பளிச்சுனுசொல்லியா..."

அம்மாவின் சீண்டலில் காதுமடல்கள் சிவந்து போவதைப் புரிந்துகொள்ள முடிய. சத்யா அவசரமாய் "நான் குளிச்சுட்டு வரேன், கார்ல வந்தது எக்கச்சக்கமா வேர்க்குது" என்று கூறியபடியே வெளியில் போனான்.

அரைமணியில் மூவரும் ஒன்றாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

பன்னீர் பரோட்டாவை ஒரு விள்ளல் வாயில் விண்டு போட்ட லக்ஷ்மி, "பிரமாதம்மா!" என, சத்யா, அம்மாவுக்குத் தெரியாமல் மேஜைக்கடியில் ஜனனியின் தொடையை வலிக்க நிமிண்டினான்.



"ஆ!"

"என்ன ஜனனி?"

"ஒண்ணுமில்லே அத்தே, பச்சை மிளகா!"

"ரொம்ப நல்லாயிருக்கேம்மா,எப்படி பண்ணினே?"

'பன்னீர்' பூரணம் பண்ணும் விதத்தை விளக்கி, "மாவுல சப்பாத்தி இட்டுகிட்டு ஒரு எலுமிச்சை சைஸ் 'பன்னீ'ரை உள்ள வச்சு மூடி, திரும்பக் கவனமா இட்டு கல்லுல போட்டு எடுக்கவேண்டிய..." என்று ஜனனி முடிப்பதற்குள், மேஜைக்கடியில் மீண்டும் ஒருதரம் சத்யா அவளைச் சீண்ட, திரும்ப "ஆ...!"

"என்னம்மா"

"பச்சைமிளகா அத்தே!"

"அதென்ன உனக்கு மட்டும் திரும்பத்திரும்ப மிளகா அகப்படுது?"

சில நொடிகளுக்கு நிஜமாக வியந்த லக்ஷ்மி, அவர்கள் இரண்டு பேரின் முகங்களிலும் தாண்டவமாடிய பரவசத்தை உணரமுடிய, இனியும் அங்கு உட்கார்ந்திருப்பது வேண்டாம் என்பதுபோல், சிரிப்புடன் எழுந்து "எனக்குத் தூக்கம் வருது நீங்க மெதுவா சாப்பிடுங்க" என்று கூறித் தன் அறைக்குச் சென்றார்.

அம்மா தலை மறைந்ததும், சத்யா எட்டி ஜனனியைத் தன்னிடம் இழுத்துக் கொண்டான்,

"ஆனாலும் எங்கம்மா சமத்துதான். எப்படி விவரம் புரிஞ்சு, இதமா நடந்துக்கறாங்க பாத்தியா கண்ணம்மா?"

"என்ன ஆச்சு சத்யா? உங்களுக்கு இன்னிக்கு? சின்னப் பையன் கெட்டான் போங்க..."

சத்யா சிரித்தான்.

''எனக்கே தெரியலே...''

''உங்க ட்ரிப் எப்படி இருந்தது? கல்யாணம் நல்லா நடந்துதா?''

''ஓயெஸ்...! எல்லோரும் ரொம்பக் கேட்டாங்க, நீ ஏன் வரலை'ன்னு—'வேண்டியவங்க பெண் டான்ஸ் அரங்கேத்தம்... போக வேண்டிய நிர்ப்பந்தம்... அதான் வரலை'ன்னு சொன்னேன். ஆமா, அது எப்படி இருந்தது?''

ஜனனி சூள் கொட்டினாள்.

''பேசாம உங்ககூட பாண்டிச்சேரிக்காவது வந்திருக்கலாம். ஒரு வருஷம் கூட பயிற்சி பெறாத பெண்ணை மேடைல ஏத்திட்டாங்க. பெரிய வீட்டுப் பொண்ணா இருந்தா ஆச்சா? அடவு சுத்தமில்லே, அபிநயமில்லே, ஒரு மண்ணாங்கட்டியுமில்லே... ஏன்தான் இப்படிப் பண்ணறாங்களோ தெரியல...''

வாஸ்தவமான அங்கலாய்ப்புடன் அவள் பேசியதைக் கேட்ட சத்யா, யோசனையுடன் அமர்ந்துவிட்டுக் கேட்டான்.

''இது நாள் வரைக்கும் சரியான விமரிசகர் இல்லாததால் நாட்டிய விமர்சனங்களே 'மித்ரா'ல நான் வெளியிட்டதில்லே. இனிமே, வாராவாரம் நீயே அந்த விமரிசனங்களை காரசாரமா, இப்படி பரதநாட்டியத்தை விளையாட்டா எடுத்துக்கிட்டு அணுகுறவங்கள பத்தி எழுதினா என்ன? ஹவ் அபௌட் தட்?''

ஜனனி ''மாட்டேன்'' என்று தலை அசைத்தாள். டம்ளரை எடுத்து, ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டு கணவனை ஏறிட்டாள்.

''மித்ரா'ல இன்னொரு பத்திரிகையை நீங்க விமரிசனம் பண்ணுவீங்களா சத்யா?''

அவள் எதற்காகத் திடுமென இப்படிக் கேட்கிறாள் என்பது புரியாமல் சத்யா மௌனித்தான்.



''சொல்லுங்க சத்யா. செய்வீங்களா?''

''ம்ஹூம். மாட்டேன்.

''ஏன்?''

''ஒரே தொழில்ல இருந்துகிட்டு சக பத்திரிகையை விமரிசனம் பண்ணறது நியாய...''

—கூற வந்ததைப் பூர்த்தி செய்யுமுன், ஜனனி ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டாள் என்பது புரிந்துவிட, சத்யா ''ஸாரி'' என்றான்.

அலாதியாய் அன்பு, மரியாதை, சுதந்திரம் கொடுப்பதுடன், தன் கருத்துகளை உடனுக்குடன் புரிந்து கொண்டு அவற்றை ஏற்று, தனித்தன்மையுடன் திகழத் தனக்கு எப்போதும் உதவுவது போல, இப்போது சத்யாவின் இந்த 'ஸாரி'யும் இருக்க, ஜனனி அவனை நெருங்கி தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கும் பாவனையாய்க் கன்னத்தில் முத்தமிட்டாள்.

தன் ரொம்பவும் கிசுகிசுப்பான குரலில், ''ஓ! ஹவ் மச் ஐ லவ் யூ சத்யா'' என்றும் மிகுந்தநிறைவுடன் கூறினாள்.

# 9

கையைக் கழுவிக்கொண்டு சத்யா மாடிக்குப் போனதும்முத்துவை அழைத்து மேஜையைத் துடைத்துச் சுத்தம் பண்ணச் சொல்லிவிட்டு, வெற்றிலைப்பாக்குத் தட்டுடன் ஜனனி மாடிக்குப் போனாள்.

காலை நீட்டிப் படுக்கையில் சாய்ந்திருந்த கணவனின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

துளிர் வெற்றிலைகளாகத் தேர்ந்தெடுத்து, கையோடு கொணர்ந்திருந்த துண்டில் துடைத்து சுண்ணாம்பைத் தடவினவள், இரண்டு ஏலக்காய்களைத் தோலுரித்துப் பாக்கு, கொஞ்சம் துருவின தேங்காயோடு கலந்து வெற்றிலையில் வைத்து பீடா போலச் சுருட்டி அவனிடம் நீட்டினாள்.

வழக்கமாய் பீடாவை வாயில் வாங்கும் சாக்கில் அவள் விரல்களையும் சேர்த்துக் கடித்துச் சீண்டுபவன் இன்றைக்கு ஏதோ யோசனையில் இருக்கிற மாதிரி தோன்ற, கிட்டத்தில் வந்து ''ஏய்'' என்றாள்.

''ம்?''

''என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லே ஜனனி.''

''கீழே அத்தனை குறும்பு ததும்ப இருந்தவருக்கு மாடிக்கு வர்றதுக்குள்ள என்ன ஆச்சு? எதுக்காக இந்த தீவிர யோசனை? ம்?''

''ஐம் ஸாரி அகெய்ன்...''

பாக்கு பத்றாமல் இருக்க சத்யா இன்னும் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

''எதுக்கு?''

''உன்கிட்ட அந்த மாதிரி கேட்டதுக்கு?''

''எந்த மாதிரி?''

நிஜமாக எதுவும் புரியாமல் அவள் விழிக்க, 'பரத நாட்டியக் கச்சேரிகளை விமர்சனம் பண்ணறியா—னு யோசிக்காம கேட்டதுக்கு'' என்றான் சத்யா.

''அட ராமராகவா! இன்னும் அதையேவா நினைச்சிக்கிட்டு இருக்கீங்க? என்ன தப்பா கேட்டுட்டீங்க, இப்படி வருத்தப்படறதுக்கு! எனக்குப்புரியலையே?''



சத்யா அவள் கைகளில் கிடந்த வளையல்களை முன்
னும் பின்னுமாக தள்ளி ணங் ணங் என்று ஓசை எழுப்பி
னான். பின், முகத்தின் தீவிரம் குறையாமலேயே பேசி
னான் :

''ஒரே தொழில்ல இருந்துகிட்டு ஒருத்தரை ஒருத்தர்
வெளிப்படையா விமர்சனம் பண்ணற பழக்கம் எனக்குக்
கட்டோட பிடிக்காது ஜனனி-ஒரு அரசியல்வாதியை இன்
னொரு அரசியல்வாதி, ஒரு பத்திரிகையை இன்னொரு
பத்திரிகை, ஒரு எழுத்தாளரை இன்னொரு எழுத்தாளர்,
ஒரு கலைஞரை இன்னொரு கலைஞர் நாலு பேர் நடுவுல
யோசிக்காம விமர்சனம் பண்ணற போக்கு இப்ப சமீப
காலமா நம்பகிட்ட ரொம்ப வளர்த்திடுத்து. இது நிச்ச
யம் ஆரோக்கியமான வளர்ச்சி இல்லே. பொதுப்படையா
பேசறதுன்றது வேற, தனிப்பட்ட நபர் பேரைச் சொல்லி
பேசறதுன்றது வேற...ஒரே தொழில்ல இருந்துகிட்டு
தொழில் தர்மத்தைக் கடைபிடிக்காம ஒருத்தரை ஒருத்தர்
தரம் கெட்டு விமர்சனம் பண்ணற குணம் என்னைப்
பொறுத்தவரை மஹா கேவலமானது. இந்த போக்கு விப
சாரத்தை விட மட்டமானது...னே நான் நினைக்கிறேன்.
அப்படியிருக்கறப்போ... உன்னை... நான்... ச்சே... ஹவ்
ஃபூலிஷ்...''

படுக்கையில்முஷ்டியால் ஓங்கி குத்தி சத்யா தன் எரிச்
சலை வெளிபடுத்த, ஜனனி கண்கள் அகல ஆச்சர்யித்
தாள்.

''கடவுளே? எத்தனை காட்டமான வார்த்தையை உபயோகப்படுத்தறீங்க, சத்யா?''

''நிஜமாவே. அத்தனை அழுத்தமாதான் நான் ஃபீல் பண்ணறேன் ஜனனி...''

''அதுக்லாக? விபசாரத்தைவிட கேவலமானது...ன்ற கருத்து தேவலையா?''

'......''

''இப்படி ஸ்ட்ராங் வேர்ட்ஸை உபயோகிக்கறது தப்புன்னே நான் நினைக்கறேன்...''

சத்யா நெற்றியில் விழுந்த முடிக்கற்றையைக் கோதி விட்டுக் சொண்டான்

''இதுல தப்பு என்ன? நாலுபேர் நடுவுல மேடையியா என் கருத்தைச் சொல்றேன்? உன்கிட்ட என் மனைவி கிட்டதானே?''

ஜனனி அவனை ஏறிட்டு சின்னதாய் புன்னகைத்தாள்

''நான் உங்க மனைவிதான்...இருந்தாலும் நாளைக்கு இதே பழக்கம் மத்தவங்க கிட்ட பேசறப்போ வராதுன்றது என்ன நிச்சயம்? ஸாரி சத்யா—உங்களுக்கு தெரியாத ஒண்ணை சொல்றதா தயவு பண்ணி நினைக்காதிங்க... உங்க ஸ்நேகிதியா இப்ப பேசறேன்...எந்தக் கருத்தை வெளிப்படுத்தணும்னாலும் அதுக்கு அழகான வார்த்தைகள் இருக்கு...சொல்ல வேண்டிய விஷயத்தைத் துளி அழுத்தம் இல்லாம மரியாதையோட சொல்ல வழி இருக்கறப்போ, அதை கடைப்பிடிக்கறது புத்திசாலித்தனமா... இல்லே...''

சத்யா பதில் பேசாமல் இருக்க, ஜனனி அவனை நெருங்கி அமர்ந்து ஆள்காட்டி விரலால் கன்னத்தில் துவங்கி, காதுவரை மௌனமாக கோடு போட்டாள். காது மடலுக்குள் விரலை சுழித்து, அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''கோபமா?''

சத்யா அவள் தலையில் ஒரு தரம் முட்டி, சிரித்தான்

''கோபமா? உன் மேலயா? எனக்கா? இது சாத்தியம்னு நீ நம்பறியா கண்ணம்மா?''

ஜனனி பதில் பேசாமல் கண்களை மூடிக்கொண்டாள்

சத்யாவின் முகம் கூந்தலில் பதிவதைச் சில நொடிகளுக்கு அனுபவித்து விட்டு மெள்ள பேசினாள்.



''சின்ன வயசுல 'எங்கம்மா கடவுள் நமக்கு வாய் கொடுத்திருக்கறது சாப்பிட மட்டும் இல்லே... முடிஞ்சப்போ எல்லாம் அன்பா பேசறதுக்கும் தான்...யாருக்கும் பணம் காசை தூக்கிக் கொடுத்திட வேணாம். ஆனா அன்போடு பேசிப் பழகற குணத்தை மட்டும் மறக்காம வளர்த்துக்கறது முக்கியம்... இதனால சமுதாயத்துல சண்டை, ஏசல்...கோபதாபம் எல்லாம் அடியோட மறைஞ்சுடும்'னு அடிக்கடி சொல்வாங்க சத்யா...அந்தப் பழக்கத்துல, யாராவது அளவுக்கு மீறி காரமா பேசினா மனசு ஐயோனு பதறிப் போவுது...அதனால தான் நீங்க அந்த வார்த்தைய உபயோகிக்கூடாதுனு உரிமையோட சொன்னேன்...டிட் ஐ ஹார்ட் யூ? இல்லே நான் அப்படிப் பேசினது அதிகப் பிரசங்கித்தனம்னு நினைக்கிறிங்களா?''

நெற்றி லேசாக மடிந்து போகு புருஷன் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமே என்ற கவலையுடன் பேசுபவளை சத்யா அணைத்துக் கொண்டு வகிட்டில் முத்தமிட்டான்.

''ஹர்ட்டும் இல்லே, அதிகப் பிரசங்கித்தனமும் இல்லே...இன்னும் சொல்லப் போனா இந்த மாதிரி வெளிப்படையா நீ பேசறதுதான் எனக்குப் பிடிக்கிறது ஐலவ் யூ மோர்ஃபார் திஸ். சரியான சமயத்துல பக்குவமா புருஷனுக்கு ஒகொன் போடவும் மனைவிக்குத் தெரிஞ்சிருக்கணும். நீ 'ரகுவம்சம்' படிச்சிருக்கே இல்லே' ஜனனி?''

''ம்''

''அதுல, 'அஜ விலாபத்து'ல அஜன், இறந்து போன மனைவி இந்துமதிய நினைச்சு புலம்பற இடம் ஞாபகம் இருக்கா?'

'மனைவிங்கறவ புருஷனுக்கு உணவு ஊட்டும்போது தாயாகவும். வேலைகளைச் செய்து தரப்போ வேலைக்காரியாகவும் படுக்கைல தாசியாகவும், சமயத்துல ஆலோசனை சொல்ற மந்திரியாகவும் இருக்கணும்னு சொல்றதுக்கு உதாரணமா இந்துமதி திகழ்ந்ததா விவரிக்கற இடமா?''

"அதேதான்..."

சடக்கென்று எழுந்து ஜனனியின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தபோது சத்யாவின் முகம் குறும்பில் ஏகத்துக்கு மலர்ந்திருந்தது.

"கண்ணம்மா..."

"ம்?"

"மூணாவதா என்ன சொன்னே. திருப்பிச் சொல்லு"

நாக்கால் உதட்டை ஈரப்படுத்தி 'மாட்டேன்' என்று அதே குறும்புடன் ஜனனி தலை அசைக்க அவன் கழுத்தில் கைகளைக் கோத்து தன் முகத்துக்கருகில் சத்யா இழுத்தான்.

"சொல்லுடி தங்கம்..."

"மாட்டேம்பா..."

"ப்ளீஸ்டா..."

"ஆனாலும் ரொம்ப குஷிதான் உனக்கு இன்னிக்கு... சாப்பிடறப்போ என்னமா சீண்டினே! அத்தைக்குத் தெரியாம சமாளிக்கறதுக்குள்ள திண்டாடிட்டேன்..."

மிகுந்த கொஞ்சலில் ஜனனி அவனை 'நீ' என்று அழைக்க, அதுவே சத்யாவை இன்னும் சீண்டி விட, தன் பிடியை இறுக்கினான்.

"ஆ...முரடுமஹா முரடு..."

"அத்தனையும் வேண்டி இருக்கறதுல ஒண்ணும் குறைச்சல் இல்லே..."

"ரொம்பப் படுத்தினா, ஏதாவது சொல்லிடுவேன் சத்யா?"

"சொல்லேன்..."

"போடா..."



"என்னது!"

"போடா..."

ஒருகணம் திகைத்து, மறுகணம் பெரிசாய் சிரித்து, அதிகமான வெறியுடன் அவன் அவளைத் தழுவ...

"சத்யா, உங்க கைகளில் நீங்க நகத்தை வெட்டணும்..."

"போச்சுடா...எந்த நிமிஷத்துல என்னபேசணும்றது இல்லையா, ஜனனி?"

"இங்க பாருங்க...நகமெல்லாம் ஒரே அழுக்கு இருங்க நெயில் க்ளிப்பர் எடுத்திட்டு வந்து வெட்டி விடறேன்..."

"இப்ப?"

"ம். இப்ப..."

"காலைல செய்யக் கூடாதா கண்ணம்மா? அதுக்குள்ள என்னை யார் பார்க்கப் போறாங்க?"

"யாராவது பார்த்ததான் சுத்தமா இருக்கணுமா? நமக்காக...உங்களுக்காக?"

சத்யா சிரித்தான்.

"நிஜம்மா நீ ஒரு அலாதியான பிறவிதான் ஜனனி"

நெயில் க்ளிப்பரை எடுத்து வந்து அவன் விரல்களை கையில் பிடித்து, ஒவ்வொரு நகமாய் வெட்டியபடியே ஜனனி பேசினாள்

"அது என்னமோ தெரியலை சத்யா...சின்ன வயசுலேர்ந்தே நான் இப்படித்தான் இருந்திருக்கேன். பிறருக்காக ட்ரெஸ் பண்ணிக்கறதுன்ற பழக்கம் என்னிக்குமே இருந்ததில்லே...வீட்டுல தலைவிரி கோலமா இருந்திட்டு நாலு பேர் பார்க்கறப்போ மட்டும் தடபுடலா காட்சி

தர்றது என் மனசுக்கு வேஷமா படுது. சுத்தம், அலங்காரம், நேர்மை எல்லாம் முதல்ல என் மனசு திருப்திக்குத்தான்...இதனால், எனக்குப் பிடிக்காத காரியத்தை இது வரை நான் செஞ்சதில்லேன்றதோட, பிடிச்சதை செய்யத் தயங்கினதும் இல்லேன்றதுதான் உண்மை...என்ன, ரொம்ப போரடிக்கறேனா?''

சத்யா சிரித்தவாறு கை விரல்களைப் பார்த்தான், துளி அழுக்கு இல்லாமல் சீராய் வெட்டப்பட்ட நகங்கள் பார்க்க அழகாய்த்தான் இருந்தன.

''தாங்க்ஸ் கண்ணம்மா...''

''எதுக்கு? நகம் வெட்டி விட்டதுக்கா? அதுக்கு இப்படி எல்லாம் தாங்க்ஸ் சொன்னா போதாதுப்பா...?'

''ஸ்பெஷலா சொல்ல நான் ரெடிப்பா...''

அணைத்த கரத்தை எடுத்து ஜனனி கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

''நாளன்னிக்கு ராணி சீதை ஹால்ல கச்சேரி இருக்கு கண்டிப்பா வருவீங்க இல்லே?''

''நாளன்னிக்கா? ஞாயிற்றுக் கிழமையா? என்ன தேதி''

''இருபத்திரண்டு''

''ரோட்டரி டின்னர் இருக்கே ஜனனி?''

''வரமாட்டீங்களா?''

''ஏழரைக்குப் போனா போதும்...வந்து ஒருமணி நேரம் பார்த்திட்டுந் போறேன். ஓ. கே?''

அந்த ஞாயிறு சொன்னபடி மனைவியுடன் கிளம்பி கச்சேரி நடக்கும் இடத்துக்குச் சென்று, ஏழு இருபது வரை முன் வரிசையில் அமர்ந்து ரசித்துவிட்டு, சத்யா புறப்பட்டுப் போனான்.



சரியாய் பத்து மணிக்கு டின்னர் முடிந்து அவன் வீடு திரும்பியபோது. லானில் நாற்காலி போடச்சொல்லி உட்கார்ந்து அவன் வரவுக்காகக் காத்திருந்த ஜனனியிடம் எக்கச்சக்க பரபரப்பு—கோபம்.

''என்னம்மா?''

இடைவேளைக்குப் பிறகு மைக் ஒழுங்கா வேலை பண்ணவில்லையாம்...அதை ஒரு தினுசாய் சரி செய்வதற்குள் ஸ்பாட் லைட் ஒன்று கோளாறாகிவிட்டதாம்.

''புது தில்லானா பிரமாதமா அமையும்னு நம்பிட்டிருந்தேன்...லைட்டும், மைக்கும் சதி செஞ்சிட்டதுல எதிர்பார்த்த திருப்தி மனசுல இல்லே சத்யா...''

''யாராவது ஏதாவது சொன்னாங்களா?''

''ம்ஹூம்- ஆனாலும்? இந்த சின்ன வேலைகளைக் கூட அவங்களாலபொறுப்பா செய்யமுடியலை பாருங்க.''

''அவங்களையும் மீறி ஏதாவது இடைஞ்சல் எதிர்பாராம வந்திருக்கலாம் இல்லியா ஜனனி?''

''போங்க சத்யா...நீங்க என்ன காரணம் சொன்னாலும் நான் ஏத்துக்கமாட்டேன்...மொத்தத்துல நம்ம நாட்டிலே யாருக்கும் சிரத்தை போறாதுதான்...செய்யற காரியத்தைக் காமா சோமானு செய்யறாங்களே தவிரவும் கர்ம சிரத்தையா, தலை பொறுப்பா நடந்துக்கறவங்க எத்தனை பேர், சொல்லுங்க?''

தலைமுடியை ஈஸிசேரின் பின்னால் தூக்கிப்போட்டு, ஏமாற்றம் கலந்த சலிப்புடன் ஜனனி பேச, சத்யா முன்னால் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

முகவாயை நீவிவிட்டுக் கொண்டு தழைந்த குரலில் பேசினான்.

''நீ ஒரு பர்ஃபெக்ஷனிஸ்ட்...எந்த காரியத்தையும் கச்சிதமா திட்டமிட்டு அதைவிட சிறப்பான சிரத்தையுடன் செய்து முடிக்கறது உன் பழக்கம், இது ரொம்ப உசத்தியான குணம்தான். ஆனா, இதையே அளவுகோலா வெச்சு மத்தவங்களை நீ எடை போடறது சரியில்லேனே நான் நினைக்கறேன் ஜனனி அன்னிக்கு ஒருநாள்? ''எத்தனை தரம் ஒரு இடத்துக்குப் போய் வந்தாலும் தெரு பேரை ட்ரைவர் முருகேசனால ஞாபகம் வெச்சுக்க முடியறதில்லே. அவ்வளவு சிரத்தைக் குறைவு—னு அங்கலாய்ச்சே—ஞாபகம் இருக்கா? இன்னொரு நாள், 'மித்ராவோட பக்கமெல்லாம் சரியா பிரிக்க வர்றதில்லே. சிலசமயம் ஒட்டிக்கிட்டு வருது. 'கட்டிங்' பண்ணறவர் கவனமா செய்யக்கூடாதா?'னு கேட்டே...இன்னிக்கு இந்த லைட், மைக்விஷயம்—உன் திறமை ஐ. க்யூ அவங்களுக்கு இருந்திருந்தா எல்லாரும் இன்னும் பல ஜனனிகளா வளர்ந்திருப்பாங்கம்மா...நீ, நீயாவும், அவங்க அவங்களாகவும் இருக்கறது இந்த ஐ.க்யூ புத்திசாலித்தனம் வித்தியாசத்தாலதான். பலவீனமும், தெரியாத்தனமும் இல்லாதவங்க யாரும் இல்லே... பிறத்தியார் மேல தடக்குனு கோபமோ,சலிப்போ வர்றத்துக்கு முன்னால இந்த வித்தியாசத்தை ஒருதரம் நினைச்சுப் பார்க்கணும்னு நான் விரும்பறேன். என்ன ஜனனி—வில் யூ ட்ரை நெக்ஸ்ட் டைம்?''

சின்ன குழந்தைக்கு அம்மா சொல்லிக் கொடுப்பது போன்ற பரிவுடன் சத்யா பேச, அவன் கையை அழுந்தப் பற்றிக்கொண்டு,,'புருஷனுக்கு மனைவி அப்பப்ப லகான் போடணும்னு நீங்க சொன்னதை இப்ப நான் மாத்தி சொல்லப்போறேன். ஆயுசு பரியந்தம் என் கூடவே நீங்க இருந்து நான் இப்படி அலைபாயறப்போ ஒரு பலமான நங்கூரமா என்னை ஸ்திரப்படுத்தணும்...செய்வீங்களா சத்யா?'' என்றபோது, ,ஜனனியின் கண்களில் திடுமென நீர் முத்தாகத் திரண்டது.

# 10

''சத்யா?''

''......''

''ச...த்...யா''

''ம்?''

''ஏன் எப்படியோ இருக்கீங்க?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே''

''இதானே வேணாங்கறது...சொல்லுங்க...ஆபீஸ்ல ஏதாவது பிரச்சனையா?''

''ம்ஹூம்''

''அப்புறம்?''

''என் இயல்புக்கு எதிரா இன்ஸிடெண்ட்ஸ் நடக்கறப்போ, நான் லேசா அப்ஸெட் ஆயிடறேன். தட்ஸ் ஆல்...''

''அப்போ! இப்ப அப்ஸெட்டாகி இருக்கீங்க?''

''ம்'

படுக்கையில் அமர்ந்திருந்தவள் அருகில் நகர்ந்து ஜனனி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''சொல்லுங்க என்ன விஷயம்?''

மார்பில் படர்ந்தவளை சத்யா அணைத்துக் கொண்டான்.

'போன வாரம் மித்ராவோட கவர் ஸ்டோரி ஞாபகம் இருக்கா''

''இருக்காவா? பிரமாதமான கட்டுரைனு மைசூர் லேந்து போன் பண்ணி பாராட்டினேனே, மறந்திட்டீங்களா?''

மறக்கலை ஆனா, கச்சேரிக்காக மைசூர், பங்களூர் புறப்பட்டுப் போனவ இன்னிக்கு கார்த்தாலதானே வந்திருக்கே—ஸோ. அதோட பின்னணி உனக்குத் தெரியாது இல்லியா?

ஜனனி விழிகளை உயர்த்தி என்ன என்கிற மாதிரி ஏறிட்டாள்.

''நிஜத்தை சொல்லணும்னா. போன இஷ்யூ ப்ரெஸ் ஸுக்குப் போற இரண்டு நாள் வரைக்கும் கூட இந்த கவர் ஸ்டோரியை வெளியிடற எண்ணம் யாருக்கும் இல்லே...சுதந்திர தினத்தை முன்னிட்டுச் சில அரசியல் பிரமுகர்களோட பேட்டிதான் வர்றதா இருந்தது ஆனா வெள்ளிக்கிழமை அன்னிக்கு தயாரான கட்டுரையைப் பார்த்ததும் மகா அதிர்ச்சி...காமாசோமானு ஏதேதோ கேள்விகள். பொறுப்பு இல்லாத பதில்கள்—இட் வாஸ் டோடலி டிஸ்ஸப்பாய்ன்டிங்...''

''சாதாரணமா கவர் ஸ்டோரிகளை முன்னாலேயே தீர்மானம் பண்ணி தயார் செய்யறதுதானே வழக்கம் சத்யா? அதுவும் இது ஸ்பெஷல் நம்பர் வேற ரொம்ப கவனமா இருந்திருப்பிங்களே!''

''யூ ஆர் ரைட்...எப்போதும் இரண்டு வாரம் முன்னால தயாரா இருக்கறவங்க இந்த முறை எப்படியோ கேர்லஸ்ஸா விட்டுட்டோம் சிவா பார்த்துப்பார்ன்ற நம்பிக்கைல கவனிக்காம இருந்தது என் தப்புதான்...'

''அப்புறம்?''

தீர்மானம்பண்ணிட்டோமன்றத்துக்காகமோசமான கட்டுரையைப் போட நான் விரும்பலைவெள்ளிக்கிழமை அவசரமா எடிட்டோரியல் மீட்டிங்கை கூட்டி, யாருக்காவது ஏதாவது ஐடியா தோணுதானு பார்த்தேன்... ம்ஹூம்...எல்லாரையும் அனுப்பிட்டு தனியா ரூம்ல உட்கார்ந்துமண்டையைஉடைச்சிகிட்டப்போ என்னைப்



பார்க்க நாலு காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் நிடும்னு வந்து, ''ரத்த தானத்தோட அவசியத்தைப் பத்தி உங்க பத்திரிகைல எழுதணும். கொடுக்கற ரத்தம் நாற்பத்தெட்டு மணிநேரத்துல திரும்பி ஊறிடறதோட, எந்தவித ஆயாசமும் தானம் கொடுப்பவருக்கு இருக்காது; அஞ்சு நிமிஷத்துல ரத்தத்தைக் கொடுத்துட்டு திரும்பிடலாம்—'னு ரத்த தானத்தோட மேன்மைகளை எடுத்துச் சொன்னப்போ, எனக்குள்ள ஒரு ஃப்ளாஷ்—ஏன், இதையே மனிதாபிமானத்தோட எழுதி கவர் ஸ்டோரியா வெளியிடக் கூடாது—னு! உடனே சிவாவைக் கூப்பிட்டுப் பேசினேன். அன்னிக்கே காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் பலர் ரத்த தானம் செய்யறதை படம் எடுத்து, விளக்கமா கட்டுரை எழுதவும் ஏற்பாடு ஆச்சு...பணம், காசு எதுவும் செலவழிக்காம ஒரு உயிரைக் காப்பாத்தறது நம்ம கையிலே இருக்குன்ற கருத்தை 'தானத்தில் சிறந்தது ரத்த தானம்'ன்ற தலைப்புல வெளியிட்டோம். வாசகர்கள் கிட்டயிருந்து முக்கியமா இளைய தலைமுறையினரிடமிருந்து எக்கச்சக்க வரவேற்பு...''

''சரி, இதுக்காக சந்தோஷப்படறதுதானே நியாயம்? எதுக்காக அப்ஸெட் ஆகணும்?''

பேசியவளை நகர்த்திவிட்டு சத்யா எழுந்து நின்றான்.

''ரத்ததானக் கட்டுரை நாங்க திட்டமிட்டு எழுதினது இல்லே ஜனனி...இந்த வெற்றி குருட்டு அதிர்ஷ்டத்துல வந்ததுதானே?''

''அதனால என்ன சத்யா; கட்டுரை நல்லவிதமா அமைஞ்சு, மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கறதுக்காகப் பெருமைப் படறது தப்பா?''

''யெஸ்—தப்புதான். திட்டமிடாம வர்ற எந்த வெற்றியும் என்னைப் பொறுத்த வரை ஏற்க முடியாதது தான். உழைக்காம கிடைக்கற எந்தப் பலனையும் நான் விரும்

பறதில்லே. இதுக்கும், விரலை அசைக்காமல் லாட்டரிலே வர்ற பணத்துக்கும் என்ன வித்தியாசம்...? ம்...? ஒண்ணு மில்லே. இரண்டுமே என் அபிப்பிராயப்படி சாஸ்வத மில்லாத சந்தோஷங்கள். இதே ரத்ததானக் கட்டுரையை ரொம்ப யோசனைக்குப் பிறகு பிளான் பண்ணி எழுதி யிருந்தா, முந்நூறு கடிதாசு இல்லே, மூணு பாராட்டு லெட்டர்ஸ் வந்திருந்தாக்கூட நான் பூரிச்சுப் போயிருப் பேன். ஆனா...?''

உணர்ச்சி வயப்பட்டுவிட்ட தினுசில் இப்படியும் அப் படியும் நடந்தவன் தொடர்ந்து பேசினான்.

''நாலு நாளா தினமும் நூத்துக்கணக்கில வாசகர்கள் கிட்டேயிருந்து லெட்டர்ஸ் வர வர, என்மனசு உறுத்தல் அதிகமாகுது. ஓஃபிலே எல்லார்கிட்டேயிருந்தும் தோள்ல ஷொட்டு வாங்கறேடான்னு என் மனசே என்னைப் போட்டுப் பிறாண்டி எடுக்குது...''

ஜனனி எட்டி அவன் கையைப் பிடித்தாள். சின்ன தாய்ச் சிரித்தாள்—

''ஹேய்...என்னது இது குழந்தை மாதிரி...தேவை யில்லாம மனசைக் குழப்பிக்கிட்டு...ம்?''

''இல்லே ஜனனி...இது நிச்சயம் முக்கியமான சமா சாரம்தான். மனசை உறுத்தற எந்தக் காரியத்தையும் செய்யாம இருக்கறது என் கொள்கைல ஒண்ணு...''

மேலே ஏதும் பேசமுடியாததுபோல, சத்யா மீண்டும் காலை நீட்டிப் படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

''தூக்கம் வருதா சத்யா.''

''இல்லே...மனசைப் பத்திதான் நினைச்சிட்டிருக் கேன்...''

''இன்னுமா?''

''ம்ம். இந்த மனசு இருக்கே, இது ரொம்ப விநோத மானது ஜனனி...ஒரு தரம் அழுத்தமா ஒரு கருத்து பதிஞ் சிட்டா அதை லேசுல மாத்திக்காது, தெரியுமா?''



''ஒத்துக்கறேன்...''

''மனசைப் பத்தி பேசறப்போ ராம்சிங் சொன்னது நினைவுக்கு வருது. ராம்சிங்கை உனக்குத் தெரியும் இல்லியா? அவர் இன்னிக்கு ஆபீஸுக்கு வந்திருந்தார். அவரோட நண்பர் ஒருத்தர் மனசோட சக்தியை நிரூபிக்க ஒரு பரிசோதனையைச் செஞ்சு காட்டினாராம். பெண் நாயோட கண்களை கட்டி, அதை ஆண் நாயோடச் சேர வெச்சவர், ஆண் நாய் மேல புலித்தோலைப் போர்த்தின பிறகு, பெண் நாயோட கண் கட்டை அவிழ்த்து, இரண்டும் ஒண்ணை ஒண்ணு பார்க்க வெச்சிருக்கார். சரியா இரண்டு மாசம் கழிச்சு குட்டிகள் பிறந்தப்போ அந்த நாய் ஜாதிலேயே காண முடியாத கோடுகள் குட்டிகள் மேல லேசா இருந்ததாம்...கண் கட்டை அவிழ்க் கறப்போ புலித்தோலை போர்த்திகிட்ட ஆண் நாய் மனசுல பதிஞ்சிட்டதுதான் இந்த விளைவுக்கு காரணம்னு ராம்சிங் சொன்னார்-எப்படி? ஆச்சரியமா இல்லே?''

கேலியாக உதட்டை சுழித்தபடி ஜனனி அவசரமாய், 'குனிங்க...முன்னால குனிங்க...' என, சத்யா விழித்தான்.

''இத்தனை அழகா பூ சுத்தியிருக்காரே, அது காதுல இன்னும் இருக்கானு பார்க்கத்தான்...''

''ஸோ? நீ நம்பலை?''

சிரிப்பு மாறாமல் ஜனனி 'ம்ஹூம்' என்றாள்.

''சமீபத்துல இங்கிலாந்துல ஒரு பெண்ணுக்கு கரடிக் குட்டி மாதிரி குழந்தை பிறந்த நியூஸை நீ படிக்கலே?''

இது என்ன புது கதை?''

''கதை இல்லே ஜனனி—நிஜம். கரடி மாதிரி புஸு புஸுனு முடியோட குழந்தை பிறந்தது ஏன்னு. யாருக்கும் முதல்ல புரியல...ஆனா, துருவித் துருவி பார்த்தப்போ கர்ப்பமான இரண்டாம் மாசத்துலேர்ந்து, படுக்கைக்கு நேரா இருந்த ஷெல்ஃப்ல அழகான கரடி பொம்மை

ஒண்ணை வெச்சிகிட்டு, தினம் தூங்கறதுக்கு முன்னால்,
ஆ—எத்தனை அழகு—னு அந்த கர்பிணி மனசுல நினைச்
சுக்கிட்டே இருந்ததுதான் இப்படி ஒரு பிரசவத்துக்கு
காரணம்னு...''

அவன் முடிக்கு முன் ஜனனி குறுக்கிட்டு, சுத்த
பேத்தல்'' என்றாள் திவிரமாக.

''நீ நம்பலியா? மனசுக்கு இத்தனை சத்தி உண்டுன்
றதை மறுக்கறியா?''

''மனசு ஏக சக்தி படைச்சதுதான். ஒத்துக்கறேன்
ஆனா, நாட் ஆல் திஸ்—''

''ஏன்?''

''எனக்கு நம்பிக்கை உண்டாகலை— அவ்வளவு
தான்...''

நாட்மி...இத்தனையும் சாத்தியம்னு மனப்பூர்வமா
நம்பறதாலதான் மனசை நேர்மையா, சுத்தமா, கறை
படாம வெச்சுக்கணும்ன்றதுலயும் நான் கவனமா இருக்
கேன்!''

ஜனனி தலையணை ஒன்றை மடியில் போட்டு முழங்
கைகளை ஊன்றிக்கொண்டு யோசனையுடன் பேசினாள்.

''மனசுல கறைனா? எந்த அர்த்தத்துல சொல்றீங்க
சத்யா?''

''ம்ம்?...என்னைப் பொறுத்தவரை, ஒரு உந்துதல
காரணமா யோசிக்காம திருடறவனைவிட, வசதியா
வாழறவனைப் பார்த்து, 'இவன் பணம் காசெல்லாம்
போய் நடுத் தெருவுல நிற்கமாட்டானா'னு கற்பனை
பண்ணறவனும், அடுத்த வீட்டுப் பொம்பளை உடையை
மானசீகமா உரிச்சு அவளோட சல்லாபம் செய்யறவனும்
இன்னும் மட்டமானவங்க. இந்தமாதிரி மனசால கரப்ட்
ஆகறதைத்தான் நான் அடியோட வெறுக்கறேன் திருப்பச்
சொல்றேன் ஜனனி—மனசு ரொம்ப சக்தி படைச்சது
செய்யற காரியம் நேர்மையா இருக்கணும்னா, கண்டிப்பா
மனசை ஒழுங்கா வெச்சுக்கிட்டே ஆகணும்...''



ஜனனி நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள்.

''ஒரு சின்ன சந்தேகம். மகா நேர்மையோட வாழற
ஒரு பெண்ணை முன் பின் தெரியாத ஒருவன் கற்பழிச்சிட்
டான்னு வைச்சிக்கிங்க; அப்ப, நீங்க குறிப்பிடுகிற 'கறை'
உடம்புக்கு மட்டும்தான், நிச்சயம் மனசுக்கு இல்லே,
சரிதானே?''

'ரொம்ப சரி. தங்களையும் மீறின சந்தர்ப்பங்கள்ல
இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்கறப்போ அங்க மன
சோட ஈடுபாடு கண்டிப்பா இல்ல. ஸோ, சாதாரணமா
நாம உபயோகப்படுத்தற அளவுகோலை வைச்சி இந்த
நிகழ்ச்சிகளை விமரிசிக்கப் பார்க்கறதுகூட நியாய
மில்லாத செய்கை...''

ஜனனி கண்கள் அகல சந்தோஷத்துடன் கைகளை
மெல்லத் தட்டினாள்.

''வொண்டர் ஃபுல்... உங்க கருத்தை நான் அப்படியே
ஏத்துக்கறேன். இன்ஃபாக்ட், நீங்க பேசறப்போ எனக்கு
மகாத்மாவோட வார்த்தைகள்தான் ஞாபகத்துக்கு வருது.
நவகாளி வகுப்புக்கலவரம் நடந்து முடிஞ்சப்புறம், அநியா
யமா நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட,
'இவர்கள் களங்கமில்லாதவர்கள்; அதனால் தயங்காமல்
ஆண்கள் இவர்களைக் கற்புள்ள பெண்களாகக் கருதி
மணக்க முன்வரணும்'னு காந்திஜி ரொம்ப தீவிரமா
பிரசாரம் பண்ணினார்... இல்லியா?''

நிதானமாக, சின்ன குரலில் ஜனனி பேசப் பேச,
அவள் கைகளைப்பற்றித் தன் அருகில் சத்யா இழுத்துக்
கொண்டான்.

''அப்பாடி! நீகூட அதிகமாக வாதம் பண்ணாம என்
கருத்தை ஏத்துக்கிட்டியே, இன்னிக்கு மழைதான்
கொட்டப் போகுது!''

வேடிக்கையாய்ப் பேசி, அவள் புருவத்தோடு விரலை ஓட்டி, கன்னத்தைக் குறுகுறுக்க வைத்து உதட்டுக்குத் தாவினவன், திடுமென என்னமோ யோசனை பண்ணின தினுசில் தீவிரமானான்

''மனசு நேர்மைக்கு நான் முக்கியத்துவம் கொடுக்கறதைப்பத்தி உன்கிட்ட விளக்கமா பேச ஆசைப்படறேன், கண்ணம்மா— ரொம்ப சின்ன வயசுல எங்கம்மா அடிக்கடி ஒரு கதை சொல்லுவாங்க... நீயும் கேள்விப்பட்டிருப்பே.. ஒரு விபசாரி வீட்டுக்கு எதிர்ல ஒரு பூசாரி குடியிருந்தானாம் கோயிலுக்குப் போய் பூஜை பண்றப்ப கூட, விதவிதமான ஆளுங்க அந்த வீட்டுக்கு வர்றதையும், அவங்களை அந்த விலைமாது உபசரிக்கறதைப் பத்தியுமே நினைச்சிட்டிருப்பானாம். ஆனால், அந்தப் பெண்மணியோ உடம்பால என்ன செய்திட்டிருந்தாலும், மனசால 'அந்த பூசாரி இத்தனை நாழி அம்மனுக்கு அலங்காரம் பண்ணிட்டிருப்பார்' அர்ச்சனை செய்திட்டிருப்பார்'னு கடவுள் சம்பந்தமாகவே எண்ணிட்டிருப்பாளாம். இரண்டு பேர் வாழ்நாளும் முடிஞ்சதும் விபசாரி சொர்க்கத்துக்கும், பூசாரி நரகத்துக்கும் போனாங்களாம். ஏன்னு கேட்டப்போ 'உடம்பால என்ன செய்யறோம்ன்றதைவிட, மனசால எவ்வளவு ஆரோக்கியமா வாழ்ந்திட்டிருப்போம்ன்றது முக்கியம்'னு கடவுள் பதில் சொன்னாராம். இந்தக் கதை எனக்குள்ள அழிக்க முடியாத பாதிப்பை உண்டாக்கிட்டதாலத்தான, மனசுகறைபடாம வாழறது அவசியம்ன்றது என் கொள்கையாவே மாறிட்டதோ என்னமோ... இதைப்பத்தி நீ என்ன நினைக்கறே, ஜனனி?'

நான்— சொல்வதை— நீ புரிந்து கொள்வாயா— என்கிற அக்கறை ததும்பி நிற்க, சின்னப் பையனின் பரிபரிதவிப்புடன் சத்யா பேசி நிறுத்த, அந்த சிரத்தையும் அழுத்தமான கருத்தும் ஒருவிதப் பரவசத்தை உண்டு பண்ண, இன்னும் நெருங்கி அவன் கழுத்தில் தன் கைகளை மாலையாக்கின ஜனனி. அவன் காது மடலில் கொஞ்சலுடன் முத்தமிட்டு, ''ஐ லவ் யூ— டா சத்யா!'' என்றாள் ஏகப் பிரேமையுடன்!

# 11

**அந்த** நாய் மிக மிக நிலையாக முனகியது. தலையைத் தூக்கப் பார்த்து முடியாமல் கண்களை மட்டும் இப்படியும் அப்படியும் அசைத்தது. அருகில் நிற்கும் எஜமானனைப் பார்த்து வாலை ஆட்ட யத்தனித்து இயலாமல், மீண்டும் பரிதாபமாக அழுதது.

குனிந்து நாயின் தலையைத் தடவிக் கொடுத்த சுந்தர்லாலின் வருத்தத்தை வெளிப்படையாக புரிந்து கொள்ள முடிய, ஜனனியையும் சத்யாவும் என்ன பேசி நண்பனை சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் ஒரு நிமிஷம் தவித்துத்தான் போனார்கள்.

''மெர்ஸி கில்லிங் தவிர வேறு வழியே இல்லேனு டாக்டர் சொல்லிவிட்டார் இன்னும் இரண்டு நாள், அதற்கப்புறம் ஒரு முடிவுக்கு வந்தே ஆகணும். எட்டு வருஷமா என் நிழலா இருந்தவனை... எப்படி...?''

குரல் தழுதழுக்க பேசியவனின் தோளில் கைவைத்து சத்யா தட்டிக் கொடுத்தான்.

ஏதும் பேசாமல் அப்படியே நின்று சிநேகிதனின் துக்கத்தில் பங்கெடுத்த பிறகு, இரண்டு பேரும் விடை பெற்று வெளியில் வந்தார்கள்.

வீட்டை நோக்கி காரில் பயணிக்கையில் சத்யா வருத்தத்துடன் சூள் கொட்டினான்.

''சுந்தர்லாலைப் பார்க்கப் போனவங்க 'பேசாம திரும்பி வர வேண்டியதுதானே? எதுக்காக நீ 'உங்க நாயைப் பார்க்கலா?'ம்னு கேட்டே?''

''இதுக்கு முன்னால ஒவ்வொரு தரம் சுந்தர்லால் வீட்டுக்குப் போறப்பவும் எத்தனை அருமையா அந்த நாய் நம்ப கூட விளையாடும்? பந்தை கொண்டு வந்து கொடுக்கும். காலடியிலேயே உட்காரும். மடிலே காலை

வைச்சு 'விளையாட வாயேன்'னு கொஞ்சும்... அத்தனை ஆசையா இருந்ததைப் பார்க்காம வர மனசு கேட்கலையே சத்யா...''

''பாவம்... அப்படி ஓடியாடினது இன்னிக்கு பழைய துணி மாதிரி கிடக்கறது பார்க்க பயங்கரமா இருக்கு...''

''அதனாலதான் மெர்ஸி கில்லிங் பண்ணிடறதைத் தவிர வேறு வழி இல்லேனு டாக்டர் நினைக்கறார்...''

''எனக்கென்னமோ இந்த மெர்ஸி கில்லிங்—ன்ற வார்த்தையை கேட்டாலே கோபம் பொத்துக்கிட்டு வருது. எட்டு வருஷமா உசிரா பழகினதை நிமிஷத்தில வேண்டாததா எண்ணிக் கொல்றது மகா பாவம். பொறுமையா வைத்தியம் பார்த்தா சரியாகாதா என்ன?''

''ஆகலியே! இரண்டு மாசமா சுந்தர்லால் பார்க்காத வைத்தியமா? செலவழிக்காத பணமா? எதுக்கும் கடுகத்தனைகூட பலன் இல்லியே!''

''அதுக்காக? கொஞ்ச வேண்டிய வரையில் கொஞ்ச வேண்டியது— அப்புறம் சடக்குனு நீ இனிமே எனக்கு வேண்டாம்—னு கொலை பண்ணிடறது சட்... என்ன மனுஷங்கடாப்பா...''

''உணர்ச்சி வசப்பட்டு பேசாம, ப்ளீஸ் திங்க் ப்ராக்டிகலி... இனிமே ஆயுசு பர்யந்தம் கிழிச்சுப் போட்ட நாரா கிடந்து தானும் கஷ்டப்பட்டு, சுந்தர்லாலையும் அந்த நாய் சிரமப்படுத்தறதைத்தான் நீங்க விரும்பறீங்களா?''

''......''

''கண்டிப்பா சரியாகாதுனு வைத்தியரே சொன்னப்புறம் சிந்திச்சு, நடைமுறைக்கு, நிம்மதிக்கு ஏத்த காரியத்தைச் செய்யறதுதானே புத்திசாலித்தனம்?''



''இருக்கலாம்... ஆனா, அது மனிதாபிமானம் இல்லியே, ஜனனி?''

''எதுக்கும் லாயக்கில்லாத நாயை இப்படியே உயிர் வாழ விட்டு, சித்ரவதை பண்ணறது மட்டும் ரொம்ப மனிதாபிமானம் உள்ள செயலா?''

சத்யா லேசாக உதடுகளை ஒரு தரம் அழுத்திக் கொண்டான்.

இது விதண்டாவாதம்,

நினைத்து விட்டதைச் சரி என்று சாதிக்கும் பிடிவாதம்!

பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதை நிரூபிக்க, நாலாவது காலை வெட்டும் குதர்க்க வாதம்...

மேற்கொண்டு அவன் எரிச்சல் தொடருமுன் ஜனனி நெருங்கி வந்து தோளில் சாய்ந்து கொண்டாள்.

''மணி எட்டரைதான் ஆறது... பீச்சுக்குப் போயிட்டு வீட்டுக்குப் போவோமா?''

போனார்கள்.

''இறங்கி மணல்லே நடக்கலாமா?''

நடந்தார்கள்.

''ஏன் 'மூடி'யா இருக்கிங்க சத்யா?''

''........''

''எம்மேல கோபம்தானே?''

''கோபம் இல்லே, வருத்தம். ப்ராக்டிகலா பேசறேன்னு சில சமயம் கடுமையா நடந்துக்கறியேனு...நீ ரொம்ப மென்மையானவ, எனக்குத் தெரியும். ஆனா, திடும் திடும்னு உனக்குள்ளே இருந்து காட்டமா ஒரு புயல் வீசறப்போ, இது என் ஜனனிதானானு ஆச்சர்யமா இருக்கு?''

சத்யாவின் வார்த்தைகள் ஜனனியைக் காயப்படுத்தவில்லை.

மாறாக, தன் வழக்கமான சிரிப்புடன் கணவனின் கையைப் பற்றி அவன் தோளில் சாய்ந்து கொண்டு நடந்தாள்.

''உட்காரலாமா சத்யா?''

மணலில் ஆள்காட்டி விரலால் கோலம் போட்டு அழித்து, சில நிமிஷங்களை மௌனமாகக் கழித்தபின், ஜனனி மெல்லிய குரலில் கேட்டாள்:

''கிட்டத்தட்ட பதினைஞ்சு, இருபது வருஷங்கள் முன்னால, 'தாலிடோமைய்ட்' குழந்தைகள் விவகாரம் பூரப்பல அமர்க்களப்பட்டதே, ஞாபகம் இருக்கா சத்யா?''

கைகளை கோர்த்து தலைக்கு அடியில் வைத்துபடுத்து விட்டவன், வானத்தை வெறிப்பதை தவிர்த்து, மனைவி பக்கம் திரும்பினான்.

''தாலிடோமைய்ட்?''

''ம்...மன அமைதிக்கான மாத்திரைகள்...'டெரடோஜினிக் ஆக்டிவிடி டெஸ்ட்' ஐ பூரணமா செய்யாம விற்பனைக்கு கொண்டு வந்ததால், ஜனங்க மத்திலே இது உண்டாக்கின பீதி பற்றி படிச்சிருப்பீங்களே?''

எஸ்... நினைப்பு வந்து விட்டது.

அறுபதுகளின் துவக்க காலத்தில் ஐரோப்பாவில் பல பெண்களால் உட்கொள்ளப்பட்டு பூதமாகப் பிரச்னையைக் கிளப்பின தாலிடோமைய்ட்!

கர்ப்பிணி பெண்களிடம் இந்த மாத்திரை உண்டாக்கக் கூடிய விளைவுகளை ஆராயாமல் விற்பனை செய்ததில் அந்த ஆண்டு, கை-கால்-முக்கிய உறுப்புகள் அற்றமுண்டமாய், பல நூற்றுக் குழந்தைகள் பிறந்து உலகத்தையே ஒரு கலக்கு கலக்கியதே!



''சத்யா?''

''சொல்லும்மா... அந்தப் பிரச்சனைக்கு இப்ப என்ன?''

''இந்த மாதிரி அசாதாரண குழந்தைகள் வளர்ந்து கஷ்டப்படறதைவிட ஆரம்பத்துலேயே மெர்ஸி கில்லிங் பண்ணிடறது நல்லதுனு முடிவு எடுத்து சில பெற்றோர் அதை நிறைவேத்திட்டதை நீங்க நினைச்சு பார்க்கணும்...''

''நினைச்சுப் பார்த்து...?''

''குழந்தையை பெத்தவங்களே இப்படி ஒரு முடிவுக்கு வரணும்னா, இந்த மெர்ஸி கில்லிங் எத்தனை அவசியமானதுனு புரிஞ்சுக்கணும்...''

''ஸாரி-நான் புரிஞ்சிக்க விரும்பலை, அன்னிக்கு இந்த செயலை எதிர்த்து அத்தனை சர்ச்சுகளும் பல சமூக அமைப்புகளும் குரல் கொடுத்துதே, அது உனக்கு ஞாபகம் இருக்கு இல்லே?''

''யார் எதிர்ப்பு தெரிவிக்கணும், உரிமை உள்ளவங்க மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் இதுவே நான் நினைக்கறேன் சத்யா.''

''இது அசல் விதண்டாவாதம்!''

''இல்லே சத்யா... மனப்பூர்வமாதான் சொல்றேன். வேதனையைத் தவிர இனி வேற எதுவுமே இல்லேனு தீர்மானமாயிட்டா, அந்த ஜீவன் வாழறதுல அர்த்தம் என்ன?''

''அர்த்தம் இருக்கா, இல்லையானு தீர்மானம் பண்ணறது யாரு ஜனனி?''

''ம்? நெருங்கிய பந்துக்கள்தான்...''

''அந்த பந்துக்களும் அந்த ஜீவனுக்கும் சுமுகமான உறவு இல்லாம இருந்தா? வேண்டாதவங்களைத் தீர்த்து கட்ட இது நல்ல சான்ஸ்னு நினைச்சா?''

''குட்...இது நல்ல கேள்வி...ம்ம்...முடிவு எடுக்கற உரிமையை ஒருத்தர்கிட்ட விடாம, பேனல் ஆஃப் டாக்டர்ஸ், முக்கியமான உறவினர்கள்-னு குறைஞ்ச பட்சம் ஆறு பேராவது இருக்கணும்னு ஒரு விதி கொண்டு வந்தா?''

ம்ஹூம். பணத்துக்காக எதையும் செய்யத் துணிஞ்சவங்களைக் கண்டிப்பா இந்த ரூல்ஸ் எல்லாம் கட்டுப்படுத்தாது...யாருடைய வாழ்க்கையையும் முடிக்கற உரிமை யாருக்கும் இல்லேனு நான் ஆணித்தரமா நம்பறேன். அப்புறம் கடவுள், விதி இதுக்கெல்லாம் அர்த்தம்தான் என்ன? அமெரிக்காலே, அந்தப் பெண் பேர் என்ன ஜேன்?-சரியா நினைவு இல்லே, ஏதோ ஒன்னு-அவ சமாசாரம் என்ன ஆச்சு, ப்ளீஸ் ரிமெம்பர் தட்...பல வருஷங்களா நினைவு இல்லாம கோமால கிடந்த பெண்ணைப் பெத்தவங்க, 'எங்க மகள் நிம்மதியா சாக விரும்பறோம். அவளை செயற்கையா உயிரோட வைக்க உதவற மிஷின்களை அப்புறப்படுத்தணும்'னு கேட்டாங்க. இதுக்கு டாக்டர்ஸ் சம்மதிக்கலை. பெத்தவங்க கோர்ட்டுக்குப் போனாங்க. கேஸ் ஜெயிச்சது. அவங்க விருப்பப்படி ரெஸ்பிரேட்டர், மற்ற கருவிகளை எடுத்த பிறகும் என்ன ஆச்சு? அந்தப் பெண் யாருமே எதிர் பார்க்காத தினுசிலே தொடர்ந்து உயிர் வாழலியா? ஸோ, நம்மை மீறின ஒரு சக்தி இருக்கறப்போ, நாமாவே ஒரு முடிவுக்கு வர்றது சரியான செயலா?''

ரொம்பவும் தீவிரமாக புருவங்கள் முடிச்சு போட்டுக் கொள்ள சத்யா பேச, ஜனனி தோள்களைக் குலுக்கினாள்.

''என்னைப் பொறுத்தவரை, மனப்பூர்வமா அன்பு வெச்சிருக்கறவங்களோட அவஸ்தையைத் தாங்காம உண்டாக்கப்பட்டது மெர்ஸி கில்லிங். இந்த கருத்துல நாம் ஒத்துப் போகாததால்ல இதோட இந்தப் பேச்சை நிறுத்திடலாம்...நேரமாச்சு...கிளம்பலாமா?''

மணலைத் தட்டிக் கொண்டு புறப்பட்டார்கள்.

வீடுவந்து சேரும் வரை அவரவர்சிந்தனையில் மூழ்கிப் போன மாதிரி எதுவும் பேசாமல் வந்தார்கள்..



சாப்பிட்டு, மாடிக்கு வந்து முகம் கழுவிக் கொண்டு ஜனனி படுக்கை அறைக்கு வந்த போது, சத்யா அவளிடம் ஒரு பேப்பரை நீட்டினான்.

''என்னது?''

''படிச்சு பாரேன்...''

பப்பிள் பாய்— (Bubble Boy) படத்துடன் வெளியான கட்டுரை...

''இந்தப் பையனோட கதை தெரியும் இல்லியா? பத்து வயசாறது. உடம்புல எதிர்ப்பு சக்தி இல்லாம பிறந்ததால, ஜனித்த நாள்லேந்து இவன் வசிக்கறது ஸ்பெஷலா நிர்மாணிக்கப்பட்ட அறைலதான். இந்த அறைக்குள்ள யாரும் போக முடியாது. பெத்தவங்ககூட வெளில நின்னுதான் பாக்கறாங்க. சாப்பாடு, மருந்து இதர சமாசாரங்கள் எல்லாம் ஸ்டெரிலைஸ் பண்ணி அலாதி முறைல கொடுக்கப்படுது. ஒரு ஜீவனைக் காப்பாத்த விஞ்ஞானம், பெத்தவங்க, டாக்டர்ஸ் எல்லாம் இவ்வளவு முயற்சி எடுக்கறப்போ, மெர்ஸி கில்லிங் பத்தி பேசறது கூட காட்டு மிராண்டித்தனமா உனக்குப் படலை?''

ஜனனி உடனே பதில் கூறாமல், பேப்பரை வைத்து விட்டு, ட்ரெஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்தாள்.

தலைமுடியை அவிழ்த்து சிக்குப் போக வாறிய நாழிகையில் நிதானமாகப் பேசினாள்.

''உடம்புல எதிர்ப்புச் சக்தி அடியோடு இல்லேன்ற காரணத்துக்காக, பேச, பார்க்க, கேட்க, யோசிக்கத் தெரிஞ்ச ஒரு பையனை உலகத்தோடே தொடர்பே இல்லாம தனியா வளர்க்கற சேதி என்னை என்னமோ பண்ணுது சத்யா. தன் அம்மாவை கட்டிக்கணும்போல, தன் வயசுப் பையன்களோடு ஓடி விளையாடணும்போல, நிலவொளில பார்க்குல நடக்கணும் போல, இன்னும் எத்தனை எத்தனையோ சின்னச்சின்ன சமாச்சாரங்களை

செய்யணும்போல ஆசை எழுந்தா அந்தப் பையன் என்ன செய்வான்? டி.வி. பார்த்து, புஸ்தகங்கள் படிக்கறவனுக்கு அது எழாதுனு என்ன நிச்சயம்? இந்த சின்ன வயசுல உணர்ச்சிகளை எல்லாம் அடக்கி ஆளறது சாத்தியமா? அந்த ஏமாத்தத்துல அழுதான்னா, அவன் கண்ணைத் தொடச்சு தோள்ல சாத்தி சமாதானம் செய்யப்போறது யாரு? அவனுக்குத் துணையா இருக்கற தனிமையா? பறந்து திரிய வேண்டிய பறவையோட இறக்கையை ஒடிச்சு கூண்டுல போட்டு வளர்க்கறதுக்கும் இதுக்கும் என்ன வித்தியாசம் சத்யா? நிஜமா சொல்றேன். எனக்கு அப்படியொரு குழந்தை பிறந்தான்னா, உலகமே ஒண்ணா நின்னு எதிர்த்தாலும், அவன் இந்த மாதிரி ஐம்பது வருஷம் வாழறதைவிட, இரண்டு நாள் சந்தோஷமா, சுதந்திரமா, வாழ்ந்துட்டு சாகட்டும்'னு சொல்லு வேன்...''

குரலை உயர்த்தி ரொம்பத் தீவிரமாய் அவள் பேச, சத்யா கண்களை விரித்து அதிர்ந்தான்.

''மை காட்! உன்னால எப்படி இத்தனை கொடூரமா பேச முடியுது! என்னால நம்ப முடியலையே!''

ஜனனி தலைமுடியை முடிந்து கொண்டு திரும்பி கணவனை ஏறிட்டாள்.

''ஆல்ரைட்... பேச ஆரம்பிச்சிட்டோம்...முழுக்கவே பேசிடுவோம்... லெட்ஸ் கோ த்ரு இட். கொடூரம்னு எதைச் சொல்றீங்க சத்யா?''

''சாயங்காலத்துலேந்து நீ வெளிப்படுத்தற கருத்துக் களைத்தான்...''

''கருணைக்கொலையை அடிப்படையா கொண்ட கருத்துக்களையா?''

''ஸர்டென்லி!''

''சரி— மெர்ஸி கில்லிங் பத்தி பேச்செடுத்தாலே எகிறி குதிச்சு, 'ஐயோ, இது மஹா பாவம்'னு குரல் கொடுக்கற



எல்லோரையும் — உங்களையும் தான் — ஒரு கேள்வி கேட்கறேன்— பதில் சொல்வீங்களா?''

''என்ன?''

''ஆயிரத்துல ஒரு கேஸா, இல்லை பத்தாயிரம் வீடு கள்ல ஒரு வீட்டுல நடக்கலாம்னு சொல்லக்கூடிய கருணைக்கொலைக்கு இத்தனை எதிர்ப்பு தெரிவிக்கிற நீங்க, தினமும் இடது வலதுனு எந்த குடும்பத்துலேயும் நடக்கற பல அநீதிகளை ஏன் கண்டிக்க முன் வர மாட் டேங்கறீங்க? நோய்வாய்ப்பட்டு, வேதனை தவிர வேறு

எதையும் அனுபவிக்க முடியாத ஜீவனை சாக அனுமதிக்க மறுக்கற நீங்க, எல்லா விதத்திலும் வாழ விரும்பற, வாழக்கூடிய உயிர்களைப் பத்தி ஏன் கவலையே பட மாட்டேங்கறீங்க?''

''புரியலை ஜனனி...''

''வீட்டுக்கு வீடு வயசானவங்க இருக்காங்களே, அவங்களோட அவலத்தைத்தான் சொல்றேன் சத்யா. வயசானவங்களைப் பராமரிக்கற இல்லங்கள் இப்ப நாய்க் குடைகளா பெருகிகிட்டு வருது— இதுக்கு அர்த்தம் என்ன? உயிரோட இருக்கறப்பவே 'நீ வேண்டாம்'னு பிள்ளைங் களால உறவினர்களாலே ஒதுக்கப்பட்ட மனுஷங்க எண் ணிக்கை அதிகமாயிட்டதுதானே? கொஞ்சம் நினைச்சுப் பாருங்க சத்யா. வாழ வழி தெரியாம தற்கொலை பண்ண ஒருத்தன் முயற்சித்து, தோல்வி அடைஞ்சு பிடிபட்டா உடனே அவன் மேல கேஸ் பதிவு செஞ்சு, நூறு கேள்வி கேட்டு உசிரை வாங்கும் நம்ம அரசாங்கம், அவன் நல்ல விதமாக வாழ அவனுக்குச் சந்தர்ப்பங்களை உருவாக்கி தருதா? எத்தனைக் குடும்பங்கள்ல குருடு, நொண்டி, மன வளர்ச்சி இல்லாதவங்களை எல்லாம் மனப்பூர்வமான அன்போட பராமரிக்கறாங்க? விட்டா போதும்னு தள்ளி விடறவங்க அதிகம்? சொல்லுங்க... நல்லா வாழக்கூடிய,

வாழவிரும்பற இந்த ஜீவன்களுக்காக விரலை, அசைக்காத அரசாங்கமோ, சமுதாயப் பொறுப்புள்ள ஸ்தாபனங் களோ, பொது மக்களோ நிஜமாவே வாழ முடியாத, நடை பிண உயிர்களை நிம்மதியா சாக அனுமதிக்காம எதிர்ப்பு தெரிவிக்கிறது வேஷம் இல்லியா? போலி இல்லியா? சொல்லுங்க சத்யா...''

கண்கள் கலங்கிப் போக, வாஸ்தவமான அக்கறை யுடன் அவள் பேச, சத்யா சடக்கென்று எழுந்து அவளை நெருங்கி, அழுந்த அணைத்துக் கொண்டான்.

ஒருவிதப் பரபரப்புடன் அவர் வகிட்டில், கண்களில் முத்தமிட்டவாறு, ''என்ன உசந்த மனசு கண்ணம்மா உனக்கு? அதப் புரிஞ்சிக்காம என்னென்னவோ பேசிட் டேனே! ஐம் ஸாரிடாம்மா... ரியலி ஸாரி...இனிமே முடிஞ் சப்போ எல்லாம் 'மித்ரா' மூலமா நாமெல்லாம் இழந்து கிட்டு வர்ற மனிதாபிமானத்தைப் பத்தின விழிப்புணர் வைக் கண்டிப்பா உண்டாக்க முயற்சிப்பேன், இட்ஸ் எ ப்ராமிஸ்,'' என்று கிசுகிசுப்பாக பேசியபோது அவன் கண்களும் கலங்கிப் போயின.

# 12

யாரோ உலுக்கிவிட்ட மாதிரி சத்யா விழித்துக் கொண்டான்.

இருட்டில் எதுவுமே புரியாமல் கண்கள் மசமசத்த நாழிகையில். விடிந்தால் தேதி நாலு என்கிற நினைப்பு திடுக்கென்று தலை தூக்கியது.

ஆகஸ்டு நாலு.

சரியாக நாலு மாசங்கள்...

வேதனை, ஆயாசம், குழப்பம், விரக்தி இவைகளைத் தவிர|வேறு சந்தோஷமான எந்த சமாசாரத்தையும் நிமிஷ காலத்துக்குக் கூட தராத நாலு மாசங்கள்...

கண்ணுக்கெட்டின வரையிலும் பசுமையே காண முடியாத பாலைவனமாய் வாழ்க்கையை மாற்றிய நாலு மாசங்கள்...

விடிவெள்ளிக்காக ஏங்கி, தவித்து, இருட்டில் தட்டுத் தடுமாறி விழுந்து எழுந்து, நடந்து, மீண்டும் விழுந்து...

கடவுளே...

அந்த ஏப்ரல் நாலாம் தேதி ஏன் வந்தது?

எதற்காக அந்தத் திரை அறுந்து விழுந்தது?

யாருக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்?

எதனால் இத்தனை கடுமையான தண்டனை?

மேலே சிந்தனை தொடருமுன் சத்யா போர்வையை உதறி விட்டு எழுந்து நின்றான்.

கசிய முற்பட்ட கண்ணீர், விழியோரங்களில் எரிச்சலை உண்டாக்கியது.

தொண்டையில் ஒரு இறுக்கம்...

மெதுவாக நடந்து குளியலறைக்குச் சென்று கண்களைக் குளிர்ந்த நீரால் கழுவிக் கொண்டான்.

—இப்ப, இந்த அர்த்த ராத்திரிலே பச்சைத் தண்ணியால எதுக்காக முகத்தைக் கழுவிக்கறே ஜனனி?

—ஒரு வாரமா தொடர்ந்து 'விடியோ'ல படம் பார்த்திட்டு, பன்னண்டு மணிக்குப் படுக்கறதுல கண் ரொம்ப எரியறது. அதான்...

— முகம் கழுவிகிட்டா கண் எரிச்சல் போயிடுமா?

— நிச்சயமா? ஒரு கைலே ஜில்லுனு தண்ணி எடுத்து, அதுக்குள்ளே கண்ணை வெச்சு நாலைஞ்சு தரம் சிமிட்டிப் பாருங்க... களைப்பு தன்னால ஓடிடும்...

— எனக்கு வேணாம்பா... களைப்பு ஓடுமோ நடக்குமோ. தூக்கம் போயிடும்...

சிரித்தபடி அன்று படுத்து விட்டாலும், இப்போதெல்லாம் அடிக்கடி உள்ளங்கையைக் குவித்துக் கொண்டு, குளிர்ந்த நீரில் எரியும் கண்களை ஆஸ்வாசப்படுத்த சத்யா தவறுவதில்லை தான்...

வெளியில் வந்தவன், ஏ.ஸியை நிறுத்திவிட்டு சப்தமில்லாமல் படிகளில் இறங்கிக் கீழே வந்தான்.

முன் அறையில் வழக்கம்போல எந்தச் சலனமும் இல்லாமல் ஜனனி படுத்திருக்க, ஒரு பக்கமாய் டேபிள் லைட் வெளிச்சத்தில் புத்தகம் ஒன்றைப்படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஸிஸ்டர் பாருக்குட்டி இவனைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

''எனக்குத் தூக்கம் வரலை. நா இங்க உட்கார்ந்திட்டு இருக்கேன். நீங்க போய் படுங்க ஸிஸ்டர்...''

முதன் முதலில் இப்படி நடுநிசியில் கீழே வந்து, 'நீங்க போங்க' என்று சத்யா கூறியபோது அதைத் தீவிரமாக பாருக்குட்டி மறுத்தாலும், அடிக்கடி அவன் வருவதையும் கூடிய மட்டும் மனைவியுடன் தனியே இருக்க விரும்புவதையும் சீக்கிரமே புரிந்து கொள்ள முடிய, வாய் திறக்காமல் அவன் சொல்லுக்கு அடிபணியவே செய்தாள்.

''அரை மணிலே வரட்டுமா ஸார்?''

''ம்?'' சத்யா மணிக்கட் டைப் பார்த்தான்.

இரண்டு பத்து.

'மூணு மணிக்கு வாங்க... அவசரம் ஒண்ணும் இல்லே...''



பாருக்குட்டி நகர்ந்ததும், ஜனனியின் அருகில் படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

முன் நெற்றியில் விழுந்த முடிக்கற்றையைப் பின்னுக்குத் தள்ளி, வாஞ்சையுடன் கன்னத்தைத் தடவிய போது, மொழு மொழுவென்று சதையுடன் இருந்த முகம் இன்று எத்தனை ஒட்டிப் போய் விட்டது என்கிற வருத்தம் எழுந்தது.

— மாம்பழம் வேணுமா சத்யா? நறுக்கி கொண்டு வரவா?

— நறுக்க வேணாம் கண்ணம்மா... நானே கடிச்சு சாப்பிட்டா தான் ருசி

— சரி, கையை விடுங்க. போய் எடுத்திட்டு வரேன்...

— எதுக்குக் கையை விடணும்?

— பின்னே, மாம்பழம் தானா நடந்து வருமா?

— நான் சாப்பிடப் போற மாம்பழம் வரும்... கிட்ட வாடாக் கண்ணு......

— ஹேய்... சத்யா... என்ன இது! வலிக்கறது... வர வர ஆனாலும் ரொம்பத்தான் செக்ஸ் பிக்கே கதைகளைப் படிச்சு கெட்டுப் போய்ட்டீங்க.

அவன் கழுத்தில் கைகளை மாலையாக்கி மார்பில் சாய்ந்து, கண்களில் காதல் தாண்டவமாட அன்று அவள் சிணுங்கியது, நினைவுக்கு வர, சத்யா மெள்ள குனிந்து, ஜனனியின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான்.

பின், மூடிய கண்களின் மேல்...

ஏதாவது அதிசயம் நிகழ்ந்து சடக்கென்று ஜனனி எழுந்து உட்கார்ந்து 'ஹேய் சத்யா' என்று எப்போதும் போல் அழைக்க மாட்டாளா என்று ஏங்கித் தவித்த மனசை சமாதானப்படுத்தத் தெரியாமல், அவள் கையைப் பற்றி நெஞ்சில் பதித்துக் கொண்டான்.

பிடித்திருந்த கையை மெதுவாக வருடியபோது, பாதியாக இளைத்துவிட்ட மணிக்கட்டும் குச்சியாகிவிட்ட விரல்களும் மனசின் பாரத்தை அதிகரித்தன.

ஒளி உமிழும் வண்ண விளக்குகளின் ஜொலிப்பால் முத்திரை காட்டி, காண்பவர் கண்களைக் கட்டிப் போட்ட விரல்களா இவை!

எப்படி இருந்த உடம்பு இது!

— யப்பா! என்ன உடம்புடிம்மா உனக்கு தள தளனு—

— கிரைத் தண்டாட்டம், வாழைத் தண்டாட்டம்... அதானே?

ஓ... போர்... புதுசா எதுவுமே தெரியாதா சத்யா?

— ம்ம்? தேய்ச்சு வெச்ச வெண்கலக் குத்து விளக்கு மாதிரி?

— ரொம்ப பழசு...

ஹவ் அபௌட், சிலை மாதிரி?

ஹய்யோ... தாத்தா காலத்துப் பாசு...

— சரி, எனக்கு வர்ணிக்கத் தெரியலை. ஐ கிவ் அப். ஆனா, வாஸ்தவமா சொல்றேன். என் கண்ணுக்கு நீ அழகான அம்மன் சிலை மாதிரிதான் தெரியறே... இந்த உடம்புல பக்கப் பதிய பட்டுப் புடவை கட்டி, கழுத்துல காசுமாலை போட்டு, பெரிசா குங்குமம் வெச்சு, மருதாணி இட்டு, தலைநிறையப்பூ வெச்சா... ஆஹா... சொல்றப்பவே போதை வருது... ஏனோ தெரியல, மேடைல இத்தனை கச்சிதமா அலங்காரம் பண்ணிக்கற நீ, மத்த நாளகள்ல ரொம்ப சிம்பிளாதான் இருக்கே இந்த செதுக்கின மூக்கு, உதடு, வழவழா கன்னம், நீளமான கழுத்து, அப்புறம்...



மஹா பிரேமையுடன் அவன் விவரித்துக் கொண்டே போக, ரொம்ப நேரத்துக்கு அவர்கள் அறையைச்சிரிப்பும், சிணுங்கலும் அன்றைக்கு வியாபித்தது நிஜம்.

இது நடந்த மறுநாள்தானே, அலுவலகத்துக்கு போன் செய்து ஜனனி அவனை மிரள வைத்ததும்?

—பிஸியா சத்யா?

—உனக்கு நான் எப்போதும் ஃப்ரீதான்...என்ன விஷயம்?

—உங்களுக்கு ஒரு ஸர்ப்ரைஸ் வெச்சிருக்கேன்...

—ஸர்ப்ரைஸா, என்னது...சொல்லிடும்மா அ...

—வீட்டுக்கு வாங்க தெரியும்...

—இப்பவா? மீட்டிங் இருக்கே கண்ணம்மா...

—போனாப் போறதுனு சொல்லிடட்டுமா?

—சொல்லடி தங்கம்...

—நான் ப்யூடி பார்லருக்குப் போயிட்டு வந்திருக்கேன் சத்யா...

—இதுல என்ன ஸர்ப்ரைஸ்? வழக்கமா புருவம் சீர் பண்ணிக்க போறதுதானே?

—இல்லே, இன்னிக்கு வேற—தலை முடியை வெட்டிட்டு வந்திருக்கேன்...

—என்னது?

—தோளோட வெட்டிக்கணும்னு ரொம்ப நாளா ஆசை சத்யா...

—......

—போன வாரம் ஹைத்திராபாத் போயிருந்தப்போ ஒரு ஸல்வார் கமிஸ் செட் வாங்கிட்டு வந்தேன். உங்களுக்கு ஸர்ப்ரைஸா இருக்கட்டும்னு காட்டலை. இப்ப அதைத் தான் உடுத்திட்டிருக்கேன். 'பாப்' தலையும் ஸ்லீவ் லெஸ் ஸல்வார் கமிஸூம் ரொம்ப மாடர்னா இருக்கு சத்யா...சுருக்க வந்து எப்படி இருக்கேன்னு சொல்லுங்க, ஓ கே.?

ரிஸீவரை வைத்தவனுக்கு உள்ளங்கையில் வியர்த்தது.

வெட்டி விடப் பட்ட தலை—

கையில்லாத ஸல்வார் கமிஸ்—

லிப்ஸ்டிக்—

பொட்டில்லாத நெற்றி—

வெறும் கை—

லட்சணமாய் உடுத்தி, அடக்கமாய் வளைய வரும் ஜனனியை வேறு விதமாகக் கற்பனை பண்ணுவது கூட சாத்திய மில்லாததாகத் தோன்ற சத்யா அவசரமாய் கவனத்தை வேறு வேலைக்குத் திருப்பினான்

வீட்டுக்குப் போக மனமில்லாமல் வேண்டுமென்றே வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்துவிட்டு ஒன்பதரை சுமாருக்கு அடக்க முடியாமல் ததும்பும்கோபத்துடன் வீட்டுக்குப் போனால்...

பக்கப்பதிய கலாக்ஷேத்திரா புடைவை, காசு மாலை, கை நிறைய வளை, மருதாணி. பெரிய பொட்டு, மை, தலை கொள்ளாமல் மல்லிகைப் பூ—என்று முதல் நாள் இவர் வர்ணித்த விதமாய் ஜனனி...

உதடு நிறைய குறும்புப் புன்னகையுடன் இவனுக்காக காத்துக் கொண்டு...

எத்தனை அருமையான நாள்கள் அவை!



அன்று ஜனனியின் அலங்காரம் உடம்பில் உண்டாக்கிய உஷ்ணத்தை மீண்டும் இன்று கற்பனை உற்பத்தி செய்ய, கண் ஓரங்களை சுட்டெரித்துக் கொண்டு நீர் வெளிப்பட்டது.

ஹ்ருதயத்தில் பரவிய வலியைத் தாளாதவனாக 'கண்ணம்மா...என் கண்ணம்மா' என்று அரற்றிய அவன் கையைக் கன்னத்தில் வைத்து அழுத்த...

அழுத்திய இடத்தில் நகம் குத்தியது.

கையை முன்னால் கொணர்ந்து பார்த்தால், விரல்களில் அசிங்கமாய் நீளமாய்...ஸிஸ்டர் கவனித்து வெட்டவில்லையா?

இத்தனை மாசங்களில் ஒருதரம்கூட இப்படி கவனக் குறைச்சலுடன் இருந்ததில்லையே!

—சத்யா, உங்க கையில நீங்க நகத்தை வெட்டணும்—

—போச்சுடா...எந்த நிமிஷத்துல என்ன பேசணும்ன்றது இல்லையா ஜனனி?

—இப்ப பாருங்க...நகமெல்லாம் ஒரே அழுக்கு... இருங்க, நெயில் க்ளிப்பர் எடுத்திட்டு வந்து வெட்டி விடறேன்...

—இப்ப?

—ம்...இப்ப...

—காலைல செய்யக்கூடாதா கண்ணம்மா? அதுக்குள்ள என்னை யார் பார்க்கப் போறாங்க?

—யாராவது பார்த்தாத்தான் சுத்தமா இருக்கணுமா? எனக்காக...உங்களுக்காக?

சத்யா சிரித்தான்.

—நிஜம்மா நீ ஒரு அலாதியான பிறவிதான் ஜனனி.

எழுந்து மாடிக்குச் சென்று நெயில் க்ளிப்பருடன் திரும்பி, கவனமாய் ஒவ்வொரு விரலாய் நகத்தை வெட்டி

விரல்களை ஜனனிக்கும் பிடித்த மாதிரி சீர் செய்த நாழ் கையில். இந்த சின்ன விஷயத்தைக் கண்காணிக்கத் தவறி விட்டோமே என்கிற குற்ற உணர்வில் மனசு குறுகுறுக்க, இன்னும் எதையெல்லாம் கவனிக்காமல் விட்டு விட் டோம் என்பதுபோல படுத்திருந்த மனைவியை அழுந்தப் பார்த்தான்.

ஜனனிக்கு எப்போதுமே சுத்தமாகப் பளிச்சென்று இருக்கத்தான் பிடிக்கும்.

அதன்படி தினமும் உடம்பு துடைத்து, பவுடர் போட்டு, உடை மாற்றி, தலை வாரி, பொட்டிட்டு...

ஊன்றிப் பார்த்தவன் கண்களில் நாலு மாசமாய் சீர் செய்யப்படாமல் புஸுபுஸுத்த புருவங்களும், மேல் உதட்டில் சன்னமாய்ப் படர்ந்திருந்த கருமையும் விழ, லேசாக அதிர்ந்தான்.

மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கொரு முறை அழகு நிலையத்துக்குச் சென்று முகத்திலுள்ள வேண்டாத முடிகளை அகற்றிக்கொள்வது ஜனனியின் பழக்கங்களில் ஒன்றாயிற்றே! இதை எப்படி மறந்து போனேன்?

விடிந்ததும் முதல் வேலையாய் டைரி, பேனாவை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பக்கத்தில், 'இனி மறக் காமல் செய்ய வேண்டியவை' என்ற தலைப்பில் வாரா வாரம் ஜனனியின் நகங்களை வெட்ட வேண்டும்; மாதத் துக்கு ஒருமுறை ப்யூடிஷன் ஒருவரை அழைத்து வந்து ஜனனியின் முகத்தைச் சீர் செய்யச் சொல்லவேண்டும்; என்று தனிப்பட்ட முறையில் ஜனனிக்குச்செய்யவேண்டிய காரியங்களை எழுதி வைத்துக் கொண்டவன், இன் னொரு பக்கத்தில் ஜனனி நடமாடிக் கொண்டிருந்த நாள்களில் வீட்டில் வழக்கமாகச் செய்து கொண்டிருந்த, 1. பூ வாங்கி வந்து வரவேற்பறையில் வைக்கவேண்டும். 2. வாரம் ஒருமுறை வெண்கலச் சிலைகளைத் தேய்த்து பாலீஷ் போட வேண்டும், போன்ற வேலைகளை

அம்மாவின் உதவியுடன் யோசித்து எழுதி வைத்துக்கொண்டு கட்டாயம் ஒன்றுவிடாமல் அத்தனையும் செய்து ஜனனிக்குப் பிடித்த விதத்தில் அவளையும், என்னையும், வீட்டையும் வைத்துக் கொள்வேன் என்று சங்கல்பம் செய்து கொண்டபோது, இது நாள் தோன்றாத நிம்மதி ரொம்ப லேசாக மனசுக்குள் எட்டிப் பார்க்கவே செய்தது.

# 13

ஏதையோ சொல்வதற்காக அம்மா தயங்குகிற மாதிரி பட, சத்யா நின்றான்.

''என்னம்மா?''

''ஒண்ணுமில்லே... சாயங்காலம் வீடு திரும்ப நாழியாகுமாப்பா?''

''சொல்ல முடியாது... ஆனாலும் ஆகலாம்... ஏம்மா''

''வந்து... நமச்சிவாயம் வந்திருந்தார்...''

''ம்''

''மாம்பலத்துல ஒரு நாடி ஜோஸ்யர் இருக்காராம் அகஸ்தியர் சுவடிகளைப் படிக்கிறாராம்... புள்ளி குத்தினாப்பல எதிர்காலத்தையும், பரிகாரங்களையும் சொல்லிடறாராம்... முடிஞ்சா நாம போயிட்டு வரலாமானு...''

''.........''

பிள்ளையின் தயக்கத்தைப் புரிந்து கொள்ள முடிய லக்ஷ்மி அவசரமாய்ப் பேசினார்.

''இது வரைக்கும் எத்தனையோ பார்த்தும், என்னென்னவோ செஞ்சும் ஒண்ணுத்துக்கும் பலன் இல்லை

நான். அதுக்காக கைய கட்டிகிட்டு பேசாம உட்கார முடியலையே சத்யா... நம்ப கண் முன்னால அந்தப் பொண்ணு இப்படி கிடக்கறப்போ சும்மா இருக்கமேனு நெஞ்சு சதா பதைக்குது... ஒரு கவளம் சோறு இறங்க மாட்டேங்குது... படுத்தா பத்து நிமிஷம் தூக்கம் வரமாட்டேங்குது... நீ படாத எதையும் நான் புதுசா சொல்லிடப் போறதில்லே... எப்படி இருந்தவ இன்னிக்கு எப்படி ஆயிட்டானு நினைக்கறப்போ...''

தொடர்ந்து பேச முடியாமல் லக்ஷ்மி வாயை மூடிக் கொண்டு சன்னமாய் விசும்ப, சத்யா உதட்டை இறுக்கி, நெஞ்சில் பந்தாகத் திரண்ட துக்கத்தை மிகுந்த ப்ரயத்தனத்துடன் அடக்கிக் கொண்டான்.

''ஆபீஸுக்குப் புறப்படற சமயத்துல கண் கலங்க வைக்கிறதா நினைக்காதே. சத்யா...வர வர என்னால தாள முடியலை... எதைத் தின்னா பித்தம் தெளியும்—ன்ற நிலைலே நான்... நான்...''

அழுகை இப்போது பெரிசாக, அதைச் சகியாத வருத்தத்துடன் அம்மாவை நெருங்கி, ''ஷ்... ஷ்என்னம்மா இது மனசை தளர விடாதீங்க... ப்ளீஸ்'' என்று தோளில் தட்டி தேற்றியவன், ''சாயங்காலம் என்னால வர முடியாதும்மா எடிடோரியல் மீட்டிங் இருக்கு. வண்டி அனுப்பறேன் நீங்க போயிட்டு வாங்க'' என்று கூறி விட்டு வெளியில வந்து காரில் அமர்ந்தான்

மெதுவாகக் கிளம்பி, மிக மிக நிதானமாக ஓட்டிக் கொண்டு அலுவலகத்தை நோக்கிச் செல்கையில், இந்த ஏழு மாசங்களில் அம்மாவும், வீடும், தானும் எத்தனை மாறிவிட்டோம் என்கிற விரக்தி கனமாய் நெஞ்சை அழுத்தியது.

சிரிப்பு. உரத்த பேச்சு என்கிற நாமதேயமே இல்லாத வீடு...

உயிர் இருந்தும், நடைப் பிணங்களாய் வளைய வருகிற மனிதர்கள்...



—ஒரு கவளம் சோறு இறங்க மாட்டேங்குது. படுத்தா பத்து நிமிஷம் தூக்கம் வர மாட்டேங்குது...

அம்மா சொன்ன மாதிரி இயற்கையாகச் செய்ய வேண்டிய எதிலும் கூட யதார்த்த இயல்போடு இருக்க முடியாத அவஸ்தை...

முள் மேல் உட்கார்ந்து விட்ட வேதனை...

நெஞ்சு உலர்ந்து, நாக்கும் உதடுகளும் ஒற... ஒற... என்று வரண்டு போன தவிப்பு...

ஸிக்னலில் வண்டியை நிறுத்தியவன் அது ஆரஞ்சிலிருந்து பச்சைக்கு மாறி நாலு நொடிகள் கடந்து, பின்னால் நின்ற வண்டிகள் அலறியதும் திடுக்கிட்டவனாய் கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

நிமிஷ நாழிகையில் கண்மூடிப் படுத்து விட்டவளைப் பழைய படி ஆக்க, அம்மா கூறியதைப் போல சதா 'எதைத் தின்னால் பித்தம் தெளியும்', என்கிற பரபரப்புத் தானே?

இந்தத் தவிப்பில் மேற்கொண்ட காரியங்கள் தான் எத்தனை, எத்தனை?

பம்பாய், டெல்லி என்று ஒரு இடம் பாக்கி இல்லாமல் தலை சிறந்த வைத்தியர்களை அழைத்துப் பரிசோதிக்கச் சொல்லியாகி விட்டது.

அத்தனை பேர்களும் உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கி 'ஸாரி... எங்களால திர்மானமா எதுவும் சொல்ல முடியலை' என்ற பிறகு வெளிநாட்டுக்குப் போய் பார்க்கலாமா டாக்டர்?'' என்றதற்கும் இதே தலை அசைப்பும் உதட்டுச் சுளிப்பும் தானே பதிலாகக் கிடைத்தன...

''லண்டன் அமெரிக்காவுக்கு அழைச்சுகிட்டு போகணும்னு நீங்க விரும்பினா, செய்யுங்க... ஆனா, நாங்க செய்யாத எதையும் அவங்க புதுசா செஞ்சிடப் போறதில்ல. உங்க மனைவி கோமால இருக்காங்க. இதுக்கு

இன்னி வரைக்கும் எந்த நாட்லேயும் வைத்தியம் கிடையாது. இன்ன காரணம்னு குறிப்பிட்டுச் சொல்ல முடியாம, திடும்னு நாளைக்கே அவங்க நினைவு திரும்பலாம்... இல்லே, இப்ப கிடக்கற மாதிரி இன்னும் பல மாசங்கள்— வருஷங்கள் கூட இருக்கலாம்... வீ ஆர் ரியலி ஸாரி மிஸ்டர் சத்யகுமார்...''

இத்தனைத் தீர்மானமாக வைத்தியர்கள் கூறின பிறகு படுத்த படுக்கையாய் கிடப்பவளைத் தூக்கிக் கொண்டு நாடுவிட்டு நாடு சென்று வீணாக லோல் படுவது அர்த்தம் இல்லாததாகத் தோன்ற அந்த எண்ணம் முலையில் முடக்கப்பட்டது.

ஆனால் 'நாளைக்கே ஜனனி கண் விழிக்கலாம்— எதுவும் நடக்கவும் சாத்தியம் உள்ளது' என்று நிபுணர்கள் வெளியிட்ட கருத்தில் ஏக நம்பிக்கை கொண்டு இன்னும் என்னென்னவோ விதங்களில் விடாப்பிடியாக முயன்றது, முயன்று கொண்டிருப்பது நிஜம்தான்...

''இந்த மாதிரி கோமால கிடக்கறவங்களுக்கு உள் மனசு விழிப்போட இருக்கும்னு சொல்வாங்க சத்யா, அதைத் தூண்டி விட்டா மெள்ள மெள்ள கான்ஷியஸ்னெஸ்ஸைக் கொண்டு வந்திடலாம். வொய் டோன்ட் யூ ட்ரை தட்? ஜனனிக்குப் பிடிச்சு சமாசாரங்களை அந்த அறைல வெச்சு, சூழ்நிலையை வித்தியாசமா மாத்தறதன் மூலம் இதைச் சாதிக்க முடியும்னா, நீ ஏன் செஞ்சு பார்க்கக் கூடாது?''

மனோதத்துவம் படித்த நண்பன் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு, இது மாதிரி எங்கேயோ நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதாரம் காட்டி நிரூபிக்க... கிட்டத்தட்ட ஒரு மாசம் பூராவும் வேறு நினைப்பின்றி அவன் அதை முயன்று பார்க்கத்தானே செய்தான்?

ஜனனிக்குப் பிடித்த சமாசாரங்கள் எவை? அவள் ரமிக்கும் சூழ்நிலை எது?



இரண்டு நாள்களுக்கு அலுவலகத்துக்குக் கூடப் போகாமல் மிகுந்த யோசனையுடன் பட்டியல் தயாரித்தான்.

நடராஜர் சிலை. கர்நாடக சங்கீதம். ஜாடிகளில் வண்ண வண்ண மலர்கள், அறைக்குள் நுழையும்போதே ஒருவித பவித்ரத்தை உண்டாக்கும் ஊதுபத்திப் புகை சலங்கை ஒலி, நடனப் பாடல்கள், நட்டுவாங்க, மிருதங்க ஓசைகள் ...

அலுவலகத்திலிருந்து திரும்பி, குளித்து உடை மாற்றிக் கொண்டு அவன் ஜனனியின் அறைக்குள் நுழைந்து விட்டால், அடுத்த மூன்று மணி நேரம் ஸிஸ்டருக்குக் கட்டாய ஓய்வு.

''ஜனனி நீ சைக்கலாஜிகலா அணுகி, ஆக்ரமிக்க முயற்சிக்கணும். ஸப் கான்ஷியஸ் மைண்டைத் தட்டி எழுப்பணும். உள்ளே விழிச்சிட்டு இருக்கிற உணர்வைத் தொட்டு, அசைச்சி, உலுக்கி, மெதுவா பிரக்ஞையை அணுகணும்...இதெல்லாம் சாத்தியமானு பிரமிக்கலாம்... இப்படி எல்லாம் கூடவா செய்யணும்னு நம்ப முடியாம தவிக்கலாம்...பரவாயில்லை. கீப் ட்ரையிங்...மேல் நாடுகள்ல கோமால விழுந்திட்டா காதல சதா அவங்க குழந்தையோட அழுகைக் குரலை ஒலிக்க வச்சு, அவங்களை மீட்டிருக்காங்க...மயக்கமடைஞ்ச பாலே நாட்டியக்காரிய இருபத்து நாலு மணி நேரமும் நாட்டிய பாடல்களை கேட்க வச்சு சரி பண்ணி இருக்காங்க...சய்ன்ஸ் கேன் டு வொண்டர்ஸ்...நம்பிக்கையோட செயல்படு சத்யா...''

நண்பன் ஊக்கம், தர நிச்சயம் ஜனனியை மீட்டு விடுவோம் என்கிற நம்பிக்கையுடன் அந்த முப்பது நாள்களும் எத்தனை பாடுபட்டான்?

அறைக்கதவைத் தாளிட்டுக்கொண்டு, தெரிந்த விதத்தில் மனைவியின் பாதங்களில் அல்தாவை பூசி, சலங்கைகளைக் கட்டி, பின்னணியில் நாட்டியக் கச்சேரியின் டேப்பை ஒலிக்கச் செய்து, ஸ்பாட் லைட் ஒன்றைப் பொருத்தி முகத்தில் அந்த ஒளிக் கற்றைகளைப் பாய்ச்சி.

கிட்ட அமர்ந்து காதுக்குள், உனக்குப்பிடிச்ச பாட்டை வெச்சிருக்கேன் ஜனனி...நாதனை அழைத்து வா சகியே... வர்ணம்...உன்னை முத முதல்ல பார்த்தப்போ நீ ஆடின வர்ணம்...ஞாபகம் இருக்கா? கட்டாயம் இருக்கும், உனக்கா மறக்கும்? 'இந்தப் பாட்டை எப்பக்கேட்டாலும் என்னை அறியாம கால் துடிக்கறது சத்யா, 'இருக்கற இடம். சூழ்நிலை மறந்து போய் எழுந்து அபிநயிக்கத் தோணுது'னு சொல்லுவியே, அந்த வர்ணம் ஜனனி... கேக்குது இல்லே? எழுந்திரும்மா...கண்ணைத் திற... மெதுவா காலை அசை...எழுந்து ஆடலாம்போலபரபரனு இருக்கா, கண்ணம்மா? கட்டாயம் இருக்கும்...உன்னைத் தெரியாதா...கமான் ஜனனி...கண்ணைத் திறம்மா...நான் பேசறதைப் புர்ஞ்சிக்கற அடையாளமா உடம்புல எங்கயாவது ஒரு சின்ன அசைவைக் காட்டேன்...ப்ளீஸ்...உன்னால் முடியும் ஜனனி, எனக்குத் தெரியும்...உனக்கு வைராக்கியம் அதிகம்...நினைச்சதை முடிக்கறவ நீ...இப்பவும் மயக்கத்துலேந்து மீளுவேன்னு நினைச்சிட்டா, கண்டிப்பா மீண்டும் வந்திடுவே...எனக்குத் தெரியும் பாட்டைக் கேளு கண்ணம்மா. கால் துருதுருனுதா? கை விரல் லேசா படபடக்குதா? மனசுக்குள்ள அதிர்வுகள் இருக்கா? இருக்கும் யூர் ஆர் கோயிங் டு டு இட்...கமான் ஜனனி... கண்ணைத் திற கண்ணம்மா...சலங்கை சப்தம் எனக்கு கேக்கற மாதிரி காலை அசை ஜனனி...கண்ணைத் திற ஜனனி...

வேறு நினைப்பு இன்றி, மாலை, இரவு நேரங்களில் மனைவியின் அருகில் அமர்ந்து, தொண்டை வரண்டு போக, நெஞ்சின் எதிர் பார்ப்புகள் துவண்டுபோக, விடாமல் ஒரு மாசம்போல் நம்பிக்கையுடன் முயன்றும்.

ம்ஹூம்...

ஒரே ஒரு தரம் மட்டும், எதேச்சையாய் திடுமென வீசிய காற்றில் அலைபாய்ந்த முடிக்கற்றை, சற்றும் எதிர் பாராத சலனத்தைத் தோற்றுவிக்க, ஜனனிதான் மிகமிக லேசாக தலையை அசைத்து விட்டாள் என்கிறசந்தோஷம்



உள்ளே பீறிட, கண்ணம்மா என்று வாய்விட்டு அரற்றி, அவளைத் தாவி அணைத்து, மெலிந்துபோன முகத்தில் முத்தங்களைப் பொழிந்து, கொஞ்சம் நிதானப்படுத்திக் கொண்டு அடுத்த அசைவுக்காகக் காத்திருந்தான்...

சீக்கிரமே மீண்டும் வீசிய காற்று, பழைய அசைவைக் கொடுத்து, அவனுள் துளிர்த்த நம்பிக்கையைச் சுட்டுப் பொசுக்கியது.

இப்படி எத்தனை நாள்கள்...

என்னென்ன முயற்சிகள்...

இத்தனையும் போதாது என்று அம்மாவின் ப்ரயத்தனங்கள் வேறு—

'திருப்பதிக்கு ஒரு நடை போயிட்டு வரணும் சத்யா... பெருமாளுக்கு அங்கப் பிரதட்சணம் பண்ணறேன்னு வேண்டிட்டு இருக்கேன்... ஜனனி நல்லபடியா எழுந்து நடமாடினா, மலைக்கு அவளோட ஏறி நடந்து வர்றதாவும் நேர்ந்துகிட்டிருக்கேன்...!

'ஐயர்கிட்ட ஜனனி ஜாதகத்தைக்காட்டினேன். நேரம் நல்லா இல்லே, சனிக்கிழமை தோறும் சனீஸ்வரனுக்கு அர்ச்சனை பண்ணுங்கனு சொன்னாரு...வர்ற சனிக் கிழமைலேந்து கபாலி கோவிலுக்குப் போயி அர்ச்சனை பண்ணி, எள்ளை மூட்டை கட்டி திரியாக்கி நல்லெண்ணெய் தீபம் போடணும்னு நினைச்சிட்டிருக்கேன்...''

''என்ன தெய்வ குத்தம்னு புரியலை...நல்லா இருந்த பொண்ணு இப்படி கண் விழிக்காம கிடக்கா—மாவிளக்கு போடறேன்னு குல தெய்வத்துக்கு வேண்டிகிட்டு மஞ்ச துணில முடிஞ்சு வெச்சிருக்கேன்...அந்த தெய்வம்தான் கண் திறக்கணும்...''

''மீனா அத்தை இன்னிக்கு வந்திருந்தாங்க சத்யா... உன் மாமியார் சுமங்கலியா போனவங்க...அவங்களை,

மனசார நினைச்சு ப்ரார்த்திச்சுகிட்டு ஒருவெள்ளிக்கிழமை அன்னிக்கு படையல் படைச்சு சுமங்கலிப் பொம்பளை ஒருத்திக்குப் புடைவை ரவிக்கை வெச்சு தாம்பூலம் கொடு... பெரியவங்க கோபம் இருந்தாலும் சமாதானம் ஆயிடும்'னு சொன்னாங்க...வர்ற வெள்ளிக்கிழமை நீ ஊர்லதானே இருப்பே அன்னிக்கே படைச்சிடட்டுமா?''

இவை தவிர மாங்காட்டு அம்மன் தரிசனம் தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு...

வடபழனி முருகனுக்கு குளிரக் குளிர பால்அபிஷேகம்

செவ்வாய் அன்று 'ஒரு போது' இருந்து வைத்தீஸ்வரனை வேண்டி விரதம்...

அன்றாடம் குளித்து வெறும் வயிற்றோடு சஷ்டி கவச, சகஸ்ரநாம பாராயணம்...

இன்னும்...

கடவுளே!

விஸ்ராந்தியாக உட்கார வேண்டிய வயசில் அம்மாவுக்குத்தான் எத்தனை சிரமம், வேதனை!

அலுவலகத்துள் திரும்பி போர்டிகோவில் வண்டியை நிறுத்தியவன், இறங்க மனமில்லாததுபோல இரண்டு நிமிஷம் அப்படியே உட்கார்ந்தான்.

பிறகு, கதவைத் திறந்து பவ்யமாய் எஜமானன் இறங்குவதற்காகக் காத்து நின்ற கூர்க்காவின் முகத்தில் விளக்கத்தெரியாத பரிதவிப்பு படருவதை உணரவு முடிய மெதுவாக இறங்கி உள்ளே போனான்.

கூர்கா மட்டும் இல்லை. கடந்த சில மாசங்களாக இவனை அறிந்த அனைவருமே ஒட்டு மொத்தமாகப் பின்னால் பரிதாபப்படுவதைப் புரிந்துகொள்ளவே முடிகிறது.



வேதனை, ஆயாசம், குழப்பம், விரக்தி இவைகளைத் தவிர வேறு சந்தோஷமான எந்த சமாசாரத்தையும் நிமிஷ காலத்துக்குக் கூட தராத நாலு மாசங்கள்...

கண்ணுக்கெட்டின வரையிலும் பசுமையே காண முடியாத பாலைவனமாய் வாழ்க்கையை மாற்றிய நாலு மாசங்கள்...

விடிவெள்ளிக்காக ஏங்கி, தவித்து, இருட்டில் தட்டுத் தடுமாறி விழுந்து எழுந்து, நடந்து, மீண்டும் விழுந்து...

கடவுளே...

அந்த ஏப்ரல் நாலாம் தேதி ஏன் வந்தது?

எதற்காக அந்தத் திரை அறுந்து விழுந்தது?

யாருக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்?

எதனால் இத்தனை கடுமையான தண்டனை?

மேலே சிந்தனை தொடருமுன் சத்யா போர்வையை உதறி விட்டு எழுந்து நின்றான்.

கசிய முற்பட்ட கண்ணீர், விழியோரங்களில் எரிச்சலை உண்டாக்கியது.

தொண்டையில் ஒரு இறுக்கம்...

மெதுவாக நடந்து குளியலறைக்குச் சென்று கண்களைக் குளிர்ந்த நீரால் கழுவிக் கொண்டான்.

—இப்ப, இந்த அர்த்த ராத்திரிலே பச்சைத் தண்ணியால எதுக்காக முகத்தைக் கழுவிக்கறே ஜனனி?

—ஒரு வாரமா தொடர்ந்து 'விடியோ'ல படம் பார்த்திட்டு, பன்னண்டு மணிக்குப் படுக்கறதுல கண் ரொம்ப எரியறது. அதான்...

— முகம் கழுவிகிட்டா கண் எரிச்சல் போயிடுமா?

— நிச்சயமா? ஒரு கைலே ஜில்லுனு தண்ணி எடுத்து, அதுக்குள்ளே கண்ணை வெச்சு நாலைஞ்சு தரம் சிமிட்டிப் பாருங்க... களைப்பு தன்னால ஓடிடும்...

— எனக்கு வேணாம்பா... களைப்பு ஓடுமோ நடக்குமோ. தூக்கம் போயிடும்...

சிரித்தபடி அன்று படுத்து விட்டாலும், இப்போதெல்லாம் அடிக்கடி உள்ளங்கையைக் குவித்துக் கொண்டு, குளிர்ந்த நீரில் எரியும் கண்களை ஆஸ்வாசப்படுத்த சத்யா தவறுவதில்லை தான்...

வெளியில் வந்தவன், ஏ.ஸியை நிறுத்திவிட்டு சப்தமில்லாமல் படிகளில் இறங்கிக் கீழே வந்தான்.

முன் அறையில் வழக்கம்போல எந்தச் சலனமும் இல்லாமல் ஜனனி படுத்திருக்க, ஒரு பக்கமாய் டேபிள் லைட் வெளிச்சத்தில் புத்தகம் ஒன்றைப்படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஸிஸ்டர் பாருக்குட்டி இவனைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

''எனக்குத் தூக்கம் வரலை. நா இங்க உட்கார்ந்திட்டு இருக்கேன். நீங்க போய் படுங்க ஸிஸ்டர்...''

முதன் முதலில் இப்படி நடுநிசியில் கீழே வந்து, 'நீங்க போங்க' என்று சத்யா கூறியபோது அதைத் தீவிரமாக பாருக்குட்டி மறுத்தாலும், அடிக்கடி அவன் வருவதையும் கூடிய மட்டும் மனைவியுடன் தனியே இருக்க விரும்புவதையும் சீக்கிரமே புரிந்து கொள்ள முடிய, வாய் திறக்காமல் அவன் சொல்லுக்கு அடிபணியவே செய்தாள்.

''அரை மணிலே வரட்டுமா ஸார்?''

''ம்?'' சத்யா மணிக்கட் டைப் பார்த்தான்.

இரண்டு பத்து.

'மூணு மணிக்கு வாங்க... அவசரம் ஒண்ணும் இல்லே...''



பாருக்குட்டி நகர்ந்ததும், ஜனனியின் அருகில் படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

முன் நெற்றியில் விழுந்த முடிக்கற்றையைப் பின்னுக்குத் தள்ளி, வாஞ்சையுடன் கன்னத்தைத் தடவிய போது, மொழு மொழுவென்று சதையுடன் இருந்த முகம் இன்று எத்தனை ஒட்டிப் போய் விட்டது என்கிற வருத்தம் எழுந்தது.

— மாம்பழம் வேணுமா சத்யா? நறுக்கி கொண்டு வரவா?

— நறுக்க வேணாம் கண்ணம்மா... நானே கடிச்சு சாப்பிட்டா தான் ருசி

— சரி, கையை விடுங்க. போய் எடுத்திட்டு வரேன்...

— எதுக்குக் கையை விடணும்?

— பின்னே, மாம்பழம் தானா நடந்து வருமா?

— நான் சாப்பிடப் போற மாம்பழம் வரும்... கிட்ட வாடாக் கண்ணு......

— ஹேய்... சத்யா... என்ன இது! வலிக்கறது... வர வர ஆனாலும் ரொம்பத்தான் செக்ஸ் புக்ஸ் கதைகளைப் படிச்சு கெட்டுப் போய்ட்டீங்க.

அவன் கழுத்தில் கைகளை மாலையாக்கி மார்பில் சாய்ந்து, கண்களில் காதல் தாண்டவமாட அன்று அவள் சிணுங்கியது, நினைவுக்கு வர, சத்யா மெள்ள குனிந்து, ஜனனியின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான்.

பின், மூடிய கண்களின் மேல்...

ஏதாவது அதிசயம் நிகழ்ந்து சடக்கென்று ஜனனி எழுந்து உட்கார்ந்து 'ஹேய் சத்யா' என்று எப்போதும் போல் அழைக்க மாட்டாளா என்று ஏங்கித் தவித்த மனசை சமாதானப்படுத்தத் தெரியாமல், அவன் கையைப் பற்றி நெஞ்சில் பதித்துக் கொண்டான்.

பிடித்திருந்த கையை மெதுவாக வருடியபோது, பாதியாக இளைத்துவிட்ட மணிக்கட்டும் குச்சியாகிவிட்ட விரல்களும் மனசில் பாரத்தை அதிகரித்தன.

ஒளி உமிழும் வண்ண விளக்குகளின் ஜொலிப்பால் முத்திரை காட்டி, காண்பவர் கண்களைக் கட்டிப் போட்ட விரல்களா இவை!

எப்படி இருந்த உடம்பு இது!

— யப்பா! என்ன உடம்புடிம்மா உனக்கு தள தளனு—

— கிரைத் தண்டாட்டம், வாழைத் தண்டாட்டம்... அதானே?

ஓ... போர்... புதுசா எதுவுமே தெரியாதா சத்யா?

— ம்ம்? தேய்ச்சு வெச்ச வெண்கலக் குத்து விளக்கு மாதிரி?

— ரொம்ப பழசு...

ஹவ் அபௌட். சிலை மாதிரி?

ஹய்யோ... தாத்தா காலத்துப் பாசு...

— சரி, எனக்கு வர்ணிக்கத் தெரியலை. ஐ கிவ் அப். ஆனா, வாஸ்தவமா சொல்றேன். என் கண்ணுக்கு நீ அழகான அம்மன் சிலை மாதிரிதான் தெரியறே... இந்த உடம்புல பக்கப் பதிய பட்டுப் புடவை கட்டி, கழுத்துல காசு மாலை போட்டு, பெரிசா குங்குமம் வெச்சு, மருதாணி இட்டு, தலைநிறைய்ப்பூ வெச்சா... ஆஹா... சொல்றப்பவே போதை வருது... ஏனோ தெரியல, மேடைல இத்தனை கச்சிதமா அலங்காரம் பண்ணிக்கற நீ, மத்த நாளகள்ல ரொம்ப சிம்பிளாதான் இருக்கே இந்த செதுக்கின மூக்கு, உதடு, வழவழா கன்னம், நீளமான கழுத்து, அப்புறம்...



மஹா பிரேமையுடன் அவன் விவரித்துக் கொண்டே போக, ரொம்ப நேரத்துக்கு அவர்கள் அறையைச்சிரிப்பும், சிணுங்கலும் அன்றைக்கு வியாபித்தது நிஜம்.

இது நடந்த மறுநாள்தானே, அலுவலகத்துக்கு போன் செய்து ஜனனி அவனை மிரள வைத்ததும்?

—பிஸியா சத்யா?

—உனக்கு நான் எப்போதும் ஃப்ரீதான்...என்ன விஷயம்?

—உங்களுக்கு ஒரு ஸர்ப்ரைஸ் வெச்சிருக்கேன்...

—ஸர்ப்ரைஸா, என்னது...சொல்லிடும்மா அ...

—வீட்டுக்கு வாங்க தெரியும்...

—இப்பவா? மீட்டிங் இருக்கே கண்ணம்மா...

—போனாப் போறதுனு சொல்லிடட்டுமா?

—சொல்லடி தங்கம்...

—நான் ப்யூடி பார்லருக்குப் போயிட்டு வந்திருக்கேன் சத்யா...

—இதுல என்ன ஸர்ப்ரைஸ்? வழக்கமா புருவம் சீர் பண்ணிக்க போறதுதானே?

—இல்லே, இன்னிக்கு வேற—தலை முடியை வெட்டிட்டு வந்திருக்கேன்...

—என்னது?

—தோளோட வெட்டிக்கணும்னு ரொம்ப நாளா ஆசை சத்யா...

—......

—போன வாரம் ஹைத்திராபாத் போயிருந்தப்போ ஒரு ஸல்வார் கமிஸ் செட் வாங்கிட்டு வந்தேன். உங்களுக்கு ஸர்ப்ரைஸா இருக்கட்டும்னு காட்டலை. இப்ப அதைத் தான் உடுத்திட்டிருக்கேன். 'பாப்' தலையும் ஸ்லீவ் லெஸ் ஸல்வார் கமிஸூம் ரொம்ப மாடர்னா இருக்கு சத்யா...சுருக்க வந்து எப்படி இருக்கேன்னு சொல்லுங்க, ஓ கே.?

ரிஸீவரை வைத்தவனுக்கு உள்ளங்கையில் வியர்த்தது.

வெட்டி விடப் பட்ட தலை—

கையில்லாத ஸல்வார் கமிஸ்—

லிப்ஸ்டிக்—

பொட்டில்லாத நெற்றி—

வெறும் கை—

லட்சணமாய் உடுத்தி, அடக்கமாய் வளைய வரும் ஜனனியை வேறு விதமாகக் கற்பனை பண்ணுவது கூட சாத்திய மில்லாததாகத் தோன்ற சத்யா அவசரமாய் கவனத்தை வேறு வேலைக்குத் திருப்பினான்

வீட்டுக்குப் போக மனமில்லாமல் வேண்டுமென்றே வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்துவிட்டு ஒன்பதரை சுமாருக்கு அடக்க முடியாமல் ததும்பும்கோபத்துடன் வீட்டுக்குப் போனால்...

பக்கப்பதிய கலாக்ஷேத்திரா புடைவை, காசு மாலை, கை நிறைய வளை, மருதாணி, பெரிய பொட்டு, மை, தலை கொள்ளாமல் மல்லிகைப் பூ—என்று முதல் நாள் இவர் வர்ணித்த விதமாய் ஜனனி...

உதடு நிறைய குறும்புப் புன்னகையுடன் இவனுக்காக காத்துக் கொண்டு...

எத்தனை அருமையான நாள்கள் அவை!



அன்று ஜனனியின் அலங்காரம் உடம்பில் உண்டாக்கிய உஷ்ணத்தை மீண்டும் இன்று கற்பனை உற்பத்தி செய்ய, கண் ஓரங்களை சுட்டெரித்துக் கொண்டு நீர் வெளிப்பட்டது.

ஹ்ருதயத்தில் பரவிய வலியைத் தாளாதவனாக 'கண்ணம்மா...என் கண்ணம்மா' என்று அரற்றிய அவன் கையைக் கன்னத்தில் வைத்து அழுத்த...

அழுத்திய இடத்தில் நகம் குத்தியது.

கையை முன்னால் கொணர்ந்து பார்த்தால், விரல்களில் அசிங்கமாய் நீளமாய்...ஸிஸ்டர் கவனித்து வெட்டவில்லையா?

இத்தனை மாசங்களில் ஒருதரம்கூட இப்படி கவனக் குறைச்சலுடன் இருந்ததில்லையே!

—சத்யா, உங்க கையில நீங்க நகத்தை வெட்டணும்—

—போச்சுடா...எந்த நிமிஷத்துல என்ன பேசணும்ன்றது இல்லையா ஜனனி?

—இப்ப பாருங்க...நகமெல்லாம் ஒரே அழுக்கு... இருங்க, நெயில் க்ளிப்பர் எடுத்திட்டு வந்து வெட்டி விடறேன்...

—இப்ப?

—ம்...இப்ப...

—காலைல செய்யக்கூடாதா கண்ணம்மா? அதுக்குள்ள என்னை யார் பார்க்கப் போறாங்க?

—யாராவது பார்த்தாத்தான் சுத்தமா இருக்கணுமா? எனக்காக...உங்களுக்காக?

சத்யா சிரித்தான்.

—நிஜம்மா நீ ஒரு அலாதியான பிறவிதான் ஜனனி.

எழுந்து மாடிக்குச் சென்று நெயில் க்ளிப்பருடன் திரும்பி, கவனமாய் ஒவ்வொரு விரலாய் நகத்தை வெட்டி

விரல்களை ஜனனிக்கும் பிடித்த மாதிரி சீர் செய்த நாழி கையில். இந்த சின்ன விஷயத்தைக் கண்காணிக்கத் தவறி விட்டோமே என்கிற குற்ற உணர்வில் மனசு குறுகுறுக்க, இன்னும் எதையெல்லாம் கவனிக்காமல் விட்டு விட்டோம் என்பதுபோல படுத்திருந்த மனைவியை அழுந்தப் பார்த்தான்.

ஜனனிக்கு எப்போதுமே சுத்தமாகப் பளிச்சென்று இருக்கத்தான் பிடிக்கும்.

அதன்படி தினமும் உடம்பு துடைத்து, பவுடர் போட்டு, உடை மாற்றி, தலை வாரி, பொட்டிட்டு...

ஊன்றிப் பார்த்தவன் கண்களில் நாலு மாசமாய் சீர் செய்யப்படாமல் புஸுபுஸுத்த புருவங்களும், மேல் உதட்டில் சன்னமாய்ப் படர்ந்திருந்த கருமையும் விழ, லேசாக அதிர்ந்தான்.

மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கொரு முறை அழகு நிலையத்துக்குச் சென்று முகத்திலுள்ள வேண்டாத முடிகளை அகற்றிக்கொள்வது ஜனனியின் பழக்கங்களில் ஒன்றாயிற்றே! இதை எப்படி மறந்து போனேன்?

விடிந்ததும் முதல் வேலையாய் டைரி, பேனாவை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பக்கத்தில், 'இனி மறக்காமல் செய்ய வேண்டியவை' என்ற தலைப்பில் வாரா வாரம் ஜனனியின் நகங்களை வெட்ட வேண்டும்; மாதத்துக்கு ஒருமுறை ப்யூடிஷன் ஒருவரை அழைத்து வந்து ஜனனியின் முகத்தைச் சீர் செய்யச் சொல்லவேண்டும்; என்று தனிப்பட்ட முறையில் ஜனனிக்குச்செய்யவேண்டிய காரியங்களை எழுதி வைத்துக் கொண்டவன், இன்னொரு பக்கத்தில் ஜனனி நடமாடிக் கொண்டிருந்த நாள்களில் வீட்டில் வழக்கமாகச் செய்து கொண்டிருந்த,
1. பூ வாங்கி வந்து வரவேற்பறையில் வைக்கவேண்டும்.
2. வாரம் ஒருமுறை வெண்கலச் சிலைகளைத் தேய்த்து பாலீஷ் போட வேண்டும். போன்ற வேலைகளை



—எடிட்டர் எந்த விஷயத்துலேயும் முன்னே மாதிரி இப்ப இல்லே, கவனிச்சியா?

—ஏன் கவனிக்காம! முன்னே அவர் வரார்னா தெருக்கோடிலே வண்டி உறுமல் கேக்கும்...அத்தனை வேகம். இப்ப? முன் போல அத்தனை சுறுசுறுப்பு, துடிப்பு சிரிப்பு-னு எதுதான் அவர் கிட்ட இருக்கு; ரொம்ப பாவம்பா...

சில நாள்களுக்கு முன் ப்ரஸ்ஸில் நுழைந்தவன் எதேச்சையாய் இரண்டு தொழிலாளிகள் பேசுவதைக் கேட்கமுடிய, சந்தடி செய்யாமல் திரும்பி வந்து விட்டான்.

நிஜம்தானே!

அவர்கள் கூறியது அத்தனையும் வாஸ்தவமான பேச்சுதானே.

நீளமான பெருமூச்சுடன் அறைக்குள் நுழைந்தவன், நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

எதுவுமே பிடிக்காமல், மனசு மரத்துப்போயிருப்பதை உணர முடிந்தது.

விரலைக்கூட தூக்கப் பிடிக்காத மந்தத்தனம்...

தன் மேலேயே உண்டான எரிச்சலுடன் கண்களைத் திறந்தபோது, சிவா எதிரில் நின்றிருந்தான்.

"குட்மார்னிங் ஸார். உடம்பு சரியில்லையா, களைச்சு போயிருக்கீங்களே..."

"ஒண்ணுமில்லே. உட்காருங்க..."

உட்கார்ந்தவன், பாக்கெட்டிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து நீட்டினான்,

"என்ன சிவா?"

''எனக்குத் தெரிஞ்சவங்க மூகாம்பிகை கோவிலுக்குப் போயிட்டு வந்தாங்க... பிரசாதம்... அம்மாவுக்கு நல்ல விதமா ஆனதும் தம்பதி சமேதரா ஒரு தரம் போயிட்டு வாங்க ஸார்...ப்ளீஸ்...எனக்காக...''

கையை நீட்டி குங்குமப் பிரசாதப் பொட்டலத்தை வாங்கியவனுக்குள், இன்னும் எத்தனை நாள்களுக்கு இப்படி இருட்டில் தடுமாறிக் கொண்டு, எல்லாருடைய பச்சாதபங்களையும் கையேந்தி வாங்கிக் கொள்ளப் போகிறோம்—என்கிற ஆயாசக் கேள்வி எழ.

ஆளை அமுக்குகிற சலிப்பும், விரக்தியும், கோபமும் ஒட்டு மொத்தமாகச் சடசடவென்று பொங்கி வெடித்துச் சிதறியது.

# 14

இருட்டி விட்டது.

எழுந்து விளக்கைப் போடவேண்டும்என்கிறபிரக்ஞை கூட இல்லாத மாதிரி சத்யா உட்கார்ந்திருந்தான்.

ஹ்ருதயத்தில் திம்மென்று ஒருகனம்.

சிந்திக்கும் திறனை மறந்துவிட்ட மாதிரி ஸ்தம்பித்துப் போன மூளை...

விவரிக்கத் தெரியாத கசப்பு, ஆயாசம், எரிச்சல்...

எதிரில் யார் வந்து நின்றாலும் அழுந்தப் பிடித்து கன்னத்தில் அறையத் தூண்டும் ஆத்திரம்...

ஒரு வித கையாலாகத்தனம்...

எங்கள் வாழ்க்கை மட்டும் ஏன் இப்படி மூளியாகிப் போனது...யாருக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்? ஏன் நாங்கள் மட்டும் பலி ஆடாக வேண்டும்? வொய் அஸ்?' என்று கண்டோர், காணாதோரை உலுக்கி உரக்கக் கத்த வேண்டும் போன்ற படபடப்பு...



இத்தனையும் போதாது என்று சதா நெஞ்சை ஆக்ரமிக்கும் சிறு மூஞ்சித்தனம்...

இப்படி நாளுக்கு நாள் குணம் கெட்டுச் சீரழிவதைக் கெஞ்சித்தும் நிறுத்த முடியாத நிலையைத் தெளிவாக நினைத்துப் பார்க்க முடிய, கண்களைக் கீறிக் கொண்டு எழுந்த கண்ணீரை அடக்க, சத்யா முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டான்.

வாய்விட்டு அழுதுவிட்டால் தேவலை போல இருந்தது.

மனித சஞ்சாரம் அற்ற அத்வான காட்டுக்கு ஓடிப் போய் யார் கண்ணிலும் படாமல், எந்தக் கடமையையும் எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் ஒளிந்து கொள்ள வேண்டும் போலகூட இருந்தது.

குட்டக்குட்ட குனிந்து விட்டோம், இனியும் குனிந்தால் தரையோடு தரையாகப் படுத்துவிட வேண்டியது தான்; அப்புறம் சத்தியமாய் மீண்டும் மனுஷனாக எழுந்து நடமாடுவது சாத்தியமில்லாத சமாசாரம்என்றே தோன்றியது,

உதட்டை இறுகி, ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயன்றவன், ஒரு நிமிஷம்தான் வெகுவாகச் சுயபச்சாதாபத்துக்கு ஆளாகிவிட்டோமோ, அதுதான் இந்த பரிதவிப்பா—என்று நினைத்துப் பார்த்தான்.

சுய பச்சாதாபமா?

இதுவா?

இல்லை. நிச்சயமாய் இல்லை.

ஒன்றுமே இல்லாததைக் கற்பனையில் மட்டும் வளர்த்து, அதையே ஒரு போர்வையாகப் போர்த்தி, குளிர் காய்வதுதான் தன்னிரக்கம்—

என் நிலை அப்படி இல்லை.

இது வாஸ்தவத்திலேயே தாளமாட்டாத அவஸ்தை வேதனை...

அமோகமாக—சிரிப்பும், சந்தோஷமும், நிம்மதியும், நிதானமுமாக—இருந்த வாழ்க்கை. தடக்கென்று தலை குப்புற கவிழ்ந்து இன்று வெறும் பூஜ்ஜமாகிவிட்டது நிஜம் தானே?

இருந்தும் இதனால் இடிந்து போகக் கூடாது—வொய்மீ' என்று கேட்காமல், 'வொய் நாட் மீ' என்று தனக்குத் தானே தேற்றிக்கொள்ளும் விவேகத்துடன், பழைய நிலையை அடையச் செய்ய வேண்டிய அத்தனை முயற்சிகளையும் பொறுமையுடன் செய்து பார்த்து, ஒன்றுக்கும் பலன் இல்லாமல் ஆன பிறகு கடுமையான இருட்டில் முட்டிக் கொண்டும் மோதிக் கொண்டும் தத்தளிப்பதனால் எழுந்த வேதனை இது என்பது தானே உண்மை?

கொஞ்சம் நிதானப்படுத்திக் கொண்டு சிந்திக்கையில் கடந்த ஒரு வாரமாகத்தான் இந்தப் பரிதவிப்பு அதிகம் என்பதைச் சத்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

சென்னைக்கு மாற்றலாகி வந்துவிட்ட பால்யநண்பன் சங்கரைச் சென்ற வாரம் சந்தித்தபோது எதிர்பாராத விதமாய் அவன் தம்பி ஈஸ்வரைப் பற்றின விவரத்தை அறிந்து கொள்ள முடிய, அதிர்ந்துதான் போனான்.

ஈஸ்வர் மஹா கெட்டிக்காரன். மஹா துருதுருப்பு புத்தி சமர்த்து.

படிப்பில் முதல், விளையாட்டில் முதல்...

இந்த விவரங்கள் தெரிந்திருந்த காரணத்தால் வரவேற்பறை அலமாரியில் முழு நீளத்துக்கு உட்கார்ந்திருந்த கோப்பைகளைப் பார்த்து, ஈஸ்வர் வாங்கினவை



தானே? என்று இவன் சாதாரணமாய்க் கேட்க, சங்கருக்குக் கண் கலங்கிப் போனது.

''அத்தனையும் அந்தப் பாழாய்ப்போன நீச்சல் போட்டியில் வாங்கினதான்'' என்றவன் குரல் செம்மிப் போக, சத்யா லேசாக விழித்தான்.

அந்த 'விழிப்பு' இவன் தெரியாத்தனத்தை, உணர்ந்த சங்கர் கேட்டான்! ''உனக்குத் தெரியாதா?''

''ம்ஹூம்...என்ன விஷயம்பா?''

''டைவ் பண்றப்போ இசகுபிசகா அடிபட்டு...''

''அடிபட்டு?''

''கோமாவுலே இருக்கானே. சத்யா—''

''குட்லார்ட்! இது எப்போ நடந்தது?''

''போன வருஷம், முதல்ல ஹாஸ்பிடல்ல சில மாசங்களுக்கு வெச்சு வைத்தியம் பண்ணிப் பார்த்தப்புறம் வீட்டுக்குக் கூட்டி வந்தேன். ஒண்டி ஆளா என்னால சமாளிக்க முடியல...நார்த்ல இருந்தாதான் கஷ்டம் ஊரோட வந்திட்டா ஆள்பலம் இருக்கும்னு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வந்திட்டேன். பெரியவங்க யாருமே இல்லாத நிலைல என்னைவிட்டா இவனுக்கு யாரு?''

''இ...இப்போ எப்படி இருக்கான்?''

''பாக்கிறியா?''

வேண்டாம் என்று மறுக்க விரும்பினவன், நினைத்தைக் கூற இயலாமல் நண்பன் பின்னோடு போனால்...

ஐயோ கடவுளே...

என்ன பயங்கரம்!

ஈஸ்வரா, இதுவா?

ஆறடி உயரமும், பம்மென்று விரிந்த புஜங்களுமாய் சில வருஷங்களுக்கு முன் அவன் பார்த்துப் பழகியிருந்த ஈஸ்வர் எங்கே?

குறுகி ஒடுங்கி, சுருங்கி, எட்டு வயசுப் பையனின் வளர்த்தியுடன்...

மேற்கொண்டு ஒரு கணம்கூட அங்கு நிற்க முடியாமல் ஓட்டமாய் திரும்பி கூடத்துக்கு வந்தவன், ஜனனிக்கு நேர்ந்துவிட்ட அவலத்தை நண்பனிடம் எடுத்துச்சொல்லத் தெரியாமல் வார்த்தைகள் எங்கெங்கோ ஒளிந்து கொண்டு விட. விடைபெற்று வீட்டுக்கு வந்த நிமிஷத்திலிருந்துதான் இந்த அவஸ்தை தாளமாட்டாமல் அதிகரித்து விட்டது.

ஒரு வருஷத்துக்குள் இப்படி ஒரு மாற்றமா?

சின்னாபின்னமாக்க அற்புதமான இளைஞனை, காலம் எடுத்துக்கொண்டது சரியாக ஒரு வருஷம் தானா?

அப்படியானால்...

என் ஜனனிக்கும் இந்த மாதிரி ஒரு பயங்கரம்தான் காத்திருக்கிறதா?

விபத்து நடந்து இப்போது எத்தனை மாசங்கள் ஆகின்றன?

ஏப்ரல்...மே...டிசம்பர் இந்த நாலாம் தேதி வந்தா எட்டு மாசங்கள்...

முன்பிருந்த தளதளப்பும். அழகும் குறைந்து கொண்டே வருகிறதே...

இன்னும் போகப்போக ஈஸ்வர் போல ஜனனியும் சுருங்கி. வற்றி ஒடுங்கி சிறுத்து, குன்றிப் போய் விடுவாளோ!

எலும்பு மட்டும் துருத்திக் கொண்டு பார்க்க விகாரமாகி விடுவாளோ?

தெய்வமே...



என்னால் தாங்க முடியவில்லையே!

மனசு தூளாக நொறுங்கிப் போகிறதே...

ஜனனி...என் ஜனனிம்மா...

தலைமுடி ஒரு நாள் வாரப்படாமல் பறந்தால் உனக்குப் பிடிக்காதே.

தோல் துளி வரண்டு போனால் முகம் சுளிப்பாயே...

நான் என்ன செய்து இந்த பயங்கர மாற்றங்களைத் தடுக்கப் போகிறேன்...

எப்படி?

என் ஜனனிக்குப் பிடிக்காத மாற்றங்கள் நிகழப் போவதை அமுக்கி நிறுத்த யாராவது ஒரு வழி சொல்லுங்களேன்...

அன்றும், அதற்கு அப்புறம் வந்த நாள்களிலும் ஜனனியை விட்டு இந்தண்டை அந்தண்டை நகராது பரிதவிப்புடன் யோசித்தபோது குழப்பம் அதிகமானதே ஒழிய, வழி ஏதும் தென்படவில்லைதான்.

இது போதாதென்று, கிட்ட உட்கார்ந்து மனைவியை ஊன்றிப் பார்க்கையில், தலைமுடி கொட்டி முன் நெற்றியில் வழுக்கை விழுந்துவிட்டதும், பல் எடுப்பாக லேசாக தெரிவதும் தெளிவாகப் புரிய இயற்கை ஜனனிக்கு மாபெரும் தீங்கு செய்வதில் தானும் உடந்தையாக நிற்கும் குறுகுறுப்பும் சேர்ந்து கொண்டது.

என்ன செய்யப் போகிறேன்?

எப்படி இந்தச் சீரழிப்பைத் தடுத்து நிறுத்தப் போகிறேன்?

பிராண்டல் அதிகமாக, சத்யா எழுந்து நின்றான்.

விளக்கை ஏற்றினான்.

சரீரென்று பரவிய வெளிச்சம் கண்களைக் கூச வைக்க மீண்டும் மேஜைமேல் உட்கார்ந்தான்.

கண்களை மூடி சில நொடிகளுக்கு அப்படியே அமர்ந்து தன்னை நிதானப்படுத்திக் கொண்ட பின், புத்தியை வேறு திசையில் திருப்ப, மேலாக இருந்த ஃபைல் ஒன்றை எடுத்துப் பிரித்தான்.

நிருபர் சம்பந்தம் இன்றையமுன்னணி நடிகைகளிடம் குறிப்பிட்ட ஒரு சில கேள்விகளைக் கேட்டு விதவிதமான பதில்களை வாங்கியுள்ள பேட்டிக் கட்டுரை—

''உங்களுக்குப் பிடித்த நடிகை?''

''நடிகையர் திலகம் சாவித்திரிதான்...''

சாவித்திரி—

கண்ணும் உதடும் பளபளக்க தன் நடிப்பாலும், அழகாலும் ஆயிரக்கணக்கான ரசிகர்களைக் கட்டிப் போட்ட சாவித்திரி...

திடுமென சத்யாவுக்கு சுமார் இரண்டு வருஷங் களுக்கு முன்னால் இதே சம்பந்தம், கோமாவில் படுத்து விட்ட நடிகையர் திலகத்தைப் பார்த்து விட்டு வந்து 'மித்ரா'வுக்காக ஒரு கட்டுரை எழுதியதும், அதைப் படித்துவிட்டு ஜனனியும் தானும் பேசிய பேச்சுகளும் நெஞ்சுக்குள் தலை நீட்டின.

—சாவித்திரி கட்டுரை படிச்சியா ஜனனி?

—ம்.

—என்ன, சுவாரஸ்யமில்லாம 'ம்' வருது?

—ரொம்ப வருத்தமா இருக்கு சத்யா...சாவித்திரி யோட நிலைமையை அப்பவும், இப்பவும் நினைச்சுப் பார்க்கறப்போ, தொண்டை அடைச்சுப் போயிடுது...



—முன்பின் தெரியாத நமக்கே இப்படி இருக்கே... அவங்களோட நெருங்கிப் பழகினவங்களுக்கு எப்படி இருக்கும்?

—கஷ்டம்... ரொம்ப கஷ்டம்...

அடுத்து வந்த நிமிஷங்களை மௌனமாய் கழித்தவன் மீண்டும் பேசியபோது குரல் கிசுகிசுப்பாய் இருந்தது.

யோசிச்சுப் பார்த்தா, இப்படி பிரக்ஞை இல்லாம 'வெஜிடபிளா' கிடக்கிறது, ரொம்ப கொடுமையான சமாசாரமா தோணுது சத்யா... நினைச்சு நினைச்சு மனசு பொங்கித்தான் போகுது... 'ஏன் இந்த அநியாயம்' உடம்பு உதறிப் போடுது...

சத்யா, அவள் துக்கம் புரிந்த தினுசில் கையைப்பற்றி லேசாக அழுத்தினான்.

—நிஜமா சொல்றேன் சத்யா—இப்படி 'கோமா'ல் கிடந்து தானும் கஷ்டப்பட்டு பிறரையும் துன்பத்துக்கு உள்ளாக்கிகிட்டு அறுபது வயசு வரை வாழறதை விட, கை, கால், புத்தி ஒழுங்கா இருக்கறப்பவே நாப்பது வயசு லேயே டக்குனு போயிடக்கூட நான் ரெடி...

உணர்ச்சி வயப்பட்டு விட்டவளின் உதடுகள் துடிக்க, ''ஹேய்... கண்ணம்மா... ஈஸி...ஈஸி'' என்ற சத்யா, ''நம்ம கையிலே தீர்வு இல்லாத ஒரு விஷயத்துக்காக எதுக்காக இப்படி அவஸ்தைப்படணும்?'' என்றும் சன்ன குரலில் தேற்ற—

ஜனனி அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''கையிலே தீர்வு ஏன் இல்லே சத்யா? வாட் அபௌட் மெர்ஸி கில்லிங்?''

அன்று நிதானமாக, ஆனால் மிக மிக தீர்மானமாக அவள் பேசியது சட்டென்று இப்போதும் காதில் தெளிவாக ஒலிக்க,

சத்யா பதறிக் கொண்டு நிமிர்ந்தான்

மெர்ஸி கில்லிங்...

கருணைக் கொலை...

நாளுக்கு நாள் ஜனனி அணு அணுவாக தேய்வதைத் தடுத்து நிறுத்த அவள் விரும்பிய வழியைத் தவிர வேறு விடிவே இல்லையா?

இத்தனை நாள்களாக அடைத்து வைத்திருந்து கண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு கிளம்ப, சத்யா மெதுவாக விசும்பி அழ முற்பட்டான்.

## 15

சத்யா புரண்டு படுத்தான்.

ஆபீஸுக்குக் கூட போகாமல் மதியத்திலிருந்து படுத்துக் கிடப்பது ஒருவித எரிச்சல் கலந்த அலுப்பை உண்டாக்கியது.

தூக்கம் வராமல், எதையும் தெளிவாக சிந்திக்க முடியாமல், அக்கடா என்று படுத்துக் கிடக்கவும் இயலாமல்... என்ன அவஸ்தை இது!

எரிச்சல் அடங்காமல் முகவாயைத் தடவியபோது உள்ளங்கையில் இரண்டு நாள் சொற சொறக்க.

எழுந்து பாத்ரூமுக்குள் சென்று விளக்கைப் போட்டான்.

கண்ணாடி முகத்தை அலங்கோலமாய்ப் பிரதிபலித்தது.

கலைந்த முடி; டொக்கு விழுந்த கன்னங்கள்; கண்ணைச் சுற்றி வட்டம் போட்ட கருவளையம்; தாடி...

மை காட்!

மூன்று மாசம் ஜுரத்தில் பட்டினி கிடந்தவன் மாதிரி. சட்...



கண்ணாடியை நெருங்கி முகத்தை உற்றுப் பார்க்கையில், இந்த மாதிரி பரதேசிக் கோலத்தோடு இருப்பது ஜனனிக்குச் சுத்தமாக பிடிக்காத சமாசாரம் என்கிற நினைப்பு எழுந்து நெஞ்சை வலிக்கச் செய்ய, அவசரமாய் ஷேவிங் க்ரீமை எடுத்துத் தடவிக் கொண்டான்.

கன்னத்தை உப்ப வைத்து, ரேஸரை இழுத்து கச்சிதமாய் ஷேவிங்கை முடித்து எங்காவது முடிவிட்டுப் போய் விட்டதா என்று மீண்டும் கண்ணாடிக்கருகில் குனிந்து ஆராய்ந்தவன், திருப்தியுடன் முகத்தை கழுவித் தலையை வாரிக் கொண்டான்.

ஆஃப்டர் ஷேவ் லோஷனை கன்னங்களிலும் தாடையிலும் தடவி அது மிக சன்னமாக எழுப்பி மனத்தையும், குளிர்ச்சியையும் அனுபவித்தவாறே மறுபடியும் தன்பிம்பத்தைப் பார்த்துக் கொண்டான்.

...பரவாயில்லை.

இப்போது அந்த ஜுரக்களை இல்லை.

ஜனனிக்குப் பிடித்த தினுசில் முகம் சுத்தமாய், ஆண்மைத் தனத்துடன்தான் இருக்கிறது...

—சத்யா... பாத்ரூம்ல ஒரு 'ஓல்ட் ஸ்பைஸ்' பௌடர் இருக்கே யாருது?''

—என் பாத்ரூம்ல வேற யார்து இருக்கும், கண்ணம்மா?

—உங்களுதா ஏன் வச்சிருக்கிங்க?

—ம் நல்லா குழைச்சி தடவிகிட்டா, தலைமுடி கருகருனு வளருமாம்...

—விளையாடாதீங்க சத்யா...

—பின்னே என்ன கண்ணம்மா? பௌடர் ஏன் வச்சிருப்பாங்க? எண்ணெய்வழியாம முகத்துக்குத் தடவத்தான்...

—ச்சி—

—எதுக்குடா இப்ப இந்த ச்சி

—முகத்துக்குப் பௌடர் பூசிக்கறதுக்குத்தான்? வேணாம்...ப்ளீஸ்... என்னை வழிஞ்சாப் பரவாயில்லை, இனிமே பௌடர் போடறது மட்டும் வேணாம்...

—இது என்னடா புதுச்சட்டம்!

—என்னமோ தெரியலே, ஆம்பிளைங்க முகத்துக்கு பௌடர் போடறதும், ஏகத்துக்கு செண்ட் பூசிக்கிறதும் எனக்குப் பிடிக்கறதேயில்லே... ஆஃப்டர் ஷேவ் லோஷன் தடவிக்கிங்க... போதும்... ப்ளீஸ் சத்யா...

அது அசட்டுத்தனமான வாதமாகவே தோன்றினாலும், திருமணமான மறுநாளில் துவங்கி இன்று வரை உடம்புக்கு பௌடர் போட்டுக்கொள்வதோடு சரி...முகத்தருகில் துளி கொண்டு போவதில்லை—

இது மாதிரியான நகங்களை ஒட்ட வெட்டுவதும், 'ஜில்பா க்ராப்' வளர்க்காமல் இருப்பதும், கலர் கலராய் ஜிலுஜிலுவென்று உடை அணிவதைத் தவிப்பதும் கூட ஜனனிக்குப் பிடித்தமான ஆம்பிளைத் தனங்களில் சில...

சரியோ, தவறோ, தனக்கென்று ஒரு ரசனையை வளர்த்துக் கொண்டு அதை ஓரளவுக்குப் பிடிவாதமாக ஜனனி செயல்படுத்திய நாள்களும் பிடித்ததோ பிடிக்கவில்லையோ...அவருக்குத் தன் செய்கை கொடுக்கக்கூடிய சந்தோஷம் ஒன்றுக்காகவே மட்டும் பல சமயம் கருத்தை மாற்றி விட்டுக் கொடுத்ததும் ஞாபகத்துக்கு வந்து உதடுகளில் ஒரு முறுவலை ஜனிக்கச் செய்ய, அது தந்த சுகத்தில் இருந்தவனுக்குள் திடுமென ஒரு கேள்வி எழுந்தது.

ஜனனிக்குப் பிடித்தமானவை அத்தனையும்செய்வதில் ராஜா என்று மார் தட்டிக் கொள்ளும் என் செய்கையில் எத்தனை சதவிகிதம் சத்தியம்?



—நிஜமா சொல்றேன் சத்யா (—) இப்படி கோமால கிடந்து தானும் கஷ்டப்பட்டு, பிறரையும் துன்பத்துக்கு உள்ளாக்கிட்டு அறுபது வயசுவரை வாழறதைவிட கை, கால், புத்தி ஒழுங்கா இருக்கறப்பவே நாற்பது வயசிலேயே டக்குனு போயிடக்கூட நான் ரெடி...

அத்தனை தீர்மானமாகப் பேசியவளின் எண்ணத்தை நிறைவேற்றுவது பற்றி நினைக்கக்கூட அஞ்சுபவன், தினமும் அவள் அருகில் அமர்ந்து கையைப்பற்றி உருகி, 'ஐ லவ் யூ ஜனனி' என்று கூறுவதில் அர்த்தம் என்ன?

சில நிமிஷங்களுக்குமுன் தோன்றிய நிம்மதி கலைந்து போக, சத்யா கோபத்துடன் வெளியில் வந்து பால்கனியில் நின்றான்.

என்னென்னவோ நினைவுகள் மனசை வலிக்க வலிக்க பிராண்டின.

ஒருபக்கமாய் யாரோ நின்று 'ஹேய்...வேஷதாரி' என்று கேலியாய் சிரிக்கும் உணர்வு...

வேஷதாரியா?

நானா?

இது தவறு என்று வாஸ்தவமாக நம்புவதைச் செய்ய மறுப்பது எப்படி வேஷம் போடுவதாகும்?

சரி—இப்படி தீவிரமாக நினைப்பவன் ஜனனியின் என்று ஆசைகள். விருப்பு வெறுப்புகள்தாம் என்னுடையவையும் மூச்சுக்கு முந்நூறு தரம் புலம்புவது மட்டும் எதற்காகவாம்?

தலை சுற்றுகிற மாதிரி தோன்ற சத்யா கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கொண்டான்.

எது சரி, எது தவறு?

எது நிஜம். எது பொய்?

நான் வேஷதாரியா, இல்லையா?

ஜனனியின் விருப்பத்தை நிறைவேற்ற ஆத்மார்த்தமாக விரும்புகிறேனோ, இல்லையா?

ரொம்ப குழப்பமாக இருந்தது.

மூடிக்கொண்ட இமைகளுள் நீர் கொதித்தது.

பால்கனி கதவை யாரோ திறக்கும் ஓசையில் திரும்பினான்.

முத்து.

''நாழியாச்சாம்—அம்மா சாப்பிட வறீங்களானு கேட்கச் சொன்னாங்க சார்...''

''எனக்குப் பசிக்கலை...''

''கொஞ்சமா...ஏதாவது...''.

''வேணாம்னு சொல்றது காதுல விழலை?''

குரல் எடுத்து சத்யா கத்த முத்து திரும்ப நடந்தான்.

ஐந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும்.

மீண்டும் கதவு திறக்கும் சப்தம்.

''இன்னொருதரம் வந்து நீ தொண தொணத்தா...''

முடிக்காமல் நிறுத்தினான்.

எதிரில் அம்மா.

கையில் தம்ளர்

கிட்டத்தில் வந்தவர் அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.

''உடம்பு சரியில்லையா சத்யா? ஒழுங்கா சாப்பிடறதே இல்லே—ஏம்பா?''



''......''

''ஒரு வாரமாகவே எப்படியோ இருக்கியே, என்ன விஷயம் சத்யா?''

''......''

லக்ஷ்மி குரலை இன்னும் தழைத்துக் கொண்டார்.

''வந்து...டாக்டர் ஏதாவது சொன்னாராப்பா?''

''ஜனனி உடம்பைப் பத்தி...ஏதாவது...?''

அழுகையை அடக்க அவர் ப்ரயத்தனிக்க, எதற்கும் பதில் பேசாமல் சத்யா மௌனம் சாதித்தாள்.

சத்தத்துடன் விமானம் ஒன்று தாழ்வாகப் பறந்து போனது.

லக்ஷ்மி அவன் கையைப் பற்றினார்.

''சொல்லுப்பா...மனசுல எதை வெச்சுகிட்டு இப்படி மருகறே?''

வீண்டு எதையும் பேசமுடியாத அவஸ்தையில் சத்யா இப்போது வெடித்தான்.

''என்ன...என்ன...என்ன...ஏம்மா இப்படி கேள்வி மேல கேள்வி கேட்டு ஆளைக் கொல்றீங்க? நிம்மதி இழந்து தவிச்சிட்டிருக்கிறவனைப் போக வரப் போட்டு சித்ரவதை பண்ணறதுல உங்களுக்கெல்லாம் என்ன சந்தோஷம்? தனியா விட்டுட்டுப் போக மாட்டீங்களா... தயவு பண்ணி?''

இத்தனை வருஷங்களில் இப்படியொரு கத்தலை மகனிடமிருந்து கேட்டறியாத லக்ஷ்மி ஒரு நிமிஷம் பிரமித்து நின்றார் அப்புறம், தம்ளரை முக்காலி மேல் வைத்துவிட்டு, 'பால் மட்டுமாவது குடிச்சிட்டுப் படுத்துக்கோ சத்யா...வெறும் வயத்துல இருந்தா வேதனை அதிகமாகும்பா' என்று சொன்னவர், உன்—நிலையை—

நான்—புரிந்து கொள்கிறேன்...என்கிறபார்வை ஒன்றைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசாமல் வெளியில் போனார்.

அம்மா கண்களிலிருந்து மறையும்வரை அப்படியே நின்றவன் சட்டென்று கால்கள் தோய்ந்து போக நாற்காலியில் உட்கார்ந்தான்.

நான்தானா?

இப்படி அம்மா மனசு நோக வார்த்தைகளை வாரி இறைத்தது நான்தானா?

என்னாயிற்று எனக்கு?

முகத்தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டபோது கையாலாகாத தனத்துடன் அழுகைதான் கிளம்பியது.

—படத்துல க்ளைமாக்ஸ் ஸீன் பிரமாதம் இல்லே கண்ணம்மா?

—நல்லா இருந்தது...ஆனா, அந்த ஹீரோ துசுக்குனு பொம்பளை மாதிரி அழறதுதான் எனக்குப் பிடிக்கலை சத்யா...

—ஏன், ஆம்பிள்ளைங்கன்னா உணர்ச்சிவசப்படக் கூடாதா?

—அது என்னமோ தெரிலை...எந்த இக்கட்டுலேயும் கண்ணுல ஜலம் தளும்பாதவனாதான் ஆம்பிளை இருக்கணும்னு நான் ஆசைப்படறேன். லெட் விமன் பி த வீகர் செக்ஸ்.

—இது ஆனாலும், அசாத்திய அடாவடி ஆசை ராஜாத்தி...இனிமே என்பாடுதான் திண்டாட்டம்! ஜலதோஷம் பிடிச்சு கண்ணுல ஜலம் வந்தாக்கூட உன் படிக்கு நான் அவுட்...இல்லே?

சிணுங்கி, சிரித்து அவன் மார்பில் அவள் சாய்ந்து...

—என் ஆம்பிளை அழக்கூடாது சத்யா.

உதட்டை அழுத்தி, எச்சிலை விழுங்கி, துளிர்த்து எழுந்த கண்ணீரை சத்யா அடக்கினான்.



அம்மா வைத்துவிட்டுச் சென்றிருந்த பாலைக்குடித்து தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டான்.

சின்ன விஷயத்திலும் கூட ஜனனிக்குப் பிடித்தமான முறையில் நடக்க மனசு ஆசைப்படுவதைப் புரிந்து கொள்ள முடிய, நிதானத்துடன் யோசிக்க முற்பட்டான்.

என்றைக்கோ, எப்பவோ, எந்தச் சந்தர்ப்பங்களிலோ ஜனனி அழுத்தம் திருத்தமாகப் பேசிய கருத்துகள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு பெட்டியிலிருந்து எட்டிப் பார்த்தன.

—ஆயுசு பர்யந்தம் கிழிச்சுப் போட்ட நாரா கிடந்து தானும் கஷ்டப்பட்டு சுந்தர்லாலையும் அந்த நாய் சிரமப்படுத்தறதைதான் நீங்க விரும்பறீங்களா?

—கண்டிப்பா சரியாகாதுனு வைத்தியர் சொன்னப்புறம் சிந்திச்சு, நடைமுறைக்கு—நிம்மதிக்கு ஏத்த காரியத்தைச் செய்யறதுதானே புத்திசாலித்தனம்.

—மனப்பூர்வமாதான் சொல்றேன். வேதனை தவிர இனி வேறு எதுவுமே இல்லேனு தீர்மானமாயிட்டா அந்த ஜீவன் வாழறதுல என்ன அர்த்தம்?

—என்னைப் பொறுத்தவரை உண்மையான அன்பு வச்சிருக்கறவங்களோட அவஸ்தையைத் தாங்காம உண்டாக்கப்பட்டதுதான் மெர்ஸி கில்லிங்.

—நிஜமா சொல்றேன். பப்பிள் பாய் (Bubble Boy) மாதிரி எனக்கு ஒரு குழந்தை பிறந்தான்னா, உலகமே ஒண்ணா நின்னு எதிர்த்தாலும், அவன் இந்த மாதிரி ஐம்பது வருஷம் வாழறதைவிட இரண்டு நாள் சந்தோஷமா சுதந்திரமா வாழ்ந்துட்டுச் சாகட்டும்'னு சொல்வேன்.

ஜனனி...ஜனனிம்மா...என் கண்ணம்மா, உன் கஷ்டம் தீர நீ என்னதான் சொல்கிறாய்?

—மெர்ஸி கில்லிங் தவிர வேற வழியே இல்லே சத்யா...

நிஜமாகவா?

சத்தியமாய் வேறு பாதையே இல்லையா?

அப்படியென்றால்-என் ஜனனி விரும்பிய இதை நிறைவேற்றுவது என் கடமை அல்லவா?

ஜனனிக்காக...

என் உடல், உள்ளத்தோடு கலந்து ஒன்றாக வாழ்ந்தவளுக்காக...

அவளுடைய இன்றைய சீரழிவைத் தடுக்க இயலவில்லை என்பதோடு, அவள் இந்தக் கருணைக் கொலையை ஆத்மார்த்தமாக வரவேற்று ஆமோதித்தாள் என்பதற்காக...

ஆல்ரைட்...

ஐ வில் டு இட்...

கண்ணம்மா உனக்காக நான் இதைச் செய்வேன்...

உனக்காக...

சத்தியமாய் உனக்காக... உன் ஆத்மாவின் திருப்திக்காக...

# 16

எப்போது?

எப்படி?

குத்திட்ட விழிகளால் காலெண்டரை வெறித்தபடி யோசித்தவன், மேஜை மேல் இருந்த பேனாவை எடுத்து ஒரு வெள்ளைத் தாளை உருவி, எப்போது? என்றும்,



அதன் கீழே எப்படி என்றும், எழுதி கேள்விக் குறிகளைப் போட்டான்.

தொடர்ந்து எதுவும் எழுதத் தெரியாமல் போக பேனாவை வைத்துவிட்டு விரல்களைச் சொடுக்கிக் கொண்டான்.

எப்போது?

டைரியை எடுத்து மெதுவாகப் புரட்டினான்.

இன்று என்னதேதி?

ஜனவரி பதினெட்டு...

ஹவ் அபௌட் பிப்ரவரி பதினெட்டு?

சரியாக ஒரு மாசம் கழித்தா?

அன்றைக்கு என்ன கிழமை?

சனிக்கிழமை...

ஜனனிக்குப் புதுசாக எந்தக் காரியத்தையும் சனிக்கிழமை செய்வது பிடிக்காதே!

—என்னமோ தெரியலை...சனிக்கிழமை-னாலே எனக்குப் பிடிக்கறதேயில்லே சத்யா...

—பாவம்...அது உன்னை என்னம்மா பண்ணித்து?

—ம்? எங்கப்பா ஒரு சனிக்கிழமைல இறந்து போனதால இருக்கலாம்...அப்புறம்...எங்கம்மா ஒரு சனிக்கிழமைல கீழ விழுந்து காலை உடைச்சிகிட்டதால இருக்கலாம்...ஏங்க சிரிக்கறீங்க?

...எப்பவும் ப்ராக்டிலா இருக்கறவ திடும்னு இப்படி குழந்தைத்தனமா பேசினா?

—குழந்தைத்தனமோ... அசட்டுத்தனமோ... எனக்கு இந்த சனிக்கிழமையைக் கண்டா வெறுப்பா இருக்கே. நான் என்ன பண்ண சத்யா?

வேண்டாம்...நிச்சயம் சனிக்கிழமை வேண்டாம்.

அப்புறம்

பதினேழாம் தேதி...வெள்ளிக்கிழமை?

யோசித்த வரைக்கும் அதைஉதறிவிட ஒருகாரணமும் அகப்படாமல்போக, சத்யா எப்போது?என்ற கேள்விக்கு எதிரில் பிப்ரவரி பதினேழு என்று எழுதினான்.

எழுதி முடித்து நிமிர்கையில், உள்ளங்கை கசகசத்திருப்பதையும், பேனாவைப் பிடித்திருந்த விரல்கள் நடுங்குவதையும் புரிந்து கொள்ள முடிய திடுமென ஹிருதயத் துடிப்பு அதிகமானது.

ஸோ?

என் ஜனனியைத் தீர்த்துக் கட்ட நாள் குறித்துவிட்டேனா!

நீ இந்த உலகத்தில் வாழ்ந்தது போதும் என்பதைத் தீர்மானித்து, இன்று ரத்தமும் சதையுமாக மூச்சு இழைஒட படுத்திருப்பவளைப் பிடி சாம்பலாக்க முகூர்த்தம் குறித்து விட்டேனா?

தொண்டை இறுகி, கண்களில் நீர் திரள ஆரம்பிக்க, சத்யா உதடுகளை அழுந்தக் கடித்துத் தன்னை உலுக்கிக் கொண்டான்.

நோ...

இந்த ரீதியில் எண்ணுவது கூடாது...

என் ஜனனியைத் தீர்த்துக் கட்டவோ, பிடி சாம்பலாக்கவோ முனைந்துவிட்டேன் என்று நினைப்பது நிச்சயம் தவறுதான்.

இது நானாகத் தேர்ந்தெடுத்த வழி இல்லை...

நானாக விரும்பி ஏற்ற முடிவு இல்லை...



மனசாட்சிக்கு விரோதமான இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தது என் ஜனனிக்காக

அவள் மனதார விரும்பியதைச் செய்வதுதான் என் கடமை என்று சத்தியமாய் நம்புவதற்காக...

ஐ லவ் ஜனனி...

அவளை உயிராக நேசிக்கிறேன்.

அந்தக் காதலுக்கு நான் அளிக்கும் மரியாதை !இந்தச் செய்கை...

அதனால் வீணாகத் தவறான கோணத்தில் சிந்தனை செய்து என்னை நானே குழப்பிக்கொள்வது மடத்தனம்.

உடம்பு தெப்பலாக வியர்த்துவிட அவசரத்துடன் சத்யா எழுந்து பால்கனிக்குச் சென்றான்.

எங்கோ ஒரு சுவர்கோழி வாய் ஓயாமல் கத்திக் கொண்டிருந்தது.

காற்றில் லேசாக ஜாதிப்பூக்களின் மணம்...

தலைமுடியைக் கோதி, முகவாயை நீவி விட்டுக் கொண்ட போது, ஆளை அமுக்கும் அசதி அவனுக்குள் மெதுவாகப் படர்ந்தது.

இந்த மாதிரி குழம்புவதும், தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்வதும் அசாத்திய எரிச்சலைத் தந்தது.

அடுத்து வரும் 'ஒருமாசமும் கண்டிப்பாய் இப்படிப்பட்ட அவஸ்தையோட கழியப் போகிறது என்பதை ஊகிக்க முடிய, மனசு உதறி உதறிப் போட்டது.

ஒரு மாசம்...

நீண்ட முப்பது நாட்கள்...

பொழுது விடிந்து பொழுது போனால் இந்த எண்ணங்களோடு போராடிப் போராடி, ஓய்ந்து நலிந்து...

வேறு எதைப் பற்றியும் சிந்திக்க இயலாது பாராங்கல்லாய், எந்நேரமும் மூச்சு முட்ட ஆளை அழுத்த...

வேண்டாமே...

இந்த அவஸ்தை வேண்டாமே...

ஏற்கனவே மனசுக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்யப் போகும் குற்ற உணர்வினால், தூங்க முடியவில்லை, சாப்பிட முடியவில்லை, எதிரில் ஒருவரை உட்கார்த்தி வைத்து ஒரு வார்த்தை பேச முடியவில்லை...

இந்தத் துன்பம் வேறா!

எதற்காக ஒரு மாசம் தள்ளிப்போட வேண்டும்?

ஜனனிக்காக, அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, அது ஒன்றே குறி—பாக்கி எதுவும் முக்கியமில்லை என்று வைராக்கியம் பூண்டு, முடிவு எடுத்தாகி விட்டது. அப்புறம் பத்து நாளாய் இருந்தால் என்ன ஒரு மாசமாய் இருந்தால்தான் என்ன?

உள்ளே வந்து மேஜை முன் அமர்ந்து, டைரியை மீண்டும் புரட்டினான்.

ஜனவரி முப்பது?

சரியாகப் பன்னிரண்டு நாள்கள்...

பன்னிரண்டே பன் ரெண்டு நாள்கள்...

பேனாவை எடுத்து முன்பு எழுதி இருந்த தேதியை அடித்துவிட்டு, பக்கத்தில் ஜனவரி முப்...

முழுவதையும் எழுத முடியாமல் விரல்கள் செயலிழந்து போக பேனா நழுவியது.



இத்தனை நேரமாய் அடக்கி வைத்திருந்த கண்ணீர் குபுகுபுத்துக் கொண்டு கிளம்ப மேஜைமேல் கவிழ்ந்தபடி சப்தமில்லாமல் அழுதான்.

இத்தனை சீக்கிரமாய் ஜனனியை அனுப்பத் துடிக்கிறோமே—இது நியாயமான காரியமா என்கிற கேள்வி பூதாகாரமாய் நெஞ்சை அடைத்துக்கொள்ள உள்ளுக்குள் ஓராயிரம் வண்டுகள் ஒரே சமயத்தில் குடைகிற மாதிரி அசாத்திய வலி...

ஜனனியிடம் எனக்குக் காதல் இல்லையா?

பொறுமை குறைந்து விட்டதா?

பட்டது போதும் என்கிற சலிப்பு அதிகமாகிப் போனதா?

அதுதான் ஜனனிக்குப் பிடித்ததைச் செய்கிறேன் என்கிற போர்வையைப் போர்த்திக் கொண்டு அந்த நொண்டிச் சாக்கைக் கேடயமாக முன் நிறுத்தி இப்படியொரு அமானுஷ்ய செய்கையைச் செய்யத் துணிந்து விட்டேனா?

குற்ற உணர்வு நமநமவென்று மனசு, ஹ்ருதயம் பூராவும் பரவ, சத்யா பரிதவித்தான்.

என்ன செய்வேன் என்று வாய்விட்டு அரற்றியவன், உள்ளங்கையால் நெற்றியில் ஓங்கி அறைந்து கொண்டான்.

நோ...நோ...

என்னால் செய்ய முடியாது...

ஜனனியின் விருப்பம் இதுதான் என்றாலும் என்னால் கண்டிப்பாய் இயலாது

ஐ கான்ட் கோ த்ரூ திஸ்...

ஜனனி இப்படியே கிடக்கட்டும், பரவாயில்லை... ஆயுசு பரியந்தம் தான் அவளைக் கண்ணுக்குள் வைத்து கவனித்துக் கொள்வேன்

கருணைக் கொலை வேண்டாம்...

இது பற்றின சிந்தனையே வேண்டாம்...

—குட் ஈவ்னிங் கண்ணம்மா ...

—ம்

—என்னடா...உனக்காக அடிச்சுக்கோ, பிடிச்சுக் கோனு சுருக்கா வந்திருக்கேன்...மூத்தா கித்தா கிடை யாதா?

மனசு சரியா இல்லே சத்யா...

—போச்சுடா...என்னாச்சு?

—மாணிக்கத்தை உங்களுக்குத் தெரியுமில்லே?

—எந்த மாணிக்கம்?

—போன வருஷம் வரைக்கும் எனக்கு மிருதங்கம் வாசிச்சிட்டு இருந்தானே!

—ஓ! அவனா! யெஸ், ஐ ரிமெம்பர், சுட்டியான பையன் திடும்னு உடம்பு சரியில்லாம போயிட்டது இல்லே?

—ம்...பராலிஸிஸ்... நல்லா இருந்தவனுக்கு ஒரு நாள் தூங்கி எழுந்தும் ஒரு பக்கம் பூராவும் வாதம்...

—ஆனா அது தற்காலிமானது...போகப் போகச் சரியாயிடும்னு சொன்னாங்களே ஜனனி...

—இன்னிக்கு கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழிச்சு அவனைப் பார்த்தேன் வலது கையைத் தவிர ஓரளவுக்கு பாக்கி எல்லாம் சரியாயிருக்கு...இதுக்குமேல எதிர்பார்க் கறது கூடாதுனு டாக்டர் சொல்லிட்டாராம் பிரமாதமா மிருதங்கம் வாசிச்ச கை இனிமே முடங்கியே கிடக்கப் போறதுனு நினைச்சா கஷ்டமா இருக்கு சத்யா...

—கஷ்டம்தான்...ஆனாலும் படுக்கையோட படுக் கையா கிடக்காம இந்த அளவுக்கு எழுந்து நடமாடறதை நினைச்சு சந்தோஷப்படாம...என்ன கண்ணம்மா இது!



—முடியலையே சத்யா...இருந்தா முழுசா இருக்க ணும் இல்லேன்னா போயிடறது கூட தேவலைதான். ஜனனத்தோட பிறக்கறது வேற ஆனா பூரணமா இருந்து பழகிட்டு இப்படி சட்டுனு முடக்கப்படறது கொடுமை...எனக்கு இப்படி...நிலைமை வந்தா...அதை என்னாலத் தாங்கிக்கவே முடியாது.

அன்று சின்னக் குழந்தையின் தவிப்புடன் பேசிய வளை இழுத்து அணைத்து சமாதானப் படுத்தியதை இப்போது நினைத்துப் பார்த்தவனுக்குச் சில மாசங்கள் முன்பு ஒரு வைத்திய புத்தகத்தில் படித்தது ஞாபகத்துக்கு வர தூக்கி வாரிப்போட நிமிர்ந்தான்.

'கோமாவில் படுத்துவிட்டவர்களில் பலர் காலப் போக்கில் இன்ன காரணம் என்று புள்ளி குத்த முடியா மல் ப்ரக்ஞை பெற்று விடுவது உண்மைதான் என்றாலும் இவர்களில் எத்தனை பேர்கள் தங்கள் பழைய நிலையை முழுமையாக அடைவார்கள் என்பது விவாதத்துக்குரிய விஷயம். மூளைக்கு ரத்தம் தடைபட்டுப் போவதில் கால் கை விளங்காமல் போவதோ, பார்க்கும்—பேசும்—கேட் கும் சக்தி பாதிக்கப்படுவதோ, அல்லது சிந்திக்கும்திறமை குறைவதோ எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளில் சில...''

சத்யா எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

அப்படியென்றால்?

தப்பித் தவறி ஜனனிக்கு நினைவு திரும்பிவிட்டாலும் அவள் முழுமையாக ஓடி, ஆடி, பாடி பழையபடி இருப் பது நிச்சயமில்லை என்பதை நான் எப்படி மறந்து போனேன்?

—இருந்தா முழுசா இருக்கணும் இல்லேன்னா போயி டறது கூட தேவலைதான்.

கடவுளே...

வேறு வழியே இல்லையா?

ஜனனி ஆணித்தரமாக நம்பியதை நிறைவேற்ற எனக்கு தைரியத்தைக் கொடேன்...

திரும்பத் திரும்ப குற்ற உணர்வில் உழலாமல் தெளிவாக இருக்க பலம் தாயேன்...

தலையைக் கைகளில் தாங்கிப் பிடித்துப் பல்லைக் கடித்து தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயற்சித்தவன், இரண்டு நிமிஷங்களில் கொஞ்சம் நிதானமடைந்தான்.

இனிமேல் என்ன ஆனாலும் எடுத்த முடிவிலிருந்து நழுவுவது கூடாது...

ஐம் கோயிங் டு இட்...

என் ஜனனிக்காக...ஐவில் டு இட்...

மனசில் ஒருவித உறுதி ஏற உட்கார, பேனாவை எடுத்து ஜனவரி முப்பது என்கிற வரியை எழுதி அழுத்தமாக அடியில் கோடிட்டான்.

ஒன்றைத் தீர்மானித்தாகி விட்டது—

அடுத்தது—

எப்படி?

ஸிஸ்டர் இல்லாத சமயமாய்ப் பார்த்து கழுத்தை நெறித்து விடலாமா?

தலைகாணியை முகத்தில் வைத்து அழுத்திவிடலாமா?

ஜனனி இப்போது ரொம்ப பலஹீனமாய் இருக்கிறாள். எதிர்ப்பு சக்தி எதுவும் இல்லாமல் சுலபமாய் இரண்டு, மூன்று நிமிஷங்களில் காரியத்தை முடித்து...

மேற்கொண்டு சிந்திக்க விடாமல் கற்பனை புகுந்து கொள்ள, ஜனனி படுத்திருக்க—அவளை முகத்தில் தலைகாணியை வைத்து அழுத்த—மூச்சுத் திணற...



ஓ...நோ...

இது என்ன பயங்கரம்?

உள்ளுணர்வு என்ற ஒன்று இருந்து அது விழித்துக் கொண்டிருந்தால் என் ஜனனி மரணாவஸ்தையை உணர்ந்துவிடலாம் அல்லவா?

வேண்டாம்...

இந்த வழி வேண்டாம்.

பத்து ஸி. ஸி காற்றை ரத்த நாளத்தில் ஊசி மூலம் ஏற்றிவிட்டால்?

இதற்காக நான் ஊசி போடப் பழக்கிக் கொள்ள வேண்டும்—தவிர போடத்தெரியாமல் போட்டுவிட்டால்.

வேண்டாம்.

விஷம் கொடுத்து விடலாமா?

மறுநாள் ஜனனி நீலம் பாரித்துக் கிடந்தால் ஸிஸ்டருக்கு சந்தேகம் வராதா?

'நீதான் கொலை செய்தாய்' என்று என்னைக் கைது செய்துவிடலாம்...

இது கருணைக் கொலைதானே ஒழிய கொலை அல்ல...

இது அடுத்தவருக்குப் புரிவது கஷ்டம்.

ஆனாலும், வேண்டாம்...இந்த வழியும் வேண்டாம்?

அப்புறம்?

தூக்க மாத்திரைகளைப் பொடி செய்து பாலில் கலந்து கொடுத்துவிட்டால்?

சரியான வழி கிடைத்துவிட்ட பரபரப்புத் தோன்ற, எழுந்து, தடித்தடியாய் வாங்கி அடுக்கி இருந்த வைத்தியப் புத்தகங்களை எடுத்து புரட்டினான்.

தூக்க மாத்திரைகள்...

ஓவர்டோஸாக உட்கொண்டால் உண்டாகும் பாதிப்புகள்...

வேகமாகப் படித்தான்.

'தூக்க மாத்திரைகளில் உள்ள பார்பிட்ரேட் மருந்து ஸ்வாசத்தைத் தாக்கும் சக்தி படைத்தது. அதிக அளவில் மாத்திரைகளை உட்கொள்வதால், சில நிமிஷங்களுக்கெல்லாம் மூச்சு ஒருவித வாதத்துக்கு உள்ளாகிறது. இதனால் மெள்ள மெள்ள ஸ்வாசம் குறைகிறது. சாதாரணமாய் நிமிஷத்துக்குப் பதினெட்டுதரம் வெளிப்படும் மூச்சு, பத்தாகக் குறைகிறது. இதே சமயத்தில். நாடித் துடிப்பு அதிகமாக. தூக்க மாத்திரை சாப்பிட்ட நபரை ஆழ்ந்த உறக்கம் தொடர்ந்து மரணமும் தழுவுகின்றன.'

ஒருதரம்...இரண்டுதரம்...

மீண்டும் மீண்டும் அந்தப் பாராவைப் படித்து, நிச்சயமாய் எந்தவித வேதனை, அவஸ்தை இல்லாமல் ஜனனி சாக இதைத்தவிர வேறு உபாயம் இல்லை என்பதை நினைவாக்கிக் கொண்டபின்—

எப்படி? என்ற வார்த்தைக்கு நேராய்—தூக்க மாத்திரைகள் என்று மெதுவாக சத்யா எழுதினான்.

## 17

மலைச்சாரல் உள்ளே தெரிக்கத் துவங்க, சத்யா எழுந்து ஜன்னல் கதவுகளைச் சாற்றினான்.

மாலை மணி நான்குதான் என்றாலும் வானம் கறுத்துக் கிடந்ததில், அறைக்குள் வெளிச்சம் மிக சொற்பமாகவே இருந்தது.



முகம் தெரியாத இருட்டைக் கலைக்க விரும்பாதவன் போல ஜனனியின் அருகில் அமர்ந்து கைகளைப் பிடித்துக் கொண்டான்.

—தொட்டால் பூ சிவக்கும், தொடாமல் நீ சிவப்பாய்

—ஹேய்...என்னது இது! ரொம்ப குஷியா! அதான் பாட்டெல்லாம் கிளம்புது!

—செமை மூடு கண்ணம்மா. இன்னிக்கு நீ வசமா அய்யாகிட்டே மாட்டிக்கிட்டே...

—மாட்டிக்கறது இருக்கட்டும். முதல்ல நீங்க பாடினதுக்கு அர்த்தம் சொல்லுங்க...தொடாமல் நீ சிவப்பாய்...

—என் விரல் உன்மேல படாமலேயே உன்னை வெக்கப்பட வைக்க முடியும்னு அர்த்தம் எப்படின்னா...

வேண்டாம்...எனக்குத் தெரியவேண்டாம் என்று அவள் போலியாய்க் கெஞ்ச, அவன் விடாப்பிடியாய் சொல்ல வந்ததைச் சொல்ல, அடக்கமாட்டாது எழுந்த சிரிப்பினூடே எக்கச்சக்கத்துக்கு வெட்கமும் சேர, கன்னங்களும், காது மடல்களும் தாமரை இதழ்களாய் சிவந்துபோக...

—அம்மாடியோவ்! வெட்கப்படறப்போ நீதான் எத்தனை அழகா இருக்கேடி ராஜாத்தி...

வெறித்தனமாய் அவளை இழுத்து அணைத்ததும், அழுந்தப் பிடித்த இடத்தில் ரவிக்கைக்குச் சற்று கீழாக இடுப்பும், புஜமும் வரிசையாய் இவன் விரல்கள் பதிந்து சிவந்து போனதும் நினைவுக்கு வர, சத்யா ஜனனியின் கையை மென்மையாய் நீவிவிட்டான்.

எப்படி இருந்த கை-புஜம்!

இப்போது சதைப்பற்று துளியும் இல்லாமல்...

தோல் சுருங்கி...கறுத்து...

அந்த இருட்டிலும், மாறிப்போன தோற்றத்தைத் துல்லியமாகப் பார்க்கமுடிய, பெருமூச்சுடன் எழுந்து நின்றான்.

ஒரு ஜன்னலைத் திறந்து மழை குறைந்து விட்டதா என்று பார்த்தான்.

ம்ஹூம். இல்லை.

அதே பிசாசு கொட்டல்தான்.

நாலைந்து நாட்களாகவே வானம் இப்படித்தான். பழி தீர்த்துக் கொள்கிறது.

இரண்டு வருஷமாகப் பூமி அலற அலறக் காயவிட்டதற்குப் ப்ராயச்சித்தம் செய்கிற மாதிரி...

மீண்டும் ஜன்னலைச் சாற்றித் திரும்பியவன் விளக்கைப் போட்டான்.

அலமாரியில் இருந்த சந்தன வத்திகளில் ஒன்றை எடுத்து கொளுத்தி நடராஜர் சிலைக்கு முன் இருந்த ஸ்டாண்டில் செருகினான்.

சற்றுமுன் அம்மா உள்ளே வந்து ஜனனியின் தலை மாட்டில் வைத்துவிட்டுச் சென்றிருந்த ஜாதிப் பூவின் மணத்தோடு சந்தன வாசமும் சேர்ந்து கொள்ள, மெதுவாக அறையைச் சுகந்தம் வியாபிப்பதை உணரமுடிந்தது.

இரண்டு வேளையும் பூ வாங்கி அறையில் வைப்பதும், ஊதுபத்தி கமழச்செய்வதும், கையைப் பிடித்துக் கொண்டு அமர்வதும் நாளைதான் கடைசி.

சரியாக இன்னும் முப்பது மணி நேரங்கள். திரும்பி மயக்கத்தில் கிடந்தவளை ஊன்றிப் பார்க்கையில் அவள் உயிருடன் இருப்பதற்குச் சாட்சியாய் மேலேறி, தழையும் மார்பின் சலனம் பார்வையில் விழுந்தது.



இந்த அசைவும் நாளைக்கு நின்றுவிடும்...

இந்தக் கணத்திலிருந்து எண்ணி முப்பது மணி நேரங்களில் ஜனனியுள் சன்னமாய் இழையும் ஸ்வாசம் சுத்தமாய் அடங்கி விட்டிருக்கும்.

ஒன்பது மணி பாலில் பொடி செய்தத் தூக்க மாத்திரைகளைக் கலந்து, ரய்ல்ஸ் ட்யூபில் துளித்துளியாய் விட கால்மணி நேரம்...

தூக்க மருந்து ஸ்வாசத்தை இன்னுமொரு இருபது நிமிஷங்களில் கட்டுப்படுத்தத் துவங்கும்.

ஸோ, ஒன்பதே காலும் இருபதும்?

ஒன்பது முப்பத்தைந்து...

ஜனனியின் மூச்சு மட்டுப்படும் அதே சமயத்தில் நாடித்துடிப்பு அதிகரிக்கும்...

பத்துமணித் தருவாயில் துளித்துளியாய் இதயம் அமைதியாக முற்படும்...

உடம்பின் எதிர்ப்புச் சக்திகள் தேய்ந்து போய், பிறந்த குழந்தையின் பலத்துடன் ஜனனி இருப்பதால்...

பதினோரு மணிக்குள் எல்லாமே முடிந்துவிடும்.

திடுமெனக் கண்களைப் பொசுக்கிக் கொண்டு நீர் கிளம்ப, சத்யா மனைவியின் அருகில் அமர்ந்து அவளைக் கைகளில் வாரிக் கொண்டான்.

ஜனனி...

என் ஜனனிம்மா...

உன் கருத்தை எனக்கு நீ இட்ட ஆணையாய் ஏற்று நிறைவேற்ற நான் துணிந்தது குறித்து உனக்கு சந்தோஷம்தானே?

நான் செய்யப் போகும் காரியம் உனக்கு நிம்மதி அளிக்கும் என்பது சத்தியம்தானே!

உன் கருத்தை எனக்கு நீ இட்ட ஆணையாய் ஏற்று நிறைவேற்ற நான் துணிந்தது குறித்து உனக்குச் சந்தோஷம்தானே?

கன்னத்தில் வழிந்த நீர், மார்பில் சாய்த்து வைத்துக் கொண்டிருந்தவளின் நெற்றியில் சொட்டி கோடிட்டது.

நாலு பேர்களுக்கு முன்—முக்கியமாய் அம்மா எதிரில் சாதாரணமாக இருக்க வேண்டி பத்து நாள்களாக யமப்ரயத்தனம் செய்து வருவதெல்லாம் இப்போது தனியாய்த் தாலி கட்டினவளுடன் இருக்கும் நிமிஷத்தில் பிசுபிசுத்துப் போக, ஹிருதயத்தின் கனம் தாங்காமல் சத்யா வாய் விட்டு விசும்பினான்.

ஜனனியை இப்படி உயிருடன் அணைத்துக் கொள்வது இன்னும் முப்பது மணி நேரங்களுக்குத்தான் சாத்தியம். அப்புறம் அவள் ஜீவனை இழந்த சவமாகி விடுவாள். அதற்கும் அடுத்த நாள் எரிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகிவிடுவாள் என்கிற நினைவு பூதாகாரமாகப் பயமுறுத்தியதில் அவன் வேதனை அதிகமானது.

கண்ணம்மா...

என் ராஜாத்தி...

"சத்யா...என்னப்பா இது?"

அம்மா.

இவர் எப்போது உள்ளே வந்தார்?

அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டவன் ஜனனியைப் படுத்த படுக்கையில் கிடத்திவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

லக்ஷ்மி மகனை நெருங்கி அவனை ஆதரத்துடன் அணைத்துக் கொண்டார்.



"தேத்திக்கப்பா... இடிஞ்சி போகாதே... இத்தனை மாசமா தாங்கிகிட்டவன் இப்ப ஏன் இப்படி தவிக்கிறே? வேணாம்பா...பத்து பதினைஞ்சு நாளா உன் வேதனை அதிகமாயிட்ட... மாதிரி தோணுதே—என்ன விஷயம்பா? என் பெத்த வயிறு துடியா துடிக்குது... எனக்காகவாவது உன்னைத் தேத்திக்கப்பா... விதிய மாத்தறது நம்ம கையில இல்லே... சத்யா, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன் தைரியமா இரு..."

முடிக்க முடியாமல் அவர் அழ முற்பட, சத்யா நிமிர்ந்தான்.

அம்மாவுக்கு வெளிப்படையாகப்புரியும்படி உணர்ச்சி வசப்பட்டுப் போனது ஒருவித பயத்தை உண்டாக்க, கஷ்டப்பட்டுத் தன்னைச் சுதாரித்துக் கொண்டான்.

அம்மா கையைப் பற்றி சின்னதாய்ப்புன்னகைத்தான்

"ஸாரியம்மா... என்னமோ பழைய ஞாபகம்... அதான் ...ஸாரி..."

அம்மாவை நம்பச் செய்வதற்காக அவருடனேயே வெளியில் வந்து, கூடத்தில் சில நிமிஷங்கள் உட்கார்ந்து பேசி, வலுக்கட்டாயமாகச் சிரித்து, நான்—சரியாகிவிட்டேன்—பார். என்று நிரூபிக்க ப்ரயத்தனம் செய்த பிறகு மாடிக்கு வந்தான்.

—ஏன் இப்படி தவிக்கறே? பத்து பதினைஞ்சு நாளா வேதனை அதிகமாயிட்ட மாதிரி தோணுது...என்ன விஷயம்பா?

சற்று முன் அம்மா புருவங்களைச் சுருக்கிக் கொண்டு உதடுகள் துடிக்க அதிக கவலையுடன் கேட்டது ஞாபகத்திலேயே ஒட்டிக் கொண்டு, மறைந்து போக மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்க, சத்யாவின் பயம் அதிகமானது.

பத்துப் பதினைஞ்சு நாளா உன் வேதனை அதிகமாயிட்ட மாதிரி தோணுது...

அப்படியென்றால்?

மெர்ஸி கில்லிங் தவிர வேறு உபாயம் இல்லை! என்று தீர்மானித்த நாளாக அதிகரித்துவிட்ட படபடப்பு, அவஸ்தையை வெளிப்படையாகக் காட்டி வருகிறேனா?

அதுதான் இந்த வேதனையா?

இது தவறாயிற்றே!

நகத்தைக் கடித்து, ஒருவித இயலாமை ததும்பும் ஆத்திரத்துடன் சிந்தித்தவன் ஏதோ நினைவுக்கு வந்த மாதிரி, மேஜையை நெருங்கி டைரியை எடுத்துப் புரட்டினான்.

எப்போது? ஜனவரி முப்பது...

எப்படி? தூக்க மாத்திரைகள்...

''—என்று எழுதி வைத்திருந்த வெள்ளைத் தாளை எடுத்தான்.

சிலசமயம் அம்மா நான் இல்லாத நேரம் ஒழிக்கிறேன் பேர்வழி என்று மாடிக்கு வருவது வழக்கம். அப்படி வரு கையில் எசகு பிசகாய் இந்தத் தாள் அவர் கையில் மாட்டிக் கொண்டால்?

பேப்பரை உருத் தெரியாமல் துண்டு துண்டாய் கிழித்தவன், ஏதாவது வார்த்தை தெளிவாகத் தெரிகிறதா என்று ஒவ்வொரு துண்டாக எடுத்துப் பார்த்து, நிச்சயமாய் யாருக்கும் எதுவும் புரியாது என்கிற திருப்தி எழுந்ததும் குப்பைக் கூடையில் எறிந்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தான்.

மனசு விடாமல் புலம்பிக் கொண்டே இருந்தது.

காதுக்குள் அருவி ஒன்று கொட்டும் ஆர்ப்பரிப்பு

வாங்கி வைத்திருக்கும் தூக்கமாத்திரைகள் போதுமா

அரை குறையாக எதுவும் ஆகாமல் எல்லாம் நல்லபடி நடந்து முடிக்க வேண்டுமே!



இருப்புக் கொள்ளாமல் எழுந்தான்.

அலமாரியில் ஷர்ட்களுக்கு அடியில் பத்திரமாய் ஒளித்து வைத்திருந்த காகித கவரை எடுத்து மாத்திரைகளை உள்ளங்கையில் கொட்டி எண்ணினான்.

இப்போதே பொடி பண்ணி வைத்து விடலாமா?

பாலில் சுலபமாய்க் கரைந்து போகிற மாதிரி நைஸ் பொடியாக்க வேண்டும்...

டேபிள் வெய்ட்டை எடுத்து ஒரு மாத்திரையை பொடியாக்க முயன்றான்.

ம்ஹூம்

கண்ணாடி வழுக்கிக் கொண்டு ஓடியது...

கனமாக, சுத்தி கித்தி மாதிரி ஏதாவது இருந்தால் தேவலை...

நாலுதரம் அறையைச் சுற்றி வந்ததும் உருப்படியாய் எதுவும் கிடைக்காமல் போக, கதவைத் திறந்து வெளியில் வந்து 'முத்து' என்று குரல் கொடுத்தான்.

''ஸார்...''

''சின்னதா இரும்பு உலக்கை, இல்லே சுத்தி இருக்கா?''

இருந்தது.

சுத்தியுடன் மறுநிமிஷம் முத்து மாடிக்கு வந்தான்.

''எதுக்கு ஸார் சுத்தி?''

''அ?'' இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத அசட்டுத்தனம் முகத்தில் வெளிப்பட சிரித்து மழுப்பினான்.

''ஒண்ணுமில்லே... இந்த நாற்காலியிலே ஒரு ஆணி துருத்திக்கிட்டு இருக்கு... அதைச் சரி பண்ணலாம்னு...''

"எங்க ஸார்... சொல்லுங்க நானே செஞ்சிடறேன்."

சத்யா அவசரமாய் அவன் கையிலிருந்து சுத்தியலைப் பறித்தான்.

"இந்தச் சின்ன வேலையைக்கூட என்னால செய்ய முடியாதா? நீ போ..."

குரலை எழுப்பி, அதட்டலாகப் பேசி, முத்துவை வெளியில் அனுப்பினதும் மீண்டும் அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்ட உணர்வில் படபடப்பும், பயமும் அதிகமாக நாற்காலியில் அமர்ந்து தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டான்.

கடவுளே!

என்ன சித்ரவதை இது?

இன்னும் ஒரு நாள்தான் என்றாலும்—அதற்குள் நானே, அப்பன் குதிருக்குள்—இல்லை—என்று காட்டிக் கொடுத்து விடுவேன் போலிருக்குதே!

கருணைக் கொலையும் வேண்டாம்—ஒரு இழவும் வேண்டாம் என்று முடிவைத் தூர எறிந்து விடலாமா?

நடக்கிறபடி நடக்கட்டும் என்று அத்தனையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, நிம்மதியாய் உட்கார்ந்து விடலாமா?

—யாருக்கு கண்ணம்மா இத்தனை நாழி போன்ல டோஸ் குடுத்திட்டிருந்தே?

—வேற யாரு! பரசு தான்...

—என்னாச்சு அவனுக்கு இப்ப?

—பின்ன என்ன சத்யா...வேலைல இருந்தப்போ, சும்மா என்ன வேலைங்க யந்திரமாட்டம். இதை விட்டுட்டு சங்கீதத்தை முழு நேர தொழிலா எடுக்கணும் போல மனசு ஏங்குது'னு வாய் ஓயாம பேசினவன், விருப்பம் போல வேலைய விட்டு, முழுநேர சங்கீத



வித்வானா மாறி மாசம் ஒண்ணாகலே, அதுக்குள்ள, பெரிய மடத்தனம் பண்ணிட்டேன். வேலையவிட்டது தப்புனு பார்க்கறப்ப எல்லாம் புலம்பறான்...

—ஒரு வேளை சம்பாத்தியம் போதலையோ என்னவோ?

—அதெல்லாம் ஒண்ணுமில்லே சத்யா...முன்னைவிட ட்யூஷன் இப்ப அதிகம், கச்சேரிக்கும் குறைச்சல் இல்லே...

—சில பேருக்குக் காரணமேஇல்லாம குறைபட்டுக்கப் பிடிக்கும். அந்த ஜாதியோ என்னமோ!

—எந்த ஜாதியா இருந்தாலும், எதையும் செய்யறதுக்கு முன்னால தீர்க்கமா யோசனை பண்ணி, நல்லது கெட்டதை அலசி ஒரு முடிவுக்கு வந்திட்டா, அப்புறம் அது பத்தி திரும்பத் திரும்ப குழம்பறது எனக்கு கட்டோட பிடிக்காத சமாசாரம்...நாம என்ன குழந்தைகளா? வளர்ந்து விவரம் புரிஞ்சு சிந்திக்கத் தெரிஞ்சவங்க தானே! துணிஞ்சு காரியத்துல இறங்கினப்புறம், வொய் ரிக்ரெட் இட்... என்ன சத்யா, நான் சொல்றது சரிதானே!

சரிதான் கண்ணம்மா...

நன்கு சிந்தித்தபின் இப்போது நான் குழம்புவதுதான் மடத்தனம்...

நிமிர்ந்தவன், நிதானமாக அத்தனை மாத்திரைகளையும் கச்சிதமாகப் பொடித்து பொட்டலம் கட்டி அலமாரியில் வைத்தான்.

விளக்கை அணைத்துவிட்டு, படுக்கையில் படுத்து கண்ணீர் கன்னங்களில் கோடு போடுவதை லட்சியம் பண்ணாமல்—மணி ஒன்பது பதினைந்து—நாளைக்கு இன்னேரம் மருந்து உள்ளே போயிருக்கும். ஸ்வாசம் மட்டுப்படத் துவங்கி இருக்கும்—என்று நடக்கப் போவதை மீண்டும் ஒரு தரம் நினைத்துப் பார்க்க முற்பட்டான்.

# 18

இரவு முழுவதும் உறக்கம் வராமல் தவித்து நகத்தைக் கடித்த, குட்டி போட்ட பூனையாய் நடந்து, நினைத்து நினைத்து கீழே வந்து மனைவியின் கையைப் பற்றிக் கண்களில் நீர் துளிர்க்க அமர்ந்து, என்னது— இது?' என்று நர்ஸ் புருவத்தைக் கவலையுடன், முடிச்சுப் போட்டுக் கொள்வதைப் பார்த்து. இப்படி வெளிப்படையாக அவதியுறுவது தவறு என்று மனசைப் ப்ரயத்தனத்துடன் ஒரு நிலைப்படுத்தி ஒரு தினுசாய் விடிகாலை நாலு மணி வாக்கில் அசதி தாளாமல் தூங்கிப் போனவன், திடுக்கிட்டுக் கண்விழித்த போது மணி ஆறேகால் என்றது

முதல் நாள் இரவு மணி பன்னிரண்டைத் தாண்டின நிமிஷத்தில் அசாத்திய உதறலோடு நாளேட்டைக் கிழிதது விட்டிருந்ததில், கொட்டை எழுத்தில் முப்பது என்கிற தேதி கண்களைக் கூசவைத்தது.

ஜனவரி முப்பது.

இன்று தானா?

கடைசியில் இந்த அரக்கத்தனமான தினம் வந்தே விட்டதா?

இன்னும் சரியாகப் பதினைந்து மணி நேரத்தில் அந்த மணி ஒன்பது மணி வந்துவிடும்...

ஒன்பதுக்குப் பாலில், பொடி செய்த மாத்திரைகளைக் கலந்து துளித்துளியாய் ரயில்ஸ் ட்யூபில் விட்டால்...

மனப்பாடம் பண்ணிவிட்ட வரிகள் சுழன்று சுழன்று உள்ளுக்குள் ஓட, அத்தனையும் கண்முன் நடக்கிற பிரமை உண்டாக சத்யா அவசரமாய் எழுந்து நின்றான்.

வாய்விட்டு அழவேண்டுபோல இருந்தது.



நெஞ்சு எகிறி எகிறி வெளியில் குதித்துவிடும்போலத் தோன்றியது.

மெதுவாக நடந்து பாத்ரூமுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

பிரஷ்ஷில் பேஸ்டை நீளமாக ஒட்ட முடியாதபடி கை விரல்கள் தடதடத்தன.

ஆற அமர நின்று தேய்க்க இயலாமல் போக, பிரஷ்ஷை அலம்பி ஸ்டாண்டில் வைத்தான். பதட்டத்தில் அது பேஸ்டையும் தள்ளிக் கொண்டு கீழே விழ, குனிந்து எடுத்தான், கவனக்குறைவாய் நிமிர்ந்தபோது மண்டையின் பின்பக்கம் 'நக்'கென்று பேஸின் விளிம்பில் மோத கையில் பிடித்திருந்த பேஸ்டும், பிரஷ்ஷும் மறுபடி நழுவி விழுந்தன.

பின் மண்டையைத் தேய்த்துக் கொண்டு நிமிர்ந்தவன். பச்சைத் தண்ணீரை நாலு கை வாரி முகத்தில் அடி துக் கொண்டான்,

மசமசத்த கண்கள் தெளிவடைய நடுக்கம் லேசாகக் குறைந்தமாதிரி இருந்தது.

வெளியில் வந்து மெதுவாகக் கீழே இறங்கிப் போனான்.

மனசு இருக்கும் இருப்பில் உடைந்து போகாமல் ஜனனியைப் பார்ப்பது அசாத்தியம் என்ற தோன்ற, கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''காபி கொண்டு வரட்டுமா ஸார்!''

முத்து.

''ம்''

சிலநிமிஷங்களில் அவன் பணிவுடன் நீட்டிய காபியை வாங்கும்போது விரல்கள் மீண்டும் சதி பண்ண, டம்ளர் காபியும் நழுவி, சத்தத்துடன் கீழே விழுந்து சிதறியது.

ஓடிச்சென்று துணியுடன் வந்த முத்து இடத்தைத் துடைத்துவிட்டு, திரும்ப காபியைக் கலந்து எடுத்து வந்ததும், முன் எச்சரிக்கையுடன், டீபாய் மேல் வைக்கச் சொன்னான்.

காபியை வைத்த முத்து தயங்கினான்.

''உடம்பு சரியில்லை ஸார்?''

''அ?''

''காய்ச்சல் அடிக்கிற மாதிரி முகமும் கண்ணும் ஏகத்துக்கு சிவந்திருக்கே ஸார்...''

''அ!''

உருப்படியாய் பதில் கூறாமல் அமர்ந்திருந்தவனை, ஓரடி நெருங்கிக் கவலை நிறைந்த குரலில் முத்து மீண்டும் 'ஸார்' என, சட்டென்று சத்யா நிமிர்ந்தான். கோபத்தை மறைக்காமல் கத்த விரும்பி வாயைத் திறந்தவனுக்கு, இந்த எரிச்சலும் கத்தலும் இன்றைக்குக் கட்டாயம் கூடாது என்பது நினைவுக்கு வர, உதட்டை இறுக்கித் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டான்.

மெல்லியதாகச் சிரிக்கப் பார்த்து, ''ஒண்ணுமில்லே முத்து...நாலைஞ்சு நாளாவே ராத்திரி ரொம்ப நேரம் கதைகளை படிச்சிட்டிருக்கேனா...அதான்...'' என்று சின்ன குரலில் கூற, முத்து திரும்பி நடந்தான்.

மேற்கொண்டு ஏதும் பேசாம அவன் சென்று விட்டாலும், முகம் நிறைய நீங்கள்—சொல்வதை நான் நம்பவில்லை—என்கிற பாவத்துடனேயே நகருவதைப் புரிந்துகொள்ள முடிய, சத்யா இரண்டு நிமிஷங்களுக்கு அப்படியே அமர்ந்து பரிதவித்தான்.

முத்து ஏன் அப்படிப் பார்த்தான்?



ஒருவேளை, என் திட்டம் திட்டம் எதையாவது ஊகிக்க முடிந்து விட்டதோ?

பதட்டமும், இருப்புக் கொள்ளாமையுமே என்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ!

சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு காபியை எடுத்து ஆற்றியபோது, நாலைந்து துளிகள் தெறி வேஷ்டி மேல் தெளிக்க, அம்மா இன்னும் வேறு யாரும் வந்துவிடு முன் அந்த இடத்தை விட்டு நகருவது நல்லது என்கிற எண்ணத்தில், அவசரமாய் காபியைகுடித்துவிட்டு எழுந்தான்,

ஜனனி அறைக்குச் செல்லலாமா?

அவள் தலையை மடியில் வைத்து பழசை எல்லாம் நினைத்தபடி கொஞ்ச நேரமாவது உட்கார்ந்திருக்கலாமா?

யோசித்த வரைக்கும் உணர்ச்சிவசப்படாமல் இதைச் செய்வது முடியாதுஎன்பது புரிய, இப்போதைக்கு மனைவியைபார்ப்பது கூடவேண்டாம் என்கிறதீர்மானத்துக்கு வந்தவனாய், மாடிக்குவந்து படுக்கையில் படுத்தான்.

வேதனை நெஞ்சை கீறிக்கொண்டு பிரவகிப்பேன் என்று அழிச்சாட்டியம் பண்ணியது.

தொண்டை இறுகியது.

விழிகள் எரிந்து கசிந்தன.

நோ...

இந்தநிமிஷத்தில் இப்படி வெளிப்படையாய்துக்கிக்க இடமளிப்பது அசட்டுத்தனம்.

திடுமென அம்மாவோ, முத்துவோ உள்ளே வந்து என்ன ஏது என்று புரியாமல் பதறி, கேள்வி மேல் கேள்விகளாய்க் கேட்டு, நானும் எதையேனும் உளறி வைத்தால் அத்தனையும் பாழ்

என் ஜனனிக்காக. அவள் விருப்பத்தை நிறைவேற்றப் போகும் இந்தக் கடைசி நிமிஷத்தில் நான் குழம்புவதோ, பதறுவதோ கூடாது.

எழுந்தான்.

ஷவரைத் திருப்பி பச்சைத் தண்ணீரின் ஜில்லிப்பை பொருட்படுத்தாமல் குளித்துத் தயாராகி, 'டிபன் சாப்பிடறியாப்பா' என்ற அம்மாவிடம் நீளமாகப் பேசிக் கொண்டு நிற்காமல் 'பசிக்கலை—வேணும்னா ஆபீஸ்ல சாப்பிட்டுக்கறேன்' என்று ஒரு வரியில் பதில் சொல்லி விட்டு அலுவலகத்துக்கு வந்தான்.

எந்த வேலையும் செய்யப் பிடிக்காமல் யாரையும் சந்திக்காமல் தனித்து உட்கார்ந்து இரவு செய்யவேண்டிய காரியத்தை மீண்டும் மீண்டும் மனசில் சொல்லிப் பார்த்து எல்லாம் சரியாக நடக்குமா எங்கேயும் தவறு நடந்து விடாதே என்று அந்தக் கவலையுடன் பதினோரு மணி வரை அல்லாடியவன் இருப்புக் கொள்ளாமையும் படபடப்பும் அதிகமாக யார் கண்ணிலும்படாமல் எங்காவது போய்த் தனியாய் இருந்து விட்டு வந்தால் என்ன என்று யோசித்தான்.

எங்கே?

மழை பிசாசாய் ஆட்டம் போடுவதால், பீச்சுக்கோ. வேறு எங்கோ போவது இயலாது.

அப்புறம்?

ஏதாவது கோயிலுக்குச் சென்று ஜனனிக்காவும் அவள் ஆத்மா சாந்தியடையவும் ப்ரார்த்தனை பண்ணினால்?

குறுக்கும் நெடுக்கும் நடந்தபோது ஜனனி மென்மையான குரலில் அடிக்கடி பாடும் அந்தப் பாடல் நினைவுக்கு வந்தது.

—அந்த ராம சௌந்தரியம்...



கேதார கௌளையில் ராமனின் பாதாதி கேச[அழகை வர்ணிக்கும் பாடல்...

நின்று நிதானமாய் அவனது பரந்த மார்பையும், மேருவை வெட்கித் தலை குனிய வைக்கும் புஜங்களையும், விவரித்து 'பார்க்கப் பார்க்க பதினாயிரம் கண்கள் போதுமோ?' என்று பாவத்துடன் அபிநயித்த பாடல்...

—மதுராந்தகம் ஏரிகாத்த ராமரை பார்த்திருக்கீங்களா சத்யா? எங்கப்பா பிறந்த ஊர்னு மட்டும் இல்லே சின்ன வயசுலேந்தே எனக்கு அந்த ராமர் கிட்ட அலாதி ஈடுபாடு...நினைச்சாலே உடம்பு சிலிர்னு சிலிர்த்துப் போயிடும்... நம்ம கல்யாணத்து முன்னாலே ஒருதரம் போய் தரிசனம் பண்ணிட்டு வரலாமா?

ஒரு தரம் இல்லை. பிறகு நினைத்து நினைத்து ஓடி சன்னதியில் அடுத்தடுத்து நின்று, கண்ணீர் மல்க, கசிந்துருகி...''

எங்கு போவது என்பது தீர்மானமாகிவிட. போனில் அம்மாவை அழைத்தான்.

''என்னப்பா?'

''ஒண்ணுமில்லே...மதுராந்தகம் ராமரை தரிசனம் பண்ணிட்டு வரலாம்னு...சாப்பாட்டுக்கு எனக்காகக் காத்திருக்கா தீங்கன்னு சொல்லத்தான்...''

''இந்த மழைலியா சத்யா?''

''மனசு சரியில்லேம்மா...போயிட்டு வந்திடறேனே!''

''எப்ப வருவே?''

தலையே போனாலும் ஒன்பதுக்குள் ஜனனியின் அறையில் இருப்பேன்—என்று மனசில் நினைத்தவன் ''கொஞ்சம் முன்னே பின்னே ஆனாலும் கவலைப்படாதீங்க...'' என்று மட்டும் சொல்லி தொடர்பைத்துண்டித்து பர்ஸ் கார் சாவியுடன் வெளியில் வந்தான்.

ஓஹோ என்று ஆர்ப்பாட்டமாகக் கொட்டிக் கொண்டிருந்த மழையை லட்சியம் பண்ணாமல் வண்டியைக் கிளப்பினான்.

நாலு நாள்களாக ஓயாமல் மழை பெய்வதற்குச் சாட்சியாய் நெடுஞ்சாலையின் இரண்டு பக்கமும் குளமாய் கால்வாய்களாய் நீர்.

செங்கல்பட்டைத் தாண்டி மாமண்டூரை நெருங்குகையில் நுப்பும் நுரையும் சுழித்துக் கொண்டு பாலாறு...

மதுராந்தகத்தை அடைந்து, கோயில் வாசலில் வண்டியை நிறுத்திவிட்டு, நனைந்து கொண்டு இறங்கினவனை பூட்டி இருந்த கோவில் கதவுகள் வரவேற்றன.

கடவுளே! இதை மறந்தே போனேனே!

மாலையில் கோவிலை எப்போது திறப்பார்கள்?

கண்ணுக்கெட்டிய வரையில் ஜனநடமாட்டம் இல்லாதிருக்க, சத்யா மீண்டும் வண்டியில் உட்கார்ந்தான்.

காற்று ஹோஷ் ஹோஷ் என்று ஆக்ரோஷமாக வீசியது. மழை சடசடவென்று சப்தத்துடன் கொட்டியது

ஐந்துக்கு கோயிலைத் திறந்து விடமாட்டார்களா? ஸ்வாமியைத் தரிசித்து ப்ரார்த்திக்க ஒரு அரைமணி...

ஆறுக்குக் கிளம்பினாலும் எட்டுக்குள் போய்விட முடியாதா?

குளித்து, சாப்பிட்டு, ஜனனியிடம் வந்தால் ஒன்பது மணி பாலுடன் பொடியைக் கலந்துத் துளித்துளியாய்...

கோயில் கதவுகளைத் திறந்ததும், இறங்கி உள்ளே ஓடி, ஒற்றை விளக்கு வெளிச்சத்தில் அமைதியாய் புன்னகைத்தார் ராமர் சன்னதியில் நின்று கைகூப்பியபோது, அவஸ்தை அழுகையாக உருமாறி வெடித்து வெளிப்பட்டது.

ராமா...ஏரிகாத்த ஸ்ரீராமா...நான் செய்யத் துணந்துள்ள காரியம் தவறானதில்லையே! என் ஜனனிக்காக



உன்னை பரிபூரணமாய் நம்பிய என் ஜனனிக்காக, நான் எடுத்திருக்கும் முடிவு சரியானது தானே!

ஹே ராமா! தவிப்பை அடக்கி, நிம்மதியைக் கொடேன்... தைரியத்தைத் தாயேன்...குற்ற உணர்ச்சியை அழித்து விடேன்...ராமா...ஸ்ரீராமா...

மௌனமாய் அழுது, கரைந்து வேண்டியதில் மனசின் பாரம் குறைந்த மாதிரி தோன்ற, முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

கோயில் வாசலில் இருட்டையும் மழையையும் மீறிக் கொண்டு பரபரப்பு...

—ஏரில தண்ணி அதிகமா இருக்குதாம், தண்டோரா போடறாங்க... பேசிக்கிட்டுநிக்காம அவங்கவங்க வீட்டுக்குப் போங்க...

—பாலாறுல கூட வெள்ளம் வந்திருக்குதாமே தெரியுமா?

—மாமண்டூர் தாண்டி வண்டிகளை நிப்பாட்டிட்டாங்களாம்...

கசமுசவென்று வார்த்தைகள் காதில் விழ, சத்யா அதிர்ந்தான்.

நெடுஞ்சாலையில் போக்குவரத்தை நிறுத்திவிட்டார்களா.

ஓ...நோ...

ஒன்பது மணிக்குள் நான் சென்னையில் இருந்தாக வேண்டுமே!

பாய்ந்து சென்று வண்டியைக் கிளப்பினவன், பார்வையை மறைத்த மழை நீரை அலட்சியம் பண்ணாமல் ஓட்டி மாமண்டூர் வளைவை அடைவதற்குள் திணறித்தான் போனான்.

நல்ல வேளையாக பயந்தது போல பாலாற்றில் வெள்ளம் இல்லை. ஆனால் பாலத்தை நெருங்கின நிமிஷத்தில், இவன் பரிதவிப்பு சற்றும் புரியாத மாதிரி

டிஸ்டிப்யூட்டரில் நீர் புகுந்து கொள்ள வண்டி நகர மாட்டேன் என்று பிடிவாதம் பண்ணியது.

இதைத் தட்டி அதைத் துடைத்து, என்னென்னவோ செய்து சரி பண்ணிக் கொண்டு கிளம்பினபோது மணி ஏழரை என்றது.

ஒன்பதுக்குள் சென்னைக்கு சென்றுவிட முடியுமா?

முடியும் என்று தன்னம்பிக்கையுடன் மேலே சென்றவன் பார்வையில், சிங்கபெருமாள் கோயிலைத் தாண்டியதும் 'ஆ'வென்று வேரோடு கிளம்பி, சாலையின் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் விழுந்து கிடந்த மரத்தால் போக்குவரத்து சுத்தமாய் ஸ்தம்பித்து போயிருப்பது விழ, முதல் முறையாக கலக்கம் அடி வயிற்றில் முடிச்சிட்டது.

கடவுளே...நான் என்ன செய்வேன்!

அங்கு ஓடி, இங்கு ஓடி, பணத்தைக் காட்டி, ஏழெட்டு ஆள்களை அழைத்து வந்து ஓரமாய் மரக்கிளைகளை வெட்டி, வழி பண்ணிக் கொடுக்கக் கெஞ்சி...

இத்தனை அமளியிலும் நேரம் தன் பாட்டுக்கு நகர...

ஒன்பது...

இப்போது ஜனனிக்குப் பாலில் மருந்து கொடுக்கத் துவங்கி இருப்பேன்...

ஒன்பதே கால்... கொடுத்து முடித்திருப்பேன்...

ஒன்பதே முக்கால்...ஸ்வாசம் நிதானப்படத்துவங்கி...

நாடித் துடிப்பு அதிகரித்தது...

பத்து... ஜனனி இப்போது ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து விட்டாள்...



பத்தரை...மெள்ள...மெள்ள...

மெள்ள மெள்ள...

பதினொன்று... பன்னிரண்டு... எல்லாம் முடிந்து விட்டது...

என் ஜனனி நிச்சயம் அடங்கிவிட்டாள்...

இட்ஸ் ஓவர்...

முடிந்துவிட்டது...

''மரக்கிளைய வெட்டிட்டாங்க...கிளம்புங்க ஸார்...'

யாரோ குரல் கொடுத்து உலுக்க, சத்யா தூக்கத்திலிருந்து மீளாமலேயே வண்டியைக் கிளப்பினான்.

என் ஜனனி இனி இல்லை...

உயிராய் நான் நேசித்த ஜனனி இனி இல்லை...

மனசு மரத்துப் போக, கண்களில் பெருகிய நீரைத் துடைக்கத் தெரியாமல், பிடிவாதமாய், அதீத வேகத்துடன் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவன், தெரு திரும்பியதும் திடுக்கிட்டான்.

தூரத்தில் தெரிந்த வீட்டில் ஜகஜகவென்று விளக்குகள் வாசல் கேட்டில் டாக்டரின் வண்டி...

என்னாயிற்று!

யாருக்கு என்ன?

ஹா!

ஜ ஜ...ன...னிக்கு

# 19

**கேட்டில்** நுழைந்து, போர்டிகோவில் வண்டியை நிறுத்துவதற்குள் உடம்பு முழுசாய் வியர்வையில் நனைந்து போனது.

மனசு குலுங்கியது.

கைகள் உதறி உதறிப் போட்டன.

காரிலிருந்து இறங்க முடியாமல் கைகள் துவண்டு போனதில் அப்படியே அரைநிமிஷம் அமர்ந்துவிட்டு மெதுவாகக் கதவைத் திறந்தான்.

வராந்தாவிலே கூடத்திலோ யாரும் இல்லை.

ஜனனியின் அறையில் இருக்கிறார்களா?

இருந்தார்கள்.

படுத்திருப்பவளைச் சுற்றி அம்மா, முத்து, டாக்டர்... நர்ஸ்...

கசமுசாவென்று ஒலித்த குரல்களை மீறிக்கொண்டு அம்மாவின் அரற்றல்...

முருகா...என்னப்பனே முருகா...

எல்லாம் முடிந்துவிட்டதால் எழும் புலம்பலா?

நிலைப்படி அருகில் நின்றவனை முதலில் பார்த்தது அம்மாதான்.

''ச...த்...யா...''

திரும்பி, அவசரத்துடன் அவனை நெருங்கியவள், கண்களில் மாலை மாலையாய் நீர்...

''சத்யா...சத்யா...நா வணங்கற முருகன் நம்பளை கை விடலைப்பா...ஜ...ஜனனி...''



பேச முடியாமல் தொண்டை அடைத்துப் போனவளின் கண்களில் ஜலம் பெருகினாலும், முகத்தில் பரவசமும், சந்தோஷம் பரவி இருக்கிற மாதிரி தோன்ற சத்யா நிமிர்ந்தான்.

டாக்டர், நர்ஸ், முத்து அத்தனை பேர் கண்களிலும் பளபளப்பு...ஆனால் முகங்களில் சிரிப்பு...

''கங்ராட்ஸ் மிஸ்டர் சத்யகுமார். உங்க நம்பிக்கை வீண்போகலை...''

''ஆமா சத்யா...உன் பொறுமைக்கும் அன்புக்கும் கடவுள் கை மேல பலன் கொடுத்திட்டார்ப்பா...இனிமே நமக்கு நல்ல காலம்தான்... முருகா... என்னப்பனே முருகா...''

''எதிரே பார்க்காத சமயத்துல இப்படி ஒரு திருப்பு முனை வரும்னு நானே நினைக்கலை மிஸ்டர் சத்யகுமார் ...காட் ஈஸ் க்ரேட்...''

என்ன சொல்கிறார்கள் இவர்கள்!

கடவுள் கைமேல் பலன் கொடுத்துவிட்டாரா?

எதற்கு?

எதைப் 'பலன்' என்கிறார்கள்?

அதற்காக?

ஜனனி படுத்துவிட்டதால் அத்தனை பேரின் நிம்மதியும், சந்தோஷமும் பறிக்கப்பட்டது வாஸ்தவம்தான்... அவளைக் கைக் குழந்தையாய்க் கவனிக்கும் பொறுப்பு ஒருத்தர் விடாமல் எல்லாரையும் போட்டு அழுத்தியது நிஜம்தான் வீட்டின் எந்தக் காரியத்திலும் சிரிப்பின் சாயலே இல்லாமல் போனதும் உண்மைதான்.

அவள் இறந்து விட்டது இப்படியா, இத்தனையா நிம்மதியைத் தந்துவிடும்?

என்ன மனிதர்கள் இவர்கள் எல்லாம்! தெய்வம் கைவிடவில்லை என்கிறார்கள். காட் ஈஸ் க்ரேட் என்கிறார்கள், உன் நம்பிக்கை பொய்க்கவில்லை என்கிறார்கள்...ச்சே...

உள்ளுக்குள் கனத்த துக்கம், க்ஷணகோலத்தில் தானே எதை எதையோ கற்பனை பண்ணிக்கொண்டு ஆத்திரமாய் மாறியது

நீங்கள் எல்லாம் மனிதர்களே அல்ல, மிருகங்கள், கண் முன்னால் நிற்காமல் என்னையும் என் ஜனனியையும் தனியாக விட்டுவிட்டு வெளியே போங்கள்—கெட் அவுட்—

கத்த வேண்டும் போல பொங்கிய எண்ணத்தை விழுங்கியவனின் தோளை ஆதுரத்துடன் டாக்டர் தட்டிக் கொடுத்தார்.

''உங்க அதிர்ச்சிய என்னால புரிஞ்சிக்க முடியுது... மிஸ்டர் சத்யகுமார்...கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் முன்னால நர்ஸ் போன் பண்ணி ஜனனிகிட்ட ஏதோ மாற்றம் தெரியுது, உடனே வாங்க'னு சொன்னப்போ நானும் இப்படித்தான் பரபரத்தேன்...அப்புறம் இங்கே வந்து என் காதாலேயே ஜனனி சன்னமா முனகுறதைக் கேட்டப்புறம்தான் நிம்மதியாச்சு...''

நானும் கேட்டேன்ப்பா...பத்து மாசமா கண்ணைத் திறக்காம, ஜடமா படுத்திட்டிருக்குற பெண் ம்ம்னு முனகினதை நானும் இந்தக் காதால கேட்டேன் சத்யா... அந்தக் கணம், யாரோ குடம் குடமா தலைல பன்னீரை அபிஷேகம் பண்ணற மாதிரி உடம்பும், மனசும் சிலிர்த்துதான் போச்சுப்பா...எல்லாம் அவனோட கருணை சத்யா ...முருகா...பழனி ஆண்டவா...''

டாக்டரும் அம்மாவும் மாறி மாறி பேச, சத்யா முதலில் விழித்தான். பிறகு, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புரிந்துகொள்ள முடிய குழம்பினான் அதிர்ந்தான். திகைத்தான் ஓடி ஒளிந்து கொண்டு கண்ணாமூச்சி காட்டிய வார்த்தைகளைத் தேடிப்பிடித்தான்.



''எ...என்ன சொல்றீங்க டாக்டர்?''

அவன் அவஸ்தை புரிந்த மாதிரி டாக்டர் மென்மையாய் புன்னகைத்தார்.

'புரியலை மிஸ்டர் சத்யகுமார்! கோமால படுத்திட்ட இத்தனை மாசங்கள்ல முதல் தடவையா ஜனனி நிலைல ஒரு முன்னேற்றம் தெரியுதுனு சொல்றேன். சின்னச் சலனம் கூட இல்லாம படுத்திட்டிருந்தவங்க அடுத்தடுத்து இரண்டு தரம் முனங்கியது ரொம்ப பெரிய விஷயம்னு சொல்றேன்...

சத்யா ஓரடி பின்னால் நகர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டான்.

தலைக்குள் ரங்கராட்டினம் ஒன்று ஓசையுடன் சுழன்றது.

ஜனனியிடம் முதல் முறையாய் சலனம்...

இது நிஜம்தானா?

இறந்து விட்டவள் முனகுவது சத்தியம்தானா?

எப்படி?

என் கணக்குப்படி ஜனனி ஒரு மணிக்கு உயிர் துறந்திருக்க வேண்டுமே?

அப்புறம்?

சத்யா சடக்கென்று தன்னை அழுந்த உலுக்கிக் கொண்டான்,

என்ன இது?

ரத்தமும் சதையுமாய் கண் முன் டாக்டர் நின்று ஜனனி முனகினாள்—என் காதால் கேட்டேன் என்கிறார்—அதை விட்டுவிட்டு நான் வேண்டாததைக் கற்பனை பண்ணி வீணாகக் குழம்புகிறேனே—என்ன பைத்தியக்காரத்தனம் இது!

என் ஜனனியிடம் ஒரு முன்னேற்றம்...
முதல் தடவையாக என் ஜனனி முனகி இருக்கிறாள்? கடவுளே...
உனக்கு நான் எப்படி நன்றி சொல்லப்போகிறேன்... கண்ணம்மா...என் ஜனனிம்மா...
தூக்கத்திலிருந்து விழிப்பு கண்ட மாதிரி குபுக் கென்று சந்தோஷம் மனசுக்குள் பீரிட சத்யா அகல அகலமாய் கால்களை வைத்து கட்டில் அருகில் சென்றான்.
படுத்திருந்த மனைவியின் முகத்திடம் கவிழ்ந்து கொண்டான்.
''ஜனனி...டார்லிங்...எங்க...இன்னொருதரம் முனகு ...கண்ணம்மா...கண்ணம்மா...சத்யா வந்திருக்கேம்மா உன்னோட சத்யாடா...நீ 'ம்'னு சொல்லி அம்மா. டாக்டர் எல்லாரும் கேட்டாங்களாமே உன் சத்யா கேட்க வேணாமா...நான் ஜனனின்னு கூப்பிடுவேனாம், நீ 'ம்'னு சொல்லுவியாம்...என்னம்மா...?

பக்கத்தில் நிற்பவர் எவரைப் பற்றின ப்ரக்ஞையும் இல்லாமல் அதீத காதலுடன் கொஞ்சி, கெஞ்சியது காதில் விழாத தினுசில் பழையபடியே ஜனனி படுத்திருக்க சத்யா அவசரமாய் டாக்டரை ஏறிட்டான்.
''நான்...நான் வந்து... ஜ... ஜனனி... என்ன டாக்டர்...

''ரிலாக்ஸ் சிஸ்டர் சத்யகுமார்...ஜனனி நிலைல முன்னேற்றம் தெரியுதுனு சொன்னேனே தவிர. நீங்க ஜனனினு கூபபிட்டா அவங்க ரெஸ்பாண்ட் பண்ணுவாங்கனு சொல்லலியே...ப்ளீஸ் ரிலாக்ஸ்...''

சத்யா உதடுகளை இறுக்கி, தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொள்ள முயற்சித்தான்.

தலைகுனிந்து மனைவியின் சலனமற்ற முகத்தையே ஓரிரு நிமிஷங்களுக்கு வெறித்தவன், பார்வையை நிமிர்த்



தாமல் ''இங்கே என்ன நடந்ததுனு கொஞ்சம் தெளிவா சொல்ல முடியுமா டாக்டர்?'' என்ற பொது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

''ஒண்ணரை மணி சுமாருக்கு புஸ்தகம் படிச்சிட்டு பக்கத்துல உட்கார்ந்திருந்த ஸிஸ்டருக்கு யாரோ முனகின மாதிரி இருந்துச்சாம். பிரமைனு ஒதுக்கி இருக்காங்க. மறுபடி இரண்டு மணிக்கு ஜனனியைப் புரட்டிக் கொடுக்கவும் ஷீட் நனைஞ்சிருந்தா மாத்தவும் வேண்டி கிட்ட வந்து தோளுக்கு அடிலே கையைக் கொடுத்து தூக்கி இருக்காங்க...அப்ப. ரொம்ப தெளிவா ஜனனி முனக. பதட்டத்தோட நடு ராத்திரியா இருந்தாலும் பரவாயில்லேனு உங்கம்மாவை எழுப்பி விஷயத்தைச் சொல்லி, எனக்கும் போன் பண்ணாங்க...உடனே வந்து சில டெஸ்டுகளைப் பண்ணினப்போ, ஆச்சர்யப் படற விதத்துல ரெஸ்பான்ஸ் இருந்தது...''

''ஆச்சர்யப்படற விதம்னா?

''சொல்றேன்...பாதத்துல கம்பியால வருடுவேன். கவனிச்சிருப்பீங்களே எப்ப அப்படி செஞ்சாலும் எந்த வித ரெஸ்பான்ஸும் இருக்காது...ஆனா இன்னிக்கு கட்டை விரல் பின்னால, அதாவது லேசா மேல் பக்கமா வளைஞ்சிது...இதை நாங்க எகஸ்டென்ஸா ப்ளான்டா ரெஸ்பான்ஸ், extenzaplantaresponseனு சொல்லுவோம். ஆழ்ந்த கோமால இருக்குறப்போ இந்த வளைவு இருக்காது, செமி கான்ஷியஸ் ஸ்டேஜிலதான் அரை குறை மயக்க நிலைலதான் இந்த ரெஸ்பான்ஸ் சாத்தியம்... அப்படி பார்த்தா ஜனனி நிலைல முன்னேற்றம்னுதானே அர்த்தம்?''

''முனகினது எதனால?''

''புள்ளி குத்த முடியாது மிஸ்டர் சத்யகுமார்...ஆனா இதெல்லாம் பிரக்ஞை திரும்பறத்துக்கு அறிகுறிகள்னு மட்டும் திட்டவட்டமா சொல்லலாம்...''

கேட்க கேட்க இது நிஜமா, சத்யமாய் நம்பக்கூடிய சமசாரம்தானா என்கிற சந்தேகமும், கூடவே கடைசியில் நடந்து விட்டதா என்கிற சந்தோஷமும் எழ அசாத்திய படபடப்பு உடம்பில் தமதமவென்று பரவியது

''திடும்னு, இன்னிக்கு எதனால இந்த மாற்றம் டாக்டர்?''

''ஸாரி—தெரிஞ்சா எங்க துறை எங்கயோ போயிருக்குமே... அடிபட்ட வேகத்துல நிறைய இடங்கள்ல சின்னச் சின்னதா ரத்தம் உறைஞ்சிருந்தது தானா இந்த ரத்தக் கட்டிகள் கரையறதைத் தவிர வேறு வழியே இல்லேனு—முன்னமே சொல்லியிருக்கேன். ஞாபகம் இருக்கா? சடக்குனு ரத்தக் கட்டி கரையத் தொடங்கி நாங்க பார்த்திருக்கோம். ஆனா அதுக்கு என்ன காரணம்னு கேட்டீங்கன்னா எங்களுக்கே நிஜமாத் தெரியாது...''

''இரண்டு நாள் முன்னால வந்து டெஸட் பண்ணினப்போ எந்த அறிகுறியும் தெரியலையா?''

டாக்டர் உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கினார்.

''நாளுக்கு நாள் வளர்ற விஞ்ஞானத்துக்கு இன்னும் பல விஷயங்கள் சவாலா புதிரா இருக்கத்தான் செய்யுது மிஸ்டர் சத்யகுமார்...''

இப்போது ஸிஸ்டர் பாருக்குட்டி குறுக்கிட்டாள்

''எக்ஸ்க்யூஸ் மி டாக்டர் நேத்து காலைல உடம்பு துடைக்கறப்பவே இத்தனை நாளா மந்தத்தனமா இருந்த 'டீப்மஸில் ஜெர்க்'—deep muscle jerk நல்லா இருந்தாப்பல தோணிச்சி... கைய தூக்கி விட்டா, வழக்கமா தொப்புனு விழற மாதிரி நேத்து இல்லே... கொஞ்சம் வித்தியாசம் தெரிஞ்சது காலைல நீங்க விஸிட்டுக்கு வர்றப்போ சொல்லலாம்னு நினைச்சேன். அதுக்குள்ள கடவுள் க்ருபைல இந்தத் திருப்பம்...'!



''நேற்று காலையிலே சன்னமான ரெஸ்பான்ஸ் உணர்ந்திங்கன்னா என்கிட்ட உடனே சொல்ல வேண்டியதுதானே ஸிஸ்டர்?''

கோபத்துடன் சத்யா குற்றம் சாட்ட, பாருக்குட்டி தயக்கத்துடன் பதில் கூறினாள்.

''ஸாரி ஸார்...வழக்கமா காலைல எந்திரிச்சதும் கீழே வந்து ஜனனிம்மாகிட்டே உட்காருவீங்க...நேத்து ஏனோ கூடத்தோடவே மாடிக்குப் போயிட்டீங்க...ட்யூடி முடிஞ்சி போறப்ப கூட முத்து கிட்ட கேட்டேன், 'சாருக்கு உடம்பு சரியில்லே'ன்னான். அதான்...''

அடுத்து வந்த ஒருமணி நேரமும் அந்த அறையிலேயே கூடி நின்று, ஜனனி மீண்டும் முனகுவாளா, அல்லது அவளிடம் வேறு ஏதேனும் மாற்றம் தெரிகிறதா என்று பார்த்துவிட்டு, பலபலவென்று விடிந்துவிட்ட காரணத்தால் நான் கிளம்பறேன் மிஸ்டர் சத்யகுமார்...ரொம்ப சீக்கிரமே ஜனனி பழையபடி ஆயிடுவாங்கன்ற நம்பிக்கையோட இருங்க...சாயங்காலம் டாக்டர் ராமச்சந்திரனையும் கூட்டிக்கிட்டு வரேன். அவரும் முழுமையா பரிசோதனை பண்ணட்டும்...காட் ஈஸ்க்ரேட்...''என்று டாக்டர் விடை பெற்றுக் கொண்டு கிளம்ப, சில நிமிஷங்களில் ஜனனியுடன் தனியாக விட்டுவிட்டு மற்றவர்களும் நகர சத்யா மனைவிக்கருகில் அமர்ந்து அவள் கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

விடாமல் முயற்சித்தால், அதிர்ஷ்டம் இன்று போல தொடர்ந்து புன்னகைத்தால், ரொம்ப சீக்கிரமே படிப்படியாய் ஜனனி தேறிவிடுவாள் என்கிற நினைப்பு. அடிவயிற்றைக் கிளுகிளுக்கச் செய்தது.

ஜனனி...<br>என் கண்ணம்மா...

நீயும்நானும் முன்போல ஒன்றாய்ச் சிரித்து, சிலிர்த்து உருகி, கலந்து, லயித்து இணைத்து...

கற்பனையின் சுகத்தில் கண்ணோரங்கள் பனித்த நொடியில் சரக்கென்று ஒரு கேள்வி ஹ்ருதயத்தைப் பிறாண்டியது.

இரவு ஒரு மணிக்கு மேல்தான் ஜனனி முனகியதை நர்ஸ் கேட்டுவிட்டு டாக்டரிடம் தெரிவிக்கிறார்... நேற்று மதுராந்தகத்துக்குப் போகாமயோ அல்லது, சென்றும் அந்தப் பேய்மழையில் சிக்காமல் பொழுதோடு வீட்டுக்கு திரும்பியிருந்தாலோ என்ன நடந்திருக்கும்? திட்டமிட்டபடி ஒன்பது மணிக்கு பாலோடு மருந்தைக் கொடுத்திருப்பேன். ஒன்பதே முக்காலுக்கு நாடித்துடிப்பு அதிகரித்திருக்கும்...பிறகு? ஒரு மணிக்குள் ஜன்னி முனகுவதற்கு ஒரு சந்தர்ப்பம் தராமல் நான் அவளைக் கொன்றிருப்பேன் அல்லவா?

அசுரத்தனமாய் எழுந்த கேள்வி, குடலில் பட்டாம்பூச்சிகளைப் பறக்கச் செய்ய, 'நோ' என்று அரற்றிய சத்யா, குனிந்து அவசரமாய் ஜனனியின் அதரங்களில் முத்தமிட்டு 'ஐ லவ் யூடா' என்றான்.

# 20

இரண்டாம்நாள், குட்டியாக இன்னும் கொஞ்சம் முன்னேற்றம்...

அசையாமல் மாசக்கணக்காய் படுத்திருந்தவளின் பாதங்களை, பெய்ன்ஃபுல் ஸ்டிமுலை —Painful stimuli மூலம், உணர்ச்சி இருக்கிறதா என்று பரிசோதிக்க டாக்டர் வலிக்க கிள்ளியபோது முகத்தில் மிக மிக சன்னமாய் ஒரு சுணங்கல்.

உதடுகள் சற்றே ஒருபக்கமாய் கோண, கன்னத்தில் ஒரே ஒரு நொடிக்குச் சுருக்கம் விழ—அவளைச் சுற்றி நின்றிருந்தவர்கள் சந்தோஷத்தின் காரணமாய் அதிர்ந்து போனார்கள்.



வலி—

ஜனனி வலியை உணர்கிறாள்.

பல மாசங்களுக்குப்பிறகு முதல் தடவையாய் ஜனனி முகத்தில் வலியின் அறிகுறி அடையாளம் காட்டுகிறது!

கடவுளே...

முதலில் முனகல்...

இப்போது முகத்தின் வலியின் பிரதிபலிப்பு...

இப்படி நாளுக்கு ஒன்றாகத் துளித் துளியாய் முன்னேற்றம் வர ஆரம்பித்தால்?

கற்பனை இனித்தது.

மனசு இயற்கை முளைத்து வானவீதியில் ஹாஹாவெனப் பறந்தது.

மீண்டும் மாலையில் வருவதாகக் கூறி டாக்டர் புறப்பட்டுப்போக, மனைவியுடன் தனிமையில் இருக்கவிரும்பி' மற்றவர்களை வெளியில் போகச் சொல்லிக் கதலைத் தாளிட்டுக் கொண்டு, அவள் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்தான்.

கையைப் பற்றி கன்னத்தில் வைத்துக் கொண்டான். அவளுடைய ஒவ்வொரு விரலையும் மென்மையுடன் முத்தமிட்டான்.

கலைந்திருந்த தலைமுடியைக் கோதிவிட்டான்.

முகத்தோடு முகம் வைத்துப் படுத்தான்.

இருப்புக் கொள்ளாமல் காதருகில் குனிந்து 'ஜனனிம்மா' என்று மிருதுவாக அழைத்தான்.

எழுந்து உட்கார்ந்து, படுத்திருப்பவளைக் கண் சிமிட்டாமல் பல நிமிஷங்களுக்கு வெறித்தான்.

இன்னும் சில நாள்களில் ஜனனிக்கு பிரக்ஞை திரும்பு வது நிச்சயம் என்று சதா ஏதோ குரல் முணுமுணுக்க, நினைத்து நினைத்து உள்ளுக்குள் குமிழ் குமிழாய் சந்தோஷம் வெடித்துப் பரவியதில் உடம்பும், ஹிருதய மும் சிலிர்த்தன, பூரித்தன. நெகிழ்ந்தன குதூகலித்தன.

ஜனனி...

என் கண்ணம்மா...

கூடிய சீக்கிரமே நீ கண்ணைத் திறப்பாய் என்னை ஏறிட்டு மந்தகாசமாய் புன்னகைப்பாய், 'ஹேய் சத்யா' என்று அன்போடு அழைப்பாய்...

இல்லையா ராஜாத்தி?

பழையபடி இந்த வீடு பேச்சும், சிரிப்பும், சீண்டலும், சந்தோஷமும், பாட்டும், நாட்டியமுமாய் அமர்க்...

திடுமென ஒரு சமாசாரம் நினைவுக்கு வர, கற்பனை நின்றது.

'கோமாவில் படுத்து விட்டவர்களில் பலர் காலப் போக்கில் இன்னகாரணம் என்று புள்ளி குத்தமுடியாமல், ப்ரக்ஞை பெற்று விடுவது உண்மைதான் என்றாலும், இவர்களில் எத்தனை பேர்கள் தங்கள் பழைய நிலையை முழுமையாக அடைவார்கள் என்பது விவாதத்துக்குரிய விஷயம். மூளைக்கு ரத்தம் தடைப்பட்டுப் போவதில் கால், கை விளங்காமல் போவதோ பார்க்கும்—பேசும்—கேட்கும் சக்தி பாதிக்கப்படுவதோ, அல்லது சிந்திக்கும் திறமை குறைவதோ எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளில் சில...''

உடம்பு உதறிப்போட, சத்யா நிமிர்ந்து உட்கார்ந் திருந்தான்.

—குட் ஈவ்னிங் கண்ணம்மா...

—ம்.



என்னடா...உனக்காக அடிச்சுக்கோ, பிடிச்சுக்கோனு சுருக்க வந்திருக்கேன்...முத்தா கித்தா கிடையாதா?

—மனசு சரியா இல்லே சத்யா...

—போச்சுடா...என்னாச்சு?

—மாணிக்கத்தை உங்களுக்குத் தெரியுமில்லே?

—எந்த மாணிக்கம்?

—போன வருஷம் வரைக்கும் எனக்கு மிருதங்கம் வாசிச்சிட்டு இருந்தானே'

...ஓ! அவனா! யெஸ், ஐ ரிமெம்பர். சுட்டியான பையன். திடும்னு உடம்பு சரியில்லாம போயிட்டது இல்லே?

—ம்...ப்ராலிஸ்...நல்லா இருந்தவனுக்கு ஒரு நாள் தூங்கி எழுந்ததும் ஒருபக்கம் பூராவும் வாதம்...

—ஆனா, அது தற்காலிகமானது...போகப் போக சரியாயிடும்னு சொன்னாங்களே ஜனனி...

—இன்னிக்கு, கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழிச்சு அவனைப் பார்த்தேன். வலதுகையைத் தவிர ஓரளவுக்கு பாக்கி எல்லாம் சரியாயிருக்கு...இதுக்கு மேல எதிர்பார்க் கறது கூடாதுனு டாக்டர் சொல்லிட்டாராம். பிரமாதமா மிருதங்கம் வாசிச்ச கை இனிமே முடங்கியே கிடக்கப் போறதுனு நினைச்சா கஷ்டமா இருக்கு சத்யா...

—கஷ்டம்தான்... ஆனாலும் படுக்கையோடு படுக்கையா கிடக்காம இந்த அளவுக்கு எழுந்து நடமாட றதை நினைச்சு சந்தோஷப்படாம... என்ன கண்ணம்மா இது.

—முடியலையே சத்யா... இருந்தா முழுசா இருக் கணும்... இல்லேன்னா போயிடறது கூட தேவலைதான்.

ஊனத்தோட பிறக்கறது வேற, ஆனா பூரணமா இருந்து பழகிட்டு இப்படி சட்டுனு முடக்கப்படறது கொடுமை... எனக்கு இப்படி ஒரு நிலைமை வந்தா, அதை என்னால தாங்கிக்கவே முடியாது...

சின்னக் குழந்தையின் சலிப்புடன் பேசியவளை இழுத்து அணைத்து சமாதானப்படுத்தியதை இப்போது நினைத்துப் பார்க்கையில் சத்யாவின் தவிப்பு அதிகமானது.

—இருந்தா முழுசா இருக்கணும்...

—இருந்தா முழுசா இருக்கணும்...

இருப்பாளா?

ஜனனி பூரணமாய்க் குணமாகி பழைய ஜனனியாய் இருப்பாளா?

ஒருவேளை ஏதோ ஒரு குறை இருந்து விட்டால்?

நாட்டியமாடிப் பழகிப் போன கால் விளங்காமல்? மிரட்சியுடன் அதிஅற்புதமாகச் சுழலும் கண்கள் படபடக்காமல், மென்மையாய் பாடி, பேச முடியாமல்?

கற்பனை, தாளமாட்டாத பயங்கரத்தை உண்டு பண்ண, அவசரமாய் சத்யா எழுந்து நின்றான்.

குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

நகத்தைக் கடித்துத் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயன்றான்.

எதற்கும் பலன் இல்லாமல் இனி தாள முடியாது என்று ஆனதும், படபடப்பு அடங்காமலேயே மாலையில் வைத்தியர் வந்தபோது தன் சந்தேகத்தை மஹா தயக்கத்துடன், பயத்துடன் வெளியிட, டாக்டர் ஒரு நிமிஷம் மௌனித்து யோசித்துப் பேசினார்.



"உங்க சந்தேகம், பயம் எல்லாமே நியாயமானவைதான் மிஸ்டர் சத்யகுமார்...ஐ 'ம் ரியலி ஸாரி டு ஸே திஸ்... இப்படித்தான் நல்லவிதமா நடக்கும்னு கண்டிப்பா யாராலயும் இப்ப சொல்ல முடியாது...ஆனா, மோசமான விளைவுகள் இருக்காதுனு நம்பறத்துக்கான அறிகுறிகள் தென்படறதால, நம்பிக்கை இழக்கவேண்டாம்னே நான் நினைக்கிறேன்..."

பேசியவரின் கைகளைச் சத்யா பற்றிக் கொண்டான்.

"எந்த நம்பிக்கையோட நீங்க இப்படி பேசறிங்கனு நான் தெரிஞ்சுக்கலாமா, டாக்டர்?"

"தாராளமா... இப்படி வாங்க...இப்ப டார்ச் லைட்டை ஜனனி கண்ணுல அடிக்கப் போறேன்... என்ன ஆகுதுனு சொல்லுங்க பார்க்கலாம்,"

பையிலிருந்து டார்சை எடுத்து, ஜனனியின் இமைகளைப் பிரித்து இரண்டு கண்களிலும் மாற்றி மாற்றி அடிக்க,

இடது வலது பாப்பாக்கள் வெளிச்சம் தங்கள் மேல் பட்டதும் சட்டென்று சுருங்கி பின் நகர்ந்தும் விரிய...

பார்த்ததை சத்யா வெளிப்படுத்தினான்.

"கரெக்ட்...ப்ரெய்ன் ஸ்டெம்—அதாவது மூளைத் தண்டு. இது ரொம்ப முக்கியமானது, ஸ்வாசம், இருதயத் துடிப்பு இவை தவிர, உடலின் இயக்கத்தைப் பெருமளவுக்குக் கண்ட்ரோல் பண்ணற சக்தி இதுக்கு இருக்கு. ஏதாவது காரணத்தால இந்த மூளைத்தண்டு பாதிக்கப்பட்டிருந்தா, முதல்ல அதை அடையாளம் காட்டறது கண் பாப்பாக்கள் தான்...ஒரு பக்க பாப்பா வெளிச்சத்தைக் கண்டு தன்னிச்சையா உடனே சுருங்கி, பிறகு விரிய

லைனா, அந்த பக்க மூளைத் தண்டுலே ஏதோ கோளாறு. ப்ரக்ஞை திரும்பறப்போ நிச்சயமா உடம்புலேஏதோ ஒரு அங்கம் பாதிக்கப்படும்னு எதிர்ப்பார்க்கலாம். இப்ப, ஜனனியைப் பொறுத்தவரை இந்த பயம் அனாவசியம்னே எனக்குத் தோணுது...ஆனா, இப்படிச் சொல்றதனால நாளைக்கு ஜனனி முழுமையா பழையபடி ஆயிடுவாங்களானு நீங்க கேட்டா, அதையும் என்னால அடிச்சு ஆமாம்னு சொல்ல முடியாது...காட் ஈஸ் க்ரேட்... நல்லதே நடக்கும்ன்ற நம்பிக்கையோட இருப்போம்.''

ஆறுதல் தரும் விதத்தில்பேசிவிட்டு அவர் புறப்பட்டுப் போக, மதுராந்தகம் போய் மழையில் மாட்டிக்கொள்ளாதிருந்தால் இத்தனை எதிர்பார்ப்புக்கும் அவசியமே இல்லாமல், ஜனனி மீண்டும் துளிர்க்க இடமே தராமல் அவளைக் கொன்று, எரித்து, பிடி சாம்பலாக்கி இதற்குள் கடலில் கூட கரைத்திருப்போம்—என்கிற எண்ணம் ஓநாயாக நெஞ்சுள் அவ்வப்போது ஓலமிட்டதை ஒரே அமுக்காய் அமுக்கி பசி, தாகம், தூக்கம் என்று எதுவுமே இல்லாத மாதிரி சத்யாவும் மனைவி அறையிலேயே பழியாகக் கிடக்க ஆரம்பித்தான்.

எப்படியாவது ஜனனிக்குச் சுருக்க பிரக்ஞை வரவழைத்து விட வேண்டும் என்கிற துடிப்பில், முன்பு முயற்சித்தது போல, அறையில் சதா நாட்டிய இசையை ஒலிக்கச் செய்தான்; மல்லிகைப்பூ, ஊதுபத்திகளை வைத்து ஜனனிக்குப் பிடித்த சூழ்நிலையை உண்டாக்கினான். காலில் அல்தா பூசினான், சலங்கையைக் கட்டினான் கையைப் பற்றிக் கொண்டு இரவு இல்லை, பகல் இல்லை என்று அருகில் அமர்ந்து, 'கண்ணைத் திற ஜனனி... பாட்டைக் கேள் கண்ணம்மா...ராஜாத்தி, வா...எனக்காக விழித்து எழுந்து வா...'' என்று வாய் வலிக்காமல் வேண்டிப் புலம்ப...



இத்தனைக்கும் பலன் இருக்கிற தினுசில் ஜனனியின் முகத்தில் ஒரு தெளிவு சிறுகச் சிறுகத் தோன்றவே செய்தது.

அவளிடம் காணப்பட்ட முன்னேற்றம் தைரியத்தைத் தர, ஆறாம் நாள் டாக்டர் மூக்கில் செருகி இருந்த ரைல்ஸ் ட்யூபை எடுத்துவிட்டு' வாயில் பாலைவிட, முதல் முறையாய் பல மாச இடைவெளிக்குப் பின்னர் ஜனனி தானாகப் பாலை விழுங்கினாள்; ஒன்பதாம் நாள் பிற்பகலில் தன்னிச்சையாய் தலையை இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்குப் புரட்டினாள்; பன்னிரண்டாம் நாள் சில நொடிகளுக்குக் கண்களைத் திறந்து வெற்றுப் பார்வை பார்த்துவிட்டு மூடிக்கொண்டாள்.

மறுநாள் டாக்டர் அவளைப் பரிசோதித்துவிட்டு ஊசி போட்டுக் கொண்டிருக்கையிலேயே, அருகில் உட்கார்ந்திருந்த சத்யாவும், மற்றவர்களும் ஆச்சர்ய சந்தோஷத்தில் நிலை குலைந்து போகும் தினுசில், கண்களை நன்றாகத் திறந்து மலங்க மலங்க விழித்ததோடு, தலையைத் தூக்கி சற்றே எழவும் முயற்சித்தாள்.

# 21

''ஜனனி...''

''.........''

''ஜ...ன...னி...இங்க பாருங்க''

''......''

''இது யார் சொல்லுங்க...இப்படி...இந்தப் பக்கம் பாருங்க ஜனனி...''

எழுந்தவள், அழுத்தம் திருத்தமாக டாக்டர் பேசுவது காதில் விழாத மாதிரி மீண்டும் தலைகாணியில் சாய்ந்தாள். கண்களை மூடிக் கொண்டாள்.

'ஹேய் சத்யா' என்று அவள் அழைக்கப் போகும் நொடியை எதிர்பார்த்தவாறு அருகில் நின்றிருந்த சத்யா பதறினான்.

"என்ன டாக்டர் இது"

"ரிலாக்ஸ் மிஸ்டர் சத்யகுமார்...எதுக்காக இந்த பதட்டம்?"

"கண்ணைத் திறந்து, எழுந்துக்க முயற்சி பண்ணவங்க எந்தவித ரெஸ்பான்ஸும் இல்லாம மறுபடியும் ஏன் படுத்திட்டாங்க? திரும்பக் கோமாவா? மயக்கமா?'

"இரண்டும் இல்லே...ஜனனி இன்னும் பூரணமா குணமாகலை...அதை நினைப்பில் வெச்சிக்கங்க...ஷி ஈஸ் ஸ்டில் இன் ஸ்டுப்பர் ஸ்டேஜ்...மெள்ள மெள்ளதான் ரெஸ்பான்ஸ் வரும்...பயப்படாதிங்க, முக்கியமா அவசரப்படாதிங்க..."

எதைப்பற்றிய பிரக்ஞையும் இல்லாத தினுசில் படுத்து விட்டவளைப் பார்க்கையில் டாக்டர் பேச்சை நம்புவது கஷ்டமாக இருந்தது.

இது பழைய கோமாதானோ...பத்து மாசமாக கை, காலை அசைக்காமல் ஜடமாய்க் கிடந்தது போல மீண்டும் கிடக்க முனைந்து விட்டாளோ என்று பயமாய் இருக்க, கட்டிலில் உட்கார்ந்து குனிந்து 'ஜனனி' என்றழைத்தான்.

"ம்"

மிகச் சன்னமான 'ம்' தான்; ஆனாலும் சற்று முன் ஜனித்த இருப்புக் கொள்ளாமையைத் தணிக்கும் வலு அதற்கு இருக்க, தொடர்ந்து நாலு தரம் 'ஜனனி' என்று கூப்பிட்டு அவள் ஒவ்வொரு தரமும் பதிலுக்கு 'ம்' 'என லேசாகப் பயம் குறைந்த பார்வையுடன் சத்யா டாக்டரை ஏறிட்டான்.



அந்த பரிதவிப்புப் புரிந்த மாதிரி டாக்டர் அவன் தோளில் கைவைத்து இரண்டுதரம் தட்டிக் கொடுத்தார்.

"ஒண்ணு சொன்னா கேப்பீங்களா மிஸ்டர் சத்யகுமார்? இங்கேயே உட்கார்ந்திட்டு இருக்காம கொஞ்சம் வெளில போயிட்டு வாங்களேன்...ஜனனியோட ஒவ்வொரு அசைவையும் கிட்ட இருந்து பார்க்கணும்ங்ற தவிப்புல பதிமூணு நாளா நீங்க இந்த அறையை விட்டு இந்தப்பக்கம், அந்தப்பக்கம் நகராம இருக்கீங்க...நௌ ஈஸ் நாட் குட்ஃபார் யூ...ஜூபிலிக்கு அரைநாள் போயிட்டு வாங்க...இல்லேன்னா வேறு எங்கயாவது... உரிமை எடுத்துக்கிட்டு பேசறதுக்கு மன்னிக்கணும்...பட் ஐ'ம் கன்சர்ன்ட்...புரிஞ்சிக்கங்க, ப்ளீஸ்...

நிஜமான அக்கறையுடன் அவர் பேசினதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாதமாதிரி சத்யா இயலாமையுடன் நிற்க, "அப்ப நான் கிளம்பறேன்...மறுபடி நாளைக் காலைல வரேன்" என்று சொல்லி டாக்டர் புறப்பட்டுப் போனார்.

"காபி சாப்பிடறிங்களானு அம்மா கேட்கச் சொன்னாங்க"—முத்து.

வேண்டாம் என்று தலையசைத்து அவனை அனுப்பி விட்டு ஜன்னலருகில் சென்று நின்று கொண்டான்.

மழை ஒன்பது மணி சூரியனைக் கண்ணில் காட்ட மறுத்த கறுப்பு மேகங்கள் ஈரத்தின் பாரம் தாங்காமல் தலை தொங்கிப்போன செடிகள், ஜலத்தேக்கங்கள்...

பார்த்துக் கொண்டே நிற்கையில் திடுமென, சென்ற முப்பதாம் தேதி மதுராந்தகத்துக்குச் சென்று திரும்பிய போது இதே மாதிரி பிசாசாய் மழை கொட்டியதும், சிங்கப்பெருமாள் கோவில் அருகே மரமொன்றுபெயர்ந்து விழுந்திருந்ததும் போக்குவரத்து ஸ்தம்பித்ததும், இங்கு

ஓடி, அங்கு ஓடி பணத்தைக்கொட்டி ஏழெட்டு ஆள்களை அழைத்து வந்து, ஓரமாய் மரக்கிளைகளை வெட்டி வழி பண்ணிக் கொடுக்கக் கெஞ்சியதும் ஒவ்வொன்றாகக் கண்முன் தோன்ற...

ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த விரல்கள் நமநம என்றன. நடுங்கின,

அன்று மட்டும் திட்டமிட்டபடி ஊருக்குத் திரும்பி இருந்தால்?

சரியாக ஒன்பது மணிக்குப் பாலில் மருந்தைக் கலந்து கொடுக்கத் துவங்கி இருப்பேன்...

ஒன்பதே காலுக்கு...கொடுத்து முடித்திருப்பேன்...

ஒன்பதே முக்கால்..ஸ்வாசம்நிதானப்பட ஆரம்பித்து நாடித்துடிப்பு அதிகரித்து...

பத்து—ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து...

பத்தரை...மெள்ள மெள்ள...

மெள்ள...மெள்ள...

பதினொன்று...பன்னிரண்டு...

என் ஜனனி அடங்கிவிட்டாள்...

இட்ஸ் ஓவர்...

முடிந்து விட்டது...

''ச...த்......யா...''

இரண்டு வாரங்களுக்கு முன் நடந்து முடிந்திருக்க வேண்டிய சம்பவங்களால் ஆக்ரமிக்கப்பட்டு நின்றிருந்தவனை உலுக்குவதற்கு முதன்முறையாக அந்த தீனமான அழைப்புக்கு சக்தி இல்லாமல்தானே போனது.



''ச...த்...யா!''

''யா...ர்?''

கூப்பிடுவது யார்?

சடாரென்று திரும்பினான்,

ஜனனியா?

எப்படி?

அவளைத்தான் கொன்று விட்...

''ச...த்...யா''

அவனது சிந்தனை ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் இந்த முறை அழைப்பு இருக்க, சத்யா பரிதவிப்புடன் இரண்டே எட்டில் கட்டிலை நெருங்கினான்.

கண்கள் ஒருவிதத் தெளிவுடன் திறந்திருக்க, உதடு சன்னமான புன்னகையில் சற்றே விரிந்திருக்க, அவனுடைய ஜனனி...

''கண்ண...ம்மா''

அவசரமாய் அசுரத்தனமாய் அவளை வாரி அணைத்து வகிடு, கண்கள் உதடுகள் என்று மாறி மாறி முத்தமிட்டபோது.சத்யாவின் ஓராயிரம் குயில்கள் சுநாதமாய் கூவின; மயில்கள் வண்ண வண்ண தோகைகளை விரித்தாடின. ஜாதி மல்லிகைப் பூக்கள் அதிகமணத்துடன் மலர்ந்தன; நீரூற்றுகள் உயரே உயரே சிலிர்ப்புடன் கிளம்பின...

''ஜனனிம்மா...என் ராஜாத்தி...சொல்லு...சொல்லு. நான் யாரு சொல்லு...''

''ச...த்யா...''

இன்னொருதரம்...நான் யாரு?''

''சத்...யா...''

''மறுபடி''

''சத்யா...''

''இன்னொரு தரம்டா...கண்ணா...ராஜா...ப்ளீஸ் கூப்பிடுடா...''

''சத்யா''

பேசக் கற்றுக் கொண்ட குழந்தை மாதிரி திரும்ப திரும்ப அவன் பேரை ஜனனி கூற, சத்யா அவளை இன்னும் இறுக அணைத்து, மடிமீது வாரிக் கிடத்திக் கொண்டான்.

இவனின் உற்சாகக் குரல் கேட்டு ஓடிவந்த அம்மா நர்ஸ் முத்து, இதர ஆள்களைக் கண்டதும் ''என் ஜனனிக்கு நினைவு திரும்பிடுச்சும்மா', என்றான்; ''முத்து, அம்மா என் பேர் சொல்லி கூப்பிடறாங்க பாரு'' என்றான்; நர்ஸ், உடனே டாக்டரை வரச்சொல்லுங்க... என் ஜனனிக்கு பிரக்ஞை வந்திடுச்சு'' என்றான்.

''கண்ணம்மா...என் ஜனனி கண்ணம்மா...யூ ஆர் நார்மல்...என்னை உனக்கு அடையாளம் புரியுது... இனிமே எதுக்குமே கவலை இல்லே...'' என்று அரற்றிய போது...கண்களில் பொங்கிய நீர் கன்னங்களில் கோடு போட்டு. ஜனனியின் முகத்திலும், மார்பிலும் தெரித்தது.

இன்று மாலைக்குள் ஜனனி இன்னும் தெளிவடைந்து அம்மா, டாக்டர், முத்துவை ஸ்பஷ்டமாக அடையாளம் காட்டினாள்.

மறுநாள் தலைகாணியில் சாய்ந்தபடி உட்கார்ந்து ''எனக்கு என்ன ஆச்சு?'' என்று கேள்வி கேட்டாள்.



''என்ன நடந்ததுனு நான் சொல்றத்துக்கு முன்னால உங்களுக்கு என்னென்ன நினைவு இருக்குனு பார்க்கலாமா? முயற்சி பண்ணுங்க ஜனனி...'' என்று டாக்டர் தூண்ட, சிரத்தையுடன் யோசனை பண்ணிப் பேசினாள்.

''ம்ம்?... சித்திரை மலருக்கான டிஸ்கஷன் நடந்திட்டிருந்தது ஞாபகம் இருக்கு...நான் மட்டும் நாட்டிய நிகழ்ச்சிக்குத் திருச்சிக்குப் போனேன்...சரிதானே? அப்புறம்?... ம்? நாமகிரிம்மாவும் நானும் அகிலாண்டேஸ்வரி கோவிலுக்குப் போயிட்டு வந்தோம்... தென் சாயங்காலம் கச்சேரி இருந்தது இல்லே? போனேனா? ஆடினேனா? ஏன் எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லே?''

கண்களை இடுக்கி, புருவங்களைச் சுருக்கி யோசித்து, எதுவுமே நினைவு இல்லாத அவஸ்தையுடன் அமர்ந்திருந்தவளைச் சமாதானம் செய்யும் விதமாக டாக்டர் மென்மையாகப் புன்னகைத்தார்

''நினைவு இல்லேன்னு பயப்படாதீங்க ஜனனி... அன்னிக்கு என்ன நடந்ததுனு நான் சொல்றேன்... கச்சேரிக்குத் தயாராகி, நாலு அயிட்டம் ஆடினப்புறம், அதுக்கு என்ன பேர் சத்யா? அ, வர்ணம், அதை ஆடி முடிச்சு உள்ளே போறப்போ படுதா அறுந்து தலைல விழுந்ததுல நீங்க மயக்கமாயிட்டீங்க...

''ஓ!''

வளவளவென்று நீட்டி முழக்காமல் தேவையான விவரத்தைக் கூறிய சில நிமிஷங்களில் அசதியுடன் ஜனனி படுத்த பிறகு டாக்டர் வெளியில் வந்தார். சத்யா தொடர்ந்தான்.

''திருச்சிக்குப் போன வரைக்கும் நினைவு இருக்கறவங்களுக்கு ஆக்ஸிடெண்ட் ஏன் ஞாபகம் இல்லே டாக்டர்? என்கிட்ட நீங்க எதையும் மறைக்கக்கூடாது... ப்ளீஸ் நிஜத்தைச் சொல்லுங்க... ஜனனியோட மூளை பாதிக்கப்பட்டிருக்கா?''

சின்ன குரலில் சத்யா படபடக்க. டாக்டர் சிரித்தார்.

"நீங்க இப்படி கேட்பிங்கனு நான் எதிர்பார்த்தேன் ...ஜனனியோட மூளைல ஒரு கோளாறும் இல்லே... வீணா எதையாவது நினைச்சி குழம்பாதிங்க... இப்ப அவங்களுச்கு ரிட்ரோக்ரேட் அம்னிஸியா இருக்கு... தலைல அடிபட்டவங்க நடுவுல இந்த நிலை சகஜமானது, விபத்து வரைக்கும் நினைவு இருக்கும் அப்புறம் என்ன நடந்ததுனு தெளிவா புரியாது, இதற்காகப் பயப்பட வேணாம்... ஜனனி சரியானபடிதான் ரெகவர் ஆயிட்டு வராங்க...நல்லவிதமா பிஸியோதெரபி கொடுத்தோம்னா இன்னும் பத்து பதினைஞ்சு நாள்ல அவங்களைப் பழைய படி எழுந்து நடமாட வெச்சிடலாம்ன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

அவருடைய உற்சாகப் பேச்சு யானைபலத்தைத் தர அன்றே பிஸியோ தெரபிஸ்டை வீட்டுக்கு சத்யா வர வழைத்தான்.

பத்து மாசமாக இயங்காமல் இருந்த கை,கால்களைப் பக்குவமாய் நீட்டி மடக்கி அவர் பயிற்சி கொடுத்ததைக் கவனத்துடன் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, நாலாம் நாளிலிருந்து தானே அவைகளை ஜனனிக்குச் செய்த தோடு, மெதுவாக எழுந்து நின்று அவள் நடக்க விரும்பிய போது, கூடவே நின்று தோளைச் சுற்றி ஒரு கையும், இடுப்பில் ஒரு இன்னொரு கையும் கொடுத்து ஆதரவாகத் தன் மேல் சாய்த்துக் கொண்டு நடக்க வைத்தான்.

அந்த வெள்ளிக்கிழமை தள்ளி நின்று அவன் கண் காணிக்க தானாகப் புல்வெளியில் பத்தடிகள் நடந்து விட்டு சின்ன குழந்தையின் மகிழ்ச்சியுடன் கைகளைத் தட்டிக்கொண்டு ஜனனி பூரித்த நிமிஷத்தில் தெய்வத்தின் கருணையை நினைத்து சத்யா உருகித்தான் போனான்.



ஆனால், அன்று இரவு இரண்டுபேரும் உறங்கிவிட்ட பிறகு, கனவா, இல்லை கற்பனையா என்று சொல்லத் தெரியாமல் தூக்கத்திலிருந்து விடுபட்டவனை, பக்கத்தில் படுத்திருப்பது ஜனனி இல்லை. அவனது உயிரற்ற சடலம் என்றவேண்டாத பயம்ஆட்டிவைக்க, தொடர்ந்து படுக்க இயலாமல் கதவைத் திறந்துகொண்டு பால்கனிக் குச் சென்று நின்றபோது அவன் உடல் வியர்வையில் ஏகத்துக்கு நனைந்திருந்தது.

# 22

காலைப்பொழுது சின்ன குழந்தையாய் மலர்ந் திருந்தது.

சூரியன் உதயமாப் போகிறான் என்பதைக் கட்டியம் கூறும்வானம்; கூட்டமாய் எங்கோ அவசரமாய்ப்பறக்கும் பறவைக்கூட்டம்; யார் வீட்டுக் கொல்லையிலிருந்தோ ம்மா... ஆ... என்று குரல் கொடுக்கும் பசு; திருஷ்டி பரிகாரமாய்க் கட்டிய தொன்டையில் கரையும் காகம்; காற்றின் வேகத்தில் எட்டிப் பார்த்து மறையும் செண்பக மரக்கிளை, அதில் மஞ்சள் மஞ்சளாய் இலை மறைவில் தெரியும் பூக்கள் சன்னமாய் நாசியில் ஏறி போதையூட்டும் அவற்றின் மணம்...

விழிப்புக் கண்டுவிட்டாலும் எழுந்திருக்க மனமில்லா மல் ஜனனி அப்படியே படுத்திருந்தாள்.

திறந்திருந்த ஜன்னல் வழியாக வெளியே வளரத் தயாராகிக்கொண்டு இருக்கும் அந்தக் காலை நேரம் அலாதி பரவசத்தைத் தர, மனசுக்குள் ஆண்டாளின் பாசுரம் இனிமையாக ஒலித்தது.

'சிற்றஞ்சிறு காலே வந்துன்னை சேவித்து...
பொற்றாமரை அடியே போற்றும் பொருள்
கேளாய்......
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாமாட்
செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர்
எம்பாவாய்...''

எத்தனை அழகான பாசுரம்—

மலயமாருத ராகத்தில் குழைந்து குழைந்து நாமகிரி அம்மாள் பாடி, அபிநயிக்கையில் கண்கள் பனித்துப் போகும்...சில சமயம் முத்தாக நீர் திரண்டு கன்னத்தில் வழியும் ...தொண்டை இறுகிவிடும்...ஹிருதயம் அந்த உத்தமமான காதலில் உருகி என்ன பக்தி இது, என்ன எண்ணம் இது என்று தவிக்கும்...

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாமாட்
செய்வோம்

ஆஹா...அந்தக் காதல் எத்தனை தீவிரமாக இருந்தால் இப்படி ஒரு வேண்டுதல் வரும்?

'மற்றை நம் காமங்கள் மாற்றேலோர்
எம்பாவாய்...

சதா உன்னையே நினைக்க ஸ்மரிக்க விரும்பினாலும் இதர ஆசாபாசங்கள் என்னை ஆக்ரமித்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது—அதனால் மற்றக் காமங்கள் ஏதும் தீண்டாது என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையது—என்று வேண்டும் உரிமை எத்தனை அலாதியானது.

பாசுரத்தையும், அதன் கருத்தையும் நினைத்து உடம்பும், மனசும் பரபரத்துப் போக, எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.



பல் விளக்கி, முகம் கழுவி, உடை மாற்றிக் கொண்டு இந்த அருமையான அதிகாலையை வீணாக்காமல்—மெல்லிய குரலில் தானே பாடிப் பாசுரத்தை அபிநயித்தால் என்ன—என்று எழுந்த ஆர்வத்தைப் பிரயத்தனப்பட்டு அடக்கினாள்.

கூடாது.

சாதாரணமாக நடமாடி, சின்னசின்ன வேலைகளைச் செய்யத் துவங்கி விட்டாலும் நாட்டியம் ஆடுவது மட்டும் இப்போது வேண்டாம் என்று டாக்டர் கூறி இருக்கிறாரே!

—இன்னும் பத்து நாள் பொறுத்துக்கங்க ஜனனி... கொஞ்சம் கூடகளைப்படையாம அன்றாட வேலைகளை நீங்க முதல்ல செய்ய ஆரம்பிக்கணும்...இது முக்கியம் தினம் ஒண்ணா புதுசா ஏதாவது முயற்சி பண்ணிட்டு, படிப்படியா உங்க பழைய ரொடீனைக்கொண்டு வந்திடலாம். பொறுமையா இருங்க...

—ஜதீஸ்வரமும் தில்லானாவுமா ஆடறேன்னு சொல்றேன் டாக்டர்? சும்மா இரண்டு பதம் மட்டும்தானே?

ப்ளீஸ் வேணாம்மா...ஓவரா ஸ்ட்ரெய்ன் பண்ணி, இத்தனை நாளா நாம எல்லாம் பட்ட பாட்டை வீணாக்கறது புத்திசாலித்தனமா? அதுவும் மிஸ்டர் சத்யகுமார் ராத்திரி பகல் இருபத்திநாலு மணி நேரமும் உங்களை விட்டு இந்தண்டை அந்தண்டை நகராம கஷ்டப்பட்டதுக்காகவாவது நாம நிதானமா இருக்கறது, நல்லதில்லையா, சொல்லுங்க?

வாஸ்தவம்...

சத்யாவின் அந்த அவஸ்தையையும், பிரயத்தனங்களையும் நினைத்துப் பார்க்காமல் என்ன ஆசை இது குழந்தைத்தனமாய்!

ஒரு நாளா, இரண்டு நாள்களா!

பத்து மாசங்கள்!

இமையோடு இமை சேர்க்காமல், தன்னுடைய இன்பம், சுகம், சௌகர்யம் என்று எதையுமே எண்ணிப் பார்க்காமல் சத்யா வாழ்ந்த அந்தப் பத்து மாசங்கள்!

நம்பிக்கை நட்சத்திரத்தைக் கண்ணில் காட்டாத அந்த நீ...ண்...ட பத்து மாசங்கள்!

முதல் தடவையாய்த் தான் கோமாவின் பத்து மாசங்கள் ஆழ்ந்திருந்த சேதி தெரிந்ததும் ஜனனி அதிர்ந்து போனாள்.

ஏதோ ஒரு வாரம் பத்து நாள்கள் என்று சொல்லப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்புடன் கேள்வி கேட்க, யாருமே சரியாகப் பதில் கூறாமல் மழுப்பியதோடு காலெண்டரைக் கண்ணில் காட்டாமலும் வைத்திருந்ததை ஏனோ அவள் பெரிசுப்படுத்தவில்லைதான்.

ஆனால் தெம்பு வந்து நன்றாக எழுந்து நடக்க ஆரம்பித்த பிறகு முதல் முறையாய் அந்த வார மித்ரா'வைக் கொண்டுவரச்சொல்லி புரட்டின போதுதான் அட்டையில் அச்சிடப்பட்டிருந்த தேதி தம்மென்று கனமாய் நெஞ்சைத் தாக்கியது.

அப்புறம் டாக்டர், மாமியார், முத்து மூலமாய் அறிந்துகொண்ட உண்மைகள்.

ஆயுசு பர்யந்தம் இப்படியே கோமாவில் கிடந்தாலும் கிடக்கலாம் என்று நிபுணர்கள் கைவிரித்தது, ஹாஸ்பிடலில் வைத்திராமல் வீட்டுக்கு அழைத்து காலை மாலை என நர்ஸ் போட்டு கவனித்தது, பசி—தூக்கம்—வேலை—பொழுது போக்கு என்று எந்த நினைப்புமின்றி ஒருவித வெறியோடு கால்களில் அல்தா பூசி சலங்கை கட்டி, நாட்டிய இசையை ஒலிக்கச் செய்தது; இன்னும்...இன்னும்...

கேட்கக் கேட்க ஜனனி திகைத்தாள் பிரமித்தாள், குழைந்தாள் சிலிர்த்தாள் புளகாங்கித்தாள்...

இமைப்பிலன் நயனம்—அண்ணனைக் காக்க காட்டுக்கு வந்து அத்தனை வருஷங்களும் இமையோடு இமை



சேர்க்காமல் விழித்திருந்ததாகச் சொல்லும் லட்சுமணனின் பெருமைக்கு என் சத்யா எந்த விதத்தில் குறைந்து போவார்!

இது என்ன அன்பு!

இந்தக் காதலுக்கு நிஜத்திலேயே நான் தகுதி உள்ளவள்தானா?

விவரம் பூராவும் அறிந்த இந்த சில நாள்களாக நினைத்து நினைத்து ஹ்ருதயம் நெகிழ்ந்து போகிற தினுசில் இப்போதும் என்னமோ செய்ய, பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த சத்யா மார்பில் ஜனனி மெதுவாகத் தலைவைத்துப்படுத்தாள்

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு

உற்றோமே ஆவோம் உனக்கே நாமாட்செய்வோம்

சத்தியமாய் அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் கடவுளே, என்னை மீண்டும் இந்த சத்யாவுக்கே மனைவியாக்கு...அடுத்ததை தவிர மீண்டும் மீண்டும் பிறக்க நேரிட்டாலும் என் சத்யாவுக்கே நான் மாலையிட வேண்டும் என் சத்யா கரத்தாலேயே மாங்கல்யம் அணிய வேண்டும் என் சத்யாவை நெஞ்சில் பீடம் போட்டு அமர்த்தி அன்பாக இதமாக மனப்பூர்வமாகப் பேணிக்காக்க வேண்டும்...

பத்து மாச காலமாக என்னிடம் இவர் காட்டிய தன்னலமில்லாத அன்பைத் திருப்பிக் கொடுக்க இந்தப்பிறவி போதாது அதனால் இந்த ஜன்மத்தில் மட்டுமல்லாது ஏழேழ் பிறவிக்கும் இந்த ஆண் மகனே எனக்குப் புருஷனாக வேண்டும்—இந்த வரத்தை எனக்குத் தருவாயா தெய்வமே?

என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து ததாஸ்துஎன்று மங்களகரமாய் வாழ்த்தேன்...

உணர்ச்சி வசப்பட்டுப் போனதில் கண்களைக்கலக்கிக்கொண்டு நீர் கிளம்ப இந்த விசும்பல் சத்யாவை

எழுப்பி விடுமோ என்ற பயத்தில் ஜனனி கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

ஐ லவ் யூ சத்யா என்று சப்தமில்லாமல் முணுமுத்தவள் அதிர்வை உண்டாக்காமல் குனிந்து கணவனின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்ட பிறகு எழுந்து குளியல் அறைக்குச் சென்றாள்.

பல் தேய்த்த கையோடு குளித்து விட எண்ணிய வெந்நீர் குழாயைத் திருப்பி நிதானமாய் குளித்து முடித்தாள்

துண்டால் உடலைத் துடைத்துக் கொள்கையில் நீரின் நீராவிப் பட்டு கண்ணாடியில் பனி படர்ந்திருப்பது பார்வையில் விழ, ஆள்காட்டி விரலால் அந்தப் பனி படத்தில் 'ஜனனி லவ்ஸ் சத்யா'—என்று எழுதி விட்டு, ஓரடி பின்னால் நகர்ந்து அதை ரசித்தாள்.

பல் தேய்க்க வரும் சத்யாவின் முகம் இந்த வாசகத்தைப் படித்துவிட்டு எப்படி மலரும் என்று நினைத்துப் பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது,

அவர்கள் காதலின் மிகப் பெரிய ப்ளஸ் பாயிண்டே இந்த குறும்புதானே!

—ஹலோ? ஜனனி இருக்காங்களா?

—நீங்க யாரு?

—சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்

—யாரு?

—சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்...

—ஓ! ஜனனிதான் பேசறேன்.

—வணக்கங்க...நான் சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்

—அதான் ஏற்கனவே ரெண்டு தரம் சொல்லிட்டீங்களே...என்ன சார் விஷயம்?

—ஒண்ணுமில்லே...நீங்க டான்ஸ் ஆடணும், நான் பார்க்கணும் அதான்...



—என்னது?

—மன்னிச்சுக்க...நாக்கு குழறுது...நீங்க ஆடணும், நாங்க பார்க்கணும்...ன்றதை மாத்தி சொல்லிட்டேன்.

—நாங்கன்னா...?

—நாங்கதாங்க...

—அட, என்ன சார் எதையுமே தெளிவா சொல்ல மாட்டேங்கறீங்க? கச்சேரி பத்தி என்ன பேசணும்னாலும் தயவு பண்ணி நேர வாங்க...

—நோ உடனே வர்றது கஷ்டங்க. நீங்க டெல்லிலே இருக்கிங்க, நான் மெட்ராஸ்ல இருக்கேன்.

—மெட்ராஸ்லேந்து எஸ் டி. டி.யா பேசறீங்க மிஸ்டர்...மிஸ்ட...

—சேதுராம நாரயண மாத்ருபூதம்ங்க...

—சேதுராம நாராயண மாத்ருபூதமா? முதல்ல சொன்னப்போ, நரசிம்மனு சொன்னாப்பல இருந்துதே?

—இரண்டும்தாங்க... அம்மா, டேய் சேதுராம நரசிம்ம மாத்ருபூதம்'னு கூப்பிடுவாங்க. பாட்டி 'எலேய் சேதுராம நாராயண...

—ப்ளீஸ் இந்த விவரமெல்லாம் எனக்கு வேணாங்க... தயவு பண்ணி, எதுக்காக போன் பண்ணீங்கனு சொல்கிறீங்களா?

—அதான் சொன்னேனே...நீங்க ஆடி நான் இல்லே, நாங்க பார்க்க.

—அதையும்தான் சொல்லிட்டீங்களே... எங்கே, எந்த தேதில...

—வர்ற நாலாம் தேதி காட்டுமன்னார்குடியிலேங்க...

—எங்கே? எங்கே?

—காட்டுமன்னார்குடியிலேங்க... எங்க க்ளப் ஆண்டு விழாவுல நீங்க ஆடணும், நாங்க...

அடக்கி வைத்திருந்த கோபம் சுருக்கென்று கிளம்ப, ஜனனி அதட்டலாய்ப் பேசினாள்.

—விளையாட நீங்களா, மிஸ்டர்...

—சேதுராம நாராயண மாத்ருபூதம்ங்க...

—கடவுளே!

—இல்லிங்க...எம் பேரு சேதுராம...

திகைத்து நிற்கும் ஜனனியைக் கற்பனை பண்ண முடிய, தொடர்ந்து குரலை மாற்றி வேஷம் போட முடியாமல் சத்யா அந்தப் பக்கம் பகபகவென்று சிரித்தான்.

சத்யா!

அந்தக் குரலை உடனே இனம் கண்டு கொண்டு ஜனனி கூவ, சத்யா சிரிப்பு மறையாத குரலில் பேசினான்.

இன்னிக்குத் தேதி எப்ரல் ஒண்ணு!

என்னென்ன பேச்சுகள்! எத்தனை சிரிப்புகள்!

வெளியில் வந்து ஓசைப்படாமல் அலமாரியைத் திறந்து உடுத்த ஒரு புடவையைத் தேர்ந்தெடுத்த போது, துணிமணிகள் தாறுமாறாய் வாரி இறைந்திருப்பது பார்வையை உறுத்தியது.

படுக்கை அறை விட்டத்தில் ஒட்டடை; விளக்கு, ஃபேனில் தூசி; அலமாரியில் ஒழுங்கின்மை.

மனசில் வரிசையாக குறித்துக்கொண்டு அன்றைய பொழுதுக்குள் அத்தனையும் சீர் செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவள் கீழே இறங்கிப் போகும் முன் சற்று நின்று, உறங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள்.

இளைத்துப்போன புஜங்கள், கண்களைச் சுற்றும் கருவளையங்கள், அடர்ந்த கேசத்தில் பரவலாய் தலை தூக்கும் வெள்ளை முடிகள்...



பத்து மாசத்தில் நாலைந்து வயது கூடிப்போய்விட்ட மாதிரி சத்யா மாறிப் போயிருப்பது வருத்தத்தைத்தந்தது.

இப்படி ஏழுமணி வரை உறங்கும் பழக்கம் முன்பெல் லாம் கிடையாது என்ற நினைப்பைத் தொடர்ந்து இரண்டு நாள் முன்பு சத்யாவிடம் தான் இது குறித்துக் கேட்டது 'அ?' தூக்கம் வர்றதில்லேனு அப்பப்ப தூக்க மாத்திரை போட்டுக்கறேன் ·இல்லியா? (அதான்...என்று பதில் சொன்னதும நினைவுக்கு வந்து வேதனையை அதிக மாக்கியது.

ஏன் தூக்கம் வருவதில்லை?

வேலை அதிகமா?

நேற்றுகூட நடு இரவில் பால்கனியில் நின்று கொண்டிருந்தாரே! என்ன சத்யா என்று கேட்ட பிறகுதானே வந்து படுத்தார்?

அப்புறமா தூக்கமாத்திரை போட்டுக் கொண்டார்?

எதுவும் புரியாமல் இரண்டு நிமிஷம் குழம்பிவிட்டு கீழே இறங்கிப் போனவள் நாள் முழுவதும் அலமாரி ஒழிப்பதிலும், வீட்டை சீர் பண்ணுவதிலும் ஈடுபட அந்தக் குறுகுறுப்பு அத்துடன் நின்று போனது.

ஆனால், இரண்டாம் நாள் உதவி ஆசிரியர் சிவா வீட்டுக்கு வந்தபோது எதையுமே விளக்கமாகப் பேசாமல் அவரைச் சத்யா அனுப்பிவிட்டதையும், புறப்படு முன் ஒரு நிமிஷம் தனிமை கிடைத்தபோது சிவா இவளிடம் 'ஆசிரியர் முன்னே மாதிரி இல்லேம்மா— எதிலியுமே இன்ட்ரஸ்ட் எடுக்க மாட்டேங்கறார். மலர் வேலைய பத்தின டிஸ்கஷனுக்கு வராம நீங்களே பாத்துக்கங்க'னு சொல்றார்...என்ன விஷயம்னு புரியல' என்று வருத்தப் பட்டுக் கொள்ளவும், மீண்டும் குறுகுறுப்பு அவள் மனசில் ஏறி உட்கார்ந்து கொள்ளவே செய்தது.

# 23

சரியாக இரண்டாம் நாள் குறுகுறுப்பு பிராண்டலானது.

ஷேவ் செய்து கொள்ளாமல், கசங்கின உடைகளை மாற்றாமல், அலுவலத்துக்குப் போகத் தோன்றாமல், பேசாமல், சிரிக்காமல், படுக்கை அறையைவிட்டு வெளியில் வராமல் அன்று முழுவதும் சத்யா இருக்க, பிராண்டலின் வலி அதிகமானது.

''சத்யாவுக்கு என்ன ஆயிற்று?

உடம்பு சரியில்லையா?

மனசு சரியில்லையா?

ஏதாவது ப்ரச்னையா? அப்படித்தான் என்றாலும் விரல்விட்டு எண்ணும் நாள்களில் ஆளே மாறிப் போகும் அளவுக்கா?

என் மீது கோபமா?

அதுதான் என்றால் என்ன? ஏன்?

மதியம் சாப்பாடு வேண்டாம் என்று சொன்னதோடு வாய் வார்த்தையாக ஏதும் மேற்கொண்டு பேசாமல் தன் அறைக்குச் சென்று அவன் படுத்து விட்டதைத் தொடர்ந்து 'முகத்தில் கவலை கோடு போட லக்ஷ்மி 'என்னாச்சும்மா சத்யாவுக்கு? பத்துநாளாவே எப்படியோ இருக்கான் இல்லே? நாமாவே எதையாவது கற்பனை பண்ணிக்கக் கூடாதுனு பேசாம இருந்தேன், ஆனா நாலைஞ்சு நாளா அவன் பிரமை பிடிச்ச மாதிரி இருக்கறதைப் பார்த்தா வயத்தை என்னமோ பண்ணுது. அவன் கிட்ட ஏதோ வித்தியாசம் எனக்குதான் தோணுதா இல்லே உனக்கும்தானா? கிடந்து பிழைச்ச பெண்கிட்ட வேண்டாததைப் பேசி, கிளப்ப வேணாம்னு பொறுத்துப் பார்த்



தேன் முடியலை...நான் ஏதாவது கேட்டா பதில் சொல்லாம விழிக்கறான்...என்னாச்சு உடம்பு சொகமில்லையா? இல்லே, பத்திரிகையே நஷ்டமா? புரியலையே ஜனனி...நீ வேணா பேசி பார்க்கிறயா?'' என்று கேட்ட பிறகு இனியும் சும்மா இருப்பது அசட்டுத்தனம் என்று மாடிக்குச் சென்றாள்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்து படுக்கை அறையில் கணவனைக் காணாமல் பார்வையை அலையவிட்டபாது மனசை ணக்கென்று என்னமோ வலிக்கக் கிள்ளியது.

மூன்று மணி வெயிலை லட்சியம் செய்யாத மாதிரி சத்யா பால்கனி சுவரில் சாய்ந்திருந்தான். பார்வை ஆகாயத்தை வெறித்தது.

கலைந்த முடி இரண்டு நாள் தாடி. அழுக்கு குர்தா.

இந்த அளவுக்கு உருமாறிப் போகும்படி சத்யாவுக்கு என்ன ஆயிற்று?

சரி—ஏதோ சமாசாரம் இருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம்...இப்படி இவர் நிலை குலையும் வரை நான் என்ன பண்ணிக் கொண்டிருந்தேன்?

—நாலைஞ்சு நாளா அவன் பிரமை பிடிச்ச மாதிரி இருக்கறதைப் பார்த்தா வயத்தை என்னமோ பண்ணுது.

அம்மா கவனித்திருக்கிறார், இரண்டு நாள்கள் முன் சிவா 'ஆசிரியர் முன்னே மாதிரி இல்லை, என்று சொல்லியிருக்கிறார், 'அய்யா சாப்பிடறதே இல்லே' என்று ராத்திரி பாக்கியம் என்னிடமே சலித்திருக்கிறாள் ஆனால், நான்?

இவர்களெல்லாம் உணர்ந்து வார்த்தைகளில் வெளிப்படுத்தும்வரை என்ன செய்து கொண்டிருந்தேன்?

சத்யாவின் மாற்றங்களைப் புரிந்து கொள்ளவேண்டியவள் நான்தானே?

அப்படியிருக்க, நாலைந்து நாள்களாய் என் கவனம் எங்கே இருந்தது?

வீட்டைச் சீர் பண்ணுவதில், தோட்டத்தில் அலங்கோலத்தைச் சரி செய்வதில், வந்து போகும் விருந்தாளிகளைக் கவனிப்பதில் அப்புறம், என்னைப் பற்றின சிந்தனைகளில் அமிழ்ந்து போவதில்...

எத்தனை மாசங்களாய் கோமாவில் கிடந்தேன். என்னை மீட்க சத்யாவும், இந்த குடும்பமும் எப்படியெப்படி மன்றாடியது. தெய்வக் கிருபையால் எதிர்பாராமல் எவ்வாறு மீண்டேன், இனிஎன்னைச் சீக்கிரமே சரி பண்ணிக்கொள்வது எப்படி...இந்த மாதிரி சுயநலமிகுந்த எண்ணங்களால் ஆக்ரமிக்கப்பட்டு வளைய வந்ததால்தான் என் சத்யாவின் வித்தியாசமான நடவடிக்கைகள் கண்ணில் படவில்லையோ?

ச்சே...

என்ன கண்ணைக் கட்டிவிட்ட குதிரைத்தனம்!

நிமிஷ காலத்துக்குள் புதுவிதக் கண்ணோட்டத்திலிருந்து அலச முற்பட்டது குற்ற உணர்ச்சியை ஏகத்துக்கு நிரப்பிவிட கண்களில் நீர் ததும்பியது.

அடி உதட்டைக் கடித்துஜனனி தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொண்டாள்.

மெதுவாக நடந்து பால்கனிக்குச் சென்றாள்.

பாதத்தில் வெயில் சூடு போட்டது.

கணவனை நெருங்கி தோளில் கை வைத்தாள் மென்மையாக அழைத்தாள்.



''சத்யா''

''......''

''சத்...யா...''

''ம்?''

லேசாகத் திடுக்கிட்டு, சத்யா திரும்ப, ஜனனி புன்னகைத்தாள்.

முகத்தில் குறும்பை படரவிட்டாள்.

''நிலா காயறதுன்னு நினைப்பா சத்யா?''

''ம்?''

''ஜிலுஜிலுனு காத்தும், குளுகுளுனு நிலாவும்... பிரமாதம்...''

''அ?''

''கால் சுடறது சத்யா...''

''ஸாரி கண்ணம்மா...?''

''எதுக்காக ஸாரி சத்யா? வெயில் உங்க காலையும் தானே சுடறது?''

''...''

''உள்ளே போகலாமா?''

அவன் கையைப் பற்றி அவள் அழைக்க, அறைக்குள் வந்தார்கள்.

படுக்கையில் அமர்ந்து, அவன் தோளில் முகவாயை பதித்துக் கொண்டாள்.

''ஏன் எப்படியோ இருக்கீங்க சத்யா?''

''இல்லியே!''

''யு ஆர் நாட் வெல்?''

''இல்லியே?''

எட்டி, அவன் கன்னத்தில் கன்னம் வைத்து உரசினாள்.

''அல்...சொர...சொரனு...என்ன சத்யா?''

அவள் சிணுங்கல் காதில் விழாதமாதிரி அவன் அமர்ந்திருக்க, அந்த வாடின முகமும், கலைந்த தலையும் கிட்டத்திலிருந்து பார்க்கையில் அலாதி வேதனையைத் தந்ததில், சத்யாவைக் கவனிக்காமல் சுயநலமாக இருந்து விட்டோமோ என்ற பரிதவிப்பு ஹிருதயத்தில் மீண்டும் இறக்கையை அசைத்து படபடத்தது.

''சத்யா...''

''ம்?''

''ஏன் ஷேவ் பண்ணிக்கலை?''

''பண்ணிக்கலையா?''

''என்னாச்சு சத்யா?''

''ஒண்ணுமில்லியே...''

''என் மேல கோவமா?''

சத்யா ப்ரயத்தனப்பட்டு சிரிக்கப் பார்த்தான்.

''சொல்லுங்க...''

''என்ன சொல்லணும்?''

''நான் கேட்ட கேள்விக்குப் பதில்?''

''என்ன கேட்டே?''

கண்கள் இடுங்க, நெற்றியைச் சுருக்கிக் கொண்டு சத்யா வினவியதும் ஜனனி நிஜமாகவே பயந்துபோனாள்.

''வாட்ஸ் ராங் சத்யா?''



''ஒண்ணுமில்லே ஜனனி?''

''ப்ளீஸ். சொல்லுங்க... 'மித்ரா' சர்குலேஷன் குறைஞ்சிடுச்சா? ப்ரஸ்ல ஏதாவது லேபர் ப்ராப்ளமா?''

அவள் கேள்வி மேல் கேட்டது சன்னமான எரிச்சலை உண்டாக்கிவிட்டதுபோல, தோளிலிருந்த கையை சத்யா தள்ளினான். எழுந்து, ஜன்னலருகில் சென்று நின்று கொண்டான்.

''ஐம்'ம் ஆல்ரைட்...வீணா எதையாவது நினைச்சு குழப்பிக்காதே...''

''யூ ஆர் நாட் ஆல்ரைட், நிச்சயமா உங்களை ஏதோ கஷ்டப்படுத்திக்கிட்டு இருக்கு...ப்ளீஸ் சொல்லுங்க...''

''.......''

''சித்திரை மலருக்கு இன்னும் அஞ்சு வாரம் கூட இல்லே...வழக்கமா நீங்க இந்த மலர்சமயத்துல எத்தனை பிஸியா இருப்பிங்க; இப்ப என்னடான்னா ஆபீஸுக்கே சரியா போறதில்லே...யூர் ஆர் ஆல்ரைட்னு நம்பச் சொல்றிங்களா?''

சத்யா தோளைக் குலுக்கி, நீ—நம்பாவிட்டால்—நான்—என்ன—பண்ணுவேன்...என்கிற தினுசில் உதட்டைப் பிதுக்க ஜனனி எழுந்து அவனை நெருங்கி மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''ஞாபகம் இருக்கா சத்யா? போன வருஷம் இதே சித்திரை மலர் சம்பந்தமா நாம என்னென்ன டிஸ்கஸ் பண்ணோம்னு? பிரமாதமா மலர் அமையணும்ன்ற ஆசைலே தினமும் ராத்திரி இரண்டுமணிவரைக்கும் புது ஐடியாஸ் குறிச்சு பேசினோம் இல்லே? அப்பத்தான் என் திருச்சி ப்ரோக்ராம் வந்தது...என்கூட வாங்க தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரங்களைப் பார்த்திட்டு வரலாம்னு

கூப்பிட்டேன்—'மலர் வேலை இருக்கு...நான் வரலை'னு சொல்லிட்டிங்க...நான் மட்டும் போயி...அடிபட்டு... கோமால விழுந்து...நீங்க அத்தனை பாடுபட்டு...''

கணவனைக் குஷிப்படுத்தும் நோக்கில் அவசரமாய் பேசிக்கொண்டு போனவளை 'ஸ்டாப் தட்'என்று தடுத்த போது அவன் குரல் உயர்ந்திருந்தது.

''ஸ்டாப் தட்...'' அவள் நிறுத்திவிட்டதைப் புரிந்து கொள்ளாமல் மறுபடியும் சத்யா உறுமினான்.

''ச...த்...யா...''

''வேணாம்...நீ எதையும் சொல்லிக் காட்ட வேணாம்...ப்ளீஸ் ஜனனி, லீவ் மி அலோன்...''

அதட்டலாய் பேசியவனின் கண்களில் ஒருவித வெறுமை பரவத்தொடங்கியது.

மேல் உதடு ஒரு பக்கமாய் இழுத்துக்கொண்டு துடிக்க ஆரம்பித்தது.

என்ன சொல்லிட்டோம் இத்தனை கோபம் உண்டாக என்று ஜனனி திருதிருக்க, அவன் கண்கள் அகல, குரல் நடுங்க, தொடர்ந்து பேசினான்.

''தப்புதான்...பயங்கர பாவ காரியம்தான். ஒத்துக் கறேன்...குத்திக்காட்டாதே...வேணாம்...ப்ளீஸ், ப்ளீஸ்... ப்ளீஸ்...''

கடைசி ப்ளீஸ் கிசுகிசுப்பாக வெளிப்பட்டு, விசும்பலாக மாற,

ஜனனி அதிர்ந்தாள்.

''சத்யா...என்ன ஆச்சு சத்யா? வாட்ஸ் ராங்... என்னைப் பாருங்க...லுக் அட் மி...''

இரண்டு கைகளாலும் பிடித்துத் தன் பக்கமாகத் திருப்பி படபடத்தும், தூக்கத்திலிருந்து விடுபட்டமாதிரி சத்யா விழித்தான்.



''எ...என்ன ஜனனி?''

''ஏன் என்னென்னமோ பேசறிங்க சத்யா? வாட்ஸ் பாதரிங் யூ?''

''......''

''தப்பு, பாவ காரியம், குத்திக் காட்டாதே—னு சொன்னிங்க...மனசுலே எதை வெச்சுக்கிட்டு அவஸ்தை படறீங்க? ப்ளீஸ் சத்யா...உங்க கண்ணுல ஜலம் வர்ற அளவுக்கு என் ப்ரச்னை?என்கிட்ட சொல்லக்கூடாதா? உங்க ஜனனிகிட்ட...ப்ளீஸ், கண்ணா...

சத்யா கண்களை இரண்டு தரம் சிமிட்டி துளிர்த்த கண்ணீரை அடக்கினான். எச்சிலைக் கூட்டி விழுங்கினான். கஷ்டப்பட்டுச் சுதாரித்துக் கொண்டான்.

''ஸாரிம்மா... களைப்பா இருக்கு...வேற ஒண்ணுமில்லே...நிஜமா ஐ'ம் ஆல்ரைட்...''

''சத்யா...நான் வந்து...''

''விட்டுடு ஜனனி...ப்ளீஸ், என்ன பேசினேன், ஏன் பேசினேன்னு எனக்கே புரியலை...டயர்டா இருக்கு...'.

அவனை மறுபடி படுக்கையில் உட்கார வைத்து, குடிக்க ஒரு டம்ளர் ஜலம் ஊற்றிக் கொடுத்தாள்.

''சரியா சாப்பிடாம இருந்தா களைச்சுப் போகாம வேற என்ன பண்ணும்? சூடா ரசம் விட்டு சாதம் கரைச்சு கொண்டு வரட்டுமா?''

''வேணாம்''

' காபி சாப்பிடறிங்களா?''

''ம்ஹூம்''

''ஜூஸ்?''

''வேணாம்''

என்ன பிடிவாதம் இது சத்யா?''

பேசியவளை நகர்த்திவிட்டு சத்யா படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

இரண்டு நிமிஷம் அப்படியே அமர்ந்து என்னவோ யோசனை பண்ணியபின் ஜனனி கேட்டாள்.

''பத்து மாசமா எனக்கு ராஜ வைத்தியம் பண்ணதுல செலவு எக்கச்—சக்சமா ஆயிடுத்தா சத்யா? பணப் பிரச்னை ஏதாவதா! ப்ளீஸ் சொல்லுங்க...''

பதில் வரவில்லை.

குரல் இன்னும் தழைய விட்டு, மீண்டும் அதையே கேட்க கண்களைத் திறந்து அவளை அழுத்தமாக சத்யா பார்த்தபோது சிவந்த விழிகளில் சற்று முன் தோன்றி மறைந்த வெற்றுப் பார்வை மறுபடியும் திரை போட்டிருந்தது.

# 24

பிடறியில் என்னவோ ஊறியது.

தட்டி விட்டான்.

மறுபடியும் ஊறல்...

கால்காலாய் பூரான்...ஒன்று நகர்கிற உணர்வு.

சடைப்பூரான்...

அவசரமாய் தலையை குனிந்து தட்டினான்.

ம்ஹூம் ஒன்றும் இல்லை.



மீண்டும், ஒன்று இரண்டு மூன்றாய் மரவட்டைகள் பின் கழுத்தில் கொத்தாய் நகர்ந்து, முதுகுத் தண்டில் இறங்கின.

என்ன அவஸ்தை இது!

சத்யா எழுந்து நின்றான். குர்த்தாவைக் கழற்றி இரண்டு தரம் உதறினான்.

ஒன்றையும் காணோம்...

கையைப் பின்னால் வளைத்து முதுகைத் தடவிப் பார்த்தான்.

எதுவும் தட்டுப்படவில்லை...

அரை நிமிஷத்தில் மறுபடியும் நமநமத்தது...

இந்த முறை அடை அடையாய் கம்பளிப் பூச்சிகள்... முதுகு பூராவும் அப்பிக் கொண்டு...

''அ...அ...அ...''

காலிங் பெல்லை பதட்டத்துடன் அழுத்த, முத்து ஓடி வந்தான்.

''ஸார்?''

''பூரான் முத்து...கம்பளிப் பூச்சி...''

''எங்க ஸார்?''

''முதுகுலே...கழுத்துல பாரு...பாரு.''

திரும்பிக் கொண்டு சத்யா நிற்க, பட்டு மாதிரி வழுவழுத்த முதுகில் எதையும் காணாமல் முத்து திகைத்தான்.

''ஒண்ணும் இல்லே ஸார்...''

''அ?''

''பூச்சி கீச்சி எதுவும் இல்லே ஸார்...''

காணோமா?

இத்தனை நாழிகை முதுகில் படைபடையாய் ஊறியவை நொடிப் பொழுதில் எப்படி காணாமல் போகும்?

''சரியா பாருடா...''

''......''

என்ன சொல்வதென்று முத்து விழிக்க, சத்யா கண்களை அகற்றி அதட்டலாய்க் கேட்டான்.

''எதுக்காக அப்படி பார்க்கறே? ம்? நான் பொய் சொல்றேன்னுதானே?''

''ஸார்...''

''உன் மனசிலே என்ன நினைக்கறேன்னு எனக்குப் புரியாதுனு நினைச்சியா? நீங்கள்லாம் பரம யோக்கியம் நான் பொல்லாதவன் பொய் சொல்றவன். தப்பு தண்டா பண்றவன் அதானே?''

''என்ன ஸார் எனனென்னமோ...''

''தட்ஸ் இனஃப்...என் முன்னால நின்னு வேஷம் போடாதே...கெட்அவுட்...''

''ஸார்...''

''போடான்னா...''

விழிகள் சிவக்க குரல் எடுத்து சத்யா பேச, முத்து பயந்து போனான்.

மேற்கொண்டு அங்கு நின்று விவாதிக்காமல் திரும்பி நடந்தான்.

அவன் சென்ற பிறகு சத்யா குர்த்தாவை மறுபடி உதறினான். நாற்காலியிடம் மண்டியிட்டு கம்பளிப் பூச்சி நெளிகின்றனவா என்று ஆராய்ந்தான்.



எங்கு ஓடி ஒளிந்து கொண்டன?

நாற்காலிக்கு அடியில், முதுகு பக்கம்...

ஊன்றிப் பார்த்தும் புரியாமல்போக, ஆயாசத்துடன் நிமிர்ந்தான்.

அசதி அதிகமாக இருந்தது.

இமைகள் மேல் கனமாக பாறாங்கற்களை உட்கார வைத்துவிட்ட மாதிரி கனம்.

வாய் அடிக்கடி உலர்ந்து போயிற்று.

நாற்காலியில் மறுபடி உட்கார பயமாக இருந்தது.

சித்திரை மலருக்காக மேஜையில் வைக்கப்பட்டிருந்த கதைகள், கட்டுரைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு பக்கமாய் ஏறி அமர்ந்தான்.

''உள்ளே வரலாமா ஸார்?''

சிவா.

நாலடி எடுத்து கிட்டத்தில் வந்தவன் சின்ன குரலில் கேட்டான்.

''உடம்பு சரியில்லையா ஸார்?''

சத்யா கோபத்துடன் அவனை ஏறிட்டான்.

''இதக் கேக்கதான் வந்திங்களா?''

''ஸாரி ஸார்... வந்து...நேத்தே உங்ககிட்ட கேட்டேன். நீங்க சரியா பதில் சொல்லலை, சைல்ட் ப்ராடிஜிகள் சிலரைச் சந்திச்சு வித்தியாசமா ஒரு கட்டுரையை சம்பந்தம் எழுதியிருக்கார், நீங்க சரினு சொன்னா, அந்தக் குழந்தைகளோட கலர் ட்ரான்ஸ்பரன்ஸிகளையே கவர் அட்டைலேபோட்டு, கவர்ஸ்டோரியா கட்டுரையை வெளியிட்டுடலாம்...''

''......''

சத்யாவின் மௌனத்தைச் சம்மதத்திற்கு அறிகுறியாகக் கொண்டு சிவா தொடர்ந்தான்.

''பல்லவி-னு ஒரு நாலு வயசு பெண் குழந்தை செய்யற அதிசயங்களை எல்லாம்கேட்டா, அசந்துடுவீங்க ஸார்...எழுபத்திரெண்டு மேளகர்த்தா ராகங்களையும் அத்தனை கச்சிதமா பாடிகாட்டறது...ஜனவரி 30ந்தேதி கிளம்பி சிங்கப்பூர், மலேசியா எல்லாம் போயிட்டு போனவாரம்தான் திரும்பி இருக்கு...அகாடமிலே...''

சத்யாவுக்குள் பட்டென்று என்னமோ வெடித்தது.

ஜனவரி முப்பதாம் தேதி...

ஒரு திங்கள் அன்று பிறந்த ஜனவரி முப்பது.

மழை பேய் மழை

வேரறுந்து விழுந்து கிடந்த மரம்...

ஒன்பது மணி...

பாலுடன் தூக்க மாத்திரைகள்...

கொஞ்சம் கொஞ்சமாய்...

மூச்சு முட்டுகிறது...

நாடித்துடிப்பு அதிகரிக்கிறது—

மெள்ள மெள்ள...

மேலேறி, இறங்கும் மார்பு அடங்குகிறது...

ஜனனியிடம் இது நாழிகை சன்னமாய் தென்பட்ட சலனம்.

இப்போது இல்லை.

போய் விட்டாயா?



கண்ணம்மா என்னை விட்டு பறந்து விட்டாயா?

அ?

அவளாக எங்கே போனாள்?

நான் அல்லவா அவளை அழித்து விட்டேன்.

இனி என் ஜனனி இல்லையா?

துக்கத்தில் நெஞ்சு முறுக்கிக் கொள்ள, வலியில் கண்கள் கலங்கின.

வெள்ளை முத்துகளாகத் திரண்ட நீர், ததும்பிக் கன்னத்தில் உருண்டோட...

சிவா பதறினான்.

''ஸார்...''

''......''

''ஸார்...என்னாச்சு ஸார்.''

சத்யா விழிகளை உயர்த்தி அவனை வெறித்தபோது கண்களில் சூன்யம் வெறித்திருந்தது.

''நான் வேணும்னு அதைச் செய்யலை சிவா...''

''ஸார்...''

''சத்தியா என் விருப்பத்துக்கு எதிராதான் செஞ்சேன். நீங்க நம்பணும்... யூதோனமிஃபார் ஸோ மெனி இயர்ஸ்... வேண்டாம்னு எவ்வளவோ தர்க்கம் பண்ணி பார்த்தேன்...ஜனனி கேட்கலை... வற்புறுத்தினா... அதுல அவளுக்கு ரொம்ப நம்பிக்கை...அதனாலதான்...நான்...''

எதிரில் சிவா நிற்பதை அடியோடு மறந்தவனாய் கிசுகிசுப்பாகப் பேசியவன் பாதியில் நிறுத்தினான். வெற்றுப்

பார்வை மாறாமல் மேஜையிலிருந்து இறங்கி, நடந்து போய் நாற்காலியில் உட்கார்ந்து கவிழ்ந்து கொண்டான்.

தோளின் குலுக்கல் அவன் அழுவதைச் சொல்லியது.

சத்யாவிடமிருந்து தலையும், காலும் புரியாத பேச்சையோ, இப்படி ஒரு நடத்தையையோ எதிர்பார்க்காத சிவா ஒரு நிமிஷம் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் குழம்பினான்.

பின் சப்தம் செய்யாமல் வெளியில்வந்து தன் அறையிலிருந்த டெலிபோன் மூலம் ஜனனியுடன் தொடர்பு கொண்டான்.

''வணக்கம். சிவா பேசறேன்... நீங்க உடனே ஆபீஸுக்கு வந்தா தேவலை...''

''எதுக்கு?''

''எடிட்டருக்கு உடம்பு சரியில்லாத மாதிரி தோணுது...''

அவன் முடிக்குமுன் குறுக்கிட்டு ''இதோ வரேன்' என்று மட்டும் சொல்லி தொடர்பைத் துண்டித்தவள், சரியாக பதினைந்து நிமிஷத்தில் அங்கிருந்தாள்.

சிவா வாசலிலேயே காத்திருந்தான்.

அருகில் முத்து...

''என்ன ஆச்சு சிவா?''

''புரியலை மேடம்...என்னென்னமோ பேசறார்... அப்புறம்...''

''அப்புறம்?''

''வந்து...பெரிசா துக்கப்பட்டுட்ட மாதிரி அழறார் மேடம்...''

''என்...னது!''



சத்யா அழுவான் அதுவும் ஆபீஸில் உதவி ஆசிரியர் முன்னால் என்பது நம்ப முடியாத விஷயமாக இருக்க, ஜனனி மௌனமாக சத்யாவின் அறைக்குச் சென்றாள்.

திறந்த மார்பும், சிவந்த கண்களுமாய் இருந்த அவன் தோற்றம் அடிவயிற்றில் பட்டாம் பூச்சிகளைப் பறக்கச் செய்தன.

கண்களில் அதே வெற்றுப் பார்வை. இங்கு நடப்பவை எதுவும் என்னோடு சம்பந்தப்படாதவை என்றெ விட்டேத்தி பாவம்.

''சத்யா.''

''......''

''சத்...யா...''

''ம்?''

பார்வை அவள்மேல் விழுந்ததும் சின்னதாக ஒரு மாற்றம்.

கண்களில் மிக மிக லேசாக பயம்.

''ஏன் குர்த்தாவை கழட்டிட்டு உட்கார்ந்திருக்கீங்க சத்யா?''

'த'லைய ரொம்ப வலிக்கறது ஜனனி.''

''ஓ!...போட்டுக்கறீங்களா, வீட்டுக்குப் போகலாம்?''

''ம்''

அவள் நீட்டின குர்த்தாவை அணிந்து கொண்டு எழுந்து நின்றான்.

நீ ஏன் ஆபீஸுக்கு வந்தாய், உனக்கு இந்த நேரத்தில் இங்கு என்ன வேலை, யார் வரச் சொன்னது—போன்ற கேள்விகள் எதையும் கேட்காமல் அவன் வெளியே நடந்தது தற்காலிகமாய் தந்த நிம்மதியுடன், சிவாவும்

முத்துவும் உடன் வர, கணவனோடு ஜனனி வீட்டுக்கு வந்தாள்.

கிட்டதட்ட ஒருவாரம் முன், சத்யா சாதாரணமாக இல்லை என்கிற சந்தேகம் எழ, குடும்ப டாக்டரிடம்பேசியதும், அவர், வீணா ஒண்ணும் இல்லாததைப் பெரிசு பண்ணாதீங்கம்மா...ஹி ஈஸ் ஜஸ்ட்டயர்ட்...ஒரு வருஷமா ஓய்வு ஒழிச்சல் இல்லாம பாடு பட்டவருக்குள்ள அடைபட்டிருந்த களைப்பு. இப்ப நீங்க சரியானதும் தானா பீறிகிட்டு வெளில வருது. தட்ஸ் ஆல். ஆபீஸுக்குப் போகாம தூங்கினார்னா, தூங்கட்டுமே...என்ன தப்பு! அவர் போக்குப்படி விட்டுடுங்க...நாலு நாள்ல நல்லா தூங்கி, அக்யூமுலேடட் களைப்பை போக்கிக் கட்டும், என்று கூறியதும், நினைவுக்கு வர, சூடாக ஒரு கப் காபியுடன் விப்ரியம் மாத்திரை ஒன்றையும் கொடுத்தாள்!

பத்து நிமிஷத்துக்குள் தாங்கமாட்டாத அயர்ச்சியுடன் சத்யா உறங்க ஆரம்பித்ததும் கீழே வந்தாள்.

கூடத்தில் இவளுக்காக சிவா, முத்து, லக்ஷ்மி காத்திருந்தனர்.

''எப்படி இருக்கான்மா?''

''தூங்கிட்டார் அத்தே...''

''டாக்டரை வரச் சொல்றியா ஜனனி...எனக்கென்னமோ பயமா இருக்கு.'

''டாக்டர் ஊர்ல இல்லே அத்தே...ஒரு செமினாருக்காக ஹைதராபாத் போய் நாலு நாளாறது...போன் பண்ணி என்னிக்கு வரார்னு கேக்கறேன்...நாளாகும்னா வேற யாரையாவது வரச்சொல்றேன்...

முதல்ல அவனைச் சரி பண்ணணும் ஜனனி...ராஜா மாதிரிவளைய வந்த பிள்ளை இன்னிக்கு மூஞ்சூறு, மாதிரி...என்னாச்சுமா... சோதனை மேல சோதனையா முருகா எனக்கு ஒண்ணுமே புரியலையே...''



செம்மியக் குரலில் பேசியபடி அவர் அங்கிருந்து நகர சிவாவை உட்காரச் சொல்லிவிட்டு ஜனனி தானும் அமர்ந்தாள்.

''ஆபீஸ்ல என்ன நடந்ததுனு விவரமா சொல்லுங்க சிவா...''

சொன்னான்.

முத்துவைக் கூப்பிட்டு முதுகில் கம்பளிப்பூச்சு இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னதை; அவனிடம் 'நான் பொய்யன் தப்பு செய்கிறவன்' என்று தானே எல்லோரும் நினைக்கிறீர்கள்? என்று அதட்டியதை...

அப்புறம் தன்னிடம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசியதை...

—நான் வேணும்னு அதைச் செய்யலை சிவா...

—சத்தியமா என் விருப்பத்துக்கு எதிராதான் செஞ்சேன். வேண்டாம்னு எல்வளவோ தர்க்கம் பண்ணிப் பார்த்தேன். ஜனனி கேக்கலை வற்புறுத்தினா...அதுல அவளுக்கு ரொம்ப நம்பிக்கை.

இரண்டு மூன்று தரம் சிவாவை அந்த வரிகளைச் சொல்லச் சொல்லி கேட்கும் எதுவும் புரியாமல் இருக்க, அவர்களை அனுப்பிவிட்டு ஜனனி மாடிக்கு வந்தாள்.

உறங்கும் கணவனைக் காண்கையில் வயிற்றை என்னமோ செய்தது.

சத்யாவை ஏதோ ப்ரச்னை வேதனை ஆக்ரமித்திருக்கிறது.

அது என்ன?

எதனால் இந்த நிலை குலைவு?

—நான் விரும்பி அந்தக் காரியத்தைச் செய்யலை சிவா...

எந்தக் காரியத்தை?

—எவ்வளவோ தர்க்கம் பண்ணிப்பார்த்தேன். ஜனனி கேக்கலை...வற்புறுத்தினா...அதுல அவளுக்கு ரொம்ப நம்பிக்கை...

—எதைக் குறித்துத் தர்க்கம்?

எதில் ரொம்ப நம்பிக்கை?

தான் சம்பந்தப்பட்ட ஏதோ ஒன்றுமோ, அல்லது அந்த ஒன்று மட்டும்தானோ சத்யாவின் இன்றைய நிலைக்குக் காரணம் என்பது தெளிவாக, கணவனின் பக்கத்தில் உட்கார்ந்து, அவன் கையை ஆதுரத்துடன் பற்றினபோது அது என்ன? என்கிற கேள்வி அவளை ராட்சஸத்தனமாய் உலுக்கியது.

# 25

''டாக்டர் ப்ரதாப்ஸ் க்ளினிக்.''

''நான் ஜனனி பேசறேன்...டாக்டர் ஊர்லேந்து எப்பவரார் மல்லிகா?''

''கால ஃப்ளைட்ல வந்திட்டாரே, மேடம்''

''தாங்க் காட் அவரோட நான் பேச முடியுமா?''

''ஒன் மினிட் ப்ளீஸ்''

ரிசப்ஷனிஸ்ட் டாக்டருக்கு தொடர்பு கொடுப்பதற்குள் பதட்டத்தில் உள்ளங்கை வியர்வையில் கசகசத்து விட, ரிஸீவரை இடது காதிலிருந்து வலதுக்கு மாற்றி கையை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.



''ப்ரதாப் ஹியர்...

''குட் ஈவ்னிங் டாக்டர்''

''குட் ஈவ்னிங்... எப்படி இருக்கீங்க? டான்ஸ் ப்ராக்டிஸ் ஆரம்பிக்கலாமானு கேட்கத்தானே இந்த போன்?''

''இல்லே டாக்டர்...கொஞ்சம் வீட்டுக்குவர முடியுமா? ப்ளீஸ்?''

''எப்ப?''

''உடனே...''

''ஆர் யூ ஆல்ரைட் ஜனனி?''

''எனக்கு ஒண்ணும் இல்லே டாக்டர்...''

''அப்புறம்?.'

''சத்யாவுக்குத்தான் உடம்பு சரியில்லை.''

''வாட்ஸ் ராங்? ஜுரமா?''

''ம்ஹூம்...''

''தென்?''

''போன வாரம் சத்யா {எப்படியோ இருக்கிற மாதிரி சொன்னேனே, நினைவிருக்கா?''

''எஸ்...அதுக்கென்ன இப்போ?'

ஜனனி பதில் கூறாமல் மௌனித்தாள்.

''அவரை இங்கே கூட்டிட்டு வர முடியாதா?''

''கஷ்டம்.., தவிர இப்ப அவர் தூங்கிட்டுஇருக்கார்... எழுப்ப வேணாம்னு பார்க்கறேன்...''

''ம்ம்? தூங்கினா நல்லதுதான்... நீங்க அனாவசியமா ஒர்ரி பண்ணிக்காதிங்க... நாலு நாளா ஊர்ல இல்லாம இருந்ததுல பேஷண்ட்ஸ் நிறைய பேர் காத்திட்டு இருக்காங்க ..எட்டு மணிக்கு மேல வரட்டுமா?''

எட்டே காலுக்கு டாக்டரின் வண்டி போர்டிகோவில் வந்து நின்ற போது ஜனனி வாசல் வராந்தாவில் காத்திருந்தாள்.

வரவேற்பறையில் லக்ஷ்மி—அழுதிருக்கிறார் என்பதை உணர்த்தும் சிவந்த விழிகளுடன்.

''என்ன விஷயம்மா...''

''புரியலை டாக்டர்... தெளிவா எதுவும் சொல்லத் தெரியலை... நீங்க வந்துபாருங்களேன்...?''

''மாடிலதானே இருக்கார்?''

''ம்... தூங்கறார்.''

''இன்னுமா? நடுவுல எழுந்து ஏதாவது சாப்பிட்டாரா?''

''ம்ஹூம்... மத்தியானம் தூங்கினதுதான். இன்னும் எழுந்திருக்கலை.''

''எழுப்பிப் பார்த்திங்களா?''

''இல்லே .. அசந்து தூங்கறார்... எழுப்ப மனசு வரலை...''

''சும், லெட்ஸ் கோ அப்...''

டாக்டரைத் தொடர்ந்து ஜனனியும் மாடிக்குச் சென்றாள்.

தோட்டத்து மெர்குரி விளக்கின் வெளிச்சம்சன்னமாக வியாபித்த இடத்தைத் தவிர அறை இருட்டாக இருந்தது.



ஒரு பக்கமாய் உட்கார்ந்திருந்த முத்து இவர்களைக் கண்டதும் எழுந்து நின்றான்.

''நீ போய் டாக்டருக்கு காபி கொண்டு வா முத்து'' அவனை அனுப்பினவள், மேஜை விளக்கை ஏற்றினாள்.

சத்யா தலைகாணியை அணைத்தபடி ஒருக்களித்துப் படுத்திருந்தான்.

உதடுகள் லேசாகப் பிரிந்திருந்தன.

மூச்சு சப்தத்தோடு வெளிப்பட்டது.

அவ்வப்போது ஏதோ துர்சொப்பனத்தைக் காண்பது போல உடம்பில் சின்னதாய் நடுக்கம்.

டாக்டர் அவனருகில் உட்கார்ந்து இரண்டு தரம் மென்மையாய்க் கூப்பிட்டார்.

எந்தச் சலனமும் இல்லை.

ஜுரம் இருக்கிறதா என்று நெற்றியில், கழுத்தடியில் கை வைத்துப் பார்த்தார். இல்லை.

ஸ்டெத்தினால் மார்பு முதுகைப் பரிசோதித்தார்.

உறங்கிக் கொண்டிருந்தவனின் இமைகளைப் பிரித்து டார்ச் அடித்துப் பார்த்தார்.

இந்தச் செய்கையினால் கொஞ்சமும் பாதிக்கப்படாமல் சத்யா படுத்திருக்க, என்ன இது? என்கிற கலவரப் பார்வையுடன் ஜனனி டாக்டரை ஏறிட்டாள்.

''எப்பலேர்ந்து தூங்கறார்?''

சொன்னாள்.

அலுவலகத்திலிருந்து அழைத்து வந்து காபியுடன் லிப்ரியம் தந்து அவனைப் படுக்க வைத்ததை...

''ம்ம்...''

அப்படியே அமர்ந்து சத்யாவை ஊன்றிப் பார்த்தார். மீண்டும் அவனருகில் குனிந்து 'மிஸ்டர் சத்யகுமார்' என்று குரலை உயர்த்தி அழைத்தபடி தோளில் ஒரு கை வைத்து உலுக்க, சத்யா புரண்டான்.

கண்களை திறக்காமலேயே இந்தப் பக்கம் திரும்பி னவன் எந்த அழைப்பும் காதில் விழாத தினுசில் உறக்கத் தைத் தொடர்ந்தான்.

''ஒரு வாரம் முன்னால அதிகமா தூங்கறார்னு சொன்னீங்களே. அப்பவே அப்படித்தான் இருந்தாரா?''

''இல்லே...அப்ப அடிக்கடி சோர்ந்து படுத்தாரே தவிரவும், இந்த மாதிரி நிச்சயம் இல்லே.ராத்திரி தூக்கம் வராம பல தடவை எழுந்து பால்கனிலே நிப்பார். என்ன சத்யானு கேட்டா. ஒரு மாதிரி விழிப்பார்...ஆபீஸ்லே என்னமோ ப்ராப்ளம்னு நினைச்சதால,நானும்அதிகமாக என்ன, ஏதுனு கேட்கலை டாக்டர்...''

''எப்பலேந்து இப்படி?''

''நாலு நாளாதான் எப்படியோ இருக்கார். சரியா சாப்பிடறதில்லே யாரோடயும் பேசறதில்லே...தனக்குத் தானே சதா ஏதோ யோசனை பண்ணறமாதிரி உட்கார்ந் திட்டு இருக்கார்...''

காபியுடன் முத்து வந்துவிட, ஜனனி அதை எடுத்து டாக்டரிடம் கொடுத்தாள்.

ஒரு வாய் குடித்துவிட்டு டாக்டர் கோப்பையை மேஜைமேல் வைத்தார்.

மிஸ்டர் சத்யகுமாரோட கண்டிஷன் இப்படி இருக் கும்னு கண்டிப்பா நான் எதிர்பார்க்கலை...ஒரு வருஷமா மன உளைச்சலோட இருந்தார். இப்ப எல்லாம் சரியா யிட்ட நிம்மதிலே லைஃபை ஈஸியா எடுத்துக்கறார்னு நினைச்கிட்டேன். மே பி ஐம் ராங் கடந்த பத்து



பதினைஞ்சு நாளா நடந்த பேச்சுகள் சம்பவங்கள் அத்தனையும் எனக்குத் தெரிஞ்சா நல்லது. கீழே போய் பேசலாமா?''

ஜனனி வேண்டாம் என்று அவசரமாய்த் தலை அசைத்தாள்.

''அத்தையை வெச்சிக்கிட்டு பேசணுமா டாக்டர்? அவங்க ஏற்கனவே ரொம்ப அப்ஸெட் ஆயிருக்காங்க... இங்கேயே பால்கனிலே உட்கார்ந்து பேசலாமா?''

டாக்டர் காபி கோப்பையுடன் கதவைத் திறந்து கொண்டு பால்கனிக்குச்செல்ல, ''நீ இங்கயே இரு முத்து' ஸார் எழுந்திட்டார்னா கூப்பிடு'' என்று கூறிவிட்டு ஜனனி அவரைத் 'தொடர்ந்தாள்.

அமாவாசைக்கு முந்தின இரவு என்பதை ஆகாயம் பூராவும் வாரி இறைத்திருந்த நட்சத்திரங்கள் பறை சாற்றின.

''சொல்லுங்க ஜனனி...''

''பத்து நாள் முன்னால்தான் முதல் தடவையா சத்யா தன் வழக்கமான ஸ்பாவப்படி இல்லேன்ற சந்தேகம் எனக்கு வந்தது டாக்டர். எதிலியும் ஸ்வாரஸ்யம் இல் லாத மாதிரி ஒரு நடத்தை...சரி, நாமே கற்பனை பண் ணிக்கறோம்னு இந்த எண்ணத்தை மாத்திகிட்டேன்... மறுபடி இரண்டு நாளைக்கெல்லாம் அதே குறுகுறுப்பு... சத்யா பழையபடி கலகலப்பா சுறுசுறுப்பா இல்லே ஏதோ கவலை அவரைக் கஷ்டப்படுத்துதுனா நிச்சயமா புரிஞ்சிக்க முடிய, கேட்டேன். சிரிச்சிட்டு ஒண்ணுமில் லேன்னுட்டார். பகல்ல சுருண்டு படுத்ததும், ராத்திரி பால்கனிலே விழிச்சுகிட்டு உலாத்தினதும் அப்பத்தான்... உடம்புக்கு லேசா முடியாத சமயத்துல நாமும் சேர்ந்து தொண தொணக்க வேணாம்னு விட்டுட்டேன் ஆனா. மறுபடி இரண்டு நாள் போறதுக்குள்ள, தடக்குனு வேகமா நிலைமை மோசமாயிட்டது இன்ஃபாக்ட் போன

புதன் அன்னிக்கு கொதிக்கற வெயில்ல பிரமை பிடிச்ச மாதிரி நின்னிட்டிருந்தவர் கிட்ட பேச்சுக் கொடுத்தப்போ ஒரு சூன்யப் பார்வையோட, ''நான் செஞ்சது பாவ காரியம்தான், குத்திக்காட்டாதே'னு கத்தி னார்...அன்னிக்குதான் உங்களுக்கு போன் பண்ணினேன்...''

''ஆனா, நீங்க இதையெல்லாம் சொல்லலியே ஜனனி ...அடிக்கடி படுக்கறார், தூங்கறார், ஆபீஸுக்குக் கூட போறதில்லேனுதானே சொன்னீங்க...''

''நேரப் பாக்கறப்போ சொல்லிக்கலாம். போன்ல வீணா கலவரப்படுத்த வேணாம்னு எல்லா விவரத்தையும் விட்டது தப்புனு இப்பத்தான் புரியுது டாக்டர்...''

''.........''

அடுத்து வந்த நாலு நாள்களில் சத்யா ஒட்டுக்குள் நத்தையாக ஒடுங்கினதையும் பேச, சாப்பிட, தூங்க வேலை செய்ய மறுத்ததையும், இன்று அதிசயமாய் ஆபீஸுக்குப் போனவன் அங்கு நடந்து கொண்ட விதத்தையும் சின்னக்குரலில் ஜனனி விவரிக்க, டாக்டர் இப்படியும் அப்படியுமாய் நடந்து கொண்டே புருவங்கள் முடிச்சுப் போட யோசித்தார்.

ஜனனி பேசி நிறுத்தின பின், அன்று நடந்த பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஒரு தரம் கூறசொன்னார்

—நீங்கள்லாம் பரம யோக்கியம். நான் பொல்லாதவன், பொய் சொல்றவன், தப்பு தண்டா பண்றவன்—அதானே?

—நான் வேணும்னு அதைச் செய்யலை சிவா...

—சத்தியமா என் விருப்பத்துக்கு எதிராதான் செஞ்சேன்...வேண்டாம்னு எவ்வளவோ தர்க்கம் பண்ணிப் பார்த்தேன்...ஜனனி கேக்கலை...வற்புறுத்தினா...அதுல அவளுக்கு ரொம்ப நம்பிக்கை...



நடந்தவர் நின்றார்.

''அவர் எதை குறிப்பிடறார்னு உங்களால புரிஞ்சிக்க முடியுதா ஜனனி?''

''ஸாரி டாக்டர்...''

''ஏதாவது ஒரு விஷயத்தை ரொம்ப தீவிரமா அவரோட விவாதிச்சீங்களா?''

''எப்போ?''

''சமீபத்துல...''

ஜனனி கண்களை இறுக்கிக் கொண்டு யோசித்தாள்.

''ம்ஹூம்''

''உரிமையோட கேக்கறதுக்கு மன்னிக்கணும்... ஆர்க்யூ பண்ணி சண்டை போட்டு, அவருக்குப் பிடிக்காத ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய கட்டாயப் படுத்தினீங்களா?''

ஜனனி டாக்டரை நிமிர்ந்து பார்த்தாள்.

''சத்தியமா சொல்றேன்...ஒரு தரம் கூட இல்லே... எனக்காக மாசக்கணக்குல ராப்பகலா பாடுபட்டு உருகினவர்கிட்ட நான்? சண்டை? நோ...ஸர்டன்லி நோ...''

''ஐம் ஸாரி...உங்களை எனக்குத் தெரியும்...உங்க இரண்டு பேர் நடுவுல இருக்கிற அன்யோன்யம், மரியாதை, இண்டர்டிபெண்டன்ஸ் எனக்குத் தெரியும்... அதனாலதான், ஆல் த மோர் மிஸ்டர் சத்யகுமார் இப்படி நிலை குலைஞ்சி போக என்ன காரணம்னு புரியாம முழிக்கறேன். நீங்க சம்பந்தப்பட்ட எதுவோதான் அவரை கஷ்டப்படுத்துது...ஐ'ம் பாஸிடிவ் அபௌட் இட்...

ஆனா, அது என்ன? யோசிக்கணும்...நிறைய யோசிக்கணும்...மூணு வாரமா மிஸ்டர் சரத்குமார் ஒரு குறிப்பிட்ட ரீதில கொஞ்சம் கொஞ்சமா மாறி இருக்கார். பாதிக்கப்பட்டிருக்கார்...இதை நீங்க உணர்ந்து என்கிட்ட சொன்ன உடனே நான் கவனிச்சிருக்கணும்... ஸாரி...,ரியலி ஐ'ம் ஸாரி...களைப்புனு நினைச்சது தப்பு... மிஸ்டர் சத்யகுமார் ஏதோ காரியத்தைச் செஞ்சிட்டு, அதன் பின்விளைவைத் தாங்க மாட்டாம அவஸ்தைப் படறார்னே எனக்குச் தோணுது...திஸ் குட்பீரியர்க்டிவ் டிப்ரஷன்...எதுக்கும்...''

அவர் முடிக்கு முன் கதவருகில் முத்து வந்து ''ஸார் எழுந்திட்டார்' ஆனா எப்படியோ முழிக்கிறார்...'' என

இருவரும் உள்ளே வேகமாய் வந்தார்கள்.

படுக்கையில் உட்கார்ந்திருந்த சத்யாவின் உடம்பு குளிர ஜுரம் கண்ட தினுசில் நடுங்கிக் கொண்டிருந்தது.

சட்டை வியர்வையில் நனைந்து உடம்போடு ஒட்டி இருந்தது.

''சத்யா...''

பார்வை ஜனனி மேல் விழ, கண்கள் விரைத்துக் கொண்டன.

''அநியாயமா செத்துப் போயிட்டியே கண்ணம்மா.''

''ச...த்...யா...''

''செத்தவளால பேச முடியாதுனு எனக்குத் தெரியும் ...என்னை ஏமாத்தாத...ப்ளீஸ்...''

மேற்கொண்டு அவனைப் பேசவிடாமல் டாக்டர், ''மிஸ்டர் சத்யகுமார்'' என்று அதட்டலாய் அழைத்தபடி முன்னால் வந்து நின்றார்.

இப்போது சத்யாவின் உடம்பு உதறி உதறிப் போட்டது. பார்வை டாக்டரை ஊடுருவி எங்கோ வெறித்தது.



''நான் வேணும்னு பண்ணலை... சத்யமா அதை விரும்பிச் செய்யலை... சுந்தர்லாலோட நாய் பராலிஸிஸ் வந்து, நடக்க முடியாம...ஞாபகம் இருக்கா? அதுதான் ஆரம்பம் அப்புறம் அந்த தாலிடோமைய்ட் குழந்தைங்க ...கடவுளே! அப்படி வெஜிடபிள் மாதிரி ஆயுசுக்குமா? நோ...நோ...அதான். அதான்...நான்...நா...',

சட்டென்று சத்யாவின் உதடுகள் கோணிப் போயின நாக்கு எங்கோ சிக்கிவிட்ட தினுசில இழுத்துக்கொண்டது.

கண்களில் அசாத்திய வெறுமை.

''நான்...வேணும்னு செய்யலை...நான்...ஆ...ஆ...'' அழுகையுடன் இரண்டாக மடிந்து அழ,

டாக்டர் பரபரவென்று செயலில் இறங்கினார்.

முத்துவை விரட்டிக் கீழேயிருந்த தன் மருந்துப் பெட்டியைக் கொண்டு வரச் செய்தார்.

சத்தியாவை வலுக்கட்டாயமாகப் படுக்க வைத்து' அழுந்தப்பிடிக்கச் செய்து படபடப்பைக் குறைக்கும் சக்தி மருந்துகளை ஊசிமூலம் தாமதிக்காமல் ஏற்றினார்.

சத்யா புலம்பி அழுது கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி, மயக்கம் கலந்த உறக்கத்தில் அமிழும் வரை கூடவே உட்கார்ந்திருந்துவிட்டு, 'இனிமே இவர் இப் போதைக்கு எழுந்திருக்க மாட்டார். லெட் ஹிம் ஸ்லீப். ஆனா, இதை இப்படியே விடக்கூடாது உடனடியாக நாளைக் காலைல நான் சைக்கியாட்ரிஸ்டை கூட்டிட்டு வரேன். சத்யாவுக்குள்ள என்ன புகுந்துகிட்டு இந்தப் பாடு படுத்துதுனு நிச்சயமா அவராலத்தான் கண்டுபிடிக்க முடியும்...ஐ'ம் ஸாரி ஜனனி... கவலைப்படாதீங்க... ராத்திரிமுழிச்சுட்டுகலாட்டா பண்ணினார்னா என்னைக் கூப்பிடத் தயங்காதீங்க...'' என்று கூறி டாக்டர் புறப்பட்டுப் போக அவர் பேசினது எதுவும் காதில் விழாத மாதிரி வெளிறி கலைந்து போன ஜனனி ரொம்ப நேரத்துக்கு அப்படியே அமர்ந்திருந்தாள்.

## 26

...சுந்தர்லாலோட நாய் பாரிசாயு வந்து, நடக்க முடியாம...ஞாபகம் இருக்கா? அதுதான் ஆரம்பம்.

மீண்டும் மீண்டும் இந்த வரி மனதில் சுழன்று, எங்கோ மூலையில் மணியை அடித்து நான்தான்...புரிந்து கொள்—என்று முணுமுணுக்க, ஜனனி பரபரத்தாள்.

ஞாபகத்தைக் கசக்கினாள். ஒளிந்திருந்த சம்பவங் களைத் தேடி, மேலுக்கு கொண்டுவர முயற்சித்தாள்.

அடியில் புதைந்துவிட்ட ஒவ்வொரு வார்த்தையாய், நிகழ்ச்சியாய் தோண்டி எடுத்து நினைவில் நிறுத்திப் பார்த்தாள்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு தரம் சுந்தர் லாலை சந்திக்கச் சென்றபோது, அவன் நாயைப் பற்றி கேள்விப்பட்டு, அதைப் பார்க்க விரும்பி...

—அந்த நாய் மிக மிக தீனமாக முனகியது. தலை யைத் தூக்கிப் பார்த்து முடியாமல் கண்களை மட்டும் இப்படியும் அப்படியும் அசைத்தது, அருகில் நிற்கும் எஜமானனைப் பார்த்து வாலை ஆட்ட யத்தினித்து இய லாமல் மீண்டும் பரிதாபமாக அழுதது.

எஸ்—அந்த காட்சி ரொம்ப வேதனையானதுதான் —அதுதான் ஆரம்பம்—

எதற்கு?

அன்றைக்கு நாங்கள் என்னென்ன பேசினோம்?

நாயின் பரிதவிப்பைப் பார்த்த பின் ஏதும் பேசாமல் வீட்டுக்கு உடனே திரும்பி விட்டோம்தானே?



காரில், பிற்பாடு வீட்டில் ஏதாவது பேசினோமா?

யோசித்த வரைக்கும் தெளிவாக எதுவும் புரிபடாமல் போக, ஜனனி எழுந்து ஜன்னலருகில் சென்று சாய்ந்து நின்று கொண்டாள்.

கம்பிகளின் குளிர்ச்சி கன்னத்தில் இதமாகப் பாய்ந்தது.

''அம்மா.''

திரும்பினாள் டாக்கியம்.

''சாப்பிட வரலியாம்மா? மணி பத்து...''

''எனக்குப் பசிக்கலை பாக்கியம்.''

''பெரியப் மாவும் சாப்பிடாம உங்களுக்காகக் காத்திட் டிருக்காங்கம்மா...''

''நான் கீழே வரலை...எனக்கு மோர்மட்டும் போதும் அவங்களுக்கு பசிக்கலையாம்னு பெரியம்மா கிட்ட சொல்லிடு—''

கீழே சென்ற பாக்கியம், ஒரு அடுக்கில் மோரைக் கடைந்து முத்துவிடம் கொடுத்தனுப்ப, இரண்டு தம்ளர் குடித்து, மீதியை அவனிடமே தந்தவள், ''நீங்கள்லாம் சாப்பிட்டு படுத்துக்கங்க...ஏதாவது வேணும்னா கூப் பிடறேன்'' என்று சொல்லி அனுப்பினாள்.

உறங்குவது இன்று சாத்தியமில்லை என்று புரிந்து கொள்ள முடிய, குளியலறைக்குச் சென்று முகத்தைக் குளிர்ந்த நீர் விட்டு கழுவிக் கொண்டு, சத்யாவிடம் வந்தமர்ந்தாள்.

ஐ லவ் யூ சத்யா.

எனக்கு நீ வேண்டும்.

முழுசாய்...பழைய சத்யாவாய்.

உன் இந்த நிலைக்கு அறிந்தோ, அறியாமலோ காரணம் நான்தான் என்றால், சத்தியமாய் உடைந்து போவேன்.

செய்ய விரும்பாத எதைச் செய்யத் துணிந்தாய் சத்யா?

அதுவும் எனக்காக?

செய்யக்கூடாத எதையும்செய்வது உனக்கு சாத்தியம் இல்லையே!

உன்னை எனக்குத் தெரியுமே!

உன் வேதனைக்குக் காரணம் யார்? எந்தச் சம்பவம்?

கணவன் மார்பு மேல் தலை வைத்து, மருகிய நிமிஷத்தில், தாலிடோமைய்ட் குழந்தைகளைப் பற்றி சத்யா குறிப்பிட்டது நினைவில் குதி போட்டது.

கர்ப்பிணிப்பெண்களிடம் உண்டாக்கக்கூடியவிளைவுகளை சரியாக ஆராயாமல் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டதில் கை, கால் முக்கிய உறுப்புகள் அற்ற முண்டமாய் பல நூற்றுக் குழந்தைகள் அறுபதுகளின் துவக்க காலத்தில் பிறக்கக் காரணமாயிருந்த தாலிடோமைய்ட் மாத்திரைகள்.

—அப்படி வெஜிடபிள் மாதிரி ஆயுசுக்குமா? நோ... நோ...அதான்...நான்...

வெஜிடபிள் மாதிரி கிடப்பதை தாலிடோமைய்ட் குழந்தைகளைப் பற்றி பேசுகையில் ஏன் சம்பந்தப் படுத்தவேண்டும்?

அலசிய வரைக்கும் அத்தனையும் தனித்தனி வட்டங்களாகத் தோன்றினவே தவிரவும், ஒன்றோடு ஒன்று பின்னிக் கொள்ளும் சங்கிலித்தொடராக, இல்லாதுபோக ஜனனி சோர்ந்து போனாள்.

எழுந்து மேஜை அருகில் சென்று சில நிமிஷங்களுக்கு உட்கார்ந்திருந்தாள்.



என்ன செய்வேன் என்கிற பரிதவிப்போடு இதை எடுத்தாள் அதை வைத்தாள்.

கை நகங்களைக் கடித்தாள்.

சத்யா ஏன் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறார்?

எதற்கும் கண்கலங்காத ஆண்மகனாய் இருந்தவரை இன்று பொங்கிப் பொங்கி அழத் தூண்டுவது எது?

எந்தக் கேள்விக்கும் விடை கிடைக்காமல் போக, அழுகை கலந்த ஆத்திரத்தோடு டேபிள் மேல் கவிழ்ந்து படுத்தபோது, ஒரு பக்கமாய் ட்ரே, டெஸ்க் காலெண்டருக்குப் பக்கத்தில் சாதுவாய் உட்கார்ந்திருந்த அந்தப் பச்சை டைரி பார்வையில் விழுந்தது.

சத்யாவின் டைரி...

அன்றாட நிகழ்ச்சிகளை டைரியில் எழுதும் பழக்கம் சத்யாவுக்குக் கிடையாது என்றாலும் முக்கியமான சந்திப்புக்களை வேலைகளைக் குறித்து வைக்கும் வழக்கம் உண்டே!

சென்ற பத்து பதினைந்து நாள்களாய், அல்லது ஒரு மாசமாய் யார் யாரை சந்தித்திருக்கிறார். என்னென்ன செய்திருக்கிறார் என்று பார்த்தால், ஒருவேளை அவர் வேதனைக்கான காரணம் கிடைக்குமோ?

புதுசாய் பிறந்த உத்வேகத்தோடு டைரியை எடுத்துப் புரட்டின ஜனனி ஏமாந்து போனாள்.

கிட்டத்தட்ட ஒரு மாசம்போல டைரி எந்த குறிப்புகளுமே இல்லாமல் வெறுமையாய் இருந்தது.

அதற்கும் முன்னால்?

ஜனனி பிடிமானம் இல்லாமல் நடந்தாள்.

ஜனனி தானாக எழுந்து நின்றாள்.

ஜனனி முதல் முறையாய்த் தெளிவாகப் பேசினாள்.

பக்கங்களைப் பின்னால் புரட்டிக்கொண்டே போன ஜனனி ஜனவரி முப்பது வந்ததும் நிறுத்தினாள்.

தேதியைச் சுற்றி சிகப்பு வட்டம்...

அன்றுதான் பிரக்ஞை திரும்பப் போவதைச் சூசகமாக முனகல் மூலம் வெளியிட்டேனே! அதுதான் இந்த சிகப்புக் குறியா?

இல்லையே!

அடுத்த நாள் ஜனனி முப்பத்தொன்றில் அல்லவா—இன்று விடிகாலை ஒரு மணி அளவில் ஜனனி முதல் முறையாய் முனகினாள்—என்று எழுதி இருக்கிறார்!

அப்புறம்!

புரியவில்லை...

யோசித்த வரைக்கும் புரியவில்லை.

குழப்பத்துடன் ஜனவரி முப்பதுக்கு முந்தின தேதிகளைப் புரட்ட பதினெட்டு, அன்று, தீர்மானம் எடுத்தாகி விட்டது என்று சிகப்புமையில் ஒரு வரி...மற்றபடி எல்லா நாள்களும் வெறுமையாக இருந்தன.

என்ன தீர்மானம்?

. சிகப்பு மையில் எழுதும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததா?

முந்தின வருஷத்தில் இதுபற்றி ஏதாவது குறிப்பு கிடைக்குமோ!

இந்த எண்ணம் எழுந்தபின், மேஜையின் இழுப்பறைகளை இழுத்து, 1983 ஆம் வருஷ டைரியைத் தேடினாள் இல்லை.

ஷெல்ஃபில் இருக்குமா?



ம்ஹூம்...

அலமாரித் துணிகளை முந்தின வாரம் சீர் செய்தபோதும் மேல்தட்டில் சில புத்தகங்களைப் பார்த்ததும், அவைகளைத் தொடாமல் அப்படியே விட்டு விட்டதும் ஞாபகத்துக்கு வர, எழுந்து பீரோவிடம் சென்றாள்.

மேல் தட்டில்...

சில கணக்குப் புத்தகங்கள், பாங்க் பாஸ் புக்ஸ்...அ...1983 டைரி...

எட்டி டைரியை இழுத்தபோது கூடவே ஒரு சின்ன காகித பொட்டலமும் தொப்பென வெளியே வந்து விழுந்தது.

குனிந்து எடுத்தாள்.

பழுப்பு நிற காகிதப் பொட்டலம்

பிரித்தாள்.

வெள்ளையாய் ஏதோ பொடி...

பௌடரா?

முகர்ந்து பார்த்தாள்...

மருந்து நெடி...

என்ன பௌடர் இது!

லேசாகப் புரட்டி பார்த்தபோது பொடி மடிக்கப் பட்டிருந்த காகிதம் ஒரு பில் என்பது புரிந்தது.

மருந்து கடை பில்...

விரலால் பவுடரை ஒதுக்கினதும், முப்பது மாண்ட்ராக்ஸ் மாத்திரைகளுக்கான தொகை காணப்பட்டது. மேலே சத்யாவின் பெயர், விலாசம், தேதி...25-1-84.

தூக்கம் வராமல் கஷ்டப்பட்டதால் தூக்க மாத்திரைகளை வாங்கியிருக்கிறாரோ!

அப்படியென்றால் எதற்காக அவைகளைப் பொடிக்க வேண்டும்

அரை நிமிஷம் அப்படியே நின்று யோசித்தவளுக்குள் இது தூக்க மாத்திரைப் பொடிதான் என்று நீயாக-ஏன் கற்பனை பண்ணுகிறாய் என்ற கேள்வி ஒன்று எழ அதுவும் சரிதான் என்கிற சமாதானத்துடன் பொட்டலத்தை அலமாரியில் வைத்து விட்டு, டைரியுடன் நாற்காலியில் வந்தமர்ந்தாள்.

டிஸம்பர்...நவம்பர்...அக்டோபர்...

வரிசையாய் அத்தனை மாசங்களிலும் காணப்பட்ட ஜனனியை இன்று பம்பாய் டாக்டர் வந்து பார்த்தார்! ஜனனிக்கு இன்று புது மருந்து கொடுத்தது இந்த முறை ஒரு வாரம் விடாமல் நாட்டிய இசை ஒலிக்கச் செய்தேன் திருப்பதிக்கு நடந்து வர ப்ரார்த்தனை—போன்ற குறிப்புக்களைப் படிக்கப் படிக்க, தனக்காக சத்யா பட்ட கஷ்டங்கள் ஹிருதயத்தை நெகிழ வைக்க மேலே படிக்க முடியாதபடி கண்களில் நீர் படுதா இறங்கியது

அப்படி பாடுபட்டு, இவள் சரியாக மாட்டாளா என்று தவித்தவர் இன்று நான் பழையபடி எழுந்து நடமாடுவதைப் பார்த்து அலாதி நிம்மதியுடன் சந்தோஷிக்க அல்லவா வேண்டும்?

எனக்கு இனி என்னக் குறை என்கிற திருப்தியுடன் அல்லவா வளைய வரவேண்டும்?

ஆனால்?

சின்ன முனகலுடன் சத்யா புரண்டு படுக்க, ஜனனி அவனருகில் சென்றாள்.

பிற்பகலில் ஒரு டம்ளர் காபி அருந்தியதைத் தவிர வேறு எதுவும் சாப்பிடாமல் கொலை பட்டினி கிடப்பது



வயிற்றைச் சங்கடப்படுத்த 'அவரை டிஸ்டர்ப் பண்ணாதீங்க' என்று டாக்டர் சொல்லியிருந்ததையும் மீறி கணவன் அருகில் குனிந்து, பேர் சொல்லி அழைத்தாள்.

நான்கைந்து முறைகள் கூப்பிட்ட பிறகு சத்யா கண்களைக் கிறாகத் திறந்தான்.

ஜனனி அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஒண்ணுமே சாப்பிடாம தூங்கறீங்களே..,கொஞ்சம் தயிர்சாதம் கொண்டு வரட்டுமா?''

''......''

''ப்ளீஸ் சத்யா''

''சாதம் வேணாம்...பால்?சூடாவா இல்லே ஜில்லுனு ஐஸ் கோல்டாவா? ம்?''

இப்போது சத்யா கண்களை அகலத் திறந்திருந்தான்.

கிசுகிசுப்பாகப் பேசினான்.

''பொடிய அதுல கலந்து கொடுத்திடு...அதுதான் ஈஸி...'' வலி, அவஸ்தை எதுவும் இருக்காது... தூக்கத்துலேயே அப்படியே...''

பேசிக்கொண்டே போனவன் சட்டென்று நிறுத்தினான்.

உதடுகள் கோண, வெறுமை படர்ந்துவிட்ட விழிகளில் நீர் திரள...

எழுப்பியது தவறு என்று புரிந்து கொள்ள முடிந்தவளாய், ஜனனி அவசரமாய் அவனை ஆரத் தழுவிக் கொண்டாள்.

''ஓகே...ஓகே... உங்க இஷ்டப்படியே செஞ்சிடலாம் இப்ப தூங்குங்க...ப்ளீஸ் தூங்குங்க...''

ஒரு குழந்தை மாதிரி தட்டிக்கொடுத்து கனிவாகப் பேசியதும், நல்ல வேளையாக சத்யா அடங்கினான். சில நிமிஷங்களில் மீண்டும் உறங்கிப் போனான்.

—பொடிய பால்ல கலந்து கொடுத்திடு...அதுதான் ஈஸி...வலி இருக்காது தூக்கத்திலேயே..

எந்தப் பொடியை?

ஜனனி சப்தம் செய்யாமல் எழுந்து அலமாரியிலிருந்த பொட்டலத்தை எடுத்தாள்.

தூக்க மாத்திரைப் பொடி...

பாலில் கலந்து கொடுத்தால், தூக்கத்திலேயே உயிரைப் போக்க வைக்கும் சக்தி படைத்தது.

பாலில் கலந்து இதைக் கொடுக்க சத்யா திட்டமிட்டிருந்தாரா?

யாருக்கு?

யா...ரு...க்...கு?

—சுந்தர்லாலோட நாய் பராலிஸிஸ் வந்து நடக்க முடியாம...அதுதான் ஆரம்பம்...

ஜனனி மேஜை மீது சாய்ந்து கொண்டு நினைவை அவசரமாய்ப் புரட்டினாள்.

இது நாழிகை தலை தூக்க மறுத்த சம்பாஷணை பட்டென்று ஸ்விட்சை தட்டின தினுசில் பளபளத்தன.

—பாவம்; ஓடியாடின நாய் இன்னிக்கு பழைய துணி மாதிரி கிடக்கறதை பார்க்க பயங்கரமா இருக்கு ஜனனி...

—அதனால்தான் மெர்ஸி கில்லிங் பண்ணிடறதைத் தவிர வேற வழி இல்லேன்னு டாக்டர் நினைக்கிறார் சத்யா...

நினைவலைகள் உயரே எழும்ப எழும்ப ஜனனி ஒரு வித படபடப்புக்கு உள்ளாகத் துவங்கினாள்.



அன்றைக்கு சுந்தர்லால் வீட்டிலிருந்து பீச்சுக்குச் சென்றோம்... அங்குதானே தாலிடோமைட் குழந்தைகளைப் பற்றி பேசினோம்?

—மனப்பூர்வமா சொல்றேன். வேதனை தவிர இனி வேற எதுவுமே அடையலேனு தீர்மானமாயிட்டா, அந்த ஜீவன் வாழறதுல அர்த்தம் என்ன சத்யா?

—அர்த்தம் இருக்கா இல்லையானு தீர்மானம் பண்ணறது யாரு ஜனனி?

—ம்? நெருங்கின பந்துக்கள்தான்...

ஒரு இடத்தில் உட்கார முடியாது போக, ஜனனி எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள்.

ஆயுசுபர்யந்தம் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாமல் கிடப்பதை விட வாழ்வை முடித்து விடுவது நல்லது என்று தீர்மானத்துக்கு வந்திருந்தாரா?

இதைத்தான் பாவ காரியம், பயங்கர காரியம் என்று போன வாரம் சத்யா குறிப்பிட்டாரா?

தீர்மானம் எடுத்துவிட்டேன் என்று டைரியில் எழுதியிருந்தது இதைத்தானா!

தூக்க மாத்திரை பொடி...

பாலில் கலப்பது...

ஜனவரி முப்பது...

வெவ்வேறு பேச்சுகள்...

அத்தனையும் ரொம்ப கச்சிதமாய் கட்டத்துக்குள் பொருந்த, ஜனனியின் குடல் முடிச்சுப் போட்டுக் கொண்டது.

கருணைக் கொலை...

எ...ன்...னை யா?

திடுமென, நடக்க இருந்த சம்பவம் கண்முன் விஸ்வருபம் எடுக்க, 'சத்யாவா? என்னையா? கருணைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தாரா? நிஜமாகவா...' என்று நெஞ்சு ரணப்பட்டுப் போக, அது தந்த வலியைத் தாளாமல் கைகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு, ஜனனி விசித்து அழ ஆரம்பித்தாள்.

# 27

நினைக்க நினைக்க மனசு ஹா... ஹா... என்று பொங்கியது.

நம்ப மாட்டேன் என்று காதையும் பொத்திக் கொண்டு முரண்டியது.

என்னையா?

எ...ன்...னையா?

கொலை செய்ய சத்யா திட்டமிட்டிருந்தாரா?

பத்து மாச காலமாக உறக்கம், உணவு வேலை என்று எதிலும் கவனத்தைச் செலுத்தாமல் நானே கதி என்று இருந்து, பிரக்ஞை திரும்ப பாடுபட்ட சத்யாவா?

என் சத்யாவா?

என்னையா?

கடவுளே! என்ன கொடுமை இது!

நம்ப முடியவில்லையே...

உயிராக நேசித்ததும், பழகியதும், சிலிர்த்து ஒன்றியதும் உருகியதும் அர்த்தம் இல்லாமல் போனதுதான் நிஜமா?

அத்தனையும் கடைசியில் வேஷம்தானா?



தான் தன் சுகம் தன் நிம்மதி பிரதானமாகையில் எல்லாம் காற்றோடு காற்றாக...

துக்கம் சிந்திக்கும் திறனில் காளானாகப் படர்ந்து, புத்தியை மழுங்கச் செய்ததில் நிலைகுலைந்து இரண்டு நிமிஷ காலத்துக்குப் பரிதவித்த ஜனனி, யாரோ மண்டையில் ஓங்கி தட்டின மாதிரி சட்டென்று திடுக்கிட்டாள்.

தான், தன் சுகம், சுயநலம்...வேஷம்...யாரை இப்படி குறிப்பிட்டு நொந்து கொள்கிறேன்?

என் சத்யாவையா?

நேர்மை, கண்ணியம், சத்தியமான அன்பு இவைகளின் மொத்த உருவாக ஜனித்திருக்கும் என் சத்யாவையா?

அழுத்தம் திருத்தமாகத் தன் சுய பச்சாதாபத்துக்கு லகான் மாட்டி நிறுத்தியவள், கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சத்யாவும் தானும் பல சந்தர்ப்பங்களில் பேசிய பேச்சுக்களை ஞாபகத்தில் கொணர்ந்து நிதானத்தை இழக்காமல் சத்யாவை,இந்த முடிவுக்கு விரட்டக் காரணமானவை எவை அலச முற்பட்டாள்.

—கண்டிப்பா சரியாகாதுனு வைத்தியரே சொன்னப்புறம், சிந்திச்சு நடைமுறைக்கு நிம்மதிக்கு ஏத்த காரியத்தைச் செய்யறதுதானே புத்திசாலித்தனம்?

—எதுக்கும் லாயக்கில்லாத நாயை இப்படியே உயிர் வாழ்விட்டு, சித்ரவதை பண்றது மனிதாபிமான செயலா சத்யா?

—மனப்பூர்வமா சொல்றேன்; வேதனையைத் தவிர இனி வேற எதுவுமே இல்லேனு தீர்மானமாயிட்டா, அந்த ஜீவன் வாழறதுல அர்த்தம் என்ன?

—என்னைப் பொறுத்தவரை உண்மையான அன்பு வெச்சிருக்கறவங்களோட அவஸ்தையைத் தாங்காம உண்டாக்கப்பட்டதுதான் மெர்ஸி கில்லிங்...

அப்பப்பா...ஆணி அடித்த தினுசில் திட்டவட்டமாக எத்தனைமுறைகள் சத்யாவிடம் இக்கருத்தை வலியுறுத்தியிருக்கிறேன்!

இவை மட்டுமா?

—நிஜமா சொல்றேன், பப்பிள்பாய் (Bubble Boy) மாதிரி எனக்கு ஒரு குழந்தை பிறந்தான்னா, உலகமே ஒண்ணா நின்னு எதிர்த்தாலும், 'அவன் இந்த மாதிரி ஐம்பது வருஷம் இருக்கறதைவிட இரண்டு நாள் சந்தோஷமா, சுதந்திரமா வாழ்ந்திட்டு சாகட்டும்'னு சொல்வேன் சத்யா...

அன்றைக்கு சத்யாவிடம் இதை வெளிப்படுத்தினபோதுதான் என் குரலில் எத்தனை தீவிரம்!

நகத்தைக் கடித்துக்கொண்டு, நடந்து போனவைகளைக் கிளறக் கிளற...

நடிகையர் திலகம் சாவித்திரி பற்றிய கட்டுரை வெளியான தினமும், தொடர்ந்து அன்றைய சம்பாஷணையும் ஒவ்வொரு வார்த்தையாக மனசுள் மின்னியது.

"யோசிச்சுப் பார்த்தா, இப்படி பிரக்ஞை இல்லாம 'வெஜிடபிளா' கிடக்கறது ரொம்ப கொடுமையான சமாசாரமா தோணுது சத்யா...கோமால கிடந்து தானும் கஷ்டப்பட்டு பிறரையும் துன்பத்துக்கு உண்டாக்கிகிட்டு அறுவது வயசுவரை வாழறதைவிட, கை, கால், புத்தி ஒழுங்க இருக்கறப்பவே, நாற்பது வயசுலேயே டக்குனு போயிடக்கூட நான் ரெடி...

உணர்ச்சி வயப்பட்டு, உதடுகள் துடிக்க அன்று தான் பரிதவித்ததையும், இதமாக அணைத்து 'ஈ ஸி. கண்ணம்மா...நம்ம கையில தீர்வு இல்லாத ஒரு விஷயத்துக்காக எதுக்காக இப்படி அவஸ்தைப்படணும்' என்று சின்ன குரலில் சத்யா தேற்றியதையும் நினைத்துப் பார்த்த ஜனனி, சடக்கென்று சொடுக்கு போட்ட மாதிரி நிமிர்ந்தாள்.



அன்றைக்கு சத்யா இப்படி தேற்றியதும், அவனைத் தீர்க்கமாகப் பார்த்து, நிதானமாக இவள் கேட்டது காதில் முரசமாய்க் கொட்டியது.

"தீர்வு ஏன் இல்லே சார்? வாட் அபௌட் மெர்ஸி கில்லிங்?'

ஸோ?

இது தவறு, இது மனிதாபிமானமற்றது; கொடுமையிலும் கொடுமை, காட்டுமிராண்டித்தனமானது என்று மனப்பூர்வமாக நம்பியவரிடம் விடாமல் வாதித்து, சாதித்து, வேறு வழியே இல்லை என்கிற மூலைக்குத் தள்ளி, இந்த முடிவுக்கு விரட்டியது யார்? நான்தானா!

சத்யா...

என் சத்யா...

நேர்மையான உங்கள் மனசை களங்கப்படுத்தி, செய்யத் தகாத காரியத்தைச் செய்யத் தூண்டியதும் அல்லாமல், அந்த செய்கையால் பாதிக்கப்பட்டு, இன்று நீங்களே நிலைகுலைந்து போகவும் நானே—உன் ஜனனியே காரணமாகிவிட்டேனா!

இதுதானே நிஜம்?

இதுதானே சத்தியம்?

ஐயோ கடவுளே...இது என்ன பயங்கரம்? என்னால் தாங்க முடியவில்லையே...

நான் என்ன செய்வேன்?

மேஜை மேல் கவிழ்ந்து கொண்டவளுக்கு அழுகை வெடித்துக் கொண்டு கிளம்பியது.

—நான் வேணும்னு செய்யல சிவா...சத்தியமா என் விருப்பத்துக்கு எதிராதான் செஞ்சேன்...வேண்டாம்னு எவ்வளவோ தர்க்கம் பண்ணிப் பார்த்தேன்...ஜனனி கேக்கல...வற்புறுத்தினா.

சத்யா...உங்கள் மனசில் இந்தக் காரியம் எத்தனை பெரிய ரணத்தை உண்டாக்கியிருந்தால் இப்படியொரு புலம்பல் வரும்?

எனக்கு மன்னிப்பு உண்டா?

கருணைக் கொலை செய்ய உங்களைத் தூண்டிவிட்ட எனக்கு மன்...

சிந்தனை தடைப்பட்டது.

கருணைக் கொலையை சத்யா செய்யவில்லையே!

எனக்குத்தான் அதற்குள் பிரக்ஞை வந்துவிட்டதே!

அப்புறம் எதற்காக இந்த நிலைகுலைவு!

அப்பாடி—மனசுக்கு விருப்பமில்லாததைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை என்கிற நிம்மதி அல்லவா சத்யாவிடம் தோன்றி இருக்கவேண்டும்!

ஜனனி முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து, பால்கனிக்குச் சென்றாள்.

குளிர் காற்று வேதனையை குறைக்கிற மாதிரி தோன்ற கைப்பிடிச் சுவரில் சாய்ந்து படபடப்பை அடக்கிக் கொண்டு நிதானமாக யோசித்தாள்.

என் சீரழிவைத் தாங்க முடியாமல், என் பழைய வாதங்களுக்கு மதிப்புக்கொடுத்து, ஜனனி முப்பதாம்தேதி தூக்க மாத்திரைப் பொடியை பாலில் கலந்து கொடுத்து, கருணைக் கொலை செய்ய சத்யா திட்டமிட்டிருக்க வேண்டும்...

ஆனால், நினைத்தது நடக்காதபடி அன்றைக்கு அவர் மதுராந்தகம் சென்று வரும் வழியில் மழையில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும்...மதியம் போனவர், விடியற் காலையில் திரும்பியதை அத்தை பிற்பாடு சொன்னாரே!

ஆக, கதைகளில் வருகிற தினுசில் சற்றும் எதிர் பாராத நிமிஷத்தில் ஒரு திருப்பம்...

சரி-இது சத்யாவுக்குச் சந்தோஷத்தை அல்லவா தந்திருக்க வேண்டும்?

மாறாக...

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு குறுக்கும், நெடுக்கும் நடக்க...

—இந்த மனசு இருக்கே, இது ரொம்ப விநோத மானது ஜனனி...ஒரு தரம் அழுத்தமா ஒரு கருத்து பதிஞ்சிட்டா அதை லேசுல மாத்திக்காது தெரியுமா!

மை காட்!

இதை நான் எப்படி மறந்து போனேன்!

மனசின் நேர்மையில் சத்யா வைத்திருந்த அபார நம்பிக்கை!

—ஒரு உந்துதல் காரணமா யோசிக்காம திருடற வனைவிட, வசதியா வாழறவனைப் பார்த்து இவன் பணம் காசெல்லாம் போய் நடுத்தெருவுல நிக்க மாட்டானா'னு கற்பனை பண்ணறவனும், அடுத்த வீட்டு பொம்பளை உடையை மானசீகமா உரிச்சு, அவளோடு சல்லாபம் செய்யறவனும் இன்னும் மட்டமானவங்க இந்த மாதிரி மனசால கரப்ட் ஆகறதை நான் அடியோடு வெறுக்கிறேன். திரும்பச் சொல்றேன் ஜனனி, மனசு

ரொம்ப சக்தி படைச்சது. இதைக் கறை படாம வெச்சிக் கறது எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியம்—

இப்படி அசைக்க மாட்டாத கருத்தைக் கொண்டவர் மனசில் கறை விழ, நானே காரணமானேனா?

காரியத்தைச் செய்யாவிட்டாலும் கூட, செய்ய நினைத்து விட்டதே, களங்கப் பட்டு விட்டதற்குச் சமம் என்று நம்பி விட்டாரா?

அதுதான் இந்த உடைந்த கோலமா?

அடங்கி இருந்த அழுகை மீண்டும் பொங்கி எழ, ஜனனி உறங்கும் கணவனை நெருங்கி, மார்பில் படுத்து அவன் நெஞ்சில் படிந்துவிட்ட கறையை அழிப்பதுபோல கரைந்து அழுதாள்.

என்ன செய்வேன்?

தவறு என்னுடையதே அன்றி, உன்னுடையது அல்ல என்று எப்படி உணர்த்துவேன்?

சத்யா...

எனக்கு நீ வேண்டும்..

முழுசாய்...

பழைய சத்யாவாய்...

நேர்மையும், பண்பும், காதலும் கண்களில் மின்ன லிட சதா சிரிக்கும் சத்யாவாய்...

என்ன செய்வேன்?

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு



உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய் வோம்'

என் நெஞ்சின் சத்தியமான ஆசை இதுதான் என்றால்! இதை இந்த ஜன்மத்திலேயே நிரூபித்துக் காட்டுவது அவசியம் அல்லவா?

தீர்மானித்துவிட்ட உறுதியுடன் ஜனனி நிமிர்ந்தாள்.

புத்தக அலமாரியிடம் சென்று ரெஃபரன்ஸுக்காக சத்யா வாங்கி அடுக்கி வைத்திருந்தவைகளிலிருந்து மருத்துவ சம்பந்தப்பட்ட புத்தகத்தை எடுத்தாள்.

மேஜை விளக்கடியில் குனிந்து டாக்டர் கூறிய ரியாக்டிவ் டிப்ரஷன் என்கிற பிரிவைப் பிரித்தாள். படித்தாள்.

'அன்புக்குப் பாத்திரமான நபரை நிரந்தரமாக இழப்பதாலும் எதிர்பாராத தோல்வி உண்டாவதாலும் செய்ய விரும்பாத காரியத்தைச் செய்து விடுவதாலும், சிலரிடம் உண்டாகும் மனச்சோர்வுக்குப் பெயர் ரியாக் டிவ் டிப்ரஷன் தனிமையை விரும்புவதும், தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களில் ஈடுபாடு குறைவதும், அழுவதும் எதிலும் சுவாரஸ்யம் குறைந்து போவதும் இந்த மனச்சோர்வுக்கான அறிகுறிகள் தகுந்த சமயத் தில் சிகிச்சை அளித்தால் எளிதில் குணப்படுத்தி விடக் கூடியதுதான் என்றாலும் நிலைமை முற்றிவிட்டால் 'தற் கொலை முயற்சியில்' சம்பந்தப்பட்டவரை ஈடுபட வைக் கும் அளவுக்கு இந்த மனச்சோர்வு வலிமைபடைத்தது...'

இரண்டு மூன்று தரம் படித்து சத்யாவின் தற்சமய நிலையை புத்தகத்தில் 'சொல்லப்பட்ட அறிகுறிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அப்படியே வெகு நேரத்துக்கு அமர்ந்து சிந்தித்தபோது தான் செய்ய வேண்டியது என்ன என்று தெளிவாகப் புரிந்து கொள்ள முடிய, புத்தகத்தை மூடி வைத்து விட்டு, கடிகாரத்தைப் பார்த்தாள்.

ஐந்தரை

டாக்டர் ப்ரதாப் ஐந்துக்கே எழுந்து யோகாசனம் செய்யும் பழக்கம் உள்ளவர் என்பது ஞாபகத்துக்கு வர, ரிஸீவரை எடுத்து நம்பரைச் சுழற்றினாள்.

சத்யாவுக்கு உடம்பு அதிகமாகி விட்டதோ என்கிற கவலையுடன் பேச வந்த டாக்டர், ஜனனி அன்றைக்கு மனோதத்துவ நிபுணரை அழைத்து வரவேண்டாம் என்றதும் திகைத்தார்.

''என்ன சொல்றிங்க, ஜனனி?''

''அளவுக்கு மீறி நாம பயப்படறோம்னே எனக்குத் தோணுது டாக்டர். ராத்திரி பூரா யோசனை பண்ணிப் பார்த்தப்போ நீங்க முதல்ல சொன்ன மாதிரி சத்யா ஒரு வருஷ டென்ஷன்ல களைச்சுதான் போயிருக்கார்னு நானும் நினைக்கறேன் இட, சூழ்நிலை மாற்றம் இருந்து பத்து நாள் அவரும் நானும் தனியா ரெஸ்டா இருந்தா கண்டிப்பா சரியாயிடுவார்னே எனக்குத் தோணுது....'

''இருக்கலாம். ஆனாலும் சைக்கியாட்ரிஸ்டைப் பார்க்கறது பெட்டர் இல்லியா?''

''இப்ப வேணாம் டாக்டர் ப்ளீஸ்...அவரை சரியா நான் கவனிக்கலைன்ற குற்ற உணர்வு எனக்கு உண்டாகியிருக்கு...பதினைஞ்சு நாள் அவகாசம் கொடுங்க எதிர்பார்த்தவிதத்துல சத்யா சரியாகலைனா நீங்கசொல்றதை நான் கேக்கறேன் ப்ளீஸ் கிவ் மீ எ சான்ஸ்...''

''ஆல்ரைட்...எட்டு மணிக்கு வந்து சத்யாவைப் பரிசோதிச்சிட்டு ஆண்டி டிப்ரஷன் மாத்திரைகளை எழுதித்தரேன். இரண்டு நாள் உங்க இஷ்டப்படி விட்டுட்டு என்ன பண்ணலாம்னு யோசிக்கலாம்...''

அவருக்கு நன்றி கூறி ரிஸீவரை வைத்த பின், ஜனனி சத்யாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

டாக்டரோ அத்தையோ முத்துவோ சத்யாவின் சம்பந்த சம்பந்தமில்லாத பேச்சுகளை கேட்டு இரண்டும்



இரண்டும் நாலு என்று ஊகித்து விடலாம் என்பதால் சில நாள்களுக்காவது கணவனை யாரும் நெருங்க விடாமல் அரவணைத்து காப்பேன் என்கிற தீர்மானத்தில் மனசு தெளிந்திருந்தது என்ன செய்யப் போகிறோம் என்பது உறுதியாய் ஹிருதயத்தில் பரவி இருக்கக் குனிந்து சத்யாவின் முகத்தைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டாள்.

சின்ன குரலில் ஒவ்வொரு வார்த்தையாக தேர்ந்தெடுத்துப் பேசினாள்.

''நான் இப்ப சொல்லப் போறது உங்க உள்மனசுக்கு கேட்கும்ன்ற நம்பிக்கைல பேசறேன் சத்யா...வைத்தியர்கள் கைவிட்ட கேஸ்களைமெர்ஸி கில்லிங் செய்யறதுல தயக்கம் காட்டறது தப்புனு உங்ககிட்ட நான் நிறைய தடவை வாதாடி என் இஷ்டம் அதுதான்னு அடிச்சிப் பேசினதால போன ஜனவரி முப்பது அன்னிக்கு, என்னை நீங்க கருணைக் கொலை செய்ய முடிவெடுக்க, நானே காரணமாயிட்டேன் எனக்காக என் திருப்திக்காக உங்களுக்குத் துளியும் விருப்பமில்லாத காரியத்தைச் செய்ய துணிஞ்சதை நினைச்சுப் பார்க்கறப்போ, என்மேல நீங்க வெச்சிருக்கிற காதல், மரியாதை என்னை நெகிழ வைக்கிறது...சத்யா அன்னிக்கு மெர்ஸி கில்லிங் பத்தி ரொம்ப தெரிஞ்ச மாதிரி தர்க்கம் பண்ணதைப் தப்புனு இப்ப உணர்றேன். ஐம் ஸாரி நீங்க சொன்னது போல ஒரு உயிரை அழிக்கிற உரிமை சத்தியமா யாருக்கும் இல்ல தான். அந்த உயிர் மீண்டுவர கோடில ஒரு சந்தர்ப்பம் இருந்தாலும் அதுக்காக காத்திருக்கறதுதான் மனிதாபிமானமுள்ள செயல்னு இப்பப் புரிஞ்சு போச்சு. என் தப்பை உணர்ந்து மன்னிப்பு கேக்கறேன். வில் யூ ஃபர்கிவ் மீ?''

உணர்ச்சிவயப்பட்டு பேசின ஜனனி குனிந்து, சத்யாவின் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டாள். தொடர்ந்து பேசியபோது குரல் ரொம்பவும் குழைந்து வெளிப்பட்டது.

''அன்னிக்கு நான் விரும்பினதை நீங்க செய்ய முனைஞ்ச மாதிரி இன்னிக்கு நான்மனப்பூர்வமா ஆசைப் படறதை செஞ்சு காட்டுவீங்களா, சத்யா? போனதை மறந்துட்டு, மனசுல பட்டுட்ட கறைய துடைச்சிட்டு, நீங்க பழைய சத்யாவா நடமாடணும். 'ஆண்மை, அன்பு, அன்யோன்யம், சிரிப்பு நிறைஞ்ச என் சத்யாவா என்னிக்கும். ஆயுசு பர்யந்தம் என் கூடவே இருக்கணும். செய் வீங்களா சத்யா? உங்க ஜனனியோட அபிலாஷைய நிறை வேத்துவீங்களா ப்ளீஸ்...இன்னிக்கு நாம ரெண்டு பேரும் கொடைக்கானல் போகலாம்—தனியா, உங்களுக்கு நான் எனக்கு நீங்கனு இத்தனை வருஷமா வாழ்ந்த தினுசில் உருகி, சிலிர்த்து, சேர்ந்து...அந்த நாள் நிச்சயம் வரும் தானே சத்யா? உங்களை பழைய சத்யாவா பார்க்கறது. தான் என் லட்சியம்...உங்க மேல நான் வெச்சிருக்கற பிரியம் சத்யமானதுன்னா, இதை நான் செஞ்சு காட்டு வேன்...இட்ஸ் எ ப்ராமிஸ்...''

கண்களில் நீர் பிரவாகமாய்ப் பெருகி, மூடி இருந்த சத்யாவின் கண்களில் ஜனனி மிகுந்த காதலுடன் முத்த மிட...

சத்யா கண்களைத் திறந்தான்.

அந்த விழிகளில் அத்தனை வேற்றுமை இல்லாத மாதிரியும், உதடுகள் இவளை நோக்கி அழகான ஒரு குட்டிப் புன்னகையில் விரிந்தமாதிரியும், ஜனனிக்குள் தோன்றின. அதேசமயத்தில்—

விடியப்போவதற்கு சூசகமாய் வானத்தில் கருமை குறைந்து மஞ்சள் படர்ந்தது. பசு ஒன்று வெகு மங்கள கரமாய் 'ம்ம்...ஆ...' என்று குரல் கொடுத்தது.

—முற்றும்—

27 AUG